தொழில்துறை பற்றி

கலைஞரின் சட்டமன்ற உரைகள்



தொழில்துறை பற்றி

கலைஞரின்
சட்டமன்ற உரைகள்

வெளியீடு :
தமிழ்க்கனி பதிப்பகம்
சென்னை - 600 004

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுருகன்றும்

விற்பனை உரிமை :
பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.

முதல்பதிப்பு : மே, 2007

894.8115
TAM

விலை ரூ. **160/-**

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப் பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். "தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !" என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், "இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்" என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான "திருக்குவளை" உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன். சென்னையில் அண்ணா அவர்கள், அன்றைய தலைமைக் கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை "குளித்தலை தொகுதி"யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு

நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றிபெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத் தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான்

அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் - அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் - அதன் காரணமாக மனித நேயம் - நாகரிகம் - பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்தது மில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர் திருக்குவளையில் என் அன்னையின் பெயரால் "அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி"யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று என்

இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர்!

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் - சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.

மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக் கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.


இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் - இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில்

எப்படியெல்லாம் வானத்தில் அலையும் மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங் களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,



பதிப்புரை

காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப்

பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத் தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

பொன்னர் சங்கர்

தொல்காப்பியப் பூங்கா

தாய் காவியம்

முத்துக்குளியல்

சிந்தனையும் செயலும்

காலப்பேழையும் கவிதைச் சாவியும்

போன்ற கற்கண்டுச் சொல்லோவி யங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம் மகிழ்ந்திருக்கிறோம்.

அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்''

பொன்விழா கொண்டாடப்படும் இந்தக்

குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள் களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

ஆளுநர் உரைமீது உரைகள்

தொழில்துறை பற்றி உரைகள்

காவல்துறை பற்றி உரைகள்

நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்

காவிரி பிரச்சினை மீது உரைகள்

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் - இவையிரண்டும் கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.

அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

- தமிழ்க்கனி பதிப்பகத்தார்

தொழில்துறை பற்றி

கலைஞரின்

சடடமனற உரைகள

தாமரையே தேன்பிழிவே

தலைமுறைகள்

ஜெயந்தஸ்ரீ சாரு

தொழில்துறை பற்றி கலைஞரின் சட்டமன்ற உரைகள்

உரை : 1 நாள் : 21.03.1963

கலைஞர் மு. கருணாநிதி : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தொழில்துறை மான்யத்தின்மீது எதிர்கட்சி நண்பர்கள் தந்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என் கருத்துக்களை இங்கு கூற விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய ஆளுங்கட்சி அம்மையார் அவர்கள் கோவை மாவட்டத்தில் தொழில்துறை வளர்ச்சி அடைய ஆரம்பித்து தற்போது ஒரு மந்தமான நிலை அங்கு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் குறிப்பிட்டார்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம் அவர்களது மாவட்டத்தைப்பற்றிமட்டும் குறிப்பிட்டார்கள். நாங்கள் இந்த மாநிலத்தைப் பொறுத்தே குறிப்பிடுகிறோம். அவ்வளவுதான் "மந்தநிலை ஏற்பட்டிருக்கிறது தொழில் வளர்ச்சியில்", என்று அம்மையார் அவர்கள் கூறிய அந்த வாக்கியத்தின் அடிப்படையில்தான் என் பேச்சு இங்கு அமைகிறது என்பதை முதலில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய எங்கள் தோழர்கள் அனைவரும் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற வார்த்தையை இங்கு பயன்படுத்திய நேரத்தில் ஆளும் கட்சியில் உள்ள நண்பர்கள் எல்லாம் இது பழைய பல்லவி, ஒருவர் பல்லவியை ஆரம்பித்தார், மதியழகன் அனுபல்லவிக்கு வந்திருக்கிறார் என்று நண்பர் மாதா கவுடர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் பல்லவி, அனுபல்லவி என்ற

நிலைமையிலே இருக்கிறோம். ஆனால் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் டெல்லிக்குப் போய் சண்டை போடாமல் சரணம் என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதற்காக வருந்துகிறேன்.

தொழில்துறை மான்யத்தின்மீது பேசுகிற நேரத்தில் பின்தங்கிக் கிடக்கிற தமிழகத்தை முன்னுக்கு கொண்டு வருவதற்கு மேலும் பல தொழில் நிலையங்களை உருவாக்கவும், தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்றுதான் நாங்கள் கூறுகிறோம். வடக்கு தெற்கு என்று பேசுகிற காரணத்தினால் வடக்கு என்ற திசையின்மீதே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கோபம் என்று யாரும் கருதிவிடக் கூடாது.

எங்கள் கழகத் தோழர் சீராமுலு அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னர் இங்கு பேசியபோது குறிப்பிட்டார்கள், "தெற்கு சேலம் வாழ்கிறது, வடக்கு சேலம் வாடுகிறது", என்று. இன்றையதினம் பேசிய ஆளும் கட்சியைச் சார்ந்த ராஜாராம் அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் "தெற்குப் பகுதி வாழ்கிறது, வடக்குப் பகுதி வாடுகிறது" என்று குறிப்பிட்டார்கள். ஆகவே இந்தப் பிரச்சினை ஏற்றத்தாழ்வின் அடிப்படையில் எழுகிற பிரச்சினையே தவிர திசையைப் பொறுத்து ஏற்படுகிற நிலை அல்ல.

தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கிற தென்னகம் தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்பதற்காக எடுத்துக் கொள்ளப்படுகிற முயற்சிகள் இவை என்பதை மனதில் கொள்ள வேண்டும். நம் தொழில்துறை அமைச்சர் அவர்கள் சுலபமாகச் சொல்லிவிடுவார்கள். நேற்று திரு. அரங்கண்ணல் அவர்கள் பேசியபோது அதற்குப் பதில் கூறிய அமைச்சர் "பிரசங்கங்களால் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது", என்று குறிப்பிட்டார்கள். சட்ட மன்றம் என்று ஒன்று கூட்டி இங்கு விவாதம் நடைபெறுவதற்குக் காரணமே இங்குச் சொல்லப்படுகிற கருத்துக்கள் அமைச்சர்களின் உள்ளத்தில் பதிந்து அந்தந்த வட்டார உறுப்பினர்கள் இங்கு எடுத்துக் கூறும் குறைகளுக்கு பரிகாரம் காணப்படவேண்டும் என்பதுதான். அவற்றைத் தொகுத்து நம் மாநில அமைச்சர்கள் டெல்லியில் இருப்பவர்களிடம் எடுத்துச் சொல்லி ஆவன செய்யவேண்டுமென்பதற்காகத்தானேயன்றி வேறு அல்ல.

அப்படி என்ன தமிழகம் பின்தங்கிக் கிடக்கிறதா என்று கேட்பவர்களுக்கு சில புள்ளிவிவரங்களை என்னால் தர முடியும். பம்பாய் மாநிலத்தில் இருப்பவர்களில் சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை 43. அவர்களால் பாதுகாக்கப்படவேண்டியவர்கள் 57 பேர்கள். தமிழகத்தில் சம்பாதிப்பவர்கள் 31. அந்த 31 பேர்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் 69 பேர்கள் இருக்கிறார்கள். இதை மறந்துவிடக் கூடாது. தமிழகத்தில் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற விவசாயியின் ஆண்டு வருவாயை விட வட மாநிலங்களிலுள்ள உழவனின் வருவாய் ஏறத்தாழ 200 ரூபாய் அதிகமாக இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மூன்றாவது திட்ட இறுதியில் தொழில்துறை வருமானம் இந்தியாவில் கிழக்குப் பகுதியில் 54.60 சதவிகிதமாக உயரும். அகில இந்திய தொழில்துறை வருமானமும் 34.94 சதவிகிதமாக உயரும். ஆனால் தென்னகத்தில் 17.90 சதவிகிதம்தான் இருக்கும். இது சமநிலையில்லாத முறையில் பிரதேசங்களை வளர்ப்பதன் போக்கு. இது இன்ஸ்டிட்யூட் ஆப் பப்ளிக் ஒப்பினியன் பொருளாதார அறிக்கையில் இருப்பதாகும்.

குறிப்பாக பிரதேச வருமானம் எப்படியிருக்கிறது என்று பார்ப்போமானால் 1950-51 லிருந்து 1965-66 வரை உள்ளதை கவனிப்போம். ஆந்திராவை எடுத்துக்கொண்டால் 73.31 சதவிகிதம், கேரளாவில் 63.53 சதவிகிதம், தமிழகத்தில் 79.61 சதவிகிதம், மைசூரில் 82.01 சதவிகிதம், ஒரிசாவில் 229.37 சதவிகிதம், பஞ்சாபில் 189.75 சதவிகிதம், டில்லியில் 177.03 சதவிகிதம் இருக்கின்றன. தமிழகத்தின் வருமானம் 79.61 சதவிகிதம்தான். இது பொருளாதார அறிக்கையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பிரதேச வாரியாக தொழிற்துறையில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு நபரின் சராசரி வருமானம் எவ்வளவு என்று பார்க்கலாம். ஆந்திராவில் 31.24 சதவிகிதம், கேரளாவில் 12.70 சதவிகிதம், மைசூரில் 29.56 சதவிகிதம், ஒரிசாவில் 166.77 சதவிகிதம், டெல்லியில் 60.19 சதவிகிதம், தமிழகத்தில் 39.99 சதவிகிதம் என்ற நிலையை காண்கிறோம். தமிழகத்தைவிட குறைந்திருக்கிற வட மாநிலங்களின் புள்ளி விவரங்களோடு ஒப்பிடாமல் அதிகமாக உள்ள மாநிலங்களோடு ஒப்பிடுகிறீர்களே, இது உங்கள் பிரச்சாரத்திற்காக அல்லவா என்று தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும்.

"தம்மில் மெலியாரை நோக்கித்
தமதுடைமை அம்மா பெரிதென்று அகமகிழ்க!"

என்று காட்டப்படுகிற தத்துவப் பொன்மொழியை அரசியல் துறையில் இழுக்க வேண்டாம். சராசரி வருமானம் பிற மாநிலங்களில் எவ்வளவு உயர்வாக இருக்கிறது, தமிழகத்தில் எவ்வாறு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுவது, நாம் எந்தளவு பின்தங்கிக் கிடக்கிறோம் என்பதை எண்ணி நம் தொழில் வளத்தையும், பொருளாதார வளத்தையும் பெருக்கிக் கொள்வதற்காகத்தான். "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்பது பேராசைக்காரனிடம் கூற வேண்டிய உபதேசமே தவிர, பெரும் பசிக்காரனிடம் சொல்லும் பழமொழியாக இருத்தல் கூடாது. "கிட்டாதாயின் வெட்டனமற" என்பதை டெல்லியைக் கேட்டுப்பார்த்து அவர்கள் தர மறுத்த பிறகு நீங்கள் கையாளும் அறிவுரையாகக் கொள்ளாமல் "முயற்சி திருவினையாக்கும்" என்ற முனைப்புடனும் "ஊழையுமுப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது ஏற்றுபவர்" என்று கனம் உறுப்பினர் ஈரோட்டார் கூறிய குறள் வழிக்கிணங்கவும் செயல்படவேண்டும் எனக் கூறுவேன். தமிழகத் தொழில்துறை வளர டெல்லியிடம் மேலும் போராடுங்கள்.

தொழில் வளர்ச்சிக்கு தொழிலாளருடைய நலன் மிக மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். தொழிலாளருடைய வளமும், தொழிலாளருடைய நலமும் பாதுகாக்கப்பட்டால்தான், அவர்களுடைய உரிமைகள் ஒழுங்காக அளிக்கப்பட்டால்தான், தொழிலாளர்களுடைய வாழ்வில் நிம்மதி இருந்தால்தான், தொழில் துறையில் நாம் எதிர்பார்க்கிற உற்பத்தி பெருகவும், நாடு பொருளாதாரத்தில் முன்னேறவும் வழிவகை காண முடியும். இந்தியாவில் மண்ணியல், சுரங்க இயல், கனி இயல் ஆகியவற்றிற்கான சங்கத்தின் அறிக்கை கூறுகிறது, இந்தியத் தொழிலாளிக்கும் வேறு நாடுகளில் இருக்கிற தொழிலாளிக்கும் உள்ள திறமையைப்பற்றி. அந்த அறிக்கையில், ஒரு நாளுக்கு ஒரு ஆங்கில நாட்டுத் தொழிலாளி 6 டன்னும், ஜெர்மானிய நாட்டுத் தொழிலாளி 8.99 டன்னும், அமெரிக்கத் தொழிலாளி 21.68 டன்னும், இந்திய தொழிலாளி 2.7 டன்னும்தான் அகழ்ந்து எடுக்கிறார்கள் என்று சுரங்க இயல், மண் இயல், கனி இயல் சங்கத்தின் அறிக்கை குறிப்பிடுகிறது. இதை நான் சொல்லுவதற்குக் காரணம், இந்தியக் தொழிலாளி ஏன் இந்த அளவுக்குத் திறமைக்

குறைவாக உற்பத்தியை - அது மண் இயல், கனி இயல், சுரங்க இயல் துறையில் மாத்திரம் அல்ல, பஞ்சாலை ஆகட்டும், சணல் தொழிற்சாலையில் ஆகட்டும், அல்லது காகிதத் தொழிற்சாலையில் ஆகட்டும், படைப்புத் திறன் ஏன் இந்தியத் தொழிலாளிக்குக் குறைந்திருக்கிறது என்பதை ஆராயவேண்டும் என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான். அவனுடைய உடல் வலு சரியாக இல்லை. உடல் வலுவைப் பேணி பாதுகாக்கின்ற அளவுக்கு ஊதியம் இல்லை என்று காரணம் காட்டப்படுகிறது. அதையும் உடனடியாக ஆய்ந்து அறிந்து அரசு அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இன்றைய தினம் நெருக்கடி நிலைமையை உத்தேசித்து சிலபல தொழிலாளர்களுடைய கோரிக்கைகள், நியாயமான கோரிக்கைகளாக இருந்தால்கூட, அவைகளை நெருக்கடி நிலைமையிலே கூடுமான வரையில் ஒத்தி வைப்பது என்று தொழிற் சங்கங்களெல்லாம் முடிவு எடுத்திருக்கின்றன. அதற்கு தொழிலதிபர்களும் ஒத்துழைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் தொழிலதிபர்கள் சொன்னபடி நடக்கவில்லை. நேற்றைய தினம் கூடிய தமிழ்நாடு இந்திய தேசீய தொழிற்சங்க காங்கிரஸ் நிர்வாகக் குழுவின் தீர்மானத்தை எடுத்துப் பார்த்தால் இந்த பல்வேறு வரிகளின் மொத்தச் சுமையும் ஏழை தொழிலாளர்கள் மீதே விழும் என்று குறிப்பிட்டு, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், ராஜ்யத்தில் தொழில் உறவு முறை மோசமடைந்து வருவதாக நிர்வாகக் கமிட்டி கருதி, தொழில் அமைதித் தீர்மானத்தைப்பற்றி தொழில் அதிபர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை என்று தமிழ்நாடு இந்திய தேசீய தொழிற்சங்க காங்கிரஸ் குற்றம் சாட்டுகிறது.

கடைசியாக நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில், சென்னையில் உள்ள பி. அண்ட் சி. மில்லில் சிக்கனச் சீரமைப்பைத் தொடர்ந்து, ஆட்குறைப்பு செய்யப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டுவிட்டு, ஜவுளித் தொழில் ஊதிய போர்டு சிபாரிசுக்கு ஏற்பவோ, சிக்கனச் சீரமைப்பு இல்லை என்று, பி. அண்ட் சி. மில் நிர்வாகம் இந்த சீரமைப்பின் பேரால் பல தொழிலாளர்களை இன்றைய தினம் வேலையை விட்டு நீக்கியிருப்பதைக் கண்டிக்கிற வகையில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. தொழிலாளர் வாழ்வு பாதிக்கப்பட்டால், தொழிலாளர்களுடைய உள்ளம் வாடுவதற்கான நிலைமைகள் தோன்றுமேயானால், நாம் எதிர்பார்க்கிற உற்பத்தி

அதுவும் இந்த நெருக்கடியான நிலையில் நாம் எய்த முடியுமா, நாம் அடைய முடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனக்கு முன் பேசிய கனம் மதியழகன் அவர்கள் தொழில் துறை பெரும்பாலும் தனியார்துறை வசமே ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த மாமன்றத்தில் 1957-ம் ஆண்டிலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகம் இடம் பெற்ற நேரத்திலிருந்து, பொதுத் துறையை வளர்க்க வேண்டுமென்றும், தனியார் துறைக்கு ஆக்கம் அளிக்கிற போக்கினை அரசினர் திரும்பப் பெறவேண்டும் என்றும் வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். எந்த தனிப்பட்ட முதலாளியும் நாட்டில் இருக்கிற ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு தொழிலை உருவாக்க வேண்டும் என்ற லட்சிய நோக்கத்தோடு ஆரம்பிப்பதில்லை. லாப நோக்கத்தோடு, தனக்கு எவ்வளவு லாபம் கிட்டும் என்று லாபக் கணக்கைப் பார்த்துக் கொண்டுதான் முதலாளி வர்க்கத்தினர், தனியார் துறையில் தொழிலில் ஈடுபடுகிறார்கள். தனியார் தொழில்களுக்கு அரசாங்கம் எல்லாச் சலுகைகளையும் தந்து, தனியார் துறையை மேலும் மேலும் ஊக்கப்படுத்திக்கொண்டு போவதும், கேட்டால், இதற்கு பெயர்தான் ஆவடி சோஷலிஸம் என்று கூறுவதும், இந்த கலப்பட பொருளாதாரம்தான் காங்கிரஸ் கட்சியின் தத்துவம் என்று கூறுவதும், உள்ளபடியே முற்போக்கு சக்திகளால் ஒத்துக்கொள்ளக் கூடிய நிலை அல்ல என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தனியார் துறைக்கு அரசினர் மூலம் தரப்படுகிற கடன் அல்லது நிதிக் கார்ப்பொரேஷன் மூலம் தரப்படுகின்ற உதவிகள் எப்படி எப்படி தரப்படுகிறது என்றால் யாரோ சில வேண்டியவர்களுக்கு, அதிகாரத்திலே இருப்பவர்களுக்கும் அந்த முதலாளிகளுக்கும் உள்ள தொடர்பு, சொந்தம், பந்தம், பாசம், இவைகளை வைத்துத்தான் தரப்படுகிறது என்று நான் சொன்னால் அதை இந்த அமைச்சரவை உளமார மறுக்க முடியாது என்று நான் கூறிக்கொள்வேன். அந்த நிலை இங்கு மாத்திரம் இல்லை. இந்தியாவிலேயே, இந்த நிதைக் கமிஷன்பற்றி ஆராய்வதற்காக, திருமதி. சுசேதா கிருபலானி, 1955-ம் ஆண்டில் என்று கருதுகிறேன், அப்போது போடப்பட்ட குழுவுக்குத் தலைவராக இருந்த அவர்களே இதைச் சொல்லியிருக்கிறார்கள். வேண்டியவர்களுக்குச் இப்படிப்பட்ட உதவிகள் தரப்பட்டு, தனிப்பட்ட முதலாளிகளுக்குச்

சலுகைகள் தரப்படுகின்றன என்று அவர்கள் அந்தக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

ஆகவே தனியார்துறை நீக்கப்பட்டு, பொதுத் துறைக்கு இந்த சர்க்கார் தங்களை இழுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் மிக மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்.

அமைச்சர் சொல்லலாம், தனியார் துறையில் பணம் இருக்கிறது அவர்களிடத்தில், நாமும் கொஞ்சம் பணம் கொடுக்கிறோம், ஆகவே தொழில் துறையை விருத்தி செய்யக்கூடிய நிலையில் அவர்களுடைய முதலீடு உள்ளது, உதவி செய்யக்கூடிய நிலையில் உள்ளது நாங்கள் தரும் பணம் என்று.

நான் அவர்களுக்கு யோசனை வழங்குவேன். அமைச்சர் அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். ஏன் அரசாங்கம் ஒரு தொழிலுக்கு 50 சதவீதம் முதலீடு செய்து, மிச்சம் உள்ள பணத்தைப் பொது மக்களிடத்தில் வசூலிக்கக் கூடாது? பொது மக்கள் பங்கெடுத்துக்கொள்ள மாட்டார்களா? பங்குதாரர்களாகச் சேர மாட்டார்களா? இன்றைய தினம் பொது மக்கள் பங்குதாரர்களாகச் சேரவில்லையா? தனிப்பட்டவர்கள் ஆரம்பிக்கிற தொழில்களில் பொது மக்கள் பங்கெடுத்துக்கொண்டு அவர்களையே நம்பிப் பங்குப் பணம் போடுகிற நேரத்தில், நம்பிக்கையும், நாணயமும் நிறைந்த சர்க்காரை நம்பிப் பொது மக்கள் பங்கெடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறார்களா? பொது மக்கள் பணம் சரி பகுதி அல்லது நிர்ணயிக்கிற பகுதி பொது மக்களிடத்திலிருந்து பெற்று, அரசினர் இன்ன சதவீதம் தருவது என்று நிர்ணயித்து பொது மக்களும் அரசினரும் சேர்ந்தாவது பொதுத் துறைத் தொழில்களை நடத்தலாம். இப்படி ஒரு முறையையும் இத்துடன் அரசினர் எல்லாத் துறைகளையும் எடுத்து நடத்துவது என்ற இன்னொரு முறையையும் இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் குறிப்பிட்டார்கள், தனியார் துறையில் அவர்கள் நடத்துகிற பெரிய தொழில்களில் பெரும் லாபம் அடைந்தாலும், பெருமளவுக்கு வரி போட்டுப் பிடுங்கிக்கொள்கிறோம் என்று தெரிவித்தார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், தும்பை விட்டு

விட்டு வாலைப் பிடிக்கிறோம்; நேராக மூக்கைத் தொடுவதற்கு பதில் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிறோம் என்கிற வாதமாகத்தான் எங்களுக்குத் தெரிகிறது. ஆகவே தொழில் துறையைப் பொறுத்தவரையில் பொதுத் துறைக்கு, தீவிரமாக, அவசர அவசரமாக இந்தத் துறை மாற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக பொருளாதாரத் திட்டத்தை அகில இந்திய ரீதியில் வைத்திருக்கிற காரணத்தினால்தான் சில பிரதேசங்கள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. முன்னேற முடியாத காரணத்தை எடுத்துக் கூறும்போது, எங்களால் மாத்திரம் சொல்லப்படுகிற கருத்து அல்ல, அமைச்சராக வீற்றிருந்து, தற்சமயம் ஆளும் கட்சி உறுப்பினராக இருக்கிற மதிப்புக்குரிய ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், நேற்று அல்ல, சென்ற கிழமை அல்ல, 1955-ல் சொல்லியிருக்கிறார். "நம் ராஜ்யத்தில் எவ்வளவு வரி போட முடியுமோ, அந்த அளவுக்குப் போட்டாகிவிட்டது. மத்திய சர்க்காரிடமிருந்து கிடைப்பது அதிகமாயில்லை. மத்திய சர்க்காரிடம் உதவி வேண்டும் என்று கேட்பது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் குறைவு. தலைவிதி என்று நினைத்துக்கொண்டு நாம் சும்மா இருந்து விடுகிறோம். மத்திய சர்க்காரிடம் இதை வற்புறுத்த வேண்டும். அழுகிற பிள்ளைக்குத்தான் ஏதாவது கிடைக்கும். ஆகையினால் தமிழ் நாட்டு மக்கள் அதிகக் கூச்சல் போட வேண்டும். அப்போதுதான் ஏதாவது கிடைக்கும். நமது மந்திரிகள் மத்திய சர்க்காரிடம் சண்டை பிடித்து வெற்றி காண வேண்டும்" என்று 1955-ம் ஆண்டு ஆகஸ்ட் 23-ம் நாள் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் கூறியிருக்கிறார்.

ராஜா சர் முத்தையா செட்டியார், காங்கிரஸ் கட்சிக்கு இன்றைக்கு மிக மிக வேண்டியப் பிரமுகர், அவர் சொல்லியிருக்கிறார், "இங்கே உட்கார்ந்துகொண்டு பேசிப் பிரயோசனமில்லை, டில்லிக்குச் செல்லுங்கள், அங்கு சென்று சண்டை போடுங்கள், டில்லிக்குச் செல்லுங்கள், டில்லி சலோ, டில்லி சலோ" என்று இந்த மன்றத்தில் பல தடவை குறிப்பிட்டிருக்கிறார்.

அவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால், நாங்கள் மாத்திரம்தான் சொல்லுகிறோம் என்பதில்லை. அந்தந்த

மாவட்டத்திற்கு, அந்தந்தப்பகுதிகளுக்கு இன்னின்ன தொழிற்சாலைகள் வேண்டும் என்று எதிர் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் உங்களைப் பார்த்து தைரியமாகக் கேட்கிறபோது, அந்த தைரியத்தை பெற்று, டில்லி சென்று, தெளிவாக, தைரியமாக வாதாடி, தமிழகம் வாழ்வதற்கு, தமிழகத்தில் தொழில்கள் சிறப்பதற்கு, தொழில்கள் மூலம் தமிழகம் வளம் பெறுவதற்கு, தமிழக மக்களுடைய வாழ்க்கை நலம் பெறுவதற்கு, உறுதுணையாக இந்த அமைச்சரவை போராட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.



உரை : 2 நாள் : 16.04.1981

கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்களாலே அவையின் முன் வைக்கப்பட்டுள்ள தொழில் கொள்கைகள், திட்டங்கள் இவைகளைக் குறித்தும், மானியக் கோரிக்கை குறித்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான தொழிலாக பெரும் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கக் கூடியதாகவும் வளத்தை தரக்கூடியதாகவும் அமைந்துள்ள வேளாண்மைத் தொழிலுக்கு அடுத்தபடியாக, பெரிய தொழில் பல்வேறு பகுதிகளில் உருவாக்கப் படவேண்டும் என்ற கொள்கை நம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். வேளாண்மைத் தொழில் தமிழகத்திலேயும் சரி, இந்தியத் திருநாட்டிலேயும் சரி, மிக முக்கியமான பெரும்பான்மை மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்ற தொழில் என்றாலும் கூட, என்னதான் அதற்கு ஊக்கமும் உற்சாகமும், உரமும், சலுகைகளும் வழங்கினாலும் அதனுடைய வளர்ச்சி ஒரு கட்டத்தோடு நின்றுவிடக்கூடியது என்பதும், அதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட தொகை மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதாலும் பல்வேறு தொழில்களை, சிறு தொழில்களானாலும் நடுத்தர தொழில்களானாலும், பெரும் தொழில்களானாலும், இவைகளை வளர்ப்பதன் மூலமும், விரிவாக்குவதன் மூலமும் புதிதாக உருவாக்குவதன் மூலமும், தொடர்ந்து வேலைவாய்ப்புகளை மக்களுக்கு அளிக்கவும், வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கவும் இயலும் என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மக்கள் தொகையின் பெருக்கம் என்ற அடிப்படையில் பார்க்கிறபோது அது விகிதாச்சார வகையிலே பெரும் அளவு குறைந்து இருக்கிறது. எண்ணிக்கை அளவிலே மக்கள் தொகை கடந்த காலத்தைவிட இப்போது அதிகமாகி இருக்கிறது என்றாலும் கூட விகிதாச்சார வகையிலே மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது குறைந்த கணக்கைத்தான் விழுக்காடு நிலையில் காட்டிக்கொண்டு இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கும் மக்கள் தொகை கணக்கை எடுத்துக்கொண்டால் அது மேலும் மேலும் அதிகமாகிக்கொண்டு வருகிறது என்பதை அரசின் சார்பில் கொடுக்கப்பட்ட வரைவுகளிலேயே குறிப்பிட்டு இருப்பதை நான் கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.

நாட்டில் உள்ள வேலை இல்லாதோர் தொகை என்ற புள்ளி விவரத்தைப் பார்க்கிறபோது நாட்டினுடைய சராசரி 8.5% இருக்கிறது. தமிழ் நாட்டின் சராசரி 16.1% இருக்கிறது. இந்தக் கணக்கினை அரசு தந்துள்ள குறிப்புகளிலேயே நம்மால் காண முடிகிறது. எனவே வேலை இல்லாமல் இருக்கின்றவர்கள் தொகை என்ற புள்ளிவிவரப்படி நமது மாநிலம் இந்தியாவிலேயே இரண்டாவது மாநிலமாக அமைந்து இருக்கிறது என்பது பெருமைக்குரியது அல்ல. இரண்டாவது என்பது பரிசு பெறுகின்ற நேரத்திலே, முதல் பரிசு, இரண்டாவது பரிசு, மூன்றாவது பரிசு என்று இந்த மூன்று பரிசுகளும் பாராட்டத்தக்கது என்றாலும் கூட, வேலை இல்லாதோர் தொகையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் நிலைமையில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, நம்முடைய மாநிலம் இரண்டாவது மாநிலமாக இருக்கிறது என்பதை நாம் வேதனையோடுதான் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

6-வது திட்ட வரைவு ஒன்றை நம்முடைய மாநில திட்டக் குழு தயாரித்து வெளியிட்டு இருக்கிறது. அதிலே கூட 'High proportion of people in Tamil Nadu are below the poverty line.' என்பதை மிகத் தெளிவாக ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். இங்கே ஆளும் கட்சியின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தொழில்துறை மிகவும் பின் தங்கிவிட்டது என்றும், பல தொழிற்சாலைகள் ஆங்காங்கு அமைக்க வழி இருக்கின்றது என்று அதிகாரிகளால்

சுட்டிக்காட்டப்பட்டு கூட, அவைகளைத் தொடர்ந்து நிறைவேற்றுகின்ற அக்கரை கழக ஆட்சிக்கு இல்லாமல் இருந்தது என்றும், இன்றைக்கும் பேசினார்கள். நேற்றையதினமும் சிலர் பேசியபோது அத்தகைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அரசின் சார்பில் வெளியிடப்பட்டு இருக்கின்ற தொழில் கொள்கைகளும், திட்டங்களும் என்ற புத்தகத்திலே கூட திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் தொழில் துறையில் காட்டப்பட்டுள்ள அக்கறை எத்தகையது என்று கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்டதொரு பொது நிறுவனமாக (ரூபாய் ஆறு கோடி ஒப்பிய மூலதனத்துடன்) தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறுவதற்கும் விரிவடைவதற்கும் இதுவரை இம்மாநிலத்தில் பின்தங்கியுள்ள பகுதிகளை விரைந்து தொழில் மயமாக்குவதற்குமான முக்கிய குறிக்கோள்களுக்காக சனவரித் திங்களில் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒருங்கமைந்த முன்னேற்றத் திட்டத்துடன் தனது பணிகளைத் தொடங்கியது. அதில் இருந்து 'சிப்காட்' நிறுவனம் கடந்த ஏழு ஆண்டுகளாக நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறவும் விரிவடையவும் ஆன பணிகளைச் சிறந்த முறையில் செய்து வருகிறது. 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ. 6,136.65 இலட்சம் உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுடன், இதன் மூலம் 46,000 பேருக்கு மேல் மொத்த நேரடி வேலைவாய்ப்பை நல்கியுள்ளது. இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமாகக் கருதக்கூடியது, ஊக்குவிக்கப்பட்ட முதலீட்டில் பெரும்பகுதி இம்மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளிலேயே பயன்படுத்தப்பட்டது என்பதாகும்.

இதுவரையில் அளிக்கப்பட்ட மொத்த உதவித் தொகை பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் 53 கோடி ரூபாய் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று இந்த அரசின் சார்பிலே தரப்பட்டுள்ள குறிப்பிலே எவ்வளவு நல்ல நோக்கத்தோடு இந்த சிப்காட் நிறுவனம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1972ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது என்றும் அதனால் சற்றொப்ப 46,000 பேர்களுக்கு மேல் வேலை

வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் எடுத்துக்காட்டி யிருப்பதை நான் இந்த அவையின் முன் வைப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அதைப்போல மற்றொரு நிறுவனம் 'தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்; 'சிட்கோ' என்று அழைக்கப்படும் இந்த நிறுவனம் 1970ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23ஆம் நாள் நிறுவப்பட்டு பின்னால் 1971ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 21ஆம் நாள் ஒரு பொது நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் மூலக் குறிக்கோள் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினைக் குறிப்பாக சின்னஞ்சிறு தொழில் துறைகளில் பரவலான, விரைவான வளர்ச்சியும், முன்னேற்றத்தையும் ஊக்குவிக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாகும் என்று அரசின் குறிப்பிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

தொடர்ந்து சிட்கோ நிறுவனம் தொடங்கப்பட்ட 1971ஆம் ஆண்டு முதல் 1979-80ஆம் ஆண்டுவரை சுமார் 514 தொழிற் கூடங்களை தவணைமுறைத் திட்டத்தின்கீழ் அம்பத்தூர், இராணிப்பேட்டை, ஓசூர், நாமக்கல் முதலான இடங்களில் கட்டி வழங்கியுள்ளது. 1979-80ஆம் ஆண்டு 58 தொழிற்கூடங்கள் அம்பத்தூர், இராணிப்பேட்டை, புதுக்கோட்டை முதலான இடங்களில் கட்டப்பட்டு வழங்கப்பட்டது என்று இந்த அரசின் தொடர்பு பணிகளையும் இணைத்து இதிலே குறிப்பிட்டிருக் கிறார்கள். எனவே கழக ஆட்சிக் காலத்தில் தொழில் வளர்ச்சியில் காட்டப்பட்ட அக்கறை குறைந்திருந்தது என்று சாட்டப்படுகின்ற குற்றச்சாட்டு அர்த்தமற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தொடர் நடவடிக்கையாக, இந்த ஆட்சி காலத்தில், கழக ஆட்சிக் காலத்திலும் அதற்கு முன்பு இருந்த ஆட்சிக் காலத்திலும் தொழில்துறை முன்னேற்றத்தில் காட்டப்பட்ட ஆர்வம் காட்டப்படவில்லை என்ற குறைபாட்டை நான் தெரிவிப்பது இந்த அரசை குறைசொல்ல வேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல, தொழில்கள் மேலும் பெருகிட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

எந்த அளவுக்கு நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற தொழில்கள் இழப்புகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்கின்ற புள்ளி

விவரங்கள் "Comptroller and Auditor-General of India" அவர்களால் ஆய்வு செய்யப்பட்ட அறிக்கை இந்த அவையில் 23.1.1981-ல் வைக்கப்பட்டது. அந்த ஆடிட் அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. Tamilnadu Sugarcane Farm Corporation அதாவது தமிழ்நாடு கரும்பு பண்ணை கார்ப்பரேஷன் 1974-75ஆம் ஆண்டில் அதாவது கழக ஆட்சியின்போது தொடங்கப்பட்டது. 22.2.1974 முதல் 30.6.1975-க்குள் 6.12 இலட்சம் ரூபாய் இலாபத்திலே அந்த பண்ணை நடைபெற்றது. ஆனால் கம்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா அவர்களின் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் 1976-77-ல் 10.58 இலட்சம் ரூபாய் நஷ்டமும், 1977-78-ல் 28.06 இலட்சம் ரூபாய் நஷ்டமும், 1978-79-ல் 5.84 இலட்சம் ரூபாய் நஷ்டமும் என்ற அளவுக்குதான் இந்த சுகர்கேன் பார்ம் கார்ப்பரேஷன் நடைபெற்றிருக்கிறது என்பது இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் இது மட்டுமல்ல, இன்னும் பல இழப்புகளை இந்த அறிக்கை சுட்டிக்காட்டி இருக்கிறது. இந்த அறிக்கையில் 154-ம் பக்கத்தில் தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் டெவலெப்மென்ட் கார்ப்பரேஷன் 1978-79ஆம் ஆண்டுக் கணக்கின்படி 46.86 இலட்சம் ரூபாய் நஷ்டம், தமிழ்நாடு ஸ்மால் இன்டஸ்டிரிஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் 1978-79ஆம் ஆண்டு கணக்கின்படி 37.66 இலட்சம் ரூபாய் நஷ்டம். தமிழ்நாடு ஹாண்டிகிராப்ட் டெவலெப்மென்ட் கார்ப்பரேஷன் 1976-77ஆம் ஆண்டு கணக்கின்படி 25.12 இலட்சம் ரூபாய் நஷ்டம். தமிழ்நாடு சிராமிக் லிமிடெட் 1978-79ஆம் ஆண்டு கணக்கின்படி 30.53 இலட்சம் ரூபாய் நஷ்டம். தமிழ்நாடு சுகர்கேன் பார்ம் கார்ப்பரேஷன் 1979-80ஆம் ஆண்டு கணக்கின்படி 5.84 இலட்சம் ரூபாய் நஷ்டம். தமிழ்நாடு சால்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் 1978-79ஆம் ஆண்டு கணக்கின்படி 10.30 இலட்சம் ரூபாய் நஷ்டம்.

தமிழ்நாடு சுகர் கார்ப்பரேஷன் லிமிடெட் - 1978ஆம் ஆண்டு கணக்கின்படி 66.18 இலட்சம் ரூபாய் நஷ்டம், தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் 1978-79ஆம் ஆண்டு கணக்கின்படி 6.02 இலட்சம் ரூபாய் நஷ்டம். சதர்ன் ப்ரிக் ஒர்க்ஸ் லிமிடெட் - 1978-79ஆம் ஆண்டு கணக்கின்படி 9.42 இலட்சம் ரூபாய் நஷ்டம். தமிழ்நாடு சிமின்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் - 1978-79ஆம் ஆண்டு கணக்கின்படி 28.37 இலட்சம் ரூபாய் நஷ்டம். பெரம்பலூர்

சுகர் மில்ஸ் லிமிடெட் 1978ஆம் ஆண்டு கணக்கின்படி 63.28 இலட்சம் ரூபாய் நஷ்டம். தமிழ்நாடு மொபட்ஸ் லிமிடெட் 1978-79ஆம் ஆண்டு கணக்கின்படி 38.83 இலட்சம் ரூபாய் நஷ்டம். இப்படி நஷ்டத்திலே இயங்குகின்ற அளவுக்கு இந்தத் தொழிற்சாலைகளள் நடத்தப்பட்டு வருவது நிர்வாகத்தினுடைய திறமையின்மையைக் காட்டும் என்பதை நான் இந்த அவையில் அவைகள் திருத்தப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து 6-வது ஐந்தாண்டுத் திட்ட விரைவு அறிக்கை. மாநில திட்டக் குழுவினால் அளிக்கப்பட்ட இந்த அறிக்கையில் ஒரு கருத்து கூறப்பட்டிருக்கின்றது. அந்தக் கருத்தோடு ஒத்துச் செல்லுகின்ற இணைந்து வாதிடுகின்ற நிலை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டுகிறேன். மொத்த இந்தியாவுக்கும் மைய உதவி 1979-ல் 15,668 கோடி ரூபாயாக இருக்க, அதில் தமிழ்நாட்டிற்கு மாத்திரம் கிடைத்திருப்பது 516 கோடி ரூபாய்தான் என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது. அது மாத்திரமல்ல, தமிழ் நாட்டினுடைய மக்கள் தொகை கணக்கை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் கூட 8 சதவீதம் நமக்குக் கொடுப்பதற்கு பதிலாக 4 சதவீதம்தான் கொடுத்து இருக்கின்றது என்பதும் மாநிலத் திட்டக் குழுவின் அறிக்கையிலே கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றது. நியாயமாக இன்னும் அதிகமாகக் கொடுத்திருக்கவேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன். அந்தக் கருத்தை நான் ஒத்துக்கொள்கிறேன். தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக மத்திய அரசோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி அல்லது இன்றைக்கு இருக்கின்ற ஆட்சியானாலும் சரி வற்புறுத்திப் பெற வேண்டியதற்கான வாதங்களை எடுத்து வைத்து நாம் இங்கே தருவித்துக் கொள்ள வேண்டும் பல திட்டங்களை என்று சொல்கின்ற நேரத்திலே கழக ஆட்சிக் காலத்திலே அதற்காக வாதாடிய அளவுக்கு இந்த ஆட்சிக் காலத்திலே அதற்காக வாதாடப்பட வில்லை என்பதுதான் எனக்கு இருக்கக் கூடிய குறையாகும்.

அவர்கள் நமக்கு எதையும் அளிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகிற அதே நேரத்தில் அவர்களாக முன்வந்து அளித்த ஒரு திட்டம் பற்றி இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பலரால்

எடுத்துக் காட்டப்பட்டது. பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். இரயில் பெட்டிகளைத் தயாரிக்கின்ற தொழிற்சாலைத் திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்ள அந்த திட்டத்தை மத்திய அரசு தமிழ் மாநிலத்திற்கு வழங்க முன்வந்தபோது அதைப் பயன்படுத்திக் கொள்ளாத குற்றம் யாருடையது என்பதை தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். 400 கோடி ரூபாய் திட்டத்தின்படி ஆயிரம் ஏக்கர் மொத்த இடம் தேவை என்றும் அதிலே தொழிற்சாலை அமைப்பதற்கு 200 ஏக்கர் போதுமானது என்றும் தொழிற்சாலைக்கு தொடர்புடைய பல கட்டிடங்களைக் கட்டவும் வேறுபல வசதிகளுக்கும் மீதம் உள்ள இடம் தேவைப்படும் என்றும் அதற்கான முயற்சிகளில் தமிழக அரசு ஈடுபட வேண்டும் என்றும் இந்த அரசை மத்திய அரசு கேட்ட நேரத்தில் மாநில அரசு அதுபற்றி கேளாக் காது படைத்த அரசாக இருந்துவிட்ட காரணத்தால் நமக்கு கிடைத்திருக்க வேண்டிய 400 கோடி ரூபாய் இரயில் பெட்டித் தொழிற்சாலைத் திட்டம் கிடைக்காமல் போய்விட்டது. ஒன்றல்ல, இரண்டல்ல, பத்தாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு பெரும் திட்டம் அது. அந்தத் தொழிற்சாலையிலே 10,000 பேருக்கு வேலை வாய்ப்பும் அந்தத் தொழிற்சாலைக்கு தேவைப்படும் உபகரணங்களான துணைப்பொருட்களைத் தயாரிக்கின்ற தொழில்களிலே 5,000 பேருக்கு மேல் வேலைவாய்ப்பும் கிடைக்கக்கூடிய அந்த மிகப் பெரிய திட்டத்தை 400 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உள்ள திட்டத்தை உரிய நேரத்திலே நாம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவில்லை என்பதும் அந்தத் திட்டம் திருப்பதிக்கு அதாவது ஆந்திர மாநிலத்திற்கு சென்று விட்ட பிறகு ஏன் அந்த திட்டத்தை இங்கே கொண்டு வரப் போராடக்கூடாது என்று சில உறுப்பினர்கள் கேட்பதும் எனக்கு விந்தையாக தோன்றுகிறது.

நாம் அந்த திட்டத்தை அவர்கள் வழங்கிய போது ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதற்கான வசதி வாய்ப்புகளை மத்திய அரசுக்கு செய்து கொடுக்க நாம் தயாராக இல்லை. இப்போது அந்தத் திட்டம் பறிபோய்விட்டது. ஆந்திர மாநிலத்திற்கு சென்று விட்டது. ஆந்திர மாநிலத்திற்கு சென்றுவிட்ட பிறகு, அந்தத் திட்டம் தமிழகத்திற்கு வேண்டும்

என்று எப்படி கேட்பது? எந்த முகத்தை வைத்துக் கொண்டு கேட்பது என்று எனக்கே புரியவில்லை. அந்தக் குற்றச்சாட்டை கூறியவர்கள்தான் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வேன். அது மாத்திரம் அல்ல, அசோக் லேலண்ட் எக்ஸ்பேன்ஷன் என்ற அளவிலே ஒரு பெரிய தொழில் திட்டத்தைச் சொல்லி, சில சலுகைகளை தரவேண்டுமென்று வைத்துக் கேட்ட நேரத்திலே, அந்தச் சலுகைகளை அளிக்க இயலாது என்று ஒரே பிடிவாதமாக அளிக்க மறுத்துவிட்ட காரணத்தால் இன்றைக்கு அந்த தொழிற்சாலை ராஜஸ்தானத்திலும், மராட்டிய மாநிலத்திலும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிற திட்டமாக அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும், அவர்கள் கேட்ட சலுகைகளை அந்த இரு மாநிலங்களும் தருகிற அளவிற்கு முன் வந்த காரணத்தால், அசோக் லேலண்ட் எக்ஸ்பேன்ஷன் திட்டம் இங்கே இடம் பெறாமல் வேறு மாநிலத்திற்கு சென்று விட்டது என்பதையும் ஒரு குறைபாடாகத்தான் கருத வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

கழக ஆட்சிக் காலத்திலே, மத்திய அரசோடு வாதாடி போராடி திட்டங்களைப் பெறவில்லை என்று ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது கூறினார். திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய அரசோடு, விரோதத்தை வளர்த்துக் கொண்ட காரணத்தால் பல திட்டங்கள் நமக்கு கிடைக்கவில்லை என்று இங்கே கூறினார்கள். அவர்களாவது நட்பை வளர்த்துக் கொள்ளட்டும். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி விரோதத்தை வளர்த்துக்கொள்ளவில்லை. எந்த நேரத்திலேயும் உறவுக்குக் கைகொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம் என்ற அந்த அடிப்படையிலேதான் மத்திய அரசோடு தன்னுடைய வாங்களை எடுத்து வைத்திருக்கிறது.

சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை திட்டம் தேவை என்பதற்காகவும்; நெய்வேலி திட்டத்திற்காகவும் தூத்துக்குடி துறைமுக திட்டத்திற்காகவும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டிருந்த காலத்திலே எழுச்சி நாள்

கொண்டாடினோம். ஆளும் கட்சியாக இருந்தாலும் கூட, தமிழ்நாடு முழுவதும் எழுச்சி நாள் கொண்டாடப்பட்டு, அத்தகைய திட்டங்கள் தமிழகத்திற்கு மேலும் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலியுறுத்தப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு ஆளான நான், டெல்லியில் நடைபெற்ற தேசீய வளர்ச்சிக் குழுவிலே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய வரைவை மற்ற மாநிலங்களின் முதல்வர்கள் எல்லாம் வரவேற்று ஏற்றுக் கொண்ட நேரத்திலே சேலம் திட்டம் அதிலே இடம் பெறவில்லை என்ற காரணத்தால், அந்த 4-வது ஐந்தாண்டுத் திட்ட வரைவினை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று புறக்கணித்த அந்தச் செய்தி அப்பொழுதெல்லாம் பத்திரிகைகளில் பரபரப்பாக வெளி வந்ததையும், அதற்குப் பிறகு, ஓரிரு மாதங்களுக்குள், அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், சேலம் திட்டத்திற்கான ஒப்புதலை வழங்க, அந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவை அந்தப் பகுதியிலே நடத்துவதற்காக அவர்கள் வந்தபோது தலைவர் அவர்களே, தாங்களும் நானும் அவர்களை வரவேற்று, அந்த விழாவை நடத்தியதும், தாங்கள் அப்போது சேலத்து மாங்கனி - முக்கனியை வெள்ளியால் செய்து - தங்கமுலாம் பூசிய அந்த முக்கனியை, இந்திய பிரதமர் அவர்களுக்கும், எனக்கும், மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும், வழங்கிய அந்த நிகழ்ச்சியை நானும் நீங்களும் மறந்துவிட முடியாது, இன்று ஆளும் கட்சியில் உள்ள சிலபேர் மறந்திருந்தாலும் கூட.

எனவே அந்த அளவுக்கு தமிழ்நாடு அரசு போராடி அந்த சேலம் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பெற்றோம். அதற்கு பிறகும் அதிலே பல சங்கடங்கள் இன்னல்கள் ஏற்பட்டன. அது இங்கே நடைமுறைக்கு வரக் கூடாது என்பதற்காக பல இன்னல்கள் ஏற்பட்டன. அவைகளையும் தவிர்த்து மத்திய அரசோடு வாதாடி, அந்தத் திட்டம் உருவாவதற்கான சூழ்நிலையை அன்றைக்கு நாம் மேற்கொண்டோம். இருந்தாலும்கூட இன்றைக்கு அந்தப் பெரிய திட்டம் பெரிய அளவிற்கு சுருக்கப்பட்டு, இங்கே அது ஒரு சேலம் ஸ்டீல் ரோலிங் கம்பெனி என்ற அளவிற்கு ஆக்கிவிட்டோமோ

என்று ஐயத்தக்க அளவிற்கு அது கவனிப்பாரற்ற நிலைமையிலே இருந்து வருகிறது என்பதை மெத்த வேதனையோடு, நான் இந்த மாமன்றத்தில் மத்திய அரசிற்கு, இந்த அரசின் சார்பாக எடுத்துக் காட்டுகிற அந்தப் பணியிலே என்னையும் இணைத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜனதா ஆட்சிக்காலத்திலே மத்திய அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு பிஜு பட்நாயக் அவர்கள் தொழில் அமைச்சர் பொறுப்பிலே இருந்த நேரத்திலே துர்க்காபூர் ஆலைக்கு பல முக்கியமான திட்டங்களை அனுமதித்து விட்டார்கள்.

அதுபோலவேதான் கர்நாடகத்தில் குதிரைமூக்கு என்ற இடத்திலும், ஆந்திராவில் விசாகையிலும், இரும்புத் தொழிற் சாலைகள் இன்றைக்கு ஏற்பட்டு அவை நடைமுறைக்கு வருகிற இந்தக் காலகட்டத்தில் நாம் அரும்பாடுபட்டு, பலநேரங்களில் போராடி எழுச்சி நாள் கொண்டாடி என்.டி.ஸி. கூட்டத்திலும் தமிழ்நாடு சார்பில் வலுவான வாதங்களை எடுத்து வைத்து நான்காவது ஐந்தாண்டு திட்டத்தைக் கூட நாங்கள் புறக்கணிக்கிறோம் என்று கூறி அவ்வளவு பெரிய போராட்டத்திற்குப் பிறகு கிடைத்த சேலம் இரும்புத் தொழிற் சாலைத் திட்டம் இன்றைக்கு வெறும் ஒரு ஸ்டீல் ரோலிங் கம்பெனி என்ற அளவிற்கு ஆகிவிடுமோ என்று அச்சப்படத்தக்க அளவிற்கு கூனிக் குறுகிப் போய்க் கொண்டிருக்கிறது. இன்றைக்குள்ள ஆட்சியாளர்களின் மெத்தனத்தால் அத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறதோ என்று நான் அஞ்சுகிறேன். எனவே ஆட்சியாளர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு நாம் கோரிய அந்த இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் உருவாவதற்கான ஏற்பாடுகளைச்செய்ய வேண்டும் என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

13,000 தொழிலாளர்களைக் கொண்ட பி.அண்ட்.சி. மில் இன்று மூடப்பட்டிருக்கிறது. இது தொழில்துறை மானியம் என்றாலும் கூட தொழிலும் தொழிலாளர்களும் இணைந்தே இருக்கிறார்கள். தொழிலாளர்கள் இல்லாமல் தொழில் இல்லை. தொழில்களை நம்பி தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். எனவே, இந்தியாவிலேயே மிகப் பெரிய ஏன் ஆசியாவிலேயே மிகப்

பெரிய, முதல் முதல் ஒரு பெரிய, மகத்தான யூனியனைப் பெற்றதொரு நிறுவனம் பி.அண்ட்.சி. மில் நிறுவனம். தமிழகத்தினுடைய மிகப் பெரிய தியாகிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் தொடர்ந்து அந்த பி.அண்ட்.சி. மில் தொழிலாளர்களுடைய இயக்கத்தில் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். இன்னமும் அந்த ஆலை திறக்கப்படாத ஒரு நிலைமை. இதில் இந்த அரசு எடுத்துக்கொண்டுள்ள அக்கறை என்ன, ஆர்வம் என்ன என்று பார்க்கிற நேரத்தில் இந்த அரசு சார்பில் இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது எதிர்கட்சி வரிசையில் இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள், எல்லாக் கட்சிகளையும் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தின் துணைத் தலைவர் அவர்கள் ஆகியோர் எடுத்துக் கொண்ட ஆர்வம். அங்குள்ள மத்திய அமைச்சர்களைச் சந்தித்து பலமுறை பேசி அவர்கள் எடுத்த அந்த நடவடிக்கைகளுக்கு இந்த அரசு எந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டது? எந்த அமைச்சர்கள் டெல்லியில் யார் யாரை எவ்வளவு முறை சந்தித்தார்கள்? பி.அன்ட்.சி. ஆலை திறக்கப்படவேண்டும், 13,000 தொழிலாளர்கள் வேதனை தீர்க்கப்படவேண்டும் என்பதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்ட அக்கறை என்ன என்பதையெல்லாம் யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், எனவே 13,000 தொழிலாளர்கள் சார்பாக உரிய நேரத்தில் உற்ற குரலை இந்த அரசு கொடுத்திடவில்லை என்பதற்காக என்னுடைய குற்றச்சாட்டை இந்த அரசின் மீது சுமத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். பெரிய தொழில் திட்டங்கள் எதுவும் நிதி நிலை அறிக்கையிலும் சரி அல்லது நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் தந்துள்ள இந்தக் கொள்கை குறிப்புகளிலும் சரி இல்லை என்பதை நான் வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக வரவு-செலவுத் திட்டத்தில், நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிற பல்வேறு தொழில் துறை திட்டங்கள், வேலைவாய்ப்புக்கான திட்டங்கள், ஆயிரம், பத்தாயிரம், லட்சம் என்று பல தொழில்களைத் தொடங்கப் போகிறோம் என்றெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்கள் "பாலோஅப் ஆக்ஷன்" என்று சொல்வார்களே அந்த தொடர் நடிவடிக்கைகளின் பேரில் நிறைவேற்றப்படுகின்றனவா என்றால் இல்லை என்ற பதில்தான் நமக்கு கிடைக்கிறது.

கடந்த 1977-ம் ஆண்டு முதல் நிதி நிலை அறிக்கையிலும் சரி அல்லது தொழிலமைச்சரின் அறிக்கையிலும் சரி எவ்வளவோ தொழில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவைகள் எதுவும் நிறைவேற்றப்படுகிற அளவிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பெரிய தொழில் திட்டம் என்ற பெயரால் நம்முடைய நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் இங்கே படித்த அறிக்கையில் வடஆற்காடு மாவட்டத்தில் வெடிமருந்து தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட இருக்கிறது என்பதாகும். ஆனால் அந்த வெடி மருந்து தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்றால் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற கொள்கைக் குறிப்பேட்டை எடுத்துப் பார்த்தால் 83-84ம் ஆண்டுதான் அது அங்கே தொடங்கப்படும். அதற்கிடையில் அதற்கான ஆய்வுவேலைகள் நடைபெறும் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1983-84ல் தொடங்கப்பட இருக்கிற வெடிமருந்து தொழிற்சாலைக்கு, வட ஆற்காடு காட்பாடி அருகில் தொடங்கப்பட இருக்கிற வெடி மருந்து தொழிற்சாலைக்கு முக்கியத்துவம் அளித்து பட்ஜெட் உரையில் அதைப்பற்றி கருத்து வெளியிட்ட நிதி அமைச்சர் அவர்கள் 200 கோடி ரூபாய் அளவிலே நிறைவேற இருக்கிற நியூஸ் பிரின்ட் உற்பத்தி தொழிற்சாலை பற்றிய குறிப்பு எதையும் வெளியிடவில்லை.

200 கோடி ரூபாய் அளவிலே, கிட்டத்தட்ட, நிறைவேற யிருக்கின்ற நியூஸ் பிரின்ட் உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலை பற்றிய எந்தக் குறிப்பையும் நிதி நிலை அறிக்கையிலே தராதது வியப்படையக்கூடிய ஒன்றாகும். எதிர்க்கட்சித் துணை தலைவர் பேராசிரியர் அவர்கள் கூட நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகிறபோது குறிப்பிட்டார்கள் - இவ்வளவு பெரிய திட்டத்தை நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையிலே அறிவிக்காமல் மறைத்து விட்ட மர்மம்தான் என்ன என்று கேட்டார்கள். இங்கேகூட அந்தத் திட்டத்தைப் பற்றிப் பல நண்பர்களும் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். இருபதுகோடி ரூபாய் திட்டத்தை இவ்வளவு அவசரமாக அறிவித்து விட்டு,

ஆனால் அது 1983-84ம் ஆண்டிலேதான் தொடங்கப்படும் என்ற நிலையில் இப்போது முன் கூட்டியே அறிவிப்பதிலே இந்த ஆர்வம் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் அளவிலே உள்ள இந்த நியூஸ் பிரின்ட் தொழிற்சாலை பற்றிய அறிவிப்பை நிதியமைச்சர் செய்யாததற்கு என்ன காரணம்? அதைப் பற்றிப் பெரிய விளம்பரங்கள் கூட வராததற்கு என்ன காரணம் என்பதெல்லாம் புரியாத புதிராக இருக்கிறது.

நான் இந்தத் திட்டத்தைப் பற்றிக் கூட நிதிநிலை அறிக்கையிலே தேடிப்பார்த்துக் கிடைக்காமல் உங்களால் தரப்பட்ட பெரிய புத்தகங்களிலே தேடிப்பார்த்த போது அதிலேதான் இதற்கு 27½ கோடி ரூபாய் ஒதுக்கி, இந்தக் காகித தொழிற்சாலை நியூஸ்பிரின்ட் தொழிற்சாலை, வெறும் காகித தொழிற்சாலை அல்ல, நியூஸ்பிரின்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. எனவேதான் நியூஸ்பிரின்ட் காகித தொழிற்சாலைக்கு 1979ம் ஆண்டு அன்றைக்கு செலவாகும் என்று அறிவிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை 153 கோடி ரூபாய் - 153 கோடி என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

1980ல் தமிழ்நாடு நியூஸ்பிரின்ட் அண்டு பேப்பர்ஸ் லிமிடெட் சேர்மன் அளித்துள்ள ஒரு அறிக்கையில், அந்த அறிக்கைப் புத்தகத்தில் 160 கோடி ரூபாய் என்று அறிவித்திருக் கிறார்கள். அந்த வேறுபாடுகளை வரிசைப்படுத்திப் பார்க்க வேண்டும். 1979லே 153 கோடி என்று அறிவிப்பு. 1980ல் தமிழ்நாடு நியூஸ்பிரின்ட் அன்ட் பேப்பர்ஸ் லிமிடெட், சேர்மன் 160 கோடி ரூபாய் அளவிற்கு வருகிறது என்று அறிவித்து, இதோ என் கையிலிருக்கிற 6வது ஐந்தாண்டுத் திட்டம் என்று இந்த அரசால் தரப்பட்ட இந்தப் புத்தகத்தில் மாநில திட்டக்குழு அளித்துள்ள இந்தப் புத்தகத்தில் 180 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு இந்தப் புத்தகம் வெளிவந்து சில மாதங்களுக்குள்ளாக இந்த மானியக் கோரிக்கையிலே அமைச்சர் அறிக்கையிலே 105ம் பக்கத்திலே 180 கோடி என்று அறிவித்து இன்றைக்கு இதிலே ஒரு திருத்தம் போடப்பட்டு அமைச்சர் முன்னுரையிலே 190 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்.

1979லே 153 கோடி, 1980ல் சேர்மன் அறிக்கையிலே 160 கோடி, இங்கே தரப்பட்டிருக்கிற மாநில திட்டக் குழுவின்

6வது திட்ட அறிக்கையிலே 180 கோடி, தொழில் துறை அளித்துள்ள குறிப்பில் 190 கோடி என்று அறிவித்திருக்கிறார்கள். ஆக, ஓராண்டுக்குள் அல்லது, ஒரு சில மாதங்களுக்குள் சுமார் 40 கோடி ரூபாய் அளவிற்கு வித்தியாசம் ஏற்படுகிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

சேர்மன் ரிப்போர்டில், நியூஸ்பிரின்ட் தொழிற்சாலை இருக்கிறதே அதன் சேர்மன் அளித்துள்ள இந்த ரிப்போர்ட்டில் சொல்கிறார், மாநில அரசு 22 கோடி ரூபாய்தான் தரும். 22 கோடிக்கு மேல் தராது; 22 கோடி ரூபாய் வருமென்று எதிர்ப் பார்க்கப்படுகிறதென்று சொல்கிறார்கள். சேர்மனே 22 கோடிதான் எதிர்ப்பார்க்கிறார். ஆனால் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 27½ கோடி.

இந்தக் காகித ஆலைத் திட்டம் 50,000 டன் நியூஸ் பிரின்ட் 40,000 டன் எழுதுகிற தாள், மற்ற தாள்கள் இவைகளை உற்பத்தி செய்யும் என்று அமைச்சர்களுடைய அறிக்கையிலே தெளிவாகத் தரப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தத் தொழிற்சாலை சேர்மேனாக நியமிக்கப்பட்டிருக்கின்றவருடைய அறிக்கை என்ன சொல்கிறது? டைரக்டர்ஸ் ரிப்போர்ட்லே அவர் சொல்கிறார், 83.000 டன் நியூஸ்பிரின்ட், 17,000 டன் எழுது தாள், மற்ற தாள்கள் என்று, கவர்ன்மென்ட் ஆப் இந்தியா லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுத்திருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

The Govenment of India, Ministry of Industry issued a letter of intent No.L.I/183 (79), dated July 3, 1979 to the Company for manufacture of 83,000 tons of newsprint and 17,000 tons of writing and printing paper out of bagasse. The Company is taking steps to obtain extension of the validity of the letter of intent என்று இதிலே குறிப்பிடப் பட்டிருக்கின்றது. 83 ஆயிரம் டன் நியூஸ்பிரின்ட் உற்பத்தி செய்வதாகச் சொல்லிவிட்டு, இப்பொழுது 50 ஆயிரம் டன் நியூஸ்பிரின்ட் உற்பத்தியாகும் என்று அறிக்கைகளிலே தரப்பட்டிருக்கின்றது. எனக்குள்ள சந்தேகம் எல்லாம் இந்த தொழிற்சாலை, இந்த நியூஸ் பிரிண்டை தயாரிக்க முடியுமா? நியூஸ்பிரிண்ட் தயாரிக்க முடியுமென்று ஒரு முக்கியமான பணியை முன் வைத்துதான் மத்திய அரசு கூட இதற்கான லெட்டர் ஆப் இன்டென்ட் தந்திருக்கும் என்று நம்புகிறேன். இதற்கு

மேலான விவரங்கள் மத்திய அரசுக்கே கூட தெரிவிக்கப் படவில்லை என்று நான் கருதுகிறேன். ஆனால் இந்தத் தொழிற்சாலை நியூஸ் பிரிண்ட் தயாரிக்கக்கூடிய அளவிற்கு தன்னுடைய வழிமுறைகளை வகுத்துக் கொண்டு பணியினை முடுக்கி விட்டிருக்கிறதா என்றால் இல்லை. இந்தத் தொழிற்சாலைக்கு சேர்மேனாக யாரை நியமித்து இருக்கிறீர்கள்? இந்தக் கேள்வியைச் சொல்வதற்கு முன்பு ஒரு பழைய விஷயத்தை ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். 1975-76ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் மீது வாக்கெடுப்பு நடைபெற்றபொழுது, நம்முடைய இன்றைய கல்வி அமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்கள், இந்த வரிசையிலே எதிர்க்கட்சி வரிசையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக அமர்ந்து ஒரு பிரச்சினையை எழுப்பினார்.

''தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்பிக் தொழிற்சாலையைத்தான் சொல்ல வேண்டும். அங்கே 84 கோடி ரூபாய் அளவில் தொழிற்சாலையை ஆரம்பிக்கின்றீர்கள். அடுத்து கடலூரில் 120 கோடி அளவில் ஆரம்பிக்க உரிமம் வழங்கி யிருக்கிறார்கள். கடலூரில் ஆரம்பிக்கவில்லை; உங்களுக்குத் தெரியும், என்றாலும் அவர்கள் சொன்னதைச் சொல்கிறேன். "ஏறத்தாழ 220 கோடி அளவில் ஒரு மிகப் பெரிய தொழில் சாம்ராஜ்யத்தை ஒரு தனி மனிதர் நடத்தக்கூடிய நிலையில் இன்றையதினம் இந்த அரசு செய்திருக்கிறது. அவர்கள் எந்த தகுதியின் அடிப்படையில் அவைகளை ஆரம்பிக்கத் தயாராக வந்தார்கள்? அதிலே குறிப்பாக திரு. சிதம்பரம் செட்டியார் என்னும் நபர் எந்த அடிப்படையில் தலைசிறந்து நிற்கின்றார்? என்ற விளக்கத்தை தொழில் அமைச்சர் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று திரு. அரங்கநாயகம், இன்றைய கல்வி அமைச்சர் அவர்கள், அன்றைக்கு எதிர்கட்சியிலேயிருந்து கேட்ட பொழுது, அன்றைய தொழில் அமைச்சர் மாதவன் அவர்கள் அளித்த பதில், "அண்ணா அவர்களுடைய கொள்கை தொழில் துறையில் பின்பற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். 'ஸ்பிக்' எப்படி உருவானது என்று கேட்டார்கள். அண்ணா அவர்கள் இருந்தபொழுது சவுத் இந்தியா கார்ப்பரேஷன் என்ற தனி நிறுவனம் அண்ணா அவர்களை சந்தித்து கூட்டுத்துறையில் ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று ஒரு மனு

கொடுத்தார்கள். அண்ணா அவர்கள் 6.12.1968-ல் அவர்களோடு சேர்ந்து கூட்டு முறையிலே ஆரம்பிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள் என்று அன்றைய தொழில் அமைச்சர் மாதவன் அவர்கள் இன்றைய கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்களுக்கு, அன்றைக்கு 1975-76 ஆம் ஆண்டில் மானிய கோரிக்கை மீது பதில் அளித்து இருக்கின்றார்.

இது ஒரு ஜாயின்ட் செக்டார், ஜாயின்ட் செக்டார் என்பது 51 சதவீதம் அரசாங்கத்தினுடைய முதலீடும், மிச்சம் உள்ளது தனியார்களுடைய முதலீடுகளும் ஷேர்களும் என்ற அளவிற்கு உள்ளது ஜாயின்ட் செக்டார், கூட்டுத் துறை என்பது ஆகும். ஆனால் இது கூட்டுத் துறை அல்ல. நீங்கள் இன்றைக்கு தொடங்குகின்ற இந்த காகிதத் தொழிற்சாலை; நியூஸ்பிரிண்ட் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை கூட்டுத்துறை அல்ல; நீங்களே பல இடங்களில் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இந்த அரசு தொழிற்சாலைக்கு நீங்கள் யாரை சேர்மென்னாக, தலைவராக நியமித்திருக்கிறீர்கள் என்பதுதான் உள்ளபடியே ஆழ்ந்து நோக்கத்தக்க ஒன்றாகும். இதிலே டைரக்டர்களாக சி.வி.ஆர். பணிக்கர், ஐ.ஏ.எஸ்., திரவியம், ஐ.ஏ.எஸ்., வெங்கடேசன், ஐ.ஏ.எஸ்., கீதாகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., விஸ்வநாதன், மானேஜிங் டைரக்டர், சேஷசாயி பேப்பர் & கோ லிமிடெட் என்று ஐந்து பேரை போட்டுவிட்டு, சேஷசாயி பேப்பர் லிமிடெட் கன்சல்டிங் கம்பெனி என்கிற காரணத்தினால், காரணம் காட்டப்பட்டு திரு. விஸ்வநாதன் அவர்களை இந்த நியூஸ்பிரிண்ட் தொழிற்சாலைக்கு தலைவராக நியமித்து இருக்கிறீர்கள். இது சரிதானா என்று நான் உங்களை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கன்சல்டன்ட் என்று இருக்கின்றவரை ஒரு டைரக்டராக கூட இப்படிப்பட்ட தொழிற்சாலையில் நியமிப்பது இல்லை. அது ஒரு மரபு. டைரக்டராக கூட நியமிக்கக் கூடாது என்ற நிலை இருக்கும் பொழுது, கன்சல்ட்டன்டாக இருக்கிற ஒருவரை இந்த தொழிற் சாலையினுடைய தலைவராக நியமித்து இருப்பது முறைகேடு அல்லவா? யாருக்கு மேல் இவர் இருக்கிறார்? பணிக்கர் என்ற உயர்தர அதிகாரிக்கு மேல்; திரவியம் என்ற இரண்டாவது செயலாளருக்கு மேல்; வெங்கடேசன் என்கிற முன்னாள் நிதித்துறை செயலாளருக்கு மேல்; கீதாகிருஷ்ணன் என்கிற

முன்னாள் தொழில்துறை செயலாளருக்கு மேல்; இவர்களுக்கு எல்லாம் மேலாக இந்த விஸ்வநாதன் என்ற தனி மனிதர் இன்றைக்கு கன்சல்ட்டன்ட் என்கிற பெயரால் நியமிக்கப் பட்டிருக்கிறார். நான் எழுப்புகின்ற வாதம் எல்லாம், கன்சல்டன்ட் என்று இருக்கின்ற காரணத்தினாலே அவர் இந்த சேர்மென்னாக பொறுப்பேற்றிருக்கக் கூடாது, நியமிக்கப்பட்டிருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வாதம் ஆகும்.

ஆனால் இவர்கள் தந்துள்ள எந்த அறிக்கையிலாவது இப்படிப் பட்ட ஒரு பெரிய 200 கோடி ரூபாய் திட்டத்தை - 190 கோடிக்கும் 200 கோடித் திட்டத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை - அடுத்த மாத அறிக்கையிலே அது 200 கோடி ஆகலாம், அதற்குப் பிறகு 300 கோடியாகக் கூட ஆகலாம்; ஆனால் நான் கேட்பது எல்லாம் இவ்வளவுப் பெரிய மாபெரும் திட்டத்திற்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறவர் என்ன என்ன வழிமுறைகளின்படி நியூஸ்பிரிண்ட் தயாரிப்பதற்கு தன்னுடைய முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார் என்று எங்கேயாவது குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. ஒருவேளை நான் இந்த வினாவை எழுப்பிய பிறகு அதை இங்கே குறிப்பிடக் கூடும். மெக்ஸிகோ நாடு வரையிலே சென்று மெக்ஸிகோ நாட்டிலே கரும்பு சக்கையிலிருந்து, அதாவது Bagasse என்று சொல்லப் படுகிற கரும்பு சக்கையிலிருந்து நியூஸ்பிரிண்ட் காகிதம் தயாரிக்கும் திட்டத்திற்கு கொலாபரேஷன் மூலம் ஒரு ஒப்பந்தம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே கியூஸி புராசஸ் என்ற ஒரு புராசஸ் இருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அந்த கியூஸி புராசஸை வைத்து உலகத்திலே வேறு எந்த முனையிலாவது, வேறு எந்த இடத்திலாவது நியூஸ்பிரிண்ட் என்கின்ற அச்சுத் தாள் தயாரிக்கப்படுகிறதா என்றால் இல்லை என்றுதான் நமக்குப் பதில் வந்து கொண்டிருக்கிறது. இதே மெக்ஸிகோ கம்பெனி, இதே கியூஸி புராசஸை கொண்டு, கரும்புச் சக்கையிலிருந்து அச்சடிக்கின்ற பத்திரிகை தாள் உற்பத்தி செய்யும் யுக்தியை - டெக்னாலஜியை - மெக்ஸிகோவிற்குப் பக்கத்திலே உள்ள பெரு என்ற நாட்டிலே பயன்படுத்தினார்கள். அங்கே ஒரு நியூஸ் பிரிண்ட் தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். நிலைமை என்ன? அது செயல்படவே இல்லை என்றுதான் புரூப்

ஆகியிருக்கிறது. ஆகவே கியூஸி என்ற அந்த புராசஸ், மெக்ஸிகோ நாட்டிலிருந்து அளிக்கப்படுகிற புராசஸ் லாயக்கற்றது, கவைக்குதவாதது, நியூஸ் பிரிண்ட் தயாரிக்கிற அளவுக்கு அது சக்தியற்றது, எனவேதான் பக்கத்திலே உள்ள பெரு நாட்டிலே அது பயன்படவில்லை, அது உபயோககரமாக இல்லை என்று இவ்வளவும் தெரிந்தபிறகும் அவர்களோடு கொலாபரேஷன் வைத்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது. அந்த கியூஸி புராசஸைப் பற்றி கூறுகிற அந்த நிறுவனம் இருக்கிறதே: அது உலகத்திலே செல்வாக்கு உள்ள நிறுவனமா என்றால் இல்லை. அது ஒரு தனியார் நிறுவனம், இன்னும் சொல்லப்போனால் பெரிய பெரிய லிமிடெட் கம்பெனிகூட அல்ல. புரப்ரைட்டரி கன்சர்ன் என்று சொல்வார்களே, அப்படி புரப்ரைட்டரி கன்சர்ன்தான். கியூஸி புராசஸ் என்பது, நான் விசாரித்த வரையில், கரும்பு சக்கையிலிருந்து கியூஸி புராசஸை பயன்படுத்தி வேறு எந்தக் காகிதமும் தயாரிக்கலாமே தவிர நியூஸ்பிரிண்ட் என்ற அச்சுத் தாளை தயாரிக்கவே முடியாது என்று நான் கேள்விப்படுகிறேன். அது நடக்கமுடியாத காரியம். Not Feasible என்று என்று நான் கேள்விப்படுகிறேன். இதைக்குறித்து அதிகாரிகள் கூட மறுப்புக் கருத்துக்கள் தெரிவித்ததாகவும் கேள்விப்படுகிறேன். இன்றைய தொழில் துறைச் செயலாளருக்கு முன்பு இருந்த, 3 தொழில் துறை செயலாளர்களும் இது கவைக்குதவாத திட்டம் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அது உண்மையா அல்லவா என்பதை அமைச்சர்தான் எனக்குச் சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு இதற்கு முன்பு இருந்த அதிகாரிகள் எல்லாம் கூட, இது பீஸிபிள் அல்ல என்ற கருத்தை, மூன்று செயலாளர்கள் நிதித்துறை செயலாளர் உள்பட தெரிவித்திருந்தும் கூட இப்போது இண்டஸ்ட்ரீஸ் செகரட்டரியையே நிறுவனத்தி னுடைய எக்ஸ்கீயூடிவ் டைரக்டராகவும் ஆக்கி விஸ்வநாதன் அவர்களை தலைவராகக் கொண்டு 200 கோடி ரூபாய் திட்டத்தைச் செயல்படுத்துவதினுடைய நோக்கம் என்ன? நான் கேள்விப் படுகிறேன். அது உண்மையாக இருக்கக்கூடாது. வெளிநாட்டுச் செலவாணியில் இந்த 200 கோடி ரூபாயில் 10 சதவீதக் கமிஷன் இருக்கிறது என்றும் அதிலே யார் யார் ஈடுபடக்கூடும் என்றும் பயங்கரமான செய்திகள் கேள்விப்படுகிற காரணத்தினால் இதைத்

தொடங்குவதற்குமுன்பு நான் உங்களை எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஊழல்களுக்கு இடம் தந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான். நான் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்தத் திட்டத்தைப் பற்றி பீஸிபிள் என்று புரூப் செய்யப்படாத டெக்னாலஜியை நீங்கள் தேர்ந்தெடுத்ததேன்? இது ஒன்று. அந்த கியூஸி புராசஸ் வேறு எங்காவது வெற்றிகரமாகப் பயன்படுகிறதா? இரண்டு. நம்முடைய அதிகாரிகள் முக்கியமான 3 இண்டஸ்ட்ரீஸ் செகரட்டரிகள் இது நாட் பீஸிபிள் என்று எதிர்ப்பு தெரிவித்தது உண்டா இல்லையா? உண்டு என்றால் அந்தக் குறிப்புகளை அவையிலே வைத்து மற்றவர்கள் பார்க்க உதவுவார்களா? கன்சல்ட்டன்ட்டான விஸ்வநாதன் அவர்கள் சேர்மனாக இருப்பது முறைதானா? எனவே இந்தக் கேள்விகள் எழுகின்ற பல்வேறு ஊழல்களுக்கு காரணமாக அமைந்து விடுமோ என்ற அச்சத்தாலே நீங்கள் ஈடுபடுவது முறையற்றது. முறையாக நீங்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். ஜாயின்ட் செக்டார் அல்ல இது; அரசுத் துறை என்று சொல்லிவிட்டு, கன்சல்டன்டை ஒரு சேர்மனாகப் போட்டு, இந்தக் காரியத்தை நடத்துவது தகாது என்பதை எடுத்துக் கூறுகிறேன்.

தொழில்துறை அமைச்சருடைய பதிலிலிருந்து அசோக்லேலண்ட் சார்பாக கோரிக்கையே வைக்கப்படவில்லை என்று தெரிகிறது. தமிழ்நாட்டிலே அந்த வியாபாரத்தை நடத்தத் தேவையில்லை, வேறு மாநிலத்திற்குத்தான் செல்ல விரும்பினார்கள் என்று அவர்கள் சொல்வதிலிருந்து அவர்கள் கோரிக்கை வைக்கவில்லை என்று தெரிகிறது. அது உண்மைதானா.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே ஏற்கனவே இருக்கின்ற உற்பத்தி, தமிழகத்திலே கொடுப்பதைப்போல - தமிழகத்திலே மட்டும் அவர்கள் சப்ளை செய்து கொண்டிருக்கவில்லை சேஸிஸைப் பொறுத்தவரையில். இந்திய நாடு முழுவதும் அவர்கள் கொடுக்கிறார்கள். எனவே, இந்திய நாட்டிலே வட பகுதியிலே அவர்களுடைய விரிவாக்கத்திற்கான அனுமதியை மத்திய அரசு வைத்தபொழுது, இந்திய நாட்டினுடைய வட பகுதியிலே அவர்கள்

தொழிலைத் துவங்க விரும்புகிறார்கள்; அதனால்தான் அந்தத் தொழிற்சாலையை அங்கே துவக்கினார்கள் என்று சொன்னேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் அமைச்சரிடத்தில் தெரிந்துகொள்ள விரும்புவது, அசோக் லேலண்ட் எக்ஸ்பேன்ஷன் இங்கே செய்ய வேண்டுமென்று தமிழக அரசை நாடியது உண்டா இல்லையா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, அசோக்லேலண்ட் எக்ஸ்பேன்ஷன் செய்யவேண்டுமென்று கேட்டு, அதனுடைய அடிப்படையில்தான் ஒசூரில் இடம் கொடுக்கப்பட்டு, 100 கோடி ரூபாய் முதலீட்டிலே அங்கே எக்ஸ்பேன்ஷனும் நடைபெற்றிருக்கிறது. இன்னும் ஏன் அதிகம் செய்யவில்லை என்றால், அவர்கள் வியாபார ரீதியாக, தொழில் நுட்ப ரீதியாக, அவர்களுக்கு இலாபம் வருகிறது என்ற அடிப்படையில் வடநாட்டிற்குப் போயிருக்கிறார்கள். வட மாநிலங்களுக்குச் சென்றிருக்கிறார்கள் என்று நான் சொன்னேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்கிறபொழுது வியாபார ரீதியாக வேறு மாநிலங்களுக்குப் போனார்கள் என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார்கள். வியாபார ரீதிக்கு உட்பட்ட ஒன்றுதான் இன்சென்டிவ்ஸ் பெறுவது என்பதை அமைச்சர் ஏற்றுக் கொள்கிறாரா? அல்லது இன்சென்டிவ்ஸ் பெறுவது வேறு, வியாபார ரீதி வேறு என்று கருதுகிறாரா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்ககளே, வியாபார ரீதியாக என்பதை அமைச்சர் வலியுறுத்துகிறார் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் சொன்னார்கள். நான் வலியுறுத்தவில்லை, அசோக் லேலண்ட் நிறுவனத்தினுடைய எம்.டி.யே சொல்லியிருக்கிறார். பத்திரிகைகளிலேயேயும் பல நேரங்களிலே வந்திருக்கிறது. அவரே, திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறார்; நாங்கள் போனது இந்த அரசின்மீது குறை கூறியோ அல்லது அரசு ஒத்துழைக்காத காரணத்தாலோ நாங்கள் போகவில்லை. . .

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்ட ஹோசூர் என்பது அதனுடைய செகன்ட் ஸ்டேஜ். ஃபர்ஸ்ட் ஸ்டேஜ் எக்ஸ்பேன்ஷனுக்குத் தமிழக

அரசோடு அவர்கள் தொடர்பு கொண்டு சில சலுகைகளைக் கேட்டுக் கொண்டது உண்டா இல்லையா? அதைத் தமிழக அரசு மறுத்து விட்டதாக முதலமைச்சரவர்கள் இங்கே சொல்லி யிருக்கிறார்கள். அது உண்மையா அல்லவா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் அதைத்தான் மீண்டும் சொல்கிறேன். ஏற்கனவே, அவர்கள் மட்டுமல்ல, அசோக்லேலண்ட் நிறுவனம் மட்டுமல்ல, பல தொழில் அதிபர்கள் தொழில்களைத் துவங்குவதற்காக நாடி வருகிறபொழுது, அல்லது இன்சென்டிவ்ஸ் என்ற பிரச்சினை வருகிறபொழுது மாநிலத் தொழிலமைச்சர்கள் மாநாட்டிலேயே நான் பேசினேன், இதைத்தான் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்கள் கூட இதற்கு முன்னாலே பட்ஜெட்டிலே பேசும்பொழுது இங்கே சொன்னார்கள். சில மாநிலங்களில் அவர்களுடைய வசதி வாய்ப்புக்கேற்ப அவர்கள் சில உதவிகளை, சலுகைகளைச் செய்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில் நாங்கள் சில வரம்புகளை, சில சீலிங்ஸ் வைத்திருக்கிறோம். புதிதாக Interest free sales tax loan தான் இப்பொழுது மற்ற மாநிலங்களிலே கொடுக்கப்படுகிற இன்சென்டிவ்ஸைப் பொறுத்தவரையில் அதிகமாகத் தருகிற ஒரேயொரு பிரச்சினை. அதைப் பொறுத்தவரையில் 48 இலட்சம் ரூபாய் என்பதைப் புதிய நிறுவனம் துவக்குவதற்கு உச்சவரம்பாகவும், விரிவாக்கம் என்றால் 15 இலட்சம் ரூபாயாகவும் வைத்திருக்கிறோம். வேற மாநிலங்களில் ஒரு கோடி, இரண்டு கோடி, மூன்று கோடி என்று வருவதாக சொல்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில் பரவலாகத் தொழில் வளர்ச்சி வர வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். எனவே, அந்த உச்ச அளவை ஓரளவிற்கு இருக்கின்ற அந்த அளவை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதைப்பற்றி நான் பின்னாலே சொல்கிறபொழுது சொல்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : நான் தங்களிடமிருந்து ஒரு சுருக்கமான பதிலை எதிர்பார்க்கிறேன். தாங்கள் பதிலை வளர்த்தி எனக்கு வர வேண்டிய விடையை மறைக்கிறீர்கள். நான் அமைச்சரிடத்தில் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம் அவர்கள் கேட்ட ஃபர்ஸ்ட் ஸ்டேஜ் எக்ஸ்பென்ஷனுக்கு, அந்தத் திட்டத்திற்கு அவர்கள் கோரிய சலுகைகளைத் தர நீங்கள்

ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் அவர்களால் எந்தவிதமான எக்ஸ்பேன்ஷனும் செய்ய முடியவில்லை. இது சரியா அல்லவா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் சில கோரிக்கைகளைக் கேட்டார்கள். ஆனால் அவர்கள் போனதற்கு அதுவல்ல காரணம். இங்கிருந்து போனதற்கு, அவர்களுடைய தொழிற்சாலைகளின் உடைய விரிவாக்கம் தமிழகத்திலே வருவதற்கு அவர்கள் கேட்ட இன்சென்டிவ்ஸ் இங்கே கிடைக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள் கோபம் கொண்டோ அல்லது தமிழக அரசின்மீது வருத்தப்பட்டோ அவர்கள் வேறு மாநிலங்களுக்குப் போகவில்லை.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : தலைவரவர்களே, ஒரு உச்ச வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது என்று மந்திரியவர்கள் சொன்னார்கள். நீங்கள் எவ்வளவு லோன் கொடுத்தாலும் கூட IDBI refinancing செய்து விடுகிறார்களே, எனவே, உங்களுக்கு அதில் என்ன கஷ்டம்? ஏன் இந்த உச்சவரம்பு வைக்கிறீர்கள்? இப்பொழுது அந்த அசோக்லேலண்ட் தொழிற்சாலை இங்கே வந்திருந்தால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்குமே; குறைந்தது 100 கோடி ரூபாய்க்கு மேலே வருஷாவருஷம் உங்களுக்கு லாபம் அதிலே வந்திருக்குமே.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கும் இதே பதிலைத்தான் சொல்கிறேன். இன்சென்டிவ்ஸ் நாங்கள் தரவில்லை என்பதற்காக அவர்கள் போகவில்லை அல்லது அவர்கள் கேட்ட அளவிற்குக் கிடைக்க வில்லை என்பதால் அவர்கள் போகவில்லை. கேட்பது எவ்வளவு வேண்டுமானாலும் கேட்கலாம்; ஆனால் கொடுப்பது ஒரு வரம்புக்கு உட்பட்டுத்தான் கொடுக்க முடியும். அப்படிக் கேட்டதைக் கொடுக்காததனாலே போனார்களா என்பதுதான் பிரச்சினை, கேட்பதை, எவ்வளவு வேண்டுமானாலும் கேட்கலாம். ஆனால் அப்படிக் கேட்டதை கொடுக்கவில்லையென்ற காரணத்தால், போனார்களா என்றால் நிச்சயமாக இல்லை. அந்த விரிவாக்கத்தை வேறு மாநிலத்திலே செய்வது வியாபார ரீதியாக, பொருளாதார ரீதியாக அவர்களுக்கு இலாபமாக இருக்கிறது என்ற அந்த அடிப்படையிலேதான் வேறு மாநிலங்களுக்கு அவர்கள்

போயிருக்கிறார்கள். அதைத்தான் சென்ற ஆண்டும் சொன்னோம்; அதைத்தான் இந்த ஆண்டும் சொல்கிறோம். நான் இன்னொன்றைக் கூடச் சொல்வேன. அதே அசோக் லேலண்ட் நிறுவனம், கூட்டுத் துறையிலே, வார்ப்படங்கள் தயாரிக்கிற இன்னொரு. . .

திரு. துரைமுருகன் : சென்ற ஆண்டு முதலமைச்சர் பதில் அளிக்கும்போது, அந்தச் சலுகை கொடுக்கமாட்டேன் என்று சொன்னதால்தான் அவர்கள் வேறு மாநிலத்திற்குப் போனார்கள் என்று சொன்னார்களே, இப்பொழுது அமைச்சர் சொல்வது அதற்கு முரணாக இருக்கிறதே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சரே சொல்லியாயிற்று என்றுதானே மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் சொல்கிறார், அதற்குப் பிறகு திருப்பி, திருப்பி ஏன் எழுந்து கேட்கவேண்டும். அடுத்ததற்கு போகலாம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, என்னை மன்னிக்க வேண்டும். அடுத்ததற்கு போவதற்கு முன்னாலே, அதனுடைய தொடர்பாக, அதே நேரத்திலே இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அப்படி அவர்கள் கோபம் கொண்டு இங்கிருந்து போயிருந்தால், நம்முடைய புதுக்கோட்டையிலே, டிட்கோ நிறுவனத்தோடு சேர்ந்து, ஜாய்ன்ட் செக்டாரிலே வார்ப்படங்கள் தயாரிக்கிற இன்னொரு தொழிற்சாலையிலே. . .

கலைஞர் மு. கருணாநிதி : மன்னித்துக் கொள்ள வேண்டுகிறேன், அடிக்கடி குறுக்கிடுவதற்காக. அவர்கள் கோபம் கொண்டு போனார்கள் என்ற யாரும் சொல்லவில்லை. எந்த ஒரு தொழில் அதிபரும் ஏதோ ஒரு முயற்சியில் ஈடுபட்டு, அதற்காக, அந்த நாட்டின் மீதே கோபித்துக் கொண்டு, அல்லது அந்த மாநிலத்தின் மீதே கோபித்துக் கொண்டு, அங்கே இருக்கிற தொழில்களையெல்லாம் துடைத்து எடுத்துக் கொண்டு போய்விட மாட்டார்கள். வேறு தொழில்களிலே அவர்கள் தொடர்பு கொள்வார்கள். ஆனால் ஒரு பெரிய தொழிற்சாலை, ஒரு எக்ஸ்டென்ஷன், இங்கே ஏற்பட்டு, பல்லாயிரக்கணக்கானவர் களுக்கு வேலை கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை நாம் இழந்து விட்டோம். அதற்கு அவர்கள் கேட்ட சலுகையை இந்த அரசு

தரவில்லை என்பதுதான் காரணம். அதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அந்தக் குற்றச்சாட்டுக்குத்தான் ஆதாரம் இல்லை. அடிப்படை இல்லை யென்று சென்ற ஆண்டும் மறுத்தோம், இந்த ஆண்டும் மறுக்கிறோம். அப்படி அவர்கள் வேறு மாநிலத்திலே இன்சென்டிவ்ஸ் அதிகம் கிடைக்கிறது என்ற காரணத்தாலே வேறு மாநிலத்திற்கு அவர்கள் போவது உண்மையாக இருக்குமானால், டிட்கோ நிறுவனத்தோடு கூட்டுத் துறையிலே இருக்கிற அந்த நிறுவனத்தையும் வேறு மாநிலத்திலேயிருக்கிற அந்த அரசோடு தொடர்புகொண்டு, அந்த மாநிலத்திலே கொடுக்கிற அதிகமான இன்சென்டிவ்ஸ் பெற்றுக்கொண்டு அங்கே துவங்கலாம். ஆனால் இங்கேயே துவங்குகிறார்கள் என்பதிலிருந்து இந்த அரசு கொடுக்கிற அந்த இன்சென்டிவ்ஸ் பொறுத்தவரை அதிலே, அவர்களுக்குக் கருத்து வேறுபாடில்லை. ஆனால், சேசிஸ் பொறுத்தவரையிலும் அவர்களுடைய விரிவாக்கத்தை, வேறு பகுதியில் வைத்தார்களே அதற்குக் காரணம், நான் சொன்னது திருப்பித் திருப்பிச் சொல்வது, நான் சொல்வது அல்ல, அந்த நிறுவனத்தினுடைய இயக்குநர், எம்.டி.யே சொன்னது, அதன் தலைவரே சொன்னது, பொருளாதார ரீதியாக, வியாபார ரீதியாக, வட மாநிலத்தை, வேறுமாநிலத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதுதான்.

அதைப் போல் மத்திய அரசு ரூ. 400 கோடி அளவிலே ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு தரக்கூடிய அந்த ரெயில் பெட்டித் தொழிற்சாலையைத் தமிழகத்திற்கு, எடுத்துக் கொள்ளுங்கள், எடுத்துக்கொள்ளுங்கள், என்று தந்து கொண்டிருந்தார்கள். நீங்கள் வேண்டாம், வேண்டாம் என்று சொன்னீர்கள், அவர்கள் திருப்பி திருப்பதிக்குப் போய் விட்டார்கள் என்று இதே குற்றச்சாட்டைச் சென்ற ஆண்டும் சொன்னார்கள்; ஆனால் கலைஞர் அவர்கள் கொஞ்சம் மெருகோடு இந்த ஆண்டும் அதையே சொன்னார்கள். நான் திருப்பியும் அதற்குச் சென்ற ஆண்டு சொன்ன பதிலைத்தான் இந்த ஆண்டும் சொல்கிறேன். இடம் கேட்கிறார்கள். மத்திய அரசு தொழில் துவங்க வேண்டுமென்றால்; இந்தத் தொழிற்சாலை வருகிறது, அதற்கு இத்தனை ஏக்கர் இடம் வேண்டுமென்று

சொல்கிறார்கள். எல்லா மாநிலங்களும் எழுதுகிறோம், வரிந்து கட்டிக்கொண்டு எழுதுகிறோம் இங்கே வாருங்கள், இங்கே வாருங்கள், இங்கே துவங்குங்கள்: விரிவாக்கமா, இங்கே வாருங்கள் என்று தேடுகிறோம். இடத்தைத் தேர்வு செய்து, இங்கிருந்து ஆயிரம் ஏக்கர் இடம் தருகிறோம், நீங்கள் என்ன வெல்லாம் கேட்கிறீர்களோ, அவ்வளவும் தருகிறோம் என்று எழுதுகிறோம். ஆனால் முடிவு செய்ய வேண்டியது மத்திய அரசு; முடிவு செய்கிறார்கள், திருப்பதிக்கு, ஆந்திராவுக்கு. அதற்கு என்ன காரணம்? கலைஞர் அவர்கள்தான் கேட்கவேண்டும். நான் அதைத்தான் இங்கே சொன்னேன். அது ஏன் போனது என்று நாம் கேட்கிறோம். திருப்பியும் கேட்டோம். இங்கே கேட்டார்கள், போனதற்குப் பின்னாலே எழுதுகிறீர்களே, வருத்தப்படுகிறீர்களே என்று கேட்டார்கள். போனதற்கு பின்னாலேயும் எழுதினோம். அப்படி அறிவிப்பு வந்ததற்குப் பின்னாலே எழுதினோம். போனதற்குப் பின்னாலே என்றால் துவக்கி வைத்தது இப்பொழுது தான். ஜனாதிபதி வந்து துவக்கி வைத்தார்கள். ஆனால் அந்த நிலைமைக்கு முன்னாலே நாம் மீண்டும், மீண்டும் எழுதினோம். நீங்கள் ரீ-கன்சிடர் பண்ணுங்கள். . .

கலைஞர் மு. கருணாநிதி : நீங்களும் முதலமைச்சர் அவர்களும் பலமுறை விளக்கியும்கூட அதிலே நாங்கள் இன்னும் உங்களுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிற சூழ்நிலையில் இருக்கிறோம். ஒருவேளை அது எங்களுடைய தவறாகக்கூட இருக்கலாம். நீங்கள் சொல்வது சரியாக இருந்து நாங்கள் அதைத் தெரிந்துகொள்ளாமலேகூட இருக்கலாம். மத்திய சர்க்காருக்கு நீங்கள் கடிதம் எழுதி, அந்தத் தொழிற்சாலை இங்கே வரவேண்டுமென்பதற்காக வற்புறுத்திய தொடர்பானவைகள் எல்லாம் எங்களுக்குத் தெரியாத காரணத்தாலே கூட அப்படிச் சொல்லலாம். எனவே, அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு, என்ன, என்ன கடிதத் தொடர்பு கொண்டீர்கள்? என்ன என்ன பதில் வந்தது, என்பவைகளை ஒரு அறிக்கையாக, இந்த அவையிலே வைப்பீர்களானால் நாங்களேகூட தெரிந்துகொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். நாங்கள் எங்களுடைய கருத்தில் பிடிவாதமாக இருக்க விரும்பவில்லை. அப்படிப்பட்ட ஒரு கருத்து - நாங்கள் அந்தக் கருத்திலிருந்து எங்களை விடுவித்துக் கொள்வதற்குக்கூட அது உதவிகரமாக இருக்கும். எந்த, எந்த

நேரத்திலே, எப்படி, எப்படி கடிதம் எழுதினீர்கள்? மத்திய சர்க்கார் என்ன பதில் எழுதியது என்ற தொகுப்பை நீங்கள் இந்த அவைக்குத் தருவீர்களானால் அது இரு சாராருக்கும் பயன் உள்ளதாக இருக்கும். அந்தப் பிரச்சினை அதோடு முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் தவறு செய்துவிட்டார்கள் என்பதைப் போல நான் சொல்லவில்லை. அவர்கள் அந்த அளவுக்குப் போய் சொல்ல வேண்டியதில்லை. நான் சொல்வது அவர்கள் ஒரு லைனிலே இருந்து சொல்லுகிறார்கள். அவர்கள் ஏன் சொல்லுகிறார்கள் என்பது அவர்களுக்கே கூட தெரியலாம். அவர்களுக்குக் கூட நிச்சயமாகத் தெரியும். நாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இப்படி நம்மை நாமே குற்றம் சொல்வதைவிட, அவர்கள் இப்படி நாம் ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கொடுத்தும், மத்திய அரசு தமிழகத்தைத் தேர்ந்தெடுக்காமல் வேறு மாநிலத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களே அதை நான் கண்டிக்கிறேன். மத்திய அரசு இனிமேல் துவக்குகிற தொழில்களையாவது தமிழகத்திலே துவங்கவேண்டும் என்பதைப்போல அவர்களுடைய பேச்சு இருந்திருக்குமானால், அது தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள், என்னுடைய எண்ணம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மத்திய சர்க்கார் என்ன பதில் கொடுத்தார்கள், நீங்கள் என்ன எழுதியிருக்கிறீர்கள் என்று சொன்னால் அதற்குத் தக்கவாறு முடிவெடுக்கலாம். அதற்கு நீங்கள் பதில் சொல்லவில்லையே, தயவுசெய்து அதற்குப் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, திருப்பதிக்குப் போனது போனதுதான். கால்கோள் விழாவெல்லாம் நடந்துவிட்டது. மாண்புமிகு ஜனாதிபதி

அவர்களும், ரயில்வே அமைச்சரும் வந்து விழா நடத்தி விட்டார்கள். இனிமேல் சித்தனே போய் கேட்டாலும் இங்கே கொண்டுவர முடியாது. (குறுக்கீடு) அதற்குத்தான் மாண்புமிகு சித்தன் போன்றவர்கள் உதவி செய்யவேண்டும். இனிமேல் வர இருக்கின்ற தொழிற்சாலைகளாவது அல்லது மத்திய தொழில்களாவது இங்கே வரவேண்டும். நாம் இடம் தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம். நான் ஒன்றிரண்டு உதாரணங்களைக் கூட சொன்னேன். எச். எம். டி. - யைப் பற்றிச் சொன்னேன். இந்துஸ்தான் போட்டோ பிலிம்சைப் பற்றிச் சொன்னேன். நாம் கேட்டுக் கொண்டிருப்பதைப் பற்றி இந்த மன்றத்திலே சொல்லலாம். இது ஒன்றும் ரகசியம் இல்லை. அவை எல்லாம் அங்கே இருக்கின்றன. நீங்கள் அங்கே போகிறபோது, இங்கே சொல்வதை விட, அங்கே சொல்லி, பிரதமரிடத்திலே சொல்லி, மத்தியத் தொழில்கள் எல்லாம், விரிவாக்கமோ அல்லது புதிய தொழிற்சாலைகள் வருகிறபோது தமிழகத்திலே துவங்குவதற்கு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் களுடைய உதவி வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தமிழ்நாடு வளம் பெற, தொழில் துறை பெருக, எந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஆட்சியோடு ஒத்துழைக்க வேண்டுமோ, மத்திய சர்க்காரோடு வாதாட வேண்டுமோ அதற்குத் தயாராக இருக்கிறது. அதையும் நான் என்னுடைய உரையிலே கூட குறிப்பிட்டேன். மத்திய சர்க்காரோடு வாதாடி, போராடி தமிழ்நாட்டுக்குத் தேவையான வளங்களைப் பெற கழகம் உங்களோடு துணை நிற்கும் என்று நான் பேசும்போது குறிப்பிட்டு இருக்கிறேன். நீங்கள் சொல்லுவதற்கு முன்பே அதைச் சொல்லி இருக்கிறேன். நான் கேட்பதெல்லாம், அந்த ரயில்பெட்டித் தொழிற்சாலைக்கு மத்திய சர்க்காரோடு நீங்கள் எப்படி வாதாடினீர்கள், எந்தெந்த நேரத்திலே கடிதங்கள் எழுதினீர்கள், எந்தெந்த தேதியில் எழுதினீர்கள் அதற்கு என்ன பதில் வந்தது என்பதை எல்லாம், அந்தத் தொகுப்பை இந்த அவைக்கு வைத்தால் மத்திய சர்க்காருக்கு எதிராக வாதாடுவதற்கு இன்னும் எங்களுக்கு வலு கிடைக்கும் என்பதற்காகத்தான் கேட்கிறேன். உதவுவீர்களா?

THIRU K.S.G HAJA SHAREEF : Sir, You will kindly remember that on the very first occasion, when I began to speak in this house, I have given full support to the Government. I said although I am a Opposition Leader, I will not oppose anything and everything I will certainly appreciate what the Government does. Whatever the Government wants, we will certainly co-operate with them and see that our State becomes the first and foremost. I continue to state this and I will assure the Hon. Minister and other colleagues that what all lies in our power, we will certainly co-operate with them to see that this State becomes one of the most powerful State in our country. Kindly tell us what are all your difficulties. Let them not put the blame on somebody, if they are not prompt in taking action and seizing of the opportunity.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கும் நான் தமிழக மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே முதன் முதலிலே வாதத்தைத் துவக்கிய மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். நாம் மத்திய அரசை இப்படித் தொழில்கள் வேண்டும் என்று கேட்கின்றபோது மாநிலத்திலே இருக்கிற எல்லா கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அதற்கு ஆதரவு தெரிவித்து, கையெழுத்துப் போட்டு எழுதி அனுப்பினால், என்ன என்று கேட்டார்கள். இப்போது எதிர்கட்சித் தலைவர் அவர்களும், அதேபோல காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும், சொன்னதை அத்தோடு இணைத்து, இங்கே இருக்கின்ற நாம் எல்லாம் சட்டமன்றத்திலே ஆதரவு தருகிறோம் என்ற எண்ணத்தோடு சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போடுகிறோம் என்பதோடு நிற்காமல், அங்கே உள்ள நாடாளுமன்றத்திலே உள்ளவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அதைப் போலவே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், அங்கே ஏதாவது மத்திய தொழில் துவங்கப்படப் போகிறது என்று தெரிந்த

உடனே அல்லது இங்கே இருந்து எதை எதை எல்லாம் அனுப்பி இருக்கிறோமோ அதை சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே, ஒன்றாகச் சேர்ந்து, புதிதாக வரவிருக்கிற தொழில் தமிழகத்திலேதான் வரவேண்டும் என்று அந்த அமைச்சரிடத்திலே வலியுறுத்தி, வற்புறுத்துவதற்கு உதவி செய்வார்களானால் நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : நான் மாண்புமிகு அமைச்சருக்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். ரயில்வேயிலே கூட மதுரை மண்டலத்தோடு நெல்லை - குமரி பாதையை இணைக்கவேண்டும் என்று போராட்டம் நடைபெற்றது. பல கட்சித் தலைவர்கள் அதில் ஈடுபட்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிலே ஈடுபட்டு மகஜர் தந்தார்கள். ஆனால் ஆட்சியாளர்கள் அதிலே உறுதியாகவும், வலிவாகவும் இல்லாத காரணத்தால்தான் அது நம்மை விட்டுப் போய்விட்டது. நாங்கள் எல்லாம் ஒத்துழைத்தாலும் கூட, ஆட்சியாளர்கள் உறுதுணையாக இருந்து அவர்களோடு வாதாடினால்தான் வெற்றி கிடைக்கும். அதனால்தான் கேட்டேன், ஏற்கனவே இந்த ரயில் பெட்டித் தொழிற்சாலை குறித்து நாம் எழுதிய கடிதப் போக்குவரத்து என்ன என்று தெரிவிக்கப்படுமா என்று. அதற்கு பதில் சொல்லாமலேயே மாண்புமிகு திருநாவுக்கரசு, திரு நழுவல் அரசராக ஆகிவிடுவது நல்லதல்ல.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல மாநில அரசின் சார்பாக அந்த ரயில் பெட்டித் தொழிற்சாலை சம்பந்தமாக என்னென்ன வகையில் கடிதங்களை நானும், முதலமைச்சர் அவர்களும் மத்திய அரசுக்கு எழுதினோம் என்பதை அவர்கள் பார்க்க விரும்பினால் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். அதிலே ஒன்றும் சங்கடம் இல்லை. ரகசியம் இல்லை. இங்கிருந்து எழுதிய கடிதங்களின் காப்பி இருக்கின்றன. அதைக் காண்பிக்கத் தயக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகம் முயற்சி எடுக்காததால்தான் திருப்பதிக்கு அதுபோய் சேர்ந்து விட்டது என்று சொல்வது சரியல்ல. அதைப் போல ஆரம்பிக்கப்பட இருக்கிற மத்திய தொழிற்சாலைகள் குறித்து திட்டம் தீட்டுகிறபோது இங்கே இடம் பார்த்துச்சொல்லுங்கள் என்று

சொல்கிறார்கள். நாமும் தமிழகத்தில் அதற்கான வாய்ப்பு எங்கேயிருக்கிறது என்பதைப் பார்த்து சொல்கிறோம். ஆனால் முடிவு எடுக்கவேண்டியது மத்திய அரசு. அப்படி அவர்கள் முடிவு எடுக்கிறபோது தமிழகத்தின் பக்கம் கருணை காட்டவேண்டும் என்றுதான் நாம் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே சொல்லிவிட்டார்கள். நேரம் ஆகிவிட்டது. மீண்டும் நான்கு மணிக்கு நாம் வரவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, அரசின் சார்பாக சில அறிவிப்புகளை, இனி வர இருக்கும் நாட்களின் என்ன செய்ய இருக்கிறோம் என்பதை, ஓரிரண்டு சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏற்கனவே இங்கே சொன்னது போல், 190 கோடி ரூபாய் அளவில் திருச்சி மாவட்டத்தில் புகலூரில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிறோம். 20 கோடி ரூபாய் செலவிலே வடாற்காடு மாவட்டத்தில் வெடிமருந்து தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிறோம். 4 கோடி ரூபாய் செலவில் ஸ்டீல் ரோலிங் மில் அரக்கோணத்தில் ஏற்படுத்த இருக்கிறோம். திருத்தணியில் சர்க்கரை ஆலை அமைக்க இருக்கிறோம். திரு. சித்தன் அவர்கள் பேசுகிறபோது என்று நினைக்கிறேன் - சிறிய சர்க்கரை ஆலைகள் அமைப்பதாக அறிவிப்பு செய்தீர்களே, அது என்ன நிலைமையில் இருக்கிறது என்று கேட்டார்கள். தஞ்சை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், மதுரை மாவட்டம் ஆகிய இடங்களில் இப்படிப்பட்ட சிறிய சர்க்கரை ஆலையை ஏற்படுத்த - ஏறத்தாழ 450-500 டன் கபாசிட்டி கொண்ட சர்க்கரை ஆலை ஏற்படுத்த - அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸ் நிறுவனத்தில் - அது மத்திய அரசு நிறுவனம் - திரு. மகாலிங்கம் அவர்கள் தலைவராக இருந்திருக்கிறார்கள். பாண்டிச்சேரி முன்னாள் கவர்னர் திரு. செடிலால் அவர்கள் மத்திய அரசு நிறுவனமான மாடர்ன் பாக்கரிஸ் நிறுவனத்தில் தலைவராக இருந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலும் சில நிறுவனங்களில் தனியார் சிலர் தலைவர்களாக நியமிக்கப்

பட்டிருக்கிறார்கள். இது ஒன்றும் புதியது அல்ல. திரு. டான்டன் என்பவர் பஞ்சாப் நேஷனல் பாங்க் செயர்மெனாக இருந்திருக்கிறார். இப்படி பல்வேறு நிறுவனங்களில் போட்டிருக் கிறார்கள். இங்கே விஸ்வநாதன் என்பவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார். செஷசாயி மில்லில் நியூஸ் பிரிண்ட் பேப்பர் உற்பத்திச் செய்ய திட்டமிட்டிருந்தார்கள். அது தனியார் துறைக்கு போகக்கூடாது என்ற அளவில் அவர்களுக்கு இருக்கிற தொழில் நுட்ப ரீதியான அறிவைப் பெற்று, பொதுத்துறையில் ஆரம்பிக்கப்படும் இந்தத் தொழிலில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற முறையில் திரு. விஸ்வநாதன் அவர்கள் 'கன்சல்ட்டண்ட் அன்ட் ஒன் ஆஃப் தி டைரக்டர்ஸ் ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏறத்தாழ 30 கோடி ரூபாய்க்குள்ளேதான் நம்முடைய பணம் இதிலே இருக்கிறது. மீதத்தை ஐ. டி. பி. ஐ-யும் உலக வங்கியும் போடுகின்றன. பின்னர் இதற்கு தலைவரை நியமிக்கின்ற போது 4 டைரக்டர்களில் மானேஜிங் டைரக்டராக வரக்கூடியவர் அரசாங்க அதிகாரியாகத்தான் இருப்பார், ஐ. டி. பி. ஐ-யும் உலக வங்கியும் யாரை தலைவராக நியமிக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்தான் தலைவராக வரமுடியும்.

இதுதான் இருக்கின்ற நிலைமை. தற்காலிகமாக அந்த அமைப்பை உருவாக்குவதற்காக நாம் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளில் அவரைத் தலைவராக வைத்திருக்கிறோம். இதிலே ஒன்றும் ரகசியம் இல்லை. இதிலே ஒன்றும் ஊழலோ தவறோ இல்லை. லெட்டர் ஆஃப் இன்டன்ட் 83 ஆயிரம் டன் என்றும் அந்த நியூஸ் பிரிண்டைப் பொறுத்தவரையில் 50 ஆயிரம் டன்தான் இங்குள்ள கெப்பாசிட்டி என்றும் போடப்பட்டிருப்பதாக சொன்னார்கள். அதிலே ஒன்றும் குற்றச்சாட்டு இல்லை. வாங்குகின்றபோது அதிகமாக வாங்குகிறோம். அவ்வளவுதான். ஆனால் ப்ரொடக்ஷன் கெப்பாசிட்டி என்று சொல்கின்றபோது எவ்வளவு முடியுமோ அதைத்தான் செய்கிறோம். ஆகவே லெட்டர் ஆஃப் இன்டன்ட் குறைவாக வாங்கி ப்ரொடக்ஷன் அதிகமாகச் செய்ய முடியாது. ஆகவேதான் லெட்டர் ஆப் இன்டன்ட் அதிகமாக வாங்கி இருக்கிறோம். முடிந்தால்

புரொடக்ஷனை இன்க்ரீஸ் பண்ணுவதற்கும் எக்ஸ்பாண்ட் பண்ணுவதற்கும் முயற்சி செய்கிறோம்.

அடுத்து இன்னொன்றை இங்கே சொன்னார்கள். நான் இந்த பழமொழியை இங்கே சொல்வதற்காக தயவுசெய்து கோபித்துக் கொள்ளக் கூடாது. அரண்டவர்கள் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய் என்று கூடச் சொல்வார்கள். அதே போன்று எதை எடுத்தாலும் ஊழல் என்று சொல்கிறார்களோ என்னவோ தெரியாது. 200 கோடிக்குத் திட்டம், அதிலே 10 சதவீதம் ஊழல் என்றும், அதாவது வெளிநாட்டிலே பணம் வாங்கப்போவதாகவும் சொன்னார்கள். இதிலே யாரோ பெரும் புள்ளிகள் எல்லாம் தலையிடுகிறார்கள் என்றும் சொன்னார்கள். அதற்கெல்லாம் எந்தவிதமான ஆதாரமும் இல்லை. மேலும் இவையெல்லாம் ரகசியமாகச் செய்யப்படுகிற பிரச்சினைகளும் அல்ல. உலக வங்கி இதைக் கவனித்துக் கொண்டிருக்கின்றது. மத்திய அரசின் நிறுவனமான ஐ. டி. பி. ஐ. இருக்கின்றது. அதனுடைய ஆலோசர்களும் அதிகாரிகளும் இருக்கிறார்கள். வெளிநாட்டிலே இருந்து இயந்திரம் வாங்கினாலோ அல்லது டெக்னிக்கல் நாலெட்ஜாக இருந்தாலோ மத்திய அரசினுடைய அனுமதியோடு தான் அவை நிச்சயமாக நடைபெற இருக்கின்றது. எனவே மத்திய அரசும் தவறு செய்யும் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் நிச்சயமாகச் சொல்ல மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். எனவே இதிலே எல்லாம் ஏதோ ஊழல் நடந்துவிடப் போகிறது என்று சொல்லி. . .

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் இங்கே எடுத்துச் சொன்ன குறைபாடுகள் மத்திய அரசினுடைய கவனத்திற்கும் வரவேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். ஏன் என்றால் நீங்கள் அங்கே பெறுகின்ற க்யூ. சி. ப்ராசஸ் பற்றிச் சோதித்தபோது அது எந்த நாட்டிலேயும் வெற்றிகரமாக அமைந்த ப்ராசஸ் என்று நிரூபிக்கப்படாத அதாவது "ப்ரூவ்" செய்யப்படாத ஒரு ப்ராசஸாகும். அதுமட்டுமல்ல. மெக்ஸிகோவுக்கு பக்கத்திலே இருக்கக்கூடிய பெரு நாட்டிலேயே அந்தப் ப்ராசஸ் பரிசோதனை செய்யப்பட்டு அது பயன்படவில்லை என்று செய்தி வந்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். எனவே எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் மாநில அரசு ஆனாலும்

சரி, மத்திய அரசு ஆனாலும் சரி. அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வருவதற்காகத்தான் இதைச் சொன்னேனே தவிர வேறல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டுவரப்பட்டுள்ளது. மத்திய திட்டக்குழு இதைப் பற்றி நன்கு ஆராய்ந்தது அதிலே உள்ள டெக்னாலஜியைப் பொறுத்தவரையிலும் அவர்களே விரிவாக ஆராய்ந்த பிறகுதான் இதை 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக்கொள்வதற்கு ஒப்புக்கொண்டார்கள். அதோடு மட்டுமல்ல. இதற்காக உலக வங்கி நிதி தருவதாகவும் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கின்றது. ஆகவே அவர்கள் இதைப் பார்த்து இந்த டெக்னாலஜி பீசிபிள் என்கிற அடிப்படையிலேதான் இதை மேற்கொண்டு பரிசீலனை செய்திருக்கிறார்கள். நம்முடைய 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் அதற்காக சேர்த்து நிதி ஒதுக்கமும் செய்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டெக்னாலஜியைப் பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ சொல்லத் தேவையில்லை. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் அதாவது முதலீட்டைப் பொறுத்தவரையில் அவர்கள் சொன்ன விளக்கம் ஆக்சுவல் ரிப்போர்ட் தயார் செய்கின்றபோது அதைப்போல் வருவது உண்டு என்பதுதான். அதனால் அவர்கள் சந்தேகப்படவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று. இருட்டாக இருப்பதால்தான் அங்கு என்ன இருக்கின்றது என்று தெரியாத காரணத்தால்தான் கேட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சாரி. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அரண்டவன் என்று குறிப்பிட்டதாகச் சொன்னார். அப்படி அரண்டவன் என்று நான் சொல்ல மாட்டேன். நான் அப்படிச் சொல்லவும் இல்லை. அவர்கள் மீது நான் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன். ஆகவேதான்


அந்தப் பழமொழியைக்கூட கொஞ்சம் மாற்றி அரண்டவர்கள் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய் என்று சொன்னேன். மரியாதையாகத்தான் சொன்னேன். 200 கோடியிலே 10 சதவீதம் என்றால் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஒரு பெரிய குறை இருக்கின்றது என்றால் அது பத்திரிகையிலே எப்படி வரும்? வெளிநாட்டிலே போய் 20 கோடி ரூபாயிலே இந்த அரசு ஏதோ தவறான வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. வாங்க இருக்கின்றது என்பது போன்ற ஒரு பிரமையை உண்டாக்கு வதற்காகத்தான் நீங்கள் சொன்னீர்கள். அப்படிக் குற்றச்சாட்டு சொன்ன காரணத்தால்தான் நான் சொன்னேன். ஆகவே அதிலே அப்படிப்பட்ட எந்த நிலைமையும் இல்லை. தவறுகள் நடப்பதற்கான எந்தவிதமான வாய்ப்போ, சந்தர்ப்பமோ கூட நிச்சயமாக இல்லை. ஏனென்றால் உலக வங்கியின் நிறுவனத்திலே இருந்து அவர்களுடைய ஆலாசகர்களை எல்லாம் இதிலே போட்டிருக்கிறார்கள். இயக்குநர்களைப் போட்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் நான் அதை சுட்டிக்காட்டினேன். அதுமட்டுமல்ல, 20 கோடி ரூபாய்க்கு வரப்போகின்ற வெடிமருந்து தொழிற் சாலையைப் பற்றி அவசரம் அவசரமாகச் சொன்னார்கள். இவ்வளவு பெரிய 109 கோடி ரூபாய்க்கான திட்டம் பற்றி ஏன் நீங்கள் பட்ஜெட்டில் சொல்லவில்லை என்று சொன்னார்கள். இதிலே ஏதோ இருக்கின்றது. அதனால்தான் மறைத்திருக்கிறீர்கள் என்று கூட அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் பற்றி ஏற்கெனவே சென்ற ஆண்டு பட்ஜெட்டிலேயே சொல்லப்பட் டிருக்கின்றது. இந்தத் திட்டம் வரப்போகிறது என்று அறிவித்திருக்கிறோம்; ஆகவே ஒவ்வொர வருடமும் அதைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயமில்லை. அதை மறைக்க வேண்டிய அவசியமும் இல்லை. அதிலே ஒன்றும் இரகசியமும் இல்லை. சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே வெளிப்படையாக சொல்லப்பட்டிருக்கின்றது.

சென்ற ஆண்டு சொன்ன அதே திட்டத்தை இந்த ஆண்டும் சொல்ல வேண்டியதில்லை என்ற அந்த காரணத்தினாலே தான் சொல்லாமல் விட்டிருக்கிறோம். அதிலே ஒன்றும் இரகசியம்

இல்லை. இதற்கு முன்னாலே இருந்த செயலாளர்கள் எல்லாம் மறுப்பு தெரிவித்திருக்கிறார்களா என்று கேட்டார்கள்? எனக்குத் தெரிந்த வரையில் நிச்சயமாக அப்படி இல்லை. கூட்டம் போட்டு விவாதிக்கிறபோது ஒவ்வொருவரும் அவர்களுடைய கருத்துக்களை சொல்வதிலோ, கருத்துக்களை பரிமாறிக் கொள்வதிலோ பின்வாங்கவில்லை. இறுதி முடிவு எடுக்கிறபோதும் அதிகாரிகள்தான் எடுப்பார்கள். அதிகாரிகள் என்றால் தமிழ்நாடு அரசினுடைய அதிகாரிகள் மட்டும் அல்ல. நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல ஐ. டி. பி. உலக வங்கி போன்ற நிறுவனங்களில் இருக்கிற அத்தனைபேரும் சேர்ந்துதான் முடிவு எடுப்பார்கள்.

உலக வங்கியினுடைய டீம் கூட இங்கே இரண்டு மூன்று தடவை வந்து சென்றனர். இப்போது கூட தமிழகத்தினுடைய தொழில்துறை செயலாளர் வெளிநாட்டுக்குப் போயிருக்கிறார்கள். அமெரிக்காவிற்கெல்லாம் போயிருக்கிறார்கள். உலக வங்கியோடு இது சம்பந்தமாக விவாதம் நடத்துவதற்காக இப்படி பல்வேறு சட்டத்திலேயும் மத்திய திட்டக் குழுவிலேயும், கடுமையாக விமர்சிக்கப்பட்டு வர இருக்கிற ஒரு நல்ல ப்ராஜக்ட், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை வரவேற்க வேண்டும். அதற்கு மாறாக ஏதாவது சொல்லி, அது இங்கே வராமல் போய்விடக்கூடாது என்பதினால்தான். . .(குறுக்கீடு)

கலைஞர் மு. கருணாநிதி : பத்திரிகைகளில் தவறாக வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நல்ல பிராஜக்ட் வர வேண்டும் என்பதை வரவேற்க வேண்டும் என்று சொன்னார்கள். வருகிற பிராஜக்ட் நல்ல பிராஜக்டாக வரவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.



894.8115
TAM

உரை : 3 நாள் : 03.05.1989

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழில் வளர்ச்சி குறித்த இன்றைய மானியத்தில் எதிர்க் கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர் களும், ஆளும் கட்சியினுடைய உறுப்பினர்களும் தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே எடுத்து வைத்து இருக்கின்றார்கள். முடிவு எடுப்பது என்பது குறித்து நம்முடைய எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கூறிய அந்த வாசகத்திற்கு மாத்திரம் ஒரு விளக்கம் அளிக்க விரும்புகின்றேன். முதலமைச்சர் விரைவில் முடிவு எடுப்பார் என்று குறிப்பிட்டார். கூடுமான வரையில் எடுத்த முடிவுகளை நான் மாற்றுவது இல்லை என்பது அவருக்குத் தெரியும். அண்மையிலே கூட இந்த மாமன்றத்தினுடைய பொன் விழாவையொட்டி பழைய உறுப்பினர்களுக்கு, முன்னாள் பேரவைத் தலைவர்களுக்கு, துணைத் தலைவர் களுக்கு எல்லாம் மரியாதை செய்வது என்று ஒரு முடிவு எடுக்கப் பட்டபோது அவர்கள் ஒரு பதினான்கு ஆண்டுக் காலம், பதினைனந்து ஆண்டுக் காலம் இந்த அவையிலே பணியாற்றியவர்களாக இருக்க வேண்டுமென்ற வரிசையிலே ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டு அது வெளியிடப்படுகிற நேரத்திலே என்னுடைய அருமை நண்பர் திருநாவுக்கரசு அவர்களும், மற்றொரு அருமை நண்பர் கே.கே.எஸ்.எஸ்ஆர். அவர்களும், தங்களிடத்திலும் பேசி, என்னிடத்திலும் பேசி, செயலாளரிடத்திலும் பேசி நாங்கள் நான்கு முறை இருந்திருக்கிறோம்; எனவே எங்களையும் அந்தப் பட்டியலிலே இணைக்க வேண்டுமென்று சொன்ன போது அவர்கள் குறிப்பிட்டதைப் போல் நான் விரைந்து முடிவு எடுத்து உடனடியாக அந்தப் பட்டியலில் அவர்களுடைய பெயர்களும்

இணைக்கப்பட வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொண்டேன். தாங்களும் பெருந்தன்மையோடு அதனை ஏற்றுக் கொண்டீர்கள். அவர்களால் இன்னொரு பத்துப் பேருக்கு அந்தப் பட்டியலிலே பிறகு தொடர்ந்து இடம் கிடைத்தது. ஆனால் இன்றைக்கு நான் கேள்விப்படுகிறேன். அவர்கள் அந்த விழாவிலே கலந்து கொள்வது இல்லை என்று முடிவு எடுத்து விட்டதாக. ஆக அவர்கள் பெருந்தன்மைக்குத் தருகின்ற மதிப்பு இதுதான். எடுக்கிற முடிவு நல்ல முடிவாக இருக்க வேண்டுமென்று எண்ணி இந்த முடிவுகள் எடுக்கப்படும்பொழுது, அந்த முடிவுகளை நிறைவேற்ற முடியாத அவஸ்தையிலே அவர்கள் இருப்பது எனக்குப் புரிகிறது. இருந்தாலும் கூட நீங்கள் எடுத்த முடிவு, முடிவுதான். அவர்கள் வந்து விழாவைச் சிறப்பிக்காவிட்டாலும் எங்கிருந்தாலும் வாழ்க என்று அண்ணா சொன்னாரே, அவருடைய தம்பிகள் என்ற முறையிலே எங்கு இருந்தாலும் வாழ்த்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) முடிவு பற்றி அவர் இங்கு முழங்கிய காரணத்தால் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாழ்த்துவதோடு அந்தப் பரிசுப் பொருள்களை வீட்டுக்கே அனுப்பி வையுங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதைப் பெற்றுக் கொள்வார்களோ என்னமோ எனக்குத் தெரியாது. வர இயலாமல் இருந்தால் பரிசுப் பொருள்களை வீட்டுக்கு அனுப்பி வைக்கலாம்; வர முடியாது என்று சொன்னால் அனுப்பி வைப்பது சிரமம். ஏனென்றால் முன்பு இந்தியத் திருநாட்டினுடைய வெள்ளி விழா கொண்டாடப்பட்டபோது தாமிரப் பத்திரங்கள் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்ட பொழுது, பெருந்தலைவர் காமராசருக்கு, தந்தை பெரியாருக்கு, மூதறிஞர் ராஜாஜிக்கு எல்லாம் தாமிரப் பட்டயங்கள் வழங்கப்படும் என்று பத்திரிகைகளிலே விளம்பரம் வந்தபொழுது மூதறிஞர் ராஜாஜி எனக்குக் கடிதம் எழுதி இருந்தார். "அந்தத் தாமிரப் பத்திரங்கள் எனக்கும் உண்டு என்று பத்திரிகையில் படித்தேன். அதை, யாரையாவது அனுப்புகிறேன், கொடுத்து அனுப்புங்கள்" என்று எனக்கு எழுதி இருந்தார். தாமிரப் பாத்திரங்களைக் கொடுப்பதற்கு விழா எதுவும் ஏற்பாடு செய்யப்படாமல் இருந்தபொழுதே அவருடைய பெரும் குணம், "ஒரு ஆளை அனுப்புகிறேன், கொடுத்து அனுப்புங்கள்"

என்று எழுதி இருந்தார். ஆனால் நான் அதை எடுத்துக்கொண்டு தந்தை பெரியாருடைய இல்லத்திற்கும், பெருந்தலைவர் காமராசர் இல்லத்திற்கும், அதைப் போலவே மூதறிஞர் ராஜாஜி இல்லத்திற்கும், நானே சென்று அந்தத் தாமிரப் பத்திரங்களை அவர்களுடைய கரங்களிலே ஒப்படைத்து வந்தேன். எனவே எத்தனை மாறுபாடுகள், எத்தனை கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் கூட இது போன்ற பொது நிகழ்ச்சிகளிலே அவர்களே ஒரு புதிய முறையை வகுத்துக் கொடுத்துவிட்டு அந்த முறையை ஏற்றுக் கொண்ட பிறகு ஒரு வேளை இப்படி மறுப்பதற்காகவே எங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்களோ என்று எண்ணுகின்ற அளவுக்கு ஒரு நிலைமை ஏற்பட்டதற்காக நான் வருத்தப்படுகின்றேன். இதை நான் முன்கூட்டியே சொல்வதற்குக் காரணம் இன்று நான் இந்தத் தொழில் துறை மானியத்தில் பேசிய பிறகு அதிலே ஏதாவது நான் தவறாகப் பேசி இருந்து, அதை வைத்துக் கொண்டு முதலமைச்சர் இப்படிப் பேசிவிட்டார், அதற்காகப் புறக்கணிக்கிறோம் என்று சொல்லி விடக்கூடாதல்லவா, எனவேதான் முன்கூட்டியே அவர்களால் அறிவிக்கப்பட்ட செய்தியை இங்கே தெரிவிக்க வேண்டியது எனக்கு தவிர்க்க முடியாததாக ஆகிவிட்டது. என்னுடைய உருக்கமும், உணர்வும் நம்முடைய நண்பர்கள் திருநாவுக்கரசுக்கும், கே. கே. எஸ். எஸ். ஆருக்கும் நிச்சயமாகப் புரியும் என்று கருதுகின்றேன்.

தொழில் துறை மானியத்திலே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களுக்குச் சில விளக்கங்களை நான் இங்கே அளிக்க விரும்புகிறேன். நேரம் அதிகமாகி விட்டது என்ற போதிலும் கூட சில முக்கியமான கருத்துக்களை, சில அறிவிப்புகளைத் தொழில் துறை தொடர்பாக அறிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

பொதுவாக ஒரு இருபதாண்டுக் கால திராவிடக் கட்சிகளினுடைய ஆட்சியில் தொழில் வளம் சுருங்கிவிட்டது, குறைந்து விட்டது என்ற ஒரு பிரச்சாரத்தைத் தேர்தல் நேரத்திலேயே மத்தியிலே இருந்து வந்த அமைச்சர்கள் தொடர்ந்து செய்து வந்தார்கள். அதற்கு நம்முடைய நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் அளித்த விளக்கங்கள், நான் அளிக்க இருக்கின்ற விளக்கங்கள் இவை இரண்டும் போதுமான பதில்களா, அல்லவா என்பது வேறு

விஷயம். இருந்தாலும் எதுவுமே நடைபெறாமல் இருந்து விட வில்லை. நடைபெற்றவைகளிலே சில குறைபாடுகள் இருந்திருக் கலாம்; சில தயக்கங்கள், தாமதங்கள் இருந்திருக்கலாம். எனவே, எதுவுமே நடைபெறவில்லை இருபதாண்டுக் காலத்தில், திராவிடக் கட்சிகளினுடைய ஆட்சிகளில் என்பது ஒரு தவறான குற்றச்சாட்டு என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதே மாமன்றத்திலேதான் 1957-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய குழுத் தலைவராக - எதிர்க்கட்சித் தலைவராகக் கூட அல்ல, எதிர்க்கட்சித் தலைவர் அப்பொழுது வி. கே. இராமசாமி முதலியார் - முன்னேற்றக் கழகத்தினுடைய குழுத் தலைவராக இருந்தபொழுது அன்றைக்கிருந்த முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜரைப் பார்த்து சொன்னார்கள். நாங்கள், தமிழகம் புறக் கணிக்கப்படுகிறது; தென்னகம் புறக்கணிக்கப்படுகிறது என்று முழங்குகிற முழக்கத்தை நீங்கள் சாதகமாக எடுத்துக் கொண்டு, எங்களைக் காட்டியாவது, தமிழகத்தினுடைய தேவைகளைப் பெறுங்கள் என்று அன்றைக்கு அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு பதினெட்டு ஆண்டுக் காலம் - 49-இலே தொடங்கி, பதினெட்டு ஆண்டுக் காலம் எதிர்க்கட்சியாக இருந்த அந்தக் காலக் கட்டத்திலேயெல்லாம் தமிழகத்திற்குத் தொழில் வளம் தேவை; வட மாநிலங்களிலே தொழில் வளம் பெருகுகிறது; இங்கே தொழில் வளம் இல்லை என்பதை எடுத்துக்காட்ட எத்தனையோ சான்றுகளை மேடைகளில், ஏடுகளில், கருத்தரங்குகளில் எடுத்துச் சொன்ன வரலாறு மறந்துவிடக் கூடிய ஒன்று அல்ல.

அன்றைக்கு நெய்வேலி நிலக்கரி என்றும், காவிரி வட்ட எண்ணெய் என்றும், சேது சமுத்திரத் திட்டம் என்றும், சேலம் இரும்பு என்றும் திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா அவர்களுடைய தலைமையிலே குரலெழுப்பியபோது அந்தக் குரல் கேலிக்குரியதாக ஆக்கப்பட்டதும் உண்டு. தட்டினால் தங்கம் என்கிறார்கள், தோண்டினால் இரும்பு என்கிறார்கள் என்றெல்லாம் கேலி பேசப்பட்டதுண்டு.

ஆனால், அன்றைக்கு அண்ணா தலைமையிலே, திராவிட முன்னேற்றக் கழகம் சொன்ன அந்தக் கருத்துக்கள், நெய்வேலியிலே நிலக்கரி இரண்டாவது சுரங்கம் அமைகிற அளவிற்கு ஆகியிருக்கிறது என்பதையும், காவிரி வட்டத்திலே எண்ணையாவது, இவர்களுக்கெல்லாம் ஏதோ கோளாறு என்று கேலி பேசப்பட்ட காலம் மாறி இன்றைக்கும் காவிரி வட்டத்தி லிருந்து எண்ணெய் பெருக்கெடுத்து, அதனை எடுக்கின்ற சூழ்நிலை உருவாகியிருப்பதையும் காணும்பொழுது, தமிழகத் தினுடைய தொழில் வளர்ச்சிக்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக வருவதற்கு முன்பிருந்தே குரல் கொடுத்த ஒரு இயக்கம், அந்தக் குரலை மதித்துத்தான் தீர வேண்டும் என்ற அளவிற்கு அன்றைக்கு டெல்லி அரசு தமிழகத்திற்குத் தொழில்களைத் தர முன்வந்த அந்தக் கால கட்டத்தை யாரும் மறந்து விட இயலாது.

இங்கே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியி னுடைய நண்பர் வரதராசன் அவர்கள் பேசிய பொழுது சொன்னார்கள். மத்திய அரசினுடைய முதலீடுகள் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் மிகக் குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, வேதனையையும் தெரிவித்து, தன்னுடைய கண்டனத்தையும் இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

நான் ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னால் வியப்பாகவும் இருக்கும்; வேதனையாகவும் இருக்கும்.

1969-70ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலத்தில் மத்திய அரசினுடைய தொழில் முதலீடு மாத்திரம் - நான் மாநில அரசினுடைய தொழில் முதலீட்டையெல்லாம் சொல்லவில்லை. 69-70ஆம் ஆண்டு ஆந்திர மாநிலத்திலே மத்திய அரசினுடைய தொழிலுக்கான முதலீடு 98 கோடி ரூபாய். 86-87-இல் 6,761 கோடி ரூபாய். 69 மடங்கு அதிகம். மராட்டியத்தில் 69-70ஆம் ஆண்டு மத்திய அரசினுடைய முதலீடு 120 கோடி ரூபாய். 1986-87-ல் 10,905 கோடி ரூபாய். அதாவது 91 மடங்கு அதிகம். குஜராத் மாநிலத்தில் 1969-70 ல் மத்திய அரசினுடைய முதலீடு 97 கோடி ரூபாய். 1986-86-ல் 3,179 கோடி ரூபாய். அதாவது 33 மடங்கு அதிகம். பஞ்சாபில் 1969-70-ல் மத்திய அரசினுடைய முதலீடு 34 கோடி ரூபாய். 1986-87 -ல் 641 கோடி ரூபாய். 19 மடங்கு அதிகம்.

இராஜஸ்தானில் 1969-70-ல் 34 கோடி ரூபாய். 1986-87-ல் 780 கோடி ரூபாய். 23 மடங்கு அதிகம். உத்தரப் பிரதேசத்தில் 1969-70ல் 154 கோடி ரூபாய். 1986-87ல் உத்தரப் பிரதேசத்தில் 3,913 கோடி ரூபாய். அதாவது 25 மடங்கு அதிகம். தமிழ்நாட்டில் 1969-70ல் 311 கோடி ரூபாய் மத்திய அரசு முதலீடு. 1986-87-ல் 3,018 கோடி ரூபாய். சுமார் 10 மடங்குதான் அதிகம். ஆந்திராவில் 69 மடங்கு அதிகம். மகாராஷ்டிராவில் 91 மடங்கு அதிகம். குஜராத்தில் 33 மடங்கு அதிகம். பஞ்சாபில் 19 மடங்கு அதிகம். இராஜஸ்தானில் 23 மடங்கு அதிகம். உத்தரப் பிரதேசத்தில் 25 மடங்கு அதிகம். தமிழ் நாட்டில் மாத்திரம் 10 மடங்குதான் அதிகமாகி இருக்கிறது, 1969-லிருந்து 1987 வரையில். எனவே, இங்கே எடுத்துச் சொல்லப் பட்ட வாதங்கள் மத்திய அரசினுடைய முதலீடு நம்முடைய மாநிலத்தில் மிகக் குறைவாகத்தான் ஆண்டுதோறும் செய்யப் பட்டிருக்கிறது என்ற உண்மைக்கு மேலும் வலுவூட்டுகின்றன என்ற வகையில்தான் இந்தப் புள்ளி விவரங்கள் அமைந் திருக்கின்றன. மாநில அரசைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சியைப் பற்றிக்குறிப்பிட வேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் சேலம் உருக்குத் தொழிற் சாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டு, அதனுடைய பணிகள் தொடங்கப்பட்டன. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அன்றைக்கு ஏடுகள் படித்த யாரும் மறந்திருக்கவும் இயலாது. முதலமைச்சராக நான் அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு பொறுப்பேற்றவுடன் டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவினுடைய கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நேரத்தில் சேலம் திட்டத்தை வலியுறுத்திப் பேசியும் கூட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது அன்றைக்கு இடம் பெறாத காரணத்தால் அன்றைக்குத் தமிழ் நாட்டு மக்கள் அத்தனை பேர்களுடைய சார்பாகவும், இந்த நான்காவது திட்டத்தின் வரைவை நான் புறக்கணிக்கிறேன் என்று எடுத்துச் சொன்னேன். இவ்வளவு வேகமாகக் கருத்தைச் சொல்லி விட்டீர்களே என்று அன்றைக்கு மத்தியிலே அமைச்சராக இருந்த திரு. சி. எஸ். அவர்கள் கூட என்னிடத்தில் வருத்தப் பட்டுக்கொண்டார். ஆனால் அப்படி நான் பேசிய அடுத்த வாரமே அன்னை இந்திரா காந்தி அவர்கள் சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கான அறிவிப்பைச் செய்து, என்னை டெல்லிக்கு உடனடியாக வரச்செய்து, அந்த அறிவிப்பை என்னுடைய கரங்களில்

ஒப்படைத்தார்கள். இப்படிப் போராடிப் பெற்ற உருக்காலைத் திட்டம் இன்றைக்கு உருக்காலைத் திட்டமாக இல்லை. வெறும் உருட்டாலைத் திட்டமாகி விட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதை மீண்டும் உருக்காலைத் திட்டமாக மாற்றியமைக்கிற வரையில் இந்த அரசு ஓயாது அதற்காகப் பாடுபடும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம் அமைப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றி கண்டன. அதைப்போலவே, மேட்டூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் கழக ஆட்சியில்தான் தொடங்கப்பட்டன. ஒரு குறிப்பைச் சொல்லவேண்டுமென்றால் 1967-ம் ஆண்டு கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது மின்சார உற்பத்தி 1,470 மெகா வாட்டாக இருந்தது. 1976-ம் ஆண்டு மின்சார உற்பத்தி 2,364 மெகாவாட். 894 மெகாவாட் உற்பத்தி அப்போது பெருகியது. அடுத்து இப்போது 3,900 மெகாவாட்டாக மின் உற்பத்தி உயர்ந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொண்டாலுங் கூட, அது போதுமானதாக இல்லை; இந்த உற்பத்தியில் ஏற்படுகிற இடையூறுகள், இன்னல்கள், அதனால் இன்றைக்கு இந்த மாநிலத்தில் விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிற தொல்லை, இவைகளையெல்லாம் நாம் மறந்து விட முடியாது.

நெய்வேலி முதல் திட்டம் காங்கிரஸ் ஆட்சியிலே எப்படி ஆரம்பிக்கப்பட்டதோ, அதைப்போலத்தான் கல்பாக்கம் மின் நிலையத் திட்டமும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இங்கே நடைபெற்றபோது, முன்பு ஆரம்பிக்கப்பட்டது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

அதுமாத்திரம் அல்லாமல், ஆசியாக் கண்டத்திலே மிகப் பெரிய உரத் தொழிற்சாலை, ஸ்பிக் உரத் தொழிற்சாலை கூட்டுத் துறையிலே நிறுவப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான். 1969-லேயிருந்து 1976 வரையில் 23 தொழிற் சாலைகளை பொதுத் துறையிலேயும், கூட்டுத் துறையிலேயும் இந்த அரசு ஏற்படுத்தியது. இதற்கு மொத்த முதலீடு சுமார்

300 கோடி ரூபாயாகும். 1967-க்கு முன்னாலே மாநில அரசு பொதுத் துறையிலே செய்த முதலீடு 14.54 கோடி ரூபாய், 68-லேயிருந்து 76 வரை. பொதுத்துறையிலே செய்த மொத்த முதலீடு 40.92 கோடி ரூபாய். அவை Asbestos pipe, Asbestos sheet, Ariyalur cement, Arakonam steel, Alankulam cement இரண்டாவது கட்டம், இவைகள் எல்லாம் அந்தத் தொகைக்குள்ளே அடங்கும்.

ஜாயின்ட் செக்டார், அதாவது கூட்டுத் துறை என்ற தத்துவத்தை இந்தியாவிலே முதன் முதலாகக் கொண்டு வந்தது, தமிழ்நாட்டிலே கழக ஆட்சிக் காலத்திலேதான். அதன் காரணமாக இன்று அந்த ஜாயின்ட் செக்டார். கூட்டுத் துறையிலே சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன. 26 சதவீதம் அரசும் 25 சதவீதம் தனியாரும், 49 சதவீதம் பொதுமக்களுடைய பங்கும் என்ற வகையிலே அமைவதுதான், ஜாயின்ட் செக்டார்-கூட்டுத்துறை என்பதாகும். சில தொழில்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காகவே, கழக ஆட்சியிலே சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், சிட்கோ, Small Industries Development Corporation 1971-ல் நிறுவப்பட்டது. நடுத்தரத் தொழில்களை அமைக்கவும் மற்றும் பெரிய தொழில்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொடுக்கவும், அதற்கான நிதி ஆதாரத்தைப் பெற்றுத் தரவும் சிப்காட் State Industries Promotion Corporation of Tamil Nadu என்ற நிறுவனம் 1971-லே கழக ஆட்சியிலே நிறுவப்பட்டது. 67-க்கு முன்பு, காங்கிரஸ் ஆட்சியில் நிறுவப்பட்ட டிட்கோ Tamil Nadu Industries Development Corporation நிறுவனத்தோடு இணைந்து தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளை சிப்காட் தொடர்ந்து செய்து வருகிறது. டிட்கோவும், சிப்காட்டும் சேர்ந்து சுமார் 1400 கோடி ரூபாய் அளவிற்கான மூலதனத்திற்கு வழி செய்துள்ளன. டிட்கோ, பொதுத் துறையிலே இதுவரையில் ஆரம்பித்த தொழில் களினுடைய எண்ணிக்கை 10. இந்தப் பத்தில், 67-க்கு முன்பு இரண்டும், 69-லிருந்து 75 வரை ஐந்தும், பின்பு 13 ஆண்டுக் காலத்திலே மூன்றும் தொடங்கப்பட்டன. இந்த மூன்றில் காட்பாடியில் நிறுவப்பட்ட வெடி மருந்துத் தொழிற்சாலை மட்டுமே இப்போது உற்பத்திச் செய்து கொண்டிருக்கிறது. வாலி

நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட மெக்னிசியம் மெட்டல் தொழிற்சாலையும், காட்பாடியில் ஆரம்பிக்கத் திட்டமிடப் பட்டுள்ள அம்மோனியம் நைட்ரேட் தொழிற்சாலையும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்ற குறிப்பையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இப்போதுள்ள கூட்டுத் துறைகளினுடைய தொழில்களி னுடைய எண்ணிக்கை 43. இதிலே 23 தொழிற்சாலைகள் 69லேயிருந்து 76ஆம் ஆண்டுக்குள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டு இருக்கின்றன. மீதம் உள்ள இருபதில் 10 தொழிற்சாலைகள் கடந்த ஆட்சியிலே தொடங்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றன. இன்னும் ஆரம்ப நிலையிலே உள்ளவை 10 தொழிற்சாலைகள். பொதுத்துறைக்கும், கூட்டுத் துறைக்கும் மொத்த முதலீடு 921 கோடி ரூபாயில், டிட்கோ முதலீடு மாத்திரம் 92 கோடி ரூபாயாகும். மீதம் உள்ள மற்ற தொகைகளை நிதி நிறுவனங்களும், பொதுமக்களும் தருகின்றார்கள். 92 கோடி ரூபாய் முதலீடு செய்தும் கூட, சரியான டிவிடன்ட் லாபப் பங்கீடு கிடைக்காத காரணத்தால் இந்த முதலீட்டுக் கொள்கையை அரசு மறு பரிசீலனை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டதையும் உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

ஏற்கெனவே சொன்னதைப் போல, டிட்கோவினுடைய முதலீடு 26 பர்சென்ட், தனியார் முதலீடு 25 பர்சென்ட், பொது மக்களுடைய பங்கு 49 பர்சென்ட். 26 சதவீதம் டிட்கோ, இதுவரை செய்த மொத்த முதலீடு 92 கோடி ரூபாய். பெரிய தொழிற்சாலை நிறுவவேண்டும் என்றால், அதிக முதலீடு மேலும் தேவைப்படுகிறது. அதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25 கோடி யிலிருந்து, ரூ. 30 கோடி வரையிலும், தேவைப்படுகிற நிதியை ஒதுக்க வேண்டியிருக்கிறது. அந்த நிதியை டிட்கோவிற்கு அரசுதான் ஒதுக்க வேண்டி யிருக்கிறது. ஆனால் ரூ. 30 கோடி ஒதுக்கப்படக்கூடிய சூழ்நிலைக்கு மாறாக அரசு ரூ. 6 கோடி அளவிற்குத்தான் முதலீடு செய்யக்கூடிய அளவிற்கு நிதிநிலை இடம் அளிக்கிறது என்பதையும் நான் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே தான் இந்த நிலையில் கூட்டுத் துறையில் டிட்கோ 26 சதவீதம் முதலீடு செய்ய இயலாத

நிலை. இதே நிலை மற்ற மாநிலங்களில் ஏற்பட்டு, இந்த முதலீட்டு விழுக்காட்டில் மாற்றங்கள் செய்துள்ளன மற்ற மாநிலங்கள் அவைகளையும் கருத்திற் கொண்டு, இனிமேல் அப்படிப்பட்ட தொழில் முயற்சிகளுக்கு அரசாங்கத்தின் பங்கு 11 சதவீதம் என்று மாத்திரமே இருக்கும். சில தொழில் முயற்சிகளுக்கு பழையபடி ஜாயின்ட் செக்டார் - கூட்டுத்துறை முறை நீடிக்கும். 11 சதம் என்ற முறையில் அசோசியேட் செக்டரி அதாவது ஊக்கமூட்டும் துறை என்ற தலைப்பில் இந்த முறையானது நடைமுறைக்கு வரும். எனவே கூட்டுத் துறையில் நடைமுறையிலே உள்ள பல தொழில் திட்டங்களிலேகூட, அவசியமானால் 26 சதவீதம் என்ற முதலீட்டைக் குறைத்துக்கொண்டு, அசோசியேட் செக்டாராக 11 சதவீத முதலீட்டிலே செயல்படலாம் எனவும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. கூட்டுத்துறையிலே செய்யப்பட்டுள்ள முதலீட்டைத் திரும்பப் பெற்றுக்கொள்வது டிஸ் - இன்வெஸ்ட்மென்ட். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கு நான் பிறகு வருகிறேன். இப்போது 'டிஸ்-இன்வெஸ்ட்மென்ட்' என்ற கொள்கை ஆராயப்பட்டு, சில தொழில் நிறுவனங்களுக்கு இதை நடைமுறையில் கொண்டுவருவது என்றும் முடிவு செய்யப் பட்டுள்ளது. இவ்வாறு முதலீட்டைத் திரும்பப் பெற கூட்டுத் துறையிலே ஏற்பட்ட ஒப்பந்தங்களிலே வழிவகை உண்டு. 26 சதவீதம் அரசு கூட்டுத் துறையில் முதலீடு செய்திருக்கு மானால், அதைத் திரும்பப் பெற ஒப்பந்தத்திலே வழிவகை இருக்கிறது. அதைத் திரும்பப் பெற்று, இன்னொரு தொழிலுக்கு அதை முதலீடு செய்யவும், தனியார் அந்தத் துறையை ஏற்று நடத்தவும் முதலிலே ஒரு ஆரம்பப் பணிக்காக ஊக்கத் தொகையாக அரசு அதை அளிக்கிறது. அதைத்தான் திருநாவுக்கரசு அவர்கள் கேட்டார்கள். அப்படி இருக்கும்போது அதை ஒத்துக்கொள்கின்ற நீங்கள் முன்பு காரைக்குடியில் இருந்த ஒரு தொழிற்சாலையில் இந்த அரசு விற்றதை எப்படி கண்டித்தீர்கள் என்று கேட்டார்கள். அந்த வேறுபாட்டைத்தான் நான் விளக்க விரும்புகிறேன். காரைக்குடியில் தமிழ்நாடு கெமிக்கல் ப்ராடக்ட்ஸ் என்ற ஒரு தொழில் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டது கூட்டுத் துறையில். அந்தத் தொழிலை

தொடங்கும்போது அரசு மற்றும் அனந்தசாமி என்ற ஒரு தனியார் அந்தக் கூட்டுத் துறையிலே பங்கு ஏற்று அது ஆரம்பிக்கப்பட்டது. நான் விவரங்களுக்குள்ளே நுழைய வில்லை. அது தேவையும் இல்லை என்ற காரணத்தால், அதற்குப் பிறகு 1977-ல் அ.தி.மு.க. ஆட்சி வந்த பிறகு அந்தத் தனியாரிடமிருந்த பங்குகளை எல்லாம் அரசே பெற்றுக்கொண்டு, அரசி னுடைய பங்கு 62 சதவீதம் என்று உயர்ந்தது. எனவே அது ஏறத்தாழ அரசுத்துறையினுடைய தொழிலாக அன்றைக்கு மாறி விட்டது. தனியாருக்கும் அரசுக்கும் பங்கு இருந்து, தனியார் 25, அரசு 26 சதவீதம் என்று இருந்து, அரசு ஒதுங்கிக் கொண்ட நிகழ்ச்சியல்ல இது. தனியாரிடமிருந்து அந்தத் தொழிலை அரசே பெற்றுக்கொண்டு, அது அரசுத்துறை தொழிலாக ஆன பிறகு, அரசு அதை விற்க முன் வந்ததுதான் கண்டனத்திற்கு உரியதாக ஆனதே தவிர, வேறு அல்ல. அதுமட்டுமல்ல, நிதிச் செயலாளர் அவர்கள் அன்றைக்குப் பக்கம் பக்கமாக எழுதுகிறார். இதை விற்கக் கூடாது என்று. விற்கப்பட்ட பிறகுகூட, அக்கவுண்டண்ட் ஜெனரல் அதிலே ஏற்பட்ட தவறுகளை எல்லாம் பக்கம் பக்கமாகச் சுட்டிக்காட்டுகிறார். அது முறைகேடாக விற்கப் பட்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டுகிறார். இன்னும் இதிலே வேடிக்கை என்னவென்றால், அரசாங்கத்தி னுடைய தொழில்களிலேயே ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1 கோடி வருமானமுள்ள தொழிலாக இருந்தது இந்த காரைக்குடியிலே இருந்த தொழிற்சாலை ஒன்றுதான். அதை விற்க வேண்டுமா என்பதுதான் பிரச்சினையே தவிர, வேறு அல்ல. எனவே அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதற்கும் நான் சொல்கின்ற இந்தக் கருத்திற்கும் நிரம்ப வேறுபாடு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற தவறுகள் இப்போது நாம் வகுத்துள்ள இந்த 'டிஸ்-இன்வெஸ்ட்மென்ட்' என்ற கொள்கையிலே நடைபெறாமல் பார்த்துக் கொள்வோம் என்ற உறுதியினை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அரசு சார்பு நிறுவனமான டாமின் பற்றி வைக்கப் பட்டுள்ள கொள்கைக் குறிப்பைக் குறித்து இங்கே பலரும் தங்க ளுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தச் சிறிய

நூலில் தெரிவிக்கப்பட்டிருக்கிற கருத்துக்களை அவை உறுப்பினர்கள் அனைவரும் படித்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். இருந்தாலும் அதிலே ஒன்றிரண்டைக் கோடிட்டுக் காட்ட வேண்டியது என்னுடைய கடமை. அந்த டாமின் நிறுவனத்திற்கு 83 ஆம் ஆண்டு நம்முடைய மறைந்த மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்தக் காலக்கட்டத்தில் அதை அரசுடைமையாக ஆக்க வேண்டுமென்று சற்றொப்ப 36 ஆயிரம் ஏக்கரா, அந்தக் கற்கள், பாறைகள் இருக்கிற அந்த இடத்தை அரசு எடுத்துக் கொண்டது. 36 ஆயிரம் ஏக்கர் எடுத்துக் கொண்டாலும்கூட அதிலே அந்த டாமின் நிறுவனம் அதிலே முதன்முதலாக தாங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று மூவாயிரத்து சொச்சம் ஏக்கராவைத்தான் அவர்கள் பெற்று அங்கே பணியைத் தொடங்கினார்கள். அந்த மூவாயிரத்து சொச்சம் ஏக்கராவிலாவது பணியை முடித்தார்களா, அந்தக் கற்களை எடுத்தார்களா என்றால் இல்லை. 2,500 ஏக்கராவைத்தான் பயன்படுத்திக் கல்லை வெட்டினார்கள். அப்படி வெட்டி ஏற்றுமதி செய்யப்பட்டதில் தனியாருக்கும் நமக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமாக அது அமைந்து விடுகிறது. அதனால்தான் அந்த 10 கோடி ரூபாய் 5, 6 ஆண்டுக் காலத்திலே நமக்கு வர வேண்டிய பணம் வராமல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பு வைக்கப்பட்டிருக்கிறது.

இதையெல்லாம் சொல்லும்போது நான் அதைக் கண்டு பிடிக்க வேண்டும், குற்றம் சாட்ட வேண்டும் என்ற முனைப்போடு செய்ததாக யாரும் கருதக் கூடாது. நவம்பர் மாதத்திலே – அதாவது 88வது ஆண்டு நவம்பர் மாதத்திலே கவர்னர் அவர்களுடைய கவனத்திற்கு இது கொண்டு வரப்பட்டு, அப்போதே ஒரு கமிட்டி போடப்பட்டு, அந்தக் கமிட்டி இவைகளையெல்லாம் ஆராய்ந்து அந்த டாமின் நிறுவனத்திலே நடத்தப்பட்டு வருகிற முறைகேடுகளையெல்லாம் வெளிக் கொணரத் தலைப்பட்டது. வெளிக் கொணர்ந்த பிறகு அந்த அதிகாரி மீது அப்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அது கூட போதுமான நடவடிக்கை அல்ல என்று நம்முடைய

திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார். இது நடவடிக்கையிலே ஒரு படி. அடுத்த படி, மூன்றாவது படி, நான்காவது படி, இவைகள் எல்லாம் வேறு இருக்கிறது. இருந்தாலும் முதல் படியாக அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அதற்கு மேல் நடைபெறுகின்ற விசாரணை எல்லாம் வேறு இருக்கிறது. நடவடிக்கை வேறு இருக்கிறது. ஆனால் எப்படி அந்தத் தவறுகள் நடைபெற்றன என்று பார்த்தால் உள்ளபடியே நாம் மிகவும் வேதனைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1983-84 ஆம் ஆண்டு தனியாரும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலேயிருந்து கற்களை எடுக்கிறார்கள். நாமும் டாமின் என்ற நிறுவனத்திற்கு எடுத்துக் கொண்ட அந்தப் பகுதியிலேயிருந்த கற்களை எடுக்கிறோம். சாம்பல் வண்ணப் பாறை, அதைப்போல கருப்பு வண்ணப் பாறை என்று இரண்டு ரகம். அந்த சாம்பல் வண்ணப் பாறையை தனியார், நாம் இரண்டு பேரும் ஏற்றுமதி செய்யும்போது, தரம் குறைந்த சாம்பல் வண்ணப் பாறையை ஒரு கன மீட்டருக்கு 420 டாலர் என்ற விலையிலே தனியார் ஏற்றுமதி செய்கிறார்கள். அதே நேரத்தில் நம்முடைய டாமின், தரம் சிறந்த சாம்பல் வண்ணப் பாறையை ஒரு கன மீட்டருக்கு 277 டாலரிலிருந்து 294 டாலர் என்ற விலைக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். தனியார் தரம் குறைந்த பாறையை ஒரு கன மீட்டருக்கு 420 டாலர் என்று ஏற்றுமதி செய்ய, நாம் தரத்திலே சிறந்த சாம்பல் வண்ணப் பாறையை 277லிருந்து 294 டாலர் என்ற அளவிற்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம். இது 1983-84 இல்.

1984-85-ல் இதே சாம்பல் வண்ணப் பாறையை - தரம் குறைந்தது - தனியார் ஏற்றுமதிக்கு ஒரு கன மீட்டர் 475 டாலர். நாம் தரம் உயர்ந்த சாம்பல் வண்ணப் பாறையை ஒரு கன மீட்டருக்கு 258லிருந்து 269 டாலர் என்று ஏற்றுமதி செய்திருக்கிறோம். 1985-86-ல் தனியார் ஏற்றுமதி செய்த சாம்பல் வண்ணப் பாறை, தரம் குறைந்தது ஒரு கன மீட்டர் 460 டாலர். அதே நேரத்தில் நம்முடைய டாமின், தரம் உயர்ந்த சாம்பல் வண்ணப் பாறையை ஒரு கன மீட்டருக்கு 299 டாலர் என்று ஏற்றுமதி செய்கிறது. 1986-87-ல் தனியார் ஏற்றுமதி செய்த தரம்

குறைந்த சாம்பல் வண்ணப் பாறை கன மீட்டர் 475 டாலர். நமது டாமின், தரம் உயர்ந்த சாம்பல் வண்ணப் பாறையை ஒரு கன மீட்டர் 404லிருந்து 427 டாலர். 1987-88-ல் தனியார் ஏற்றுமதி செய்த தரம் குறைந்த சாம்பல் வண்ணப் பாறை ஒரு கன மீட்டர் 575 டாலர். நமது டாமின் நிறுவனம், தரம் மிக உயர்ந்த சாம்பல் வண்ணப் பாறையை ஒரு கன மீட்டருக்கு 512லிருந்து 538 டாலர். இது சாம்பல் வண்ணப் பாறை.

கருப்பு வண்ணப் பாறை விஷயத்தில் அதை விட அதிகத் தவறு. 1986-87ஆம் ஆண்டு குன்னங்கிராமம் - இந்தக் குன்னங்கிராமம்தான் இந்தக் கற்பாறைகளுக்கு சிறந்த இடம் என்று புகழப்படுகிற இடம் - அந்த குன்னங்கிராமத்தில் டாமின், தனியார் இருசாராரும் கருப்புப் பாறைகளை வெட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

அதில் டாமின் வெட்டிய பாறைகள் தனியார் அனுப்பிய பாறைகளை விட உயர்ந்த தரம் உள்ளவை. அந்தப் பாறை ஏற்றுமதியில் 1986-87ல் டாமின் நிறுவனம் பெற்ற சராசரி விலை ஒரு கன மீட்டருக்கு 714 டாலர். அதே ஆண்டு ஜெம் கிரானைட்ஸ் என்ற தனியார் ஒரு கனமீட்டருக்கு 1,500 டாலர் என்ற விலையிலே ஏற்றுமதி செய்திருக்கிறார். 2 மடங்கு அதிகமாக. நாம் ஏற்றுமதி செய்தது கன மீட்டருக்கு 714 டாலர். தனியார் நிறுவனம் ஒரு கன மீட்டருக்கு 1,500 டாலர் என்ற விலையிலே ஏற்றுமதி செய்தது. இதன் காரணமாக மாத்திரம் ஒரு சுரங்கத்திலே ஏற்பட்ட நஷ்டம் ஒரே ஆண்டில் 48 இலட்சம் ரூபாய். 1986ஆம் ஆண்டு திருவக் கரையிலே உள்ள ஒரு சுரங்கப்பாறையில் ஒரு கன மீட்டருக்கு 1,281 டாலர் கொடுக்க ஜப்பானிய நிறுவனமான ஓரியண்ட் சாங்கியோ என்ற நிறுவனம் முன் வந்தது. ஆனால் நம்முடைய டாமின் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. அதற்கு மாறாக மிட்சுபிஷி கார்ப்பரேஷனுக்கு ஒரு கன மீட்டருக்கு 550 டாலர் வீதம் 1982 ஆம் ஆண்டு கொடுத்த அதே விலைக்கே ஏற்றுமதி செய்தது. இன்னொருவன் 1,281 டாலருக்குக் கேட்கிறான், அவனுக்குக் கொடுக்காமல் 1982 ஆம் ஆண்டு விலையை வைத்து 1986ஆம் ஆண்டில் 550 டாலருக்கு அந்த நிறுவனம் தருகிறது.

இதனால் ஒரு சுரங்கத்திலே மாத்திரம் ஏற்பட்ட இழப்பு ரூ. 41 இலட்சம். கவர்னருடைய ஆட்சியில் இதனுடைய பழைய மேனேஜிங் டைரக்டரை மாற்றிவிட்டு புதியதாக மேனேஜிங் டைரக்டர் நியமிக்கப்பட்டவுடன் - உங்களுக்குச் சொல்கிறேன்- 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கருப்புப் பாறைக்கு ஒரு கன மீட்டருக்கு 714 டாலர் என்ற நிலை மாற்றப்பட்டு டிசம்பர் மாதம் 2,050 டாலராக உயர்த்தப்பட்டிருக்கிறது. டிசம்பர் மாதம் 2,050 டாலர் கன மீட்டருக்கு விற்கப்படுகின்ற அந்தக் கல் முதல் மாதம் - நவம்பர் மாதம் ஒரு கன மீட்டர் 714 டாலர் என்றுதான் விற்கப்படுகிறது. கவர்னர் ஆட்சியிலேகூட இந்த நடவடிக்கைகளை அவர் பொறுப்பு ஏற்று சில மாதங்களுக் கெல்லாம் தொடர்ந்து எடுத்திருப்பாரானால் இன்னும் அதிகத் தொகை அரசுக்குக் கிடைத்திருக்கக்கூடும். அவரும் நவம்பர் மாதத்திலேதான் - அந்த ஆட்சியிலே நடவடிக்கை எடுக்கப் பட்ட காரணத்தால் ஒரு மாதம்தான் தப்ப முடிந்தது என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த முறைகேடு களால் டாமின் இதுவரை பயன்படுத்திய 2,500 ஏக்கரில் 10 கோடி ரூபாய் 1983ஆம் ஆண்டு முதல் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, குளோபல் டெண்டர் - உலகத்திலே பல பகுதிகளிலேயிருந்து கோரப்படுகின்ற டெண்டருக்குப் பெயர் குளோபல் டெண்டர். இதற்கு மாறாக முதலில் கொடுக்கப்பட்ட தனிப்பட்ட ஒருவருக்கேதான் அடுத்த ஆண்டு டெண்டர் கோரப்படாமலேயே தொடர்ந்து தனியாரை விடக் குறைந்த விலையிலே தரப்பட்டு வந்திருக்கிறது. இதை வைத்துக் கொண்டு பொதுத் துறையே மோசம் என்று யாரும் சொல்லிவிட முடியாது. நான் எந்த அமைச்சர்கள் மீதும் - அவரும் சொன்னார். அப்போது நான் இந்தத் துறைக்கு அமைச்சராக இல்லை என்று கூடச் சொன்னார் - எனவே இந்தத் துறையை நிர்வகித்து வந்தவர்கள் அல்லது நிர்வகித்து வந்த அந்த எம்.டிக்கு மேலேயிருந்து அவரை ஊக்கப்படுத்தியவர்கள், இவர்கள் எல்லாம் எந்த முறையிலே எவ்வளவு பெரிய ஊழலை இந்தத் துறையில் நடத்தி இருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் இதை வைத்துக் கொண்டு பொதுத் துறையே

தேவையில்லை என்ற முடிவுக்கு இந்த அரசு வந்துவிடுகிறதா என்றால் இல்லை. பொதுத்துறையே மோசம் இல்லை. பொதுத் துறையிலும் மோசமானவர்கள் புகுந்து விடுவதுண்டு என்பது உண்மையே தவிர பொதுத் துறையே மோசமான ஒன்று அல்ல. கவர்னர் ஆட்சிக் காலத்தில் 3 ஐ. ஏ. எஸ். அதிகாரிகளைக் கொண்டு ஒரு குழு அமைக்கப் பட்டு அந்தக் குழு டாமினுக்கு போக மீதம் உள்ள நிலங்களை தொழிற்சாலை வைத்துள்ள தனியாருக்கு குத்தகை உரிமம் தரலாம் என்ற ஒரு முடிவு எடுத்தது. அதைத்தான் இப்போது நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் உங்களுக்கு என்ன கொள்கை தேசியமயத்தில், பஸ் தேசியமயம் என்கிறீர்கள். இதைத் தனியாருக்குத் தருவதாகச் சொல்கிறீர்கள். என்ன கொள்கை? அதைப்போல சர்க்கரை ஆலை கூட்டுறவு என்கிறீர்களே, என்ன கொள்கை என்றெல்லாம் கேட்டார்கள். நாம் எந்த ஒரு கொள்கையிலும் முழுமையாக தேசியமயக் கொள்கை என்று இந்தியா முழுமையும் இன்றைக்கு யாரும் நிலைநாட்டிவிட முடியாது. மிகச் சிறந்த கம்யூனிஸ்ட் நாடுகளிலே கூட தனியார் துறைக்கு இடம் இருக்கிறது. அறவே தனியார் துறை அழிக்கப் பட்டு விடவில்லை. இதிலே நாம் எண்ணிப் பார்க்க வேண்டியது என்னவென்றால் மொத்தம் இருப்பது 36,000 ஏக்கரா. கொஞ்ச நஞ்சமல்ல. இந்த 36,000 ஏக்கராவையும் டாமின் நிறுவனமே வெட்டியெடுப்பது என்றால் நம்முடைய பேரப் பிள்ளைகள் அல்ல, கொள்ளுப் பேரன், அந்தக் கொள்ளுப் பேரனுக்கும் கொள்ளுப் பேரன் காலத்திலே கூட அது முடிவடையாது.

அதையும் நாம் மறந்து விடக்கூடாது. இப்போது அரசிற்கு வரக்கூடிய வருமானத்தை இழந்துவிடலாமா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். என்னதான் நாம் முயற்சியை எடுத்தாலும், நம்முடைய அரசுடைமையாக்கப்பட்ட 'டாமின்' நிறுவனத்தின் மூலம் 36,000 ஏக்கராவையும் வெட்டி எடுக்க முடியாது. 10 ஆண்டுக் காலத்திலே 2,500 ஏக்கராவைத்தான் வெட்டி எடுத்து இருக்கிறோம். 36,000 ஏக்கராவிலும் வெட்டி எடுக்க முடியாது. அது மாத்திரமல்ல. இன்னொரு உண்மையை உங்களுக்குச் சொல்வேன். ஒரு கன மீட்டருக்கு – ஒரு தனியாருக்கு நாம் அதைக் கொடுத்தால் ஒரு கன மீட்டருக்கு

அவர்கள் அரசாங்கத்திற்கு, கருப்புக் கல்லுக்குத் தரக்கூடிய கட்டணம் 400 ரூபாய். தொடர்புடைய பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு கன மீட்டருக்கு அவர்கள் தர வேண்டிய கட்டணம் 1,000 ரூபாய். சாம்பல் வண்ணப் பாறையாக இருந்தால் ஒரு கன மீட்டருக்கு அரசிற்கு அவர்கள் தரவேண்டிய கட்டணம் 200 ரூபாய். தொடர்புடைய பஞ்சாயத்து யூனியனுக்கு தரவேண்டிய கட்டணம் 500 ரூபாய். இதன் மூலம் அரசிற்குக் குறைந்தது 10 முதல் 15 கோடி ரூபாய் வரை அதிக வருவாய் வரும். தொடர்புடைய பஞ்சாயத்து யூனியன்களுக்கு மொத்தத்தில் சுமார் 30 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் வரும்.

இதை இழக்கலாமா, தேசியமயக் கொள்கை என்கின்ற பெயரால் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். தேசிய மயக் கொள்கைக்கு விரோதமான கருத்து அல்ல இது. தேசிய மயக் கொள்கையை எது, எதிலே இன்றைக்கு நிறைவேற்ற முடியுமோ அவைகளில் நாம் நிறைவேற்றத் தயங்கமாட்டோம். அதே நேரத்தில் தேசியமயக் கொள்கையையும் கடைபிடித்து, படிப்படியாக அரசுடைமையாக்கப்பட்ட இடங்களில் அரசே இந்த விற்பனை நடத்தி ஏற்றுமதி செய்கின்ற ஒரு நிலை வளர்கிற வரையில் தற்காலிகமாக இதைத் தனியாருக்குத் தருவதன் மூலம் அரசிற்கு ஆண்டொன்றிற்கு சுமார் 15 கோடி ரூபாயும், பஞ்சாயத்து யூனியன்களுக்கு, தொடர்புடைய பஞ்சாயத்து யூனியன்களுக்கு எல்லாம் 30 கோடி ரூபாயும் கிடைக்கின்ற அந்த நிலையை இழந்துவிடலாமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் தீவிரமாக அரசு பரிசீலித்து வருகிறது என்று குறிப்பிட்டேனே அல்லாமல், திடீர் முடிவு ஏன் எடுக்கவில்லை என்று 'திருநாவுக்கரசு அவர்கள்' கேட்டார்கள். அன்றைக்கே அவர்கள் வேறு ஒரு விவகாரத்திலே பேசும்போது, இன்னும் முடிவு எடுக்கவில்லை இந்த அரசு, இது கவர்னர் ஆட்சி எடுத்த முடிவு என்று அன்றைக்கே அவர்கள், தான் சொன்னது தவறு என்று திருத்திக் கொண்டு பேசினார்கள். நான் இன்றைக்கும் சொல்கிறேன். இந்தத் தனியார்களுக்குத் தருகிற நேரத்தில் என்னென்ன நிபந்தனைகளோடு தரலாம், கேட்டவர்களுக் கெல்லாம் தந்துவிடலாமா என்றெல்லாம் பார்க்கவேண்டுமே. சில உறுப்பினர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள்.

நம்முடைய சொக்கர் அவர்கள் என்று கருதுகிறேன். சொக்கருடைய பேச்சில் நான் சொக்கியே போனேன். காரணம், அவருடைய பேச்சிலே முக்கால் பகுதி பாராட்டுரையாகவே இருந்ததை நான் எண்ணிப் பார்க்கிறேன். சில அறிவுரைகளையும் தந்தார். ஆராய்ந்து பார்க்கக்கூடிய சில செய்திகளையும் சொன்னார், அவர் சொன்னார். இதில் ஏன் தொழில் நிலையம் இருக்கிறதா, இல்லையா என்றெல்லாம் எதற்காகத் தரம் பிரித்துப் பார்க்க வேண்டும், எல்லோருக்கும் கொடுத்து விடலாம் என்று சொன்னார். அப்படி எல்லோருக்கும் கொடுப்பதால்தான் பல தீய விளைவுகள் ஏற்படும். எனவேதான் இவைகளை ஒழுங்காக வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்யக்கூடிய பொறுப்பானவர்களுக்கு, அந்த வசதி படைத்தவர்களுக்கு, அந்த வாய்ப்புப் படைத்தவர் களுக்கு, அந்தத் தொழிற்சாலையை இயக்கக் கூடியவர்களுக்குத் தரக்கூடிய அந்த நிலைமைகளை எல்லாம் ஆராய வேண்டும் என்பதற்காகத்தான் உடனடியாக நாம் முடிவு எடுக்காமல் இதைப் பற்றி இன்றைக்கு ஆய்வு செய்து கொண்டு இருப்பதாக அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இன்னொன்றையும் நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

இது அமைச்சர்களைப் பொறுத்த ஒன்றல்ல. அதனால் நம்முடைய முன்னாள் அமைச்சர்கள் யாரும் அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் சொல்ல வேண்டிய விஷயம் இது. நம்முடைய முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களையே, அவரிடத்திலிருந்த செயலாளர்கள் எந்த அளவுக்கு அவர் உடல் நலம் இல்லாமல் இருந்தபோது அவர்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்காக நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

திருச்சியில் முதுவத்தூர் என்ற இடத்தில் நாள்தோறும் 20 டன் சிமென்ட் தயாரிக்கின்ற ஒரு சிறிய தொழிற்சாலையை சுமார் 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1967இல் அரசு அமைத்தது. இந்தத் தொழிற்சாலை 1974ஆம் ஆண்டில் மத்திய அரசின் சிமென்ட் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு, சிமென்ட் ஆராய்ச்சி முறை நடத்த மத்திய அரசு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. 1967-லே ஆரம்பிக்கப்பட்ட அந்த மினி

சிமென்ட் தொழிற்சாலை, 20 டன் தயாரிக்கின்ற தொழிற்சாலை, மத்திய அரசினுடைய சிமென்ட் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. 1983ஆம் ஆண்டில் அந்த நிறுவனம், அந்தத் தொழிற்சாலையை தமிழ்நாடு சிமென்ட் நிறுவனத்திடம் ஒப்படைத்து விட்டது. அதை நடத்த இயலாத காரணத்தால், தனியாருக்கு அதை விற்று விடலாம் என்று முடிவு எடுத்து, 1986 இல் அரசு ஒப்பந்தப் புள்ளிகள் கோரியது. அந்த ஒப்பந்தப் புள்ளிகள் 18-7-1986-க்குள் அரசிற்கு வந்து சேர வேண்டும் என்று அரசு அறிவித்தது. நான்கு பேர் ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்பினார்கள். யார் அந்த நான்கு பேர்? அ. கோபலரான், சென்னை, ஒப்பந்தப் புள்ளி 11.70 இலட்சம். எம். எஸ். அப்துல் சலாம். சென்னை, ஒப்பந்தப் புள்ளி 37.51 லட்சம் ரூபாய்; கேதார்நாத் அகர்வால், அவுரா, ஒப்பந்தப்புள்ளி 44.44 லட்சம் போய்; என் பழனிச்சாமி, கோயமுத்தூர் ஒப்பந்தப்புள்ளி 45 லட்சம் ரூபாய் விலை நிர்ணயம் செய்ய அமைக்கப்பட்ட நிபுணர் குழு குறைந்த பட்சம் 'அப்செட் பிரைஸ்' 43 லட்சம் ரூபாய்க்கு நிறுவனத்தை விற்கலாம் என்ற ஆலோசனையைக் கூறியிருந்தது. ஒப்பந்தப் புள்ளியிலிருந்த 4 நபர்களில் பழனிச்சாமி என்பவர் தான் 45 லட்சம் ரூபாய் தர முன்வந்தார். அதை ஏற்கலாம் என்று அப்போதைய நிதிச் செயலாளர் கோப்பில் கருத்துத் தெரிவிக்கிறார். அதை அப்படியே ஏற்றுக் கொண்டு 29-8-1986-ல் தொழில் அமைச்சர் திரு. இராஜாராம் அவர்கள் கையெழுத்து இடுகிறார்: பிறகு அடுத்த மாதம் 28.9.1986-ல் முதல்வருக்காக என்று நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கையெழுத்து இடுகிறார்; அப்போது முதலமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. அமெரிக்காவில் இருக்கிறார். இரண்டாவது முறையாக சிகிச்சைக்காகச் சென்றதாக நினைவு. பிறகு 2 நாளில், இந்தக் கையெழுத்து இடப்பட்ட - 2 நாளில் முதலமைச்சர் 30-9-86-ல் சென்னை திரும்பி விடுகிறார். திரும்பி வந்தவுடன் இந்தக் கோப்பை முதலமைச்சர் பார்க்க விரும்புகிறார் என்று அந்தத் துறையினுடைய செயலாளர் 6-10-1986-ல் எழுதுகிறார். உடனே முதலமைச்சர் அலுவலகத்திற்கு அந்த கோப்பு வருகிறது. செயலாளர் எழுதுகிறார். கோப்பு முதலமைச்சர் அலுவலகத்திற்கு வருகிறது. வந்தவுடன் அது முதலமைச்சருக்கு அனுப்பப் பட்டதா - இல்லை 4½ மாதம்

அலுவலகத்தில் இருக்கிறது. முதலமைச்சருக்குக் காட்டப்பட்டதா? இல்லையா தெரியாது. 4½ மாதம் இருக்கிறது. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு அதிகமாக கேட்ட தொகை 45 லட்சம் ரூபாய்க்கு தரப்பட்டு அவருக்கு அந்த மினி தொழிற்சாலையைத் தந்து விடலாம் என்று முடிவான அந்த பைல், அந்தக் கோப்பு 4½ மாதங்களுக்கு மேலாக முதலமைச்சர் அறையிலே இருக்கிறது. அதை வரவைத்தது முதலமைச்சரின் செயலாளர் பரமசிவம் அவர்கள். ஒப்பந்தப்புள்ளியிலே அவர் எழுதுகிறார். ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு நீண்ட காலம் கடந்துவிட்டபடியால் – ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நீண்ட காலம் கடந்து விட்டதாம். கடந்ததா, கடக்க வைக்கப்பட்டதா? 4½ மாத காலம் வைத்து இருந்தது யார்? இவர்கள் வைத்து விட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நீண்ட காலம் கடந்து விட்டபடியால் இந்தக் கோப்பில் மறு ஒப்பந்தப் புள்ளி பெற்று நடவடிக்கை எடுக்கலாம் என்று செயலாளர் பரமசிவம் எழுதுகிறார். அப்போதும் முதலமைச்சருக்குத் தெரிந்து இருக்க நியாயம் உண்டோ இல்லையோ எனக்குத் தெரியாது. 24-2-87-ல் அந்த கோப்பை திரும்ப அந்தத் துறைக்கு அனுப்புகிறார். அதாவது முதலமைச்சர் அப்படி விரும்புவதாகத் தெரிவித்து செயலாளர் எழுதி அந்தத்துறைக்கு அந்தக் கோப்பினை அந்த பைலை அனுப்புகிறார். மீண்டும் அந்த சிமெண்ட் தொழிற்சாலையை அப்படியே போட்டுவைக்காமல் ஏற்கெனவே கொடுத்தபடி மத்திய அரசின் ஆராய்ச்சி நிறுவனத்திற்குத் திரும்பவும் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டு 28-5-87 அன்று அந்தக் கோப்பு முதலமைச்சரின் ஆணையினைப் பெற அனுமதிக்கப்படுகிறது. மே மாதம் 28ஆம் தேதி அனுப்புகிறது. அந்தக் கோப்பு முதலமைச்சரின் அலுவலகத்திலேயே டிசம்பர் மாதம் வரை, டிசம்பர் மாதம் முடிய இருந்து விட்டு அவருடைய மறைவுக்குப் பிறகு திரும்ப வருகிறது. அதற்குப் பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சியில் அந்தக் கோப்பு பரிசீலனைக்கு வந்தபோது மைய ஆராய்ச்சி நிறுவனம் அந்த சிமின்ட் தொழிற்சாலையை ஏற்று நடத்த இயலாது என்று கூறிவிட்ட காரணத்தால் மீண்டும் டெண்டர் விடப்படுகிறது. அப்படி டெண்டர் விடும்போது 5 பேரிடமிருந்து

ஆபர் வருகிறது. அதிலே மிக அதிகமாகக் கிடைத்தது 34 லட்சம் ரூபாய் அதிக டெண்டர். முதலிலே கேட்டது 45 லட்சம் ரூபாய். அதற்கு தரப்படவில்லை. இப்போது அதிகமான டெண்டர் 34 லட்சம் ரூபாய்க்கு ஹைதராபாத்தைச் சேர்ந்த பயோனியர் இஞ்ஜினியரிங் சிண்டிகேட் நிறுவனம் 30-12-88-ல் 34 லட்சம் ரூபாய்க்கு அதை வாங்கிக் கொள்கிறது. 45 லட்சம் ரூபாய்க்கு கொடுக்க மறுத்து காலம் தாழ்த்தி கோப்புகள் பந்தாடப்பட்டு அதிலே ஆணையே பிறப்பிக்காமல் இருந்ததன் விளைவாக இந்தத் தொழிற்சாலையை விற்றதிலே 11 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. ஏன்? என்ன காரணம்? எந்தக் காரணமும் இல்லை. முதலில் 45 லட்சம் ரூபாய்க்குக் கேட்டவர் நம்முடைய பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்த நண்பர் பொங்கலூர் பழனிச்சாமி, திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சேர்ந்தவர். இந்த ஒரே ஒரு காரணம்தான். இந்த ஒரு காரணத்திற்காக 11 லட்சம் ரூபாயை இந்த அரசு இழந்தது. அந்தக் காழ்ப்புணர்வோடு முதலமைச்சர் அவர்களுடைய செயலாளர் செயல்பட்டு இருக்கிறார். முதலமைச்சருக்கே தெரியாமல்; இதைத் தான் முன்பு, திருநாவுக்கரசு அவர்கள் கேட்டார்கள், வந்தவுடனே இப்படி அதிகாரிகளையெல்லாம் மாற்றி விட்டீர்களே என்று. இப்படி முதலமைச்சரைக் காட்டிக் கொடுத்த அதிகாரியை நான் மாற்றாமல் இருக்க முடியுமா என்று இப்போது நான் நண்பர் திருநாவுக்கரசு அவர்களைக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) போகட்டும், என்ன செய்யப் போகிறோம். நடந்தவைகளைச் சொல்லிவிட்டோம். என்ன நடக்கப்போகிறது என்பவைகளை அறிவிக்க வேண்டாமா அந்தக் கட்டத்திற்கு வருகிறேன்.

236 கோடி ரூபாய்க்கான தொழிற்சாலைகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டு முடிவு அடையாமல் அல்லது அரைகுறை நிலையிலே இருக்கிற தொழிற்சாலைகளைப்பற்றிய விவரங்களை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

'டிட்கோ' நிறுவனத்திற்குக் கிடைத்த உரிமங்களை அடிப்படையாக வைத்து கடந்த காலத்திலே பல்வேறு தொழில் வளர்ச்சிக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில்

சில தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை நடைமுறைப்படுத்துகிற முறையில் வேகமும் விறுவிறுப்பும் இல்லை என்று உணர்ந்து இந்த அரசு குறிப்பிட்ட காலத்தில் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

முதலாவதாக, மத்திய அரசும் மாநில அரசும் முதல் முறை யாக கூட்டு முயற்சியில், ஜெல்லி ஃபீல்ட் கேபிள்ஸ் தொழிற்சாலை - தொலைபேசிக் கம்பி மற்றும் வடம் மற்றும் தொலைபேசிக்கு வேண்டிய சில உபகரணங்களை உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலையை 22 கோடி ரூபாய் மூல தனத்திலே வடஆற்காடு மாவட்டத்திலேயுள்ள அரக்கோணத்தில் நிறுவ உள்ளது. இவற்றுக்குத் தேவையான நிலத்தை மாநில அரசு இந்தத் தொழில் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. மொத்த மூலதனத்தில், மாநில அரசு 25 சதவீதத்தையும் மத்திய அரசு 26 சதவீதத்தையும் கொடுத்து புதிய தொழில் நிறுவனத்தை நிறுவுகிறது. இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. விரைவாக இதை முடிப்பதற்கு அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

(2) இத்தாலி நாட்டின் தொழில் நுணுக்கத்தைக்கொண்டு: பெட்ரோ-கெமிக்கல்ஸ் மற்றும் பிளாஸ்டிக் தொழிற்சாலை.

'டிட்கோ' நிறுவனமும் யூ-பி பெட்ரோவும் சேர்ந்து கூட்டுத் துறையில் மணலியில் 71 கோடி ரூபாய் மூலதனத்தில் பெட்ரோ-கெமிக்கல்ஸ் தொழிற்சாலையை நிறுவி வேலைகள் நடந்து வருகின்றன.

(3) 'டைனாவிஷன்' என்ற நிறுவனம் கழகம் ஆட்சியில் இருக்கும்போது 1972-ல் ஆரம்பிக்கப்பட்டது. இது தொலைக்காட்சிப் பெட்டிகளை 1975-ல் உற்பத்தி செய்ய ஆரம்பித்தது. அதற்குப் பிறகு இந்நிறுவனம் விரிவாக்கப் படாமலே இருந்தது. எந்தவிதமான நவீன முயற்சிகளையும் மேற் கொள்ளாமலே இருந்தது. ஆகவே தொலைக்காட்சிப் பெட்டிகள் உற்பத்தியில் சில நவீன சாதனங்களையும் முறைகளையும் கையாளும்படி 'டிட்கோ' நிறுவனம் அவர்களுக்கு ஆலோசனை கூறியது. இந்த நிறுவனம் அமெரிக்காவிலேயுள்ள தொழில்

நுணுக்கத்தைக் கொண்டு கும்மிடிப்பூண்டிக்கு அருகில் 40 கோடி ரூபாய் மூலதனத்தில் 'டிட்கோ' நிறுவனத்தோடு கூட்டு சேர்த்து கூட்டுத்துறையில் 'டையனோ லாம்ப்ஸ்' என்ற மின் விளக்குகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுகிறது. இதற்கு அரசு தரவேண்டிய மூலதனத்தொகையை இப்போது தந்துள்ளது. இந்தத் தொழிற்சாலை மின்சார விளக்கு உற்பத்தியில் ஒரு நவீன முறையைக் கையாளக் கூடிய தொழிற்சாலை என்று கூறலாம். இந்த மின் விளக்குக்கு மின்சாரத் தேவை குறைவதோடு விளக்குகளும் சற்று அதிகமான ஒளி தரும்.

நான்காவதாக, ஸ்பெயின் நாட்டு தொழில் நுண்ணறிவைக் கொண்டு 'மார்ட்டர் பிளாஸ்' தயாரிக்கும் தொழிற்சாலையை கும்மிடிபூண்டிக்கு அருகில் 4½ கோடி ரூபாய் மூலதனத்தில் 'டிட்கோ' நிறுவனமும் ஒரு தனியார் நிறுவனமும் சேர்ந்து கூட்டுத் துறையில் நிறுவும்.

பலமாடிக் கட்டிடங்கள் பெருகி வரும் இந்நாளில் மழை மற்றும் புயல் காரணமாக கட்டிடங்களில் நீர் தேங்கி கட்டிடங் களைச் சேதப்படுத்தாமல் அம்மாதிரிக் கட்டிடங்களின் மேல் தளத்திலே நீர்க் கசிவு ஏற்படாதவாறு அவற்றைத் தடுக்க 'மார்ட்டர் பிளாஸ்' என்ற ஒருவிதப் பொருளை உபயோகிக்கும் முறை வெளிநாடுகளிலே இப்போது இருந்து வருகிறது. அத்தகைய பொருளைத் தயாரிக்கும் தொழில் நுண்ணறிவை ஸ்பெயின் நாட்டிலிருந்து பெற்று இப்பொருளைத் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை கும்மிடிப் பூண்டிக்கு அருகிலே 4½ கோடி ரூபாய் மூலதனத்திலே 'டிட்கோ' நிறுவனமும் தனியார் நிறுவனமும் சேர்ந்து கூட்டுத் துறையிலே ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. விரைவிலே இத் தொழிற் சாலை நிறுவப்பட்டு உற்பத்தியைத் தொடங்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

(5) ஃபிரென்ச் நாட்டுத் தொழில் நுண்ணறிவைக் கொண்டு தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒசூரில் 54 கோடி ரூபாய் மூலதனத்தில் நிறுவப்பட்டுள்ள 'டைட்டான்' கடிகாரத் தொழிற்சாலை.

'டிட்கோ' நிறுவனமும் 'டாட்டா' நிறுவனமும் இணைந்து கூட்டுத் துறையில் கடிகாரம் தயாரிக்கும் தொழிற்சாலை.

இந்தியாவின் மொத்தத் தேவையில் 52 சதவீதம் கடிகாரங்களை இத்தொழிற்சாலை பூர்த்தி செய்கிறது. இத்தொழிற்சாலை தயாரிக்கும் 'குவார்ட்ஸ்' கடிகாரங்கள்தான் இந்தியாவிலேயே அதிகமாக விற்பனையாகின்றன. இத்தொழில் நிறுவனம் கடிகாரங்களுக்குத் தேவையான 'கேஸ்'-களை, கூடுகளை, உரிமம் பெற்று வெளிநாடுகளிலேயிருந்து இறக்குமதி செய்து வந்தது. இப்போது அந்தக் 'கேஸ்'-களையும் இங்கேயே தயாரிப்பதற்கு அனுமதியைப் பெற்றிருப்பதால் இந்த ஆண்டு 30 கோடி ரூபாய் மூலதனத்தில் இந்த 'கேஸ்' தயாரிக்கும் தொழிற்சாலை பூர்த்தி செய்யப்பட்டு உற்பத்தியைத் தொடங்கும்.

(6) சோயா பீன்ஸ் எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை. சோயா பீன்ஸ் என்ற 'புரதச் சத்து' நிறைந்த விதைகளைப் பயிர் செய்து அதிலிருந்து சோயா எண்ணெய் தயாரிக்கிற தொழிற்சாலையை கூட்டுத் துறை 'டிட்கோ'-வும் 'சக்தி நிறுவனமும்' இணைந்து 27 கோடி ரூபாய் மூலதனத்திலே பொள்ளாச்சிக்கு அருகில் நிறுவி உள்ளன. ஆண்டு ஒன்றுக்கு இதற்குத் தேவையான 90 ஆயிரம் டன் சோயா விதைகள் இந்த மாநிலத்திலே உற்பத்தி செய்யப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு அந்த இலக்கினை நோக்கி இத்தொழிற்சாலை முன்னேறிக்கொண்டிருக்கிறது.

(7) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகத்தில் 17 கோடி ரூபாய் மூலதனத்தில் 'ரெலையன்ஸ் செராமிக்ஸ்' தொழிற்சாலை 'டிட்கோ' நிறுவனமும் 'லைட் ரூபிங்' என்ற நிறுவனமும் சேர்ந்து கூட்டுத் துறையில் 17 கோடி ரூபாய் மூலதனத்தில் மெருகூட்டப்பட்ட தரை மற்றும் சுவர் ஓடுகள் தயாரிக்கும் ரெலையன்ஸ் சிராமிக்ஸ் தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது.

(8) வடாற்காடு மாவட்டத்தில் வேலூரிலிருந்து வாணியம் பாடிக்குச் செல்லுகின்ற வழியில் தோல் பதனிடும் தொழிற்சாலை, தோல் பொருள்களைப் பதனிட்டு அவற்றிலிருந்து பல்வகையான பொருள்களைச் செய்வதற்காக கூட்டுத் துறையில் 1.6 கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு தொழிற்சாலை தொடங்கப்பட்டு, இப்போது

பூர்த்தியாகின்ற நிலையில் உள்ளது. இந்தத் தொழிற்சாலை தன் உற்பத்தியை இந்த ஆண்டே தொடங்க அரசு வழிவகைகளைச் செய்யும்.

இந்த 8 தொழிற்சாலைகள் மட்டுமல்லாமல் ஏற்கெனவே 'டிட்கோ' நிறுவனம் கூட்டுத்துறையில் எடுத்துக்கொண்ட இரண்டு தொழிற்சாலைகளினுடைய உற்பத்தித் திறனைப் பெருக்கவும் அந்தத் தொழில் நிறுவனங்களுடைய உற்பத்தி சதவீதத்தை மாற்றவும் அரசு முடிவு செய்துள்ளது.

(9) தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூரில் 19 கோடி ரூபாய் மூலதனத்தில் செயற்கை இனிப்பு தயாரிக்கும் தொழிற்சாலை கல்கத்தாவைச் சேர்ந்த 'உஸ்தாதே' என்ற நிறுவனத்தோடு டிட்கோ நிறுவனமும் சேர்ந்து கூட்டுத் துறையில் நிறுவி இருக்கும் 'பையோ-டெக்' என்ற நிறுவனமும் மரவள்ளிக் கிழங்கிலிருந்து கிடைக்கும் ஸ்டார்ச்சை அடிப்படையாகக் கொண்டு செயற்கை இனிப்புப் பொருள் தயாரிக்கும் தொழிற் சாலை இது. இது ஒரு புது முயற்சி.

(10) ஓசூருக்குப் பக்கத்தில் தேன்கனிக்கோட்டையில் 6.14 கோடி ரூபாய் முதலீட்டில் கூட்டுத் துறையில் நிறுவப்பட்ட சங்கம் அலுமினியத் தொழிற்சாலை. இப்போது இதன் மூலதனம் 10.35 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதன் உற்பத்தியும் 4,000 மெட்ரிக் டன்னிலிருந்து 7,000 மெட்ரிக் டன்னாக உயர்த்தப் பட்டுள்ளது. அலுமினியம் தகடுகள், பட்டாடைகள் ஆகியவற்றை இது உற்பத்தி செய்து வருகிறது. இந்த உற்பத்தியையும் துரிதப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய 10 தொழில் நிறுவனங்களுக்கும் உரிய மொத்த மூலதனம் 236.8 கோடி ரூபாய் ஆகும்.

அடுத்து, மத்திய அரசால் நிறுவப்பட்ட எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தன்னுடைய பணிகளை இப்போது செய்து வருகின்றது. சுமார் ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் நாப்தா கிராக்கர் திட்டத்தை நிறைவேற்ற ஆர்.ஜி.பி. என்டர்பிரைஸ் நிறுவனம் முயற்சிகளை எடுத்து வருகிறது. அதற்கு வேண்டிய நாப்தா பெருமளவில் இந்தியாவில் கிடைக்காத காரணத்தால் நமக்குத் தேவையான முழு அளவையும் வெளிநாட்டிலிருந்து

இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. அந்த இறக்குமதியைக் கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, நூறு சதவீதம் ஏற்றுமதி சார்புடையதாக அமைக்க வேண்டுமென்பது இந்த நிறுவனத்தின் செயல்பாட்டு திட்டங்கள். அதற்கான பேச்சுவார்த்தைகளை அந்த நிறுவனம் தமிழக அரசோடு அண்மையிலே நடத்தி முடித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). அதற்கு வேண்டிய அனுமதியை மத்திய அரசு கொடுத்தவுடன் இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் நிறுவத் தேவையான வழிவகைகளை நம்முடைய அரசு செய்துகொடுக்கும்.

ஏனென்றால் இத்தகைய பெரும் தொழில், அதுவும் பெட்ரோ கெமிக்கல் தொழில் அமைவதால் அதனைச் சார்ந்த பல்வேறு தொழில்கள் வளர வாய்ப்பு உள்ளது. இதனால் மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கும், வேலை வாய்ப்புக்கும் வழிவகுக்கும் என்பதால் அரசு இதிலே முழுக் கவனம் செலுத்தி வருகின்றது.

அடுத்து தொழில் மையங்கள், ஏதோ நிதிநிலை அறிக்கையிலே சொன்னீர்கள், ஒன்றையும் காணோமே என்று நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் மெத்த வருத்தப்பட்டார்கள். மத்திய அரசு அண்மையிலே அறிவித்துள்ள தொழில் மையங்கள் அமைத்திடும் பொறுப்பு சிப்காட் நிறுவனத்திடத்திலே தரப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு 3 இடங்கள் மைய அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் மையங்களுடைய நோக்கம் என்னவென்றால் பிற்பட்ட பகுதிகளிலே தொழில் வளம், அதைப் போல முன்னேற்றத்தை ஊக்குவிப்பது ஆகியவைகளாகும். அதற்கு அடிப்படையாக இருப்பது, ஒரு பகுதியில் மலிந்திருக்கும் வறுமை, வேலைவாய்ப்பு இல்லாமை, குறைந்த வசதியுள்ள வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தத் தொழில் பேட்டைகளை அமைக்க முடியும் என்ற நிலை இருக்கிறது.

ஏற்கெனவே ஹோசூர், இராணிப்பேட்டை, மானாமதுரை போன்ற இடங்களில் இந்தத் தொழில் பேட்டைகள் இருந்த போதிலும் கூட, மத்திய அரசு நீங்கள் 6 இடங்களை

எங்களுக்கு எழுதுங்கள்; அதில் நாங்கள் 3 இடங்களைத் தேர்வு செய்து அனுப்புகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கூட கேட்டார்கள், 25 கோடி ரூபாயை வைத்துக் கொண்டு 3 இடமாவது 6 இடமாவது? ஒரு இடத்திற்கு 30 கோடி ரூபாய் தேவை என்று கேட்டார்கள். கேள்வி சரியானதுதான். ஆனால் மைய அரசு அதற்குரிய தொகையைத் தருகின்ற காரணத்தால் நம்முடைய 25 கோடி ரூபாய் அதற்காகச் செலவழிக்கப்படுகிற தொகை அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இருந்தாலும் கூட 6 இடங்கள் குறித்து நாம் மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்கிறோம். ஒன்று மயிலாடுதுறை, தரங்கம்பாடிக்கு அருகே, பூம்புகாருக்கு அருகே உள்ள இடம். பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் அதற்கடுத்த புறநகர் பகுதியிலே உள்ள இடம்; திருநெல்வேலியிலே புறநகர் பகுதியிலே உள்ள இடம்; மதுரை மாவட்டத்தில் திருமங்கலத்திற்கும், விருதுநகருக்கும் இடைப்பட்ட பகுதியில்; திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டத்திற்கும், அரியலூருக்கும் அருகில்; சேலம் மாவட்டத்தில் ஓமலூர்; ஒரு மையம் ஏற்படுவதற்கு 25 கோடி முதல் 30 கோடி ரூபாய் வரையில் செலவாகும். இந்த 6 மையங்களையும் ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துவோம். அவர்கள் மூன்றுதான் தர முடியும் என்று சொல்லிவிடுவார்களேயானால் அதை ஏற்றுக் கொண்டு மீதம் உள்ள 3 மையங்களை அமைக்கிற முயற்சியிலே மாநில அரசு ஈடுபடும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

நான் முதலிலேயே குறிப்பிட்டது போல் தமிழ்நாட்டில் பொதுவாகக் காவிரி தீரத்தில், தஞ்சை, தென்னாற்காடு பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு கிடைக்கிற சாத்தியக் கூறுகள் மிக அதிகமாகியுள்ளது. இதை மூலப் பொருளாகக் கொண்டு ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் டன் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவ ஒரு செயல் திட்டத்தை உருவாக்கி மத்திய அரசின் பரிசீலனைக்காக அனுப்பி இருக்கிறோம். இந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நன்னிலத்திற்கு அருகே பனங்குடி என்ற இடத்தில் அனேகமாக நிறுவப்படக் கூடும். இந்த எண்ணெய்

சுத்திகரிப்பு ஆலையால் தஞ்சை, தென்னாற்காடு மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு ஒரு உகந்த சூழ்நிலை ஏற்படும்.

அடுத்து சர்க்கரை ஆலைத் தொழில் பற்றி இங்கே பலரும் பேசி இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தற்போதுள்ள சர்க்கரை ஆலைகளின் மொத்த எண்ணிக்கை 27. கூட்டுறவுத் துறையிலே உள்ள ஆலைகள் 12. பொதுத் துறையிலே உள்ள ஆலைகள் 3. தனியார் துறையிலே உள்ள ஆலைகள் 12. கடந்த ஆண்டு மத்திய அரசு அனுமதி வழங்கிய புதிய ஆலைகள் 9. அவற்றில் கூட்டுறவுத் துறை ஆலைகள் 4. தனியார் துறை ஆலைகள் 5. தனியார் துறை எல்லாம் ஆரம்பித்து விட்டார்கள். கூட்டுறவுத் துறையிலேதான் இன்னும் ஆரம்பிக்கவில்லை என்று திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். தனியார் துறையிலே கூட தஞ்சை மாவட்டத்தில் வழங்கப்பட்ட ஆலையைப் பொறுத்தவரையில் இன்னும் எந்தவிதமான ஆரம்ப வேலைகளும் நடக்கவில்லை என்பது எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும் என்று நான் நம்புகிறேன். கூட்டுறவுத் துறை ஆலைகள் செய்யாறு, சிதம்பரம் ஆகிய இடங்களில் வேலைகளைத் தொடங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவிட்டன. செய்யாறு கூட்டுறவு ஆலை வரும்போது, போளூருக்கும் ஆலை வேண்டும் என்ற குரலை அந்த வட்டாரத்தில் உள்ளவர்கள் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அத்தனை பேருடைய குரல் எதிரொலியாக நம்முடைய திரு. லத்தீப் அவர்கள் இங்கே போளூர் சர்க்கரை ஆலை வேண்டும் என்று கேட்டார்கள். நல்ல வேளையாக சேப்பாக்கத்திற்குக் கேட்காமல் அவர்கள் போளூருக்கு வேண்டும் என்று கேட்டவரையில் திருப்தி. இந்த ஆண்டு உள்ள நிதி நிலைமையிலே அது இயலாது. எதிர்காலத்தில் போளூருக்கும் சர்க்கரை ஆலை வரும் என்ற தித்திப்பான செய்தியை நான் திரு. லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலேயும், புதுக்கோட்டை மாவட்டத் திலேயும் இரண்டு இடங்களில் சர்க்கரை ஆலைகள் துவங்கும் வேலைகள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டிருக்கின்றன.

தர்மபுரியில் எங்கே துவக்குவது என்பதில் இரண்டு எம்.எல்.ஏ.க்களுக்கு இடையே பெரிய போட்டா போட்டி நடைபெற்றது. எனவே அந்த இரண்டு எம்.எல்.ஏ.க்களுக்கும் நடு இடமாகப் பார்த்து அரூர் தாலுக்காவில் கோபாலபுரம் என்ற ஊரில் - ரொம்ப விசேஷமான இடம் என்று கருதி அந்த இடத்தில் - சர்க்கரை ஆலை அமைக்கப்படும். அந்தக் கோபால புரம் அரூர் தொகுதியிலே உள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ. தொகுதியிலே உள்ளது. ஆனால் அதற்கான கரும்பு விவசாயிகள் எல்லாம் மொரப்பூர் தொகுதியில் அதாவது தி.மு.க. உறுப்பினருடைய தொகுதியிலே உள்ளனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியிலே நிறுவுவதாக இருக்கிறது. பார்க்கலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையிலேயும், கூட்டுறவுத் துறையிலேயும் 4 தொழிற்சாலைகளுக்கு உரிமம் பெற்று இரண்டு ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அதில் ஒன்றின் இடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிவிட்டார்கள். புதுக் கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியில் நாகுடி என்ற இடத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டும் என்று இடம் எல்லாம் தேர்வு செய்து முடிந்து விட்டது. ஆனால் இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் பார்த்தால் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் கவலையாக இருக்கிறது. நாகுடியிலே ஆரம்பித்தால் பக்கத்திலே இருக்கிற பட்டுக்கோட்டை, பேராவூரணியிலே இருந்து கரும்பு வருவதற்கு வசதியாக இருக்கும். அந்தப் பகுதி சி.எம்.பி. ஏரியா. அறந்தாங்கியில் ஒரு பகுதியில் காவிரித் தண்ணீர் கிடைக்கிற வசதி இருக்கிறது. அதுபோல் பேராவூரணி, பட்டுக்கோட்டை பகுதிகளிலும் கிடைக்கின்ற காரணத்தால் அதுதான் பொருத்தமான இடம். எனவே அதை மாற்றாமல் அங்கேயே அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். அதனை அரசியல் ரீதியாக இப்போது வேறு பகுதிக்கு மாற்ற முயற்சி நடக்கிறது. அதனை உறுதிபடுத்துகிற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பார்க்கலாம் என்று சொல்கிறபோது எங்கே அந்தத் தொகுதியை விட்டுப் போய்

விடுமோ என்று கவலையாக இருக்கிறது. லைசன்ஸ் நாகுடிக்குத் தான் கிடைத்திருக்கிறது. எனவே அங்கேயே ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, என்றைக்கும் எனக்கு குறுகிய நோக்கம் இருந்ததில்லை என்பது திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பிரச்சினை என்னவென்றால், அங்கே தண்ணீர் வசதி இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். இருந்தாலும் நானே நேரில் வந்து அந்த இடத்தைப் பார்த்து அந்த ஆலை அமைக்க முடியுமா என்று பார்க்கிறேன். எம்.எல்.ஏ. என்ற முறையில் அவர்கள் கூட வருவார்களோ, அனுமதி கிடைக்குமோ இல்லையோ என்பது எனக்குத் தெரியாது. (சிரிப்பு). பாவமாக இருக்கிறது எனக்கு. சர்க்கரை ஆலைகளைக் குறித்த இந்த ஆட்சியினுடைய கொள்கை. ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கு குறிப்பிட்டது, ரொம்பப் பேர் சாப்பிடாமல் இருக்கின்றார்கள் என்றுதான். (சிரிப்பு).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சர்க்கரை ஆலைகளைக் குறித்த இந்த ஆட்சியினுடைய கொள்கை, பொதுத் துறையிலே, கூட்டுறவுத் துறையிலே அமைந்திடவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கையாக இருந்து வருகிறது. எனவே எல்லா உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் காட்டியிருப்பதைப் போல, கொள்கை விளக்கக் குறிப்பிலே எடுத்துச் சொல்லியிருப்பதைப் போல, வருங்காலத்தில் நிறுவப்படும் சர்க்கரை ஆலைகள் எல்லாம் கூட்டுறவுத் துறையிலேதான் அமையும் என்பதை இங்கே நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகளுடைய மிகப் பெரிய பிரச்சினையாக இருப்பது மாசுக்கட்டுப்பாடு. அதாவது, பொல்லூஷன் கண்ட்ரோல். அதைப் பற்றிக் கூட சொன்னார்கள். தோல் தொழிற்சாலை

பற்றிக்கூட சொன்னார்கள். அந்த மாசுகளையும் அதுபோல கழிவு நீரால் ஏற்படக் கூடிய உபாதைகளையும் அகற்ற வேண்டும் என்று பல லட்சம் ரூபாய்கள் செலவிலே அரசு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. வெகு விரைவிலே இந்த ஆண்டே கூட, அந்தத் திட்டங்கள் மிக முனைப்பாக செயல்படுத்தப்படும் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவைக்கு நான் சொல்லியாக வேண்டும். வட சென்னையில் அனல் மின் நிலையம் ஒன்று அமைக்கின்ற திட்டத்தை ஏற்கெனவே இருந்த அரசு தொடங்கியது. அந்தத் திட்டத்தின்படி முதல் கட்டத்தில் 210 மெகாவாட் கொண்ட 3 அலகுகள், இரண்டாவது கட்டத்தில் 210 மெகாவாட் கொண்ட 2 அலகுகள், மூன்றாவது கட்டத்தில் 500 மெகாவாட் கொண்ட 2 அலகுகள், ஆகமொத்தம் 2,050 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்கத் திட்டங்கள் இடப்பட்டுள்ளன. முதல் கட்ட மின் நிலையத் திட்டத்திற்கு மைய மின் அதிகார மன்றம் மார்ச் 1984-லிலும், மைய திட்டக்குழு ஏப்ரல் 1987-லும் அனுமதி தந்துவிட்டன. இதற்கு 547 கோடி ரூபாய் செலவாகும் என்று 1984ஆம் ஆண்டிலே கணக்கிடப்பட்டது. இப்போது திருத்திய மதிப்பீடு இவ்வளவு நாள் ஆன காரணத்தினாலே 721 கோடி ரூபாய் ஆகிறது. தாமதத்தால் ஏற்பட்ட திருத்திய மதிப்பீடு இது. 541 கோடி ரூபாய் என்பது 721 கோடி ரூபாயாக தாமதித்தால், திருத்திய மதிப்பீடாக ஆகியிருக்கிறது. இத் திட்டத்தின் முதல் இரண்டு ஆலைகளுக்கு 150 மில்லியன் டாலர் நிதி உதவி அளிக்க, அதாவது இந்திய நாணயத்தின்படி 225 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்க ஆசிய வளர்ச்சி வங்கி முன் வந்துள்ளது. அவர்கள் முன்வந்து விட்ட காரணத்தினாலே நாம் அந்தக் காலத்திலிருந்து இப்போதும் வட்டி செலுத்திக் கொண்டு இருக்கிறோம். அவர்கள் முன்வந்த காலத்திலிருந்து வட்டி செலுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை மாநில அரசுக்கு ஏற்பட்டது. இந்தத் திட்டத்திற்கு செங்கை-அண்ணா மாவட்டத்தில் எண்ணூர், புழுதிவாக்கம் கிராமங்களில் 2171 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி 1986-ல் தொடங்கப்பட்டது. ஆனால் வி.ஜி. பன்னீர்தாஸ் நிறுவனத்திற்குச்

சொந்தமான சுமார் ஆயிரம் ஏக்கர் நிலமும், கிருஸ்தவ நகர் சங்கத்துக்குச் சொந்தமான 117 ஏக்கர் நிலமும் அங்கே இருக்கிறது. அவர்கள் வட்டாரத்திலே அந்த நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுவதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தார்கள். அந்த வழக்கு தள்ளப் பட்டது. அவர்கள் உச்ச நீதிமன்றம் சென்றார்கள். கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக அந்த வழக்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எந்த முடிவும் ஏற்படவில்லை. இப்போது இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் அவர்களுடன் கலந்து பேசப்பட்டது. அவர்கள் ஒரேயடியாக மறுத்துவிட்டார்கள். அங்கே 'ஒண்டர் லேண்ட்' ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுடைய அண்ணாவினுடைய கனவு, ஒண்டர் லேண்ட் ஏற்படுத்துவது. ஆகவே தரமுடியாது என்று சொன்னார்கள். நான் சொன்னேன். உங்களுடைய அண்ணன் கனவு 'ஒண்டர் லேண்ட்'. எங்களுடைய அண்ணாவின் கனவு என்ன தெரியுமா? தமிழ்நாட்டிலுள்ள மக்களை வாழவைப்பது. அதற்கு மின்சாரம் தேவை என்று நான், 'வலியுறுத்தி, வலியுறுத்தி, வலியுறுத்தி' நம்முடைய குமரி அனந்தன், நமது இலக்கியச் செல்வர், அடிக்கடி சொல்வார்கள், மூன்று முறைகள் சொல்வார்கள். ஒவ்வொரு 'வலியுறுத்தி' என்பதிலும் சில பொருள்கள் அடங்கியிருக்கிறது. அதை வெளியிலே சொல்ல விரும்பவில்லை. எனவே 'வலியுறுத்தி, வலியுறுத்தி, வலியுறுத்திக்' கேட்டுக்கொண்டதன் பேரில், கேட்டுக்கொண்டதன் பேரில், கேட்டுக்கொண்டதன் பேரில் (சிரிப்பு) இப்போது அவர்கள் உச்ச நீதி மன்றத்திலேயிருந்து வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டு விட்டார்கள். எனவே இந்த இடத்திலே ஜூன் முதல் வாரத்திலேயே இந்தத் திட்டப் பணிகள் தொடங்கும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு அறிவிப்புகளை உங்களுக்கு மகிழ்ச்சி ஊட்டக்கூடியவைகளை எடுத்துச் சொல்லி, இங்கு எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் யாரையும் புண்படுத்துவதற்காகச் சொல்லப்பட்டவைகள் அல்ல, நடந்தவைகள் நடந்தவைகளாக இருந்தாலும் கூட, நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கவேண்டும் என்ற முறையில், தமிழ்நாடு தொழில் வளம் கொழிக்கின்ற பூமியாக இருக்கவேண்டுமென்ற

முறையில், எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை என்று கேட்டுக் கொண்டு, தொழிலாளர்களுடைய அரசாக இருக்கின்ற காரணத்தினால், இந்த அரசு தொழிலதிபர்களையும் அழைத்துப் பேசி தொழில் அமைதி ஏற்படுகின்ற வகையிலே எல்லா வகையான சலுகைகளை அவர்களுக்கு அளிக்கும் என்று எடுத்துக் காட்டவிரும்புகிறேன். கவர்னர் அளித்த சலுகைகளும் சட்ட வடிவமாகும் என்பதை எடுத்துச் சொல்லி, தொழிலுக்கு எல்லா வகையிலும் ஊக்கமளித்திருக்கிறது, அந்த வகையிலே நீங்களும் ஊக்கமளிக்க வேண்டும், ஆக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, தந்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று பணிவன்போடு கூறுகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நேரம் இப்போதே 3 மணியாகிறது. விரைவிலே முடித்துவிடுகிறேன். ஒரு சின்னப்பிரச்சினை. பிளாஸ்டிக் பைகள் தயாரிக்கிற தொழிற்சாலைகள் தமிழ் நாட்டிலே 80, 85 இருக்கின்றன. ஜூட் லாபி காரணமாக, டெல்லியிலே ஒரு ஆர்டர் போட்டு, எல்லாம் சணல் பைகளிலே போட வேண்டுமென்று உத்தரவு போட்டிருக் கிறார்கள். அதனால் 60 தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக் கின்றன. அதிலே 50,000 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். சிறுசிறு தொழிற்சாலைகள் அவை. அறந்தாங்கியில் மட்டும் 10 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதுதான் பிரச்சினை. மற்ற இடங்களிலும் இருக்கின்றன. அதிலே 60 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கூட அந்த அசோசியேஷனைச் சேர்ந்தவர்கள் வந்து பார்த்து, பிரச்சினைகளைச் சொல்லி இருக்கிறார்கள். சிப்காட், டிக் நிறுவனங்களிடமிருந்து லோன் வாங்கியிருக்கிறார்கள். அவை மூடி இருக்கிற காரணத்தாலே, சிறுசிறு தொழிற்சாலைகள் நஷ்டத்திலே இருக்கின்றன. தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். எனவே ஒரு கமிட்டி போட்டு, விசாரித்து அவர்களுக்கு எப்படிப் பரிகாரம் காணலாமென்று பார்க்கலாம்.

இரண்டாவது, இங்கேயுள்ள சிமென்ட் பேக்டரி, சுகர் பேக்டரி எல்லாம் வேறு மாநிலங்களிலிருந்து வாங்காமல், தமிழ் நாட்டிலே இருக்கிற யூனிட்டுகளுக்கு பிரையாரிட்டி கொடுத்து

வாங்க வேண்டுமென்று ஆர்டர் போட்டால் அந்தச் சிறு தொழிலதிபர்கள் காப்பாற்றப்படுவார்கள். தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும். இதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். அதற்கு ஒரு கமிட்டி போட்டு விசாரிக்கலாம்.

அடுத்து, முதலமைச்சர் அவர்கள் சொன்ன செய்தி பத்திரிகையில் வந்தால், ஒரு சலுகையை நானும், திரு. கே. கே. எஸ். எஸ். ஆரும் கேட்டோமென்று தவறாகச் செய்தி வந்து விடக்கூடாது. அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். எம். எல். ஏ-க்களைப் பாராட்டுகிற விஷயத்திலே, 13 வருடங்கள் என்று முடிவெடுக்கிறபோது, 3 தடவை தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலே போதும். அவர்களுக்கு அந்தப் பாராட்டு கிடைத்து விடுகிறது. அவர்கள் அதற்குத் தகுதி பெற்று விடுகிறார்கள். நாங்கள் 4 முறை வெற்றி பெற்று வந்தும், அந்த உரிமை, அந்த மூத்த உறுப்பினர்கள் பட்டியலில் வரவில்லையே என்பதற்காகக் கேட்டோம். வரவில்லை என்பது கட்சியினுடைய முடிவு. அப்படிக் கேட்டதற்குக் காரணம் உரிமை - சலுகையில்லை - உரிமை. 4 முறை வெற்றி பெற்ற காரணத்தால் அது உரிமை. அதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டோம். அவ்வளவுதான். முன்னாலே சொன்ன பிரச்சினையில், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கமிட்டி போட்டு விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : முதலிலே எடுத்து வைத்த வேண்டுகோளுக்கு நன்றி. அது கவனிக்கப்படும். கடைசியாகச் சொன்னதற்கு என்னுடைய அனுதாபம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் இங்கே தெரிவித்ததுபோல், புதுக்கோட்டை மாவட்டத்தில் நாகுடியில், நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தொகுதியில் சர்க்கரை ஆலை வைப்பதற்கு நான் மனப்பூர்வமான இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் தவிர்க்க முடியாத காரணங்களால் அந்த நாகுடியில் வைக்க முடியாவிட்டால், அருகில் உள்ள பேராவூரணி நிரம்ப

வசதிகள் படைத்தது. அங்கே வைப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் இதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், நான் அமைச்சராக இல்லாமல் போன பிறகும் கூட, 7 முறை டெல்லிக்குப் போய், அப்போது ஜாயின்ட் டைரக்டராக இருந்த திரு. லட்சுமி ரதனை, முன்னாள் அமைச்சர் என்ற முறையில் தனிப்பட்ட முறையில் பார்த்து அவரிடம் சொல்லிச் சொல்லி, அதிகாரிகளைப் பார்த்து, அமைச்சர்களைப் பார்த்து அனுமதி வாங்கி வந்தேன். தயவு செய்து அங்கே ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல திட்டங்களை இங்கே அறிவித்தார்கள். ஆனால் ஏற்கெனவே சாங்ஷன் செய்யப்பட்டு, மதுரை மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் இன்டஸ்டிரியல் காம்ப்ளக்ஸ் போடவேண்டுமென்று இடமெல்லாம் பார்த்து, கடைசியில் என்ன கொடுமையோ தெரியவில்லை. சார், அதை இல்லை என்று முடித்துவிட்டார்கள், முந்தைய அரசினர். அதை துறையிலிருந்து அறியும்போது, மிகவும் வருத்தமாக இருக்கிறது. செம்பட்டி என்ற இடத்தில் ஆயிரம் ஏக்கர் நிலம் பார்த்தார்கள். அதை ஆரம்பிப்போம் என்று சொன்னார்கள். தயவு செய்து நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் திண்டுக்கல் - அது என்ன மாவட்டம் (குறுக்கீடு) காயிதே மில்லத் திண்டுக்கல் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. நேரம் அப்படி.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அங்கே ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இண்டஸ்டிரியல் காம்ப்ளெக்ஸ் ஆரம்பிக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பரிசளிப்பு விழாக்களில் முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம்

பரிசு என்று உண்டு. யாருக்காவது கொடுக்க முடியாவிட்டால் கொடுக்க வாய்ப்பு இல்லாவிட்டால், ஆறுதல் பரிசு என்று உண்டு. அம்மையார் அவர்களுக்கு ஆறுதல் பரிசு உண்டு.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே : ஆலங்குளம் சிமெண்ட் பேக்டரி தூசியால் விவசாயம் கெடுகிறது. தொழிலிலும் நஷ்டம் ஏற்படுகிறது. அரியலூர் பேக்டரியை மாடர்னி சேஷனுக்கு எடுத்துக்கொள்ளும்போது, ஆலங்குளம் சிமெண்ட் ஆலையும் அதோடு சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கவனிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பாதிக்கும் அளவுக்குக் கடுமையான மின் பற்றாக்குறை இருக்கிறது. எனவே மின் பற்றாக்குறை நீங்க, ஏகாதிபத்திய - முதலாளித்துவ நாடுகளின் தவறான பிரச்சாரத்தைப் புறக்கணித்து, சோவியத் யூனியன் உதவியோடு இந்திய அரசு கூடங்குளத்திலே அமைக்க இருக்கிற அணுமின் நிலையத்திற்கு தமிழக அரசு உதவிகளைப் புரிந்து விரைவில் அது வர துணை புரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மின்சாரத் தட்டுப்பாட்டை நாளைக்கே கூடங்குளம் போக்கும் என்று நண்பர் உறுதி அளித்தால் இன்றிரவே கூடங்குளம் மின்நிலையம் அமைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூட்டுறவு நூற்பாலை ஒன்று பெரியார் மாவட்டம் பவானிசாகர் பகுதியில் துவக்கப்படுவதற்கு உத்தரவிடப்பட்டதாகச் சொல்லப்பட்டு, தொழில்துறை அமைச்சர் மாற்றப்பட்டதால் அதுவும் மாறியதாகச் சொல்லப்பட்டது. பெரியார் மாவட்டம் நிறைய பஞ்சு உற்பத்தியாகிற மாவட்டம். பெருவாரியான விவசாயிகள் - ஆயிரக் கணக்கில் - லட்சக் கணக்கில் உற்பத்தி செய்கிறார்கள். அங்கே உற்பத்தியாகும்

பஞ்சை திருப்பூரிலிருந்து வெளி மாநிலத்தினர்கள்கூட வாங்கிச் செல்கிறார்கள். அது புதுக்கோட்டைக்குப் போனதாகத் தகவல், எனவே எங்கள் பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, எங்கள் மாவட்டத்தின் இரண்டு சர்க்கரை ஆலைகளும் தனியார் துறையில் இயங்குகின்றன. பெரியார் மாவட்டத்தில் அதிகப்படியான கரும்பும் விளைகிறது. எனவே அங்கே கூட்டுறவுத் துறையில் ஒரு ஆலைக்கு அனுமதி வழங்குவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்து, கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலையும் ஒரு நூற்பாலையும் துவங்க வருங்காலத்திலாவது அரசு ஆவண செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அறந்தாங்கியை விட்டுக் கொடுத்தால் அது உங்கள் தொகுதியில் வைக்கப்படும்.

உரை : 4 **நாள் : 18.04.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும், இன்றும் **தொழில் துறை** மானியத்தின் மீது அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும், தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தொகுத்து வழங்கி, தமிழகத்திலே மேலும் தொழில் துறையை எப்படி எல்லாம் வளர்க்க வேண்டும் என்பதற்கான வழிமுறை களை இந்த அரசுக்குக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக உரையாற்றத் தொடங்கிய சுப்பிரமணியன் அவர்களிலிருந்து, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் வரையில் பேசிய அனைவரும் தமிழகத்திலே தொழில் துறை வளர்ச்சிக்குப் பல ஆக்கப் பூர்வமான கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நண்பர் உகம்சந்த் அவர்கள் மாத்திரம் எப்படியாவது ஒரு குறையை இந்த அரசின்மீது சொல்லவேண்டும் என்று சுற்றிசுற்றிப் பார்த்து, அந்த முயற்சியிலேயே கடைசி வரை நின்று தன்னுடைய உரையை அவர் நிறைவு செய்து இருக்கிறார். அவர் இந்த அரசைக் குறைகூற வேண்டும் எப்படியாவது என்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சியை நான் தடுக்கவும் இல்லை, கண்டிக்கவும் இல்லை, மாறாக அதிலும் ஏதாவது இந்த அரசு தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் இருக்குமானால் அதனையும் நான் ஏற்றுக்கொண்டு அதன்படி தொழில் துறையை வளர்ப்பதற்கு இந்த அரசு பாடுபடும், பணியாற்றும் என்ற உறுதியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்தத் தொழில் வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகக் குறைவாக இருக்கிறது என்று நேற்றையதினம்

உரையாற்றிய நண்பர் பூவராகன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இந்த இரண்டு மானியங்களிலே ஒதுக்கப்பட்ட தொகையை மாத்திரம்தான் கணக்கிட்டு குறிப் பிட்டார்கள் மானியக் கோரிக்கை எண். 24 தொழில்கள் என்ற தலைப்பிலே, 6.53 கோடி ரூபாயும், மானியக்கோரிக்கை எண். 51 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பில் 22.24 கோடி ரூபாயை மாத்திரம் கணக்கிட்டு 28 கோடி ரூபாய் தான் என்று வருத்தப்பட்டார்கள். ஆனால் இப்பொழுது விவாதிக்கப்படாத கோரிக்கை எண். 59 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பில் 19 கோடி ரூபாயையும் சேர்த்தால் 47.77 கோடி ரூபாய் ஆகிறது. அது மாத்திரம் அல்ல. அரசு உத்திரவாதத்தோடு வெளிச் சந்தையிலே 4.37 கோடி ரூபாய் கடன் பெறுவதற்கும் வழிவகைகள் செய்யப் பட்டுள்ளன. இதனையும் கூட்டினால் 1990-91ஆம் ஆண்டு மொத்த ஒதுக்கீடு 52.14 கோடி ரூபாய் ஆகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1989-90 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்ட தொகை 44.29 கோடி ரூபாய்க்கு மாறாக இப்போது 52.14 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில அரசு நேரடியாக தொழில்களில் மூலதனத்தைப் போடுவதைவிட மிக அதிக அளவில் தொழில்களை ஊக்குவிப்பதில்தான் அக்கறை காட்டுகிறது என்பதை இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

எனவே, அரசுத் தரப்பிலே வழங்கப்படுகின்ற ஒதுக்கீடு இந்த அளவில் இருந்தாலும்கூட ஏனைய நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள், அரசு தொழில் நிறுவனங்கள் வாயிலாக வழங்கப்படுகின்ற இந்தத் தொகைகளையும், மூலதனத் தொகை களையும் ஈக்குவிட்டி, இவைகளையெல்லாம் கூட்டிப்பார்த்தால் தொழில்களுக்கான ஒதுக்கீடு நம்முடைய மாநிலத்திலே அதிகமாகவே இருக்கிறது என்பதை உணரக்கூடும். இந்த அரசினுடைய தொழில் கொள்கையைப் பற்றி கடந்த ஆண்டு இந்த மானியத்திலே நான் எடுத்துக்கூறியிருக்கிறேன். இன்றைக்கும் அதை நினைவூட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய நண்பர் பொன்னுசாமி அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது, தனியார் தொழிலை எல்லாம் நாம் இன்றைக்கு உருக்குலைக்கிறோம். அவர்களை விரட்டியடிக் கிறோம். தனியார் தொழில் தொடங்கவே அஞ்சுகிறார்கள் என்ற கருத்துப்பட சில செய்திகளை இங்கே எடுத்துச்சொன்னார். அப்போதே நான் அதற்கு மறுப்பு உரைத்திருக்கிறேன் என்றாலும் கூட, இந்த அரசைப் பொறுத்தவரையில் 'ஜாயின்ட் செக்டார்' என்கின்ற அந்த ஒரு நிலையோடு, கடந்த ஆண்டில் 'அசோசியேட் செக்டார்' என்கின்ற இன்னொரு நிலையையும் உருவாக்கி ஜாயின்ட் செக்டாரிலே அரசினுடைய பங்காக 20 விழுக்காடும், அசோசியேட் செக்டாரிலே 11 விழுக்காடும் என்று அப்படிப்பட்ட தொழில்களைத் தனியார் துறையோடு சேர்ந்து கூட்டு முயற்சியாகச் செய்வது என்று அறிவிக்கப்பட்டது. அந்த விழுக்காடுகள் அதிகமாக உள்ள அரசு பங்கீடுகளைக்கூட 'டிஸ்இன்வெஸ்மென்ட்' என்கின்ற முறையிலே உரிய நேரத்தில் பெற்று வேறு புதிய தொழில்களுக்கு அந்தத் தொகையை வழங்குகின்ற திட்டத்தையும் ஏற்கெனவே நாம் அறிவித்திருக்கின்றோம்.

எனவே, 26 விழுக்காடு என்பது அரசின் பங்கு என்று சொன்னால், ஏதோ அரசு என்பது எங்கேயோ இருக்கிறது என்று யாரும் கருதிக்கொள்ளக்கூடாது. அரசின் பங்காக 26 சதவிகிதம் என்பது மக்களின் பங்குதான். 26 சதவிகிதம் அரசின் பங்கு. 25 சதவிகிதம் தனியார் துறையிலே அவர்களுடைய பங்கு. அஃதன்னியில் மீதமுள்ள சதவிகிதம் அத்தனையும் பொது மக்களுடைய ஷேர். அவர்களுடைய பங்குத்தொகைகள். எனவே, பொதுமக்களுடைய பங்குத்தொகை, அரசினுடைய பங்குத்தொகை இந்த இரண்டும் பொதுமக்களுடைய பங்குத்தொகைதான். 'அரசு' என்று நாம் தனித்துக் குறிப்பிட்டுச் சொன்னாலும் கூட, அது மக்களுடைய பங்குத்தொகைதான். அப்படிப்பட்ட மக்களின் பங்குத்தொகை அதிகமாக இருக்கின்ற நிலையில் உரிய பங்குத்தொகைகூட இல்லாமல், அதைவிடக் குறைவான பங்குத் தெகையை வைத்துக்கொண்டு முழு ஆதிக்கத்தையும் ஒரு தொழிலிலே நடத்தவேண்டும் என்று எண்ணுகின்ற தனியார்களை இந்த அரசு நிச்சயமாக சகித்துக் கொள்ளாது. அதனால்தான் கடந்த சில பல ஆண்டுகளாக, ஒரு நிறுவனம் - அவர்கள் குறிப்பிட்ட

அந்த நிறுவனத்தில் தலைவராகவும் அந்தக் குடும்பத்தவர் அதிலே எம்.டி.யாகவும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவருடைய மகன் என்கின்ற அளவிலே ஒரு நிலை ஏற்பட்டபோது, அவர்களுக்கு நாங்கள் எடுத்துக்காட்ட வேண்டிய கடமை எங்களுக்கு உருவானது.

மத்திய அரசு 1976 ஆம் ஆண்டிலேயே ஒரு அறிவிப்பைச் செய்தது. கூட்டுத் துறை நிறுவனங்களில் அரசு சார்பில் தலைவரை நியமிக்கவேண்டும் என்ற கருத்தை மத்திய அரசு 76 ஆம் ஆண்டு வெளியிட்டிருக்கிறது. அந்த அடிப் படையிலேதான் அரசாங்கத்தினுடைய அதிகத் தொகையைப் பயன்படுத்திக்கொண்டு, அரசுக்கு எந்தவிதமான பிரதிநிதித் துவமும் இல்லாத ஒரு நிலைமை இருக்கக்கூடாது என்று நாங்கள் நடவடிக்கைகளை இன்றைக்குத் தொடங்கியிருக்கிறோமே அல்லாமல், ஏதோ ஒரு நிறுவனத்திலே ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினையை வைத்து, எல்லா தனியார் நிறுவனங்களும் அஞ்சத் தேவையில்லை என்பதையும், ஆனால் இதேமுறை கடைப் பிடிக்கப்படுகிற தனியார் நிறுவனம் எதுவாக இருந்தாலும் கூட அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்பதையும், இதுதான் தொழில் துறையிலே அரசாங்கத்தினுடைய திட்டவட்டமான கொள்கை என்பதையும் நான் தெரிவிக்கப் பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இங்கே நேற்றைய தினம் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். ஆட்சிக்கு வந்து 15 மாதம் ஆகிறது. எத்தனை தொழிற்சாலை களை நீங்கள் கண்டீர்கள் என்று எல்லாம் கேட்டார்கள். தொழிற் சாலைகள் என்பது இன்றைக்கு அடிக்கல் நாட்டி நாளையதினம் உற்பத்தியைத் தொடங்குகின்ற அளவிற்கு மாய, மந்திர ஜாலங்களால் அமையக் கூடியவைகள் அல்ல. ஒரு தொழிற் சாலை அமைவது என்றால் அதற்கான ஆய்வுகள், அதற்கான ஏற்பாடுகள், முதலீடுகள் இத்தனையும் நடைபெற்று ஒரு தொழிற்சாலை அமைய வேண்டி இருக்கிறது.

அந்த வகையில் நான் கடந்த ஆண்டு அறிவித்து இருக்கிறேன். இந்த ஆட்சி தோன்றுவதற்கு முன்பு, முன்பு இருந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்டு ஆனால் எந்தவிதமான நட வடிக்கையும் எடுக்காமல் நின்று போன தொழிற்சாலைகளைக்கூட

கடந்தகால ஆட்சி அறிவித்தது என்பதற்காக அவைகளை விட்டு விடாமல் அந்தத் தொழிற்சாலைகளை எல்லாம் தொடங்கி அதற்காக 62.3 கோடி ரூபாய் செலவில் இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தியிருக்கிறது. அதனுடைய விரவங்களைச் சொல்ல வேண்டுமானால் தமிழ்நாடு மக்னீசியம் அண்டு மெரையின் கெமிக்கல்ஸ், வாலிநோக்கத்தில் 9.60 கோடி ரூபாய் செலவில் டிட்கோ மட்டும் ஈடுபட்டு செய்யக்கூடிய தொழிற்சாலை. இந்தத் தொழிற்சாலை உப்புக் கழிவு நீரிலிருந்து மக்னீசியம் உலோகம் தயாரிக்கும் தொழிற்சாலை. இந்த உலோகம் அணுமின் உற்பத்திற்குப் பயன்படக்கூடிய ஒன்று ஆகும். இங்கே உற்பத்தி தொடங்கப்பட்டாகிவிட்டது. இது ஏற்கெனவே இருந்த அரசு அறிவித்தது. ஆனால் எந்த நட வடிக்கையும் எடுக்காமல் உறங்கிக் கிடந்த ஒன்று, இப்போது உற்பத்தியைத் தொடங்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, டைட்டான் வாட்சஸ். ஏற்கெனவே கடிகாரம் செய்கின்ற அந்தத் தொழில் மட்டும் ஓசூரில் தொடங்கியது. அதற்கு கேசஸ் அண்டு பிரிசிலிட்ஸ் என்கின்ற அந்தத் திட்டத்தை ஏறத்தாழ 30 கோடி ரூபாய் செலவில் ஓசூரில் சிப்காட் தொழில் வளாகத்திலே நிறுவப்பட்டு டிட்கோ நிறுவனமும், டாட்டா நிறுவனமும் இணைந்து கூட்டுத் துறையில் கடிகாரம் தயாரிக்கின்றது. இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்ற கடிகாரங்கள்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே மிக அதிகமாக விற்பனை ஆகின்றன என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் காடிகாரங்களுக்குத் தேவை யான கேசஸ், அதாவது கூடுகளை வெளிநாட்டிலிருந்து இது வரையிலே அங்கே இறக்குமதி செய்து இருந்த நிலையை மாற்றி அவைகளை அங்கேயே தயாரிப்பதற்கான அளவிலே அந்தத் தொழிற்சாலை இப்போது 30 கோடி ரூபாய் அளவிலே விரிவு படுத்தப்பட்டு இருக்கிறது இந்த ஆண்டில்.

சக்தி சோயாஸ் லிமிடெட், கூட்டுத் துறை. டிட்கோவும் சக்தி நிறுவனமும் இணைந்து 22.48 கோடி ரூபாய் மூலதனத்தில் பொள்ளாச்சிக்கு அருகிலே நிறுவப்பட்டுள்ளது. சோயாவிலிந்து சமையல் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை இது. தயாரிப்புப்

பணியும் தொடங்கி விட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த ஆண்டிலே உற்பத்தியைத் தொடங்க உள்ள தொழில்கள் பற்றிய விவரங்களைத் தர விரும்புகிறேன். யூ.பி. பெட்ரோ புராடெக்ட்ஸ் லிமிடெட், 80.65 கோடி ரூபாய் மூல தனத்தில் மணலியில் கூட்டுத் துறையில் தொடங்கப்படும் தொழிற்சாலை ஆகும். அது, கட்டுமானப் பணிகள் எல்லாம் முடிவடையும் தருவாயில் உள்ளன. யந்திரங்கள் பொருத்தப் படுகின்ற பணி இன்னும் 2 மாதத்தில் முடிவுறும். பால்யூல்ஸ் மற்றும் இதர பெட்ரோலியப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற் சாலை அது. பிளாஸ்டிக் தொழிற்சாலை போன்றவைகளுக்கும் மற்றும் வேறு சில தொழில்களுக்கும் பால்யூல்ஸ் பயன்படக் கூடிய பொருள் ஆகும்.

அடுத்து, ஐந்தாவதாக தமிழ்நாடு டெலி கம்யூனிகேஷன் லிமிடெட், மத்திய அரசும், மாநில அரசும் கூட்டு முயற்சியில் தொலைபேசிக் கம்பி மற்றும் தொலைபேசிக்கு வேண்டிய சில உபகரணங்கள் உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலை. 23.30 கோடி ரூபாய் செலவில் அரக்கோணத்திலே அமைந்துள்ள தொழிற்சாலை இது. மாநில அரசு 25 சதவீதமும், மத்திய அரசு 26 சதவீதமும் இதிலே பங்கு பெறுகின்றன. 1989 ஆம் ஆண்டு மே மாதம் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, ஜூலை 90-க்குள் இயற்திரங்கள் வந்து சேர்ந்து தொழில் தொடங்கும் என்று எதிர்பார்க்கிற அளவுக்கு அந்த வேலைகள் விரைந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

ஆறாவதாக, சங்கம் அலுமினியம் லிமிடெட். தேன்கனிக் கோட்டையில் 10.35 கோடி ரூபாய் முதலீட்டில் கூட்டுத் துறையில் ஆரம்பிக்கப்படுகின்ற தொழிற்சாலை. அலுமினியத்தால் தயாரிக்கப்படுகின்ற பொருட்கள் இங்கே உற்பத்தி ஆக இருக்கின்றன. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இயந்திரங்கள் செப்டம்பர் மாதம் பொருத்தப்பட்டு டிசம்பர் திங்களில் உற்பத்தி தொடங்க இருக்கிறது.

ஏழாவதாக, இண்டகிரேட்டடு வாட்டர் புரூப்பிங் லிமிடெட் 4.62 கோடி ரூபாய் செலவில் அலமாதி கிராமத்தில் செங்கை - அண்ணா மாவட்டத்தில் கூட்டுத் துறையில் தொடங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் எல்லாம் ஆரம்பமாகிவிட்டன. இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுவிட்டன. விரைவிலே அந்தத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கும்.

எட்டாவதாக, நார்த் ஆர்க்காட் லெதர்ஸ் லிமிடெட், ரூபாய் 1.60 கோடி செலவில் கலனிப்பாக்கத்தில், வாணியம் பாடிக்கு அருகே இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலை தொடங்கப்பட இருக்கிறது. கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. இதுவும் ஒரு கூட்டுத்துறை நிறுவனம் ஆகும்.

அடுத்து, பணிகள் தொடர்ந்து நடைபெறும், இன்னும் முடிவடையாத நிலையிலே இருக்கிற தொழிற்சாலைகள் என்று எடுத்துக் கொண்டால் - 9-ஆவதாக "டைனா லேம்ப்ஸ் அண்ட் கிளாஸ் ஒர்க்ஸ்" என்பது கும்மிடிப்பூண்டிக்கு அருகே ரூ. 42.70 கோடி செலவில் கூட்டுத் துறையில் டிட்கோவும், டைனாவிஷனும் சேர்ந்து தொடங்கும் தொழிற்சாலை ஆகும். இங்கே மின் விளக்குக்குத் தேவையான உபகரணங்கள் தயாரிக்கிறார்கள். இதற்கு ஐ.டி.பி.ஐ. கடன் வழங்கவும் அனுமதி தரப்பட்டு விட்டது. விரைவில் இந்தப் பணிகள் தொடங்க இருக்கின்றன.

10-ஆவதாக ரிலையன்ஸ் செராமிக்ஸ், மதுராந்தகத்தில் ரூ. 20.40 கோடி செலவில் கூட்டுத்துறையில் டிட்கோ, லைட் ரூஃபிங்ஸ், ரிலையன்ஸ் செராமிக் நிறுவனங்கள் ஆகியவை இணைந்து மெருகூட்டப்பட்ட தரை மற்றும் சுவர் ஓடுகள் தயாரிக்கின்ற தொழிற்சாலை. ஐ.டி.பி.ஐ. கடன் இதற்குக் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு அது தன்னுடைய உற்பத்தியைத் தொடங்க இருக்கிறது.

11-ஆவதாக உஷ்டாதே பயோடெக்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் கடலூரில் ரூ. 20 கோடி மூலதனத்தில் செயற்கை இனிப்பு தயாரிக்கின்ற தொழிற்சாலை கூட்டுத் துறையில் டிட்கோ நிறுவனமும் கல்கத்தாவைச் சேர்ந்த உஷ்டாதே என்று நிறுவனமும் சேர்ந்து நடத்தும் தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன. அண்மையில்தான் நான் அடிக்கல் நாட்டு விழாவிற்குச் சென்று இருந்தேன்.

கழக அரசு மீண்டும் வந்து அறிவிக்கப்பட்ட பணிகள், நடை பெற்றுவருகின்ற தொழிற்சாலைகள் - 12-ஆவதாக - பில் கோ கிளாஸ் கம்பெனி லிமிடெட், புவனகிரியில் ரூ. 17.90 கோடி செலவில் கூட்டுத் துறையில் தொடங்கப்படும் தொழிற்சாலை. நிலம் கையகப்படுத்தப்பட்டு 27-8-1989 அன்று அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்கே ஷீட்கிளாஸ்கள் தயாரிக்கப்பட இருக்கின்றன.

பதின்மூன்றாவதாக Dandeck Agro Chemicals Limited கடலூடிலே ரூ. 5.48 கோடி செலவிலே கூட்டுத் துறையில், நிறுவப்பட உள்ள பூச்சிக்கொல்லி மருந்து தொழிற்சாலை ஆகும். இதுவும் 27-8-1989-லே அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

14-ஆவதாக, Sterling Dungston Products கடலூரில் ரூ. 45 கோடி செலவில் கூட்டுத் துறையில் தொடங்கப்படுகின்ற தொழிற்சாலை ஆகும். டங்ஸ்டன் பௌடர் பாதுகாப்புத் துறைக்குப் பெரிதும் பயன்படுகின்ற ஒன்று. கொரிய நிறுவனம் ஒன்றோடு தொழில் நுட்ப ஒப்பந்தத்திற்கான பேச்சுக்கள் விரைந்து நடைபெற்று வருகின்றன. விரைவில் அந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட இருக்கின்றது, ரூபாய் 45 கோடி முதலீட்டில்.

இது தவிர, அண்மையில் மேலும் 3 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. பெரிய தொழில் திட்டங்கள்.

அனிலைன் திட்டம் - ரூபாய் 110 கோடி செலவில் இராணிப் பேட்டையில் கூட்டுத் துறையில் அனிலைன், நைட்ரிக் அமிலம், அமோனியம் நைட்ரேட் போன்ற இரசாயனப் பொருள்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலை. இந்தத் தொழிற்சாலைக்காக சில இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுவிட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

16-ஆவதாக "மினரல்செபரேஷன் பிளான்ட்" என்ற தொழிற் சாலை ரூபாய் 20 கோடி முதலீட்டில் மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து நடத்தும் தொழிற்சாலை. சிதம்பரனார் மாவட்டம், குதிரைமொழித்தேரியில் அமையும் தொழிற்சாலை இது. தோரியம், இல்லுமினேட் போன்ற பொருட்கள் இதில் உற்பத்தியாகும்.

மத்திய அரசின் நிறுவனமான இந்தியன் ரேர் எர்த்-உடன் இதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

17-ஆவதாக டிடானியம்-டை-ஆக்ஸைடு என்ற தொழிற் சாலை, ரூபாய் 140 கோடி செலவில், கூட்டுத் துறையில், அதே குதிரைமொழித்தேரியில் தொடங்கப்பட இருக்கிறது.

ஆக, 15 மாத காலத்தில் 15 தொழிற்சாலை வந்ததா என்ற கேள்விக்கு, அறிவித்து, நடைமுறையிலே இல்லாத தொழிற் சாலைகளையும், அறிவித்து உடனடியாகத் தொடங்கிய தொழிற் சாலைகளையும், இந்த ஆண்டு உற்பத்தி தொடங்குகிற தொழிற் சாலைகளையும், உற்பத்தி அடுத்த ஆண்டு தொடங்குவதாக இருந்தாலும் இந்த ஆண்டு கட்டுமானப் பணிகள், இயந்திரங்கள் இறக்குமதி செய்கிற பணிகள் இவைகள் எல்லாம் முடிவுறுகின்ற பணிகளுமாக 17 தொழிற்சாலைகளுக்கான பட்டியலைத்தான் இந்த மாமன்றத்திலே உங்கள் முன்னால் நான் வைத்திருக்கிறேன்.

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களும், மற்றவர்களும் மத்திய அரசு சார்பிலே அதனுடைய அனுமதியைப் பெற்றும், மத்திய அரசு முதலீடு செய்கின்ற வகையிலும் பல தொழிற்சாலைகளை நாம் தமிழகத்திற்குப் பெற்றாக வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திப் பேசியிருக் கிறார்கள். மத்திய அரசு முதலீடு செய்கின்ற பல தொழிற்சாலைகள் தமிழகத்திற்குப் பெற்றாகவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள், அதிலும் இந்த அரசு மெத்தனமாக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவர் அவர்கள் பேசும்போது கூட, எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் ஒன்று தமிழ்நாட்டில் - குறிப்பாக, நாகையிலே அந்தப் பகுதியிலே அமைய வேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நேற்றும், இன்றும் பேசிய கட்சிகளின் தலைவர்களும், கட்சிகளின் உறுப்பினர்களும் தமிழகத்திலே எங்கெங்கே, இந்த மாநிலம் முழுவதும் தொழில்கள் பொங்கிப் பெருகவேண்டுமென்ற சாத்தியக் கூறுகளையெல்லாம் எடுத்துரைத்திருக்கிறார்கள். நாம்

ஒவ்வொரு தொழிலுக்கும் மத்திய அரசினுடைய உதவிகளைப் பெறவேண்டிய தொழில்களாக இருந்தாலும், அனுமதியைப் பெற வேண்டிய தொழில்களாக இருந்தாலும், அதுகுறித்து கவலைப் படாமலேயோ, அல்லது சோர்வாகவோ, அலட்சியமாகவோ, அக்கறையற்ற தன்மையிலோ இருந்திடவில்லை என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமும், சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனமும் ஆகிய இரண்டும் இணைந்து உருவாக்கியுள்ள 'நாப்கோ' நிறுவனம், மணலியில் 1356 கோடி ரூபாய் செலவில், பெட்ரோலிய ரசாயனப் பொருட்களைத் தயாரிக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தக் கருதி, அதற்கான நிலத்தையும் கையகப்படுத்துகின்ற நடவடிக்கைகளை அரசு மேற் கொண்டாகிவிட்டது. அது குறித்து தொடர்ந்து மத்திய அரசோடு நேரிலும், நாங்கள் கலந்து பேசுகின்றோம், கடிதம் மூலமாகவும் அவர்களுக்கு எழுதுகின்றோம். அண்மையில் கூட, 2-4-1990-ல் இந்தியப் பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்தில், இந்த National Aromatics and Petrochemicals Corporation சார்பாக அமைய வேண்டிய தொழிற்சாலையைப் பற்றி - எழுதும்போது, "While the feasibility report was submitted in July 1989, the capacity of the project was enhanced to 2 lakhs tonnes of P.P.A. as per Government Policy, and the repert was revised with a total investment cost of Rs. 1,356 Crores in September 1989. Environmental Clearances both from State and Central Governments have been obtained and the project is pending before the P.I.B. for clearance என்று குறிப்பிட்டுவிட்டு, உடனடியாக அதற்கான அங்கீகாரத்தை வழங்கவேண்டுமென்று நான் கேட்டு, "As the project does not depend on the Government of India for financed and as it is, a major venture in our State after more than a decade, I would be grateful, if you could use your good offices for the early clearance of the said project by the P.I.B. and others, without further postponment which would only result in avoidable cost escalation. . . . . என்றும் பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்திற்கு "உடனடியாக அது கவனிக்கப்படும்" என்று பதில் அவர்களிடமிருந்து வந்திருக்கிறது.

அதைப்போல, எரிவாயு பற்றி காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நேற்றைய தினம் நம்முடைய வெள்ளிங்கிரி அவர்களும் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இங்கே பேசிய உறுப்பினர்கள் யாரும் அதைக் குறிப்பிடத் தவறவில்லை. எரிவாயுவினுடைய பயன்களையும், அதை நாம் பெற எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சிகளைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே பல்வேறு பெட்ரோலிய ரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஏதுவாக, தென்னகத்திற்கான எரிவாயு இணைப்பு வேண்டுமென்று, ஏற்கெனவே ராஜீவ் காந்தி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே, அந்தத் துறையினுடைய அமைச்சர் இங்கே ஒரு விழாவிற்கு வந்தபோது, நானும் அதில் கலந்துகொண்டபோது, அதைக் குறிப்பிட்டு "நல்ல யோசனை, அதைப் பற்றி நாங்கள் பரிசீலிக்கிறோம்" என்று குறிப்பிட்டார்கள். தொடர்ந்து அந்த ஆட்சி மாறி, தேசிய முன்னணி ஆட்சி வந்த பிறகும் கூட, அதை நாங்கள் நினைவுபடுத்தி, திரு. குருபாதசாமி அவர்களை டெல்லியில் சந்தித்துப் பேசியபோதும், பிறகு அவர் சென்னைக்கு வந்தபோது என்னைச் சந்தித்தபோதும் அதை வலியுறுத்தியதன் அடிப்படையில், அவர் 6-4-1990-ல் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில், "Please refer to your D.O. letter, dated 22-2-1990 regarding the laying of a Southern Gas pipeline from Bombay High. I am glad to inform you that we have decided to constitute and Inter-Ministerial Committee to examine the issues pertaining to the construction of Southern Gas Grid. We are anxious that the available gas is utilised as quickly as possible. This matter would therefore continue to receive our highest priority என்று - அவர்கள் உடனடியாக பதில் - எழுதியிருக்கிறார்கள். நான், பதில் எழுதியதற்காகப் பாராட்டுகிறேன். உடனடியாக முயற்சிகளைத் தொடர்ந்து செய்து நம்முடைய கோரிக்கைகள் நிறைவேறுவதற்கு மத்திய அரசின் அமைச்சர்களும் ஆவன செய்ய வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் இரும்பாலை பற்றிக்கூட இங்கே அனைவரும் கேட்டிருக்கிறார்கள். காலையில் நம்முடைய திரு. ரமணி அவர்கள் இங்க பேசினார்கள். திரு. பாண்டியன் அவர்கள் இங்கே பேசினார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசினார்கள். எல்லோருமே பேசியிருக்கிறார்கள். சேலம் இரும்பாலைத் திட்டத்திற்காக இந்த ஆட்சி தொடர்ந்து வாதாடிக் கொண்டு இருக்கிறது. இந்த ஆட்சி இந்தத் திட்டத்திற்காக வாதாடவில்லை என்ற ஒரு தவறான பிரச்சாரம் சில ஏடுகளில் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சேலத்திலே இரும்பாலை வேண்டும் என்பதற்காக வாதாடி, போராடி, அதிலே வெற்றி பெற்றது அன்றைக்கே 1971-ஆம் ஆண்டிலேயே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை யாரும் மறந்திருக்க இயலாது. ஆனால் அன்றைக்கு அனுமதிக்கப்பட்ட அந்த சேலம் இரும்பாலை நாம் நினைத்தவாறு அமையாமல் வேறுமாதிரி அமைந்துவிட்டது. எனவேதான் இப்போதுகூட நான் இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு. வி. பி. சிங் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கிறேன்.

"Dear Prime Minister,

On the basis of the representation made by me to the late Thirumathi Indira Gandhi, the Salem Steel Plant was approved in 1970. Accordingly in original detailed project report it envisaged the manufacture of stainless steel, cilicon steel and special steel and installation of hot rolling and cold rolling facilities. However only a cold rolling complex for the production of 32,000 tonnes of stainlees steel sheet were commissioned in 1981 in the first stage. The original conception of an integrated steel plant has thus been grossly diluted and what has been installed in Salem is largely in the nature of a Stainless Steel Rolling Mill. Our Government has been representing from time for the setting up hot rolling facilities to enable the upstream integration of this plant. We are aware that considerable investment is taking place in North India in

regard to modernistion of steel plant and a case for further investment in the existing facilities in Salem in order to realize the original conception should not be delayed any further. The Durgapur Steel Plant has been modified at a considerable cost to make stainless steel continuous cast slabs which are now being sent all the way to Finland for rolling into hot roll coil. With the setting up of hot rolling facilities at Salem, there is scope for considerable saving of foreign exchange. The project will provide direct employment to 2500 persons and will also generate considerable indirect employment in the ancillary and tertiary sectors. I will be grateful if you can give this your sympathetic consideration and have the project included in the Eighth Plan. On our part we shall take all steps to meet the additional power requirement for the project once the detailed time-schedule is worked out." என்று பிரதமருக்கு எழுதிய கடிதத்தை அவர் துறையினுடைய அமைச்சர்சருக்கு அனுப்பி கலந்து பேசி அந்தத் துறையினுடைய அமைச்சர் திரு. தினேஷ் கோஸ்வாமி அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில், "Please refer to your letter of January 22, 1990 in regard to the establishment of hot rolling facilties at Salem Steel Plant. I appreciate and share your concern in the matter. The growth of Salem Steel Plant has been engaging the attention of the Government. While the work of doubling the capacity of the Plant by installation of a second Spensioner Mill is currently in progress, the question of installing hot rolling facilities at Salem as well as the proposal to include it in the Eighth Plan are also under the active consideration of the Government. We shall keep in mind your cencern in coming to a final decision." என்று அந்தத் துறையினுடைய அமைச்சர் எழுதியிருக்கிறார். அதைப் போலவே, மணலி உரத்தொழிற்சாலையினுடைய விரிவாக்கத்திற்காகவும் நான் மத்திய அரசுக்கு. வேளாண்மைத்துறை அமைச்சருக்கு, துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு, 10-4-1990-ல் அவர் எழுதிய பதில் கடிதத்தில் "Please refer to your letter, dated 22nd February, 1990 regarding the Schemes of Madras Fertilisers Limited. As regards the expansion of the

existing Fertilisers Plant of M.F.L., the Company was advised to prepare a detailed project report for its revamping modernisation and also for its replacement by a new Plant. In this context a detailed project report for revamping modernisation of the existing plant of M.F.L. has been received. It contains two alternatives. While the first alternative is intended to prolong the life of the existing plant at an investment of Rs.105 crores approximately, the second alternative involving an expenditure of about Rs. 240 crores will improve the existing capacity and production. Both the alternatives are being examined. Devi Lal - என்று அவர் கடிதம் எழுதியிருக்கிறார். இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டு தமிழகத்தின் தொழில் வளம் இந்த வயதான காலத்தில் நம்முடைய ராஜேந்திரன் அவர்கள் சொன்னதைப் போல, அவரைப் போல, இளைஞராகவும் இல்லாமலே, முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறேன் என்பதை எடுத்துக்காட்டத்தான் மத்திய அரசோடு தொடர்ந்து நேரிலும், கடிதப் போக்குவரத்து மூலமாகவும், மத்திய அரசினுடைய அனுமதியை, இங்கே பெரும் தொழில்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றும், மத்திய அரசு மூலதனத்தோடு இங்கே பல தொழில்கள் உருவாக வேண்டு மென்றும் நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

அதைப் போலவே, கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி ஆண்டு தோறும் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் செய்தித்தாள் மற்றும் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் எழுது காகிதமும் செய்கின்ற திட்டம் ஒன்றை, தென்னாற்காடு மாவட்டத்திலே நிறுவுவதற்கான ஒரு முயற்சி இருப்பதை நான் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக் கிறேன். இப்போதும் அதைப்பற்றி கூறவிரும்புகிறேன். நம்முடைய நண்பர் திரு. உகம்சந்த் அவர்கள் சொன்னார்கள், 240 கோடிக்கு அப்போது தொழிற்சாலை வைத்தபோது அவ்வளவா என்று கேட்டீர்களே, இப்போது 800 கோடி ரூபாயா என்று கேட்டார். இடையிலே 10 ஆண்டுக் காலம் உருண்டோடி விட்டதை மறந்து விடக்கூடாது. நம்முடைய எம்.எல்.ஏ-க்களுடைய சம்பளமே எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று எண்ணிப் பார்த்தால் பணவீக்கம் எந்த அளவுக்கு நம்மைப் பாதித்து இருக்கிறது. என்பதை நாம் உணர வேண்டும். (குறுக்கீடு) (சிரிப்பு).

அதை சட்டமன்ற விவாதத்தின்போது, அவை முன்னவருக்கு விட்டு விடலாம். (சிரிப்பு).

எனவே, 10 மடங்கு, 20 மடங்கு இன்றைக்கு செலவுகள் மதிப்பீடுகள் உயர்ந்திருக்கிற காரணத்தினாலேதான், அன்றைக்கு 240 அல்லது 250 கோடி ரூபாயிலே ஒரு தொழிற்சாலை உருவானது என்றால், இன்றைய தினம் 800 கோடி ரூபாய் அதற்குத் தேவைப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை, தென்னாற்காடு மாவட்டத்திலே, எந்தப் பகுதியிலே, எந்த இடத்திலே என்று இன்னமும் நாம் நிர்ணயிக்கவில்லை. அதற்குரிய ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மத்திய அரசோடும் அதற்கான தொடர்புகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். எனவே ஒரு பெரிய காகிதத் தொழிற்சாலை, தென்னாற்காடு மாவட்டத்திற்குத் தேவை என்பதையும், அதை விரைந்து முயற்சி செய்து ஓரிரு ஆண்டு களிலே, அந்த மாவட்டத்திலே அமைப்போம் என்பதையும் நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகளைப் பற்றி இங்கே பேசப்பட்டது. நம் முடைய இலக்கியச் செல்வர் அவர்கள் கூட சொன்னார்கள். நீங்கள் கூட்டுறவுத் துறை "கோவாபரேடிவ் செக்டார்" என்று வைத்துவிட்ட காரணத்தால், தனியார்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று விடுகிறார்கள் என்று சொன்னார். குறிப்பாக தமிழ்நாட்டிலே, போதுமான அளவிற்கு சர்க்கரை ஆலைகள் வந்துவிட்டதாகவே நான் கருதுகிறேன். ஓரிரு ஆலைகள் தனியார் ஆலைகள், வெளியே சென்றால்கூட, கவலை இல்லாத அளவுக்கு, பொதுத் துறையிலும், தனியார் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும், இங்கே சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன இப்பொழுதே மொத்த முள்ள சர்க்கரை ஆலைகள் 29. தனியார் துறையிலே 14 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் 12 ஆலைகள் இருக்கின்றன. பொதுத் துறையிலே 3 ஆலைகள் இருக்கின்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 ஆலைகளில் 5 தனியார் ஆலைகளையும், 4 கூட்டுறவு ஆலைகளையும் அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டு, முடிவும் மேற்கொள்ளப்பட்டது. இந்த 5 தனியார் ஆலைகளில், சக்தி சர்க்கரை ஆலை, சிவகங்கை, தரணி சர்க்கரை ஆலை, வாசுதேவநல்லூர் இப்போது சொன்னார்களே - யாரோ "என்.ஆர்.ஐ." பெர்சன்களையெல்லாம்

துரத்துகிறோம் என்று - அந்த பெரியசாமி அவர்கள் நடத்துகின்ற ஆலைதான் தரணி சர்க்கரை ஆலை. நியாயமாக நடத்தினால் அதில் தலையிடமாட்டேம். அநியாயமாக நடைபெற்றால் அங்கே இந்த அரசுத் தலையிட தயங்காது என்பதற்கு இது ஓர் உதாரணம். பெரியகுளம் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை, திருவாரூரான் சர்க்கரை ஆலை, பூண்டி சர்க்கரை ஆலை போன்ற தனியார் ஆலை களுக்கு அனுமதிக்கப்பட்டும் அவை இன்னும் ஆரம்பமாக வில்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதுபோல 4 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள். சிதம்பரத்தில் சேத்தியா தோப்புக்கு ஒன்று, எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை என்ற பெயரில் அது தொடங்கியிருக்கிறது. அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை இன்னும் சில நாட்களில் இதற்கான அடிக்கல் நாட்டுவிழாவை நடத்த மே 13 ஆம் தேதி அன்று அடிக்கல் நாட்டு விழாவிற்கச் செல்ல விருக்கிறேன். அதற்கான ஒப்பந்தங்கள் எல்லாம் செய்யப்பட்டு அந்த ஆலை தொடங்குகிற நிலைக்கு இன்றைக்கு வந்திருக்கிறது. செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை நவம்பர் 1990-ல் தொடங்கும். அறந்தாங்கி கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் பற்றிக் கேட்டார்கள். அங்கு தண்ணீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் அது குறித்த ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. மேலும், தொடர்ந்து அம்பாசமுத்திரம், சின்ன சேலம், போளூர், கும்மிடிப்பூண்டி போன்ற வட்டங்களில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவ மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறது, என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மின்சார உற்பத்தியைப் பற்றி பலரும் இங்கே பேசினார்கள், நீண்டநேரம் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசினார்கள். இந்த ஆண்டு நிச்சய மாக மின்சாரத் துறை குறித்த நிதிநிலை அறிக்கை அல்லது ஓர் அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டு விவாதிக்கப்பட இருப்பதால் அதிலே அப்போது விரிவாகப் பேச முடியும். என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் அன்றைக்கு ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நாம் மின்சாரத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை கடந்த ஆண்டுகளை விட

மிகக் குறைவானது என்று குறிப்பிட்டார்கள். 1987-88ஆம் ஆண்டில் மின்சாரத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ. 407.63 கோடி என்று இருந்தது. ஆனால் செலவிடப்பட்ட தொகை ரூ. 372.29 கோடிதாதன். 1988-89 ஆம் ஆண்டில் அப்போது திட்டத்திலே, இந்த அரசின் அப்போதைய ஆண்டு திட்டமே 1,457 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்புக்குள்ளே அடங்கியதாக மின்சாரத்திற்கு ரூ. 502 கோடி என்று சொல்லப்பட்டது. ஆனால் 1457 என்ற திட்டமே கூட 1202 கோடி ரூபாய்க்கு சுருங்கிவிட்ட காரணத்தால் இந்த 502 கோடி ரூபாய் மின்சார ஒதுக்கீடு கூட 352.53 கோடி ரூபாய் என்ற அளவு சுருங்கிவிட்டது. இந்த 352 கோடி ரூபாயோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இப்போது நாம் 1990-91-ல் மின்சாரத்திற்கு என 457 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது அதிகமானது என்கின்ற உண்மை தெளிவாகத் தெரியும். அது மாத்திரமல்லாமல், 1990-91-ல் கூடுதலாக 287 மொகவாட் உற்பத்தி செய்ய நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகின்றோம். கடந்த ஆண்டு 1989-90-ல் தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் திட்டங்களின் வாயிலாக 235 மெகாவாட்ஸ், மத்திய அரசு செயல்படுத்துகின்ற திட்டங்களின் வாயிலாக 118 மெகாவாட்ஸ், ஆக மொத்தம் 353 மெகாவாட்ஸ் உற்பத்தித் திறனை அதிகரித்தும், 1988-89 ஆம் ஆண்டில் மின் உற்பத்தி மற்றும் இதர நிலையங்களிலிருந்து பெறப்பட்ட மின்சாரம் எல்லாவற்றையும் சேர்த்து, மொத்தம் 17,585 மில்லியன் யூனிட்தான் வழங்கப்பட்டது. 1989-90-ல் பல இடையூறுகளுக்கு இடையிலே 18,672 மில்லியன் யூனிட் என்ற அளவுக்கு அதனை உயர்த்தினோம். 1990-91-ல் 21,089 மில்லியன் யூனிட் என்ற அளவுக்கு அது எட்டும் என்று எதிர்ப் பார்க்கின்றோம். 8-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 300 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தித் திறனை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

அவை உறுப்பினர்கள் அனைவருக்கும், ஒன்று நன்றாகத் தெரியும், வடசென்னை மின் நிலையம் அறிவிக்கப்பட்டு, இடத் தகராறு காரணமாக அது தொடங்கப்படாமல் இருந்தது. 500 கோடியிலே ஆரம்பிக்கப்பட வேண்டியது அந்தத் திட்டம். அந்த இடத்தகராறை இந்த அரசு வந்த பிறகுதான் தீர்த்து, இப்போது 700 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கின்ற

ஒரு நல்ல சூழ்நிலையை இந்த அரசு ஏற்பட்டதும் குடியரசுத் தலைவர் அதைத் தொடங்கி வைக்க வந்ததும் உங்கள் அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். அதிலே இப்போது 420 மெகாவாட் மின்திறன் கொண்ட முதல் இரண்டு பிரிவுகளின் பணிகள் வேகமாக நடைபெற இருக்கின்றன. மேலும் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது பிரிவை அமைப்பதற்கு இந்த ஆசியன் வளர்ச்சி வங்கியின் உதவியும் நாடப்பட்டுள்ளது. இந்த மின்நிலையம் இறுதியாக 2,050 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறன் உடையதாக இருக்கும் என்பதை நான் மகிழ்ச்சி யோடு தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் டாமினைப் பற்றியும், கிரானைட்சைப் பற்றியும், அதிலே நடை பெற்ற தவறுகள் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். எனவே, சுருக்கமாகத்தான் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அந்த அதிகாரியை இன்னும் விட்டு வைத்திருக்கிறீர்களே, ஏன் என்று எல்லாம் கேட்டார்கள். தவறு எப்படி நடந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெள்ளிங்கிரி பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். இந்த ஆண்டு நீங்கள் ஈட்டியிருக்கிற லாபம் உற்பத்தியால் வந்ததல்ல, விலையை உயர்த்தியதால் வந்தது என்றார்கள், அதிலே ஓரளவுக்கு உண்மை இருக்கிறது. ஆம், விலையை உயர்ந்தினோம், எப்படி? வேண்டுமென்றே விலையைக் குறைத்து, தனியார் தருகின்ற விலையை விட அரசு நிறுவனம் பொது நிறுவனம், டாமின் நிறுவனம் விலையைக் குறைத்து அதன் காரணமாக ஊழல்கள் நடைபெற்ற காரணத்தால் அதற்கு ஓர் அதிகாரி அன்றைக்குக் காரணமாக இருந்த காரணத்தினால் பெரும் நஷ்டத்திற்கு இந்த நிறுவனம் உள்ளானது. அந்த விலைகளை எல்லாம் சரி பார்த்து, கவர்னர் ஆட்சிக் காலத்திலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. கவர்னர் ஆட்சிக் காலத்திலே அந்த அதிகாரி யினுடைய சுய உருவம் நவம்பர் மாதத்திலேதான் தெரிந்தது. நவம்பரிலே தெரிந்தவுடன், கவர்னர் ஆட்சியிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்ன நடைபெற்றதென்றால், 1983-84 ஆம்

ஆண்டு ஒரு கன மீட்டர் விலை - சாம்பல் வண்ணப் பாறை, கருப்பு வண்ணப் பாறை என்று இரண்டுவிதமான பாறைகள் அங்கே ஏற்றுமதிக்காக விற்பனை செய்யப்படும் பாறைகள் - டாமின் விதித்த விலை 277 முதல் 294 வரையிலான டாலர். தனியார் அதே நேரத்திலே அதே கல்லுக்கு 420 டாலர். 1984-85-ல் டாமின் 258 முதல் 269 டாலர், தனியார் 475 டாலர். 1985-86-ல் டாமின் 299 டாலர், தனியார் 460 டாலர். 1986-87-ல் டாமின் 404 முதல் 427 டாலர், தனியார் 475 டாலர். 1987-88-ல் டாமின் 512 முதல் 538 டாலர், தனியார் 575 டாலர். அப்போதுதான் கவர்னருடைய கவனத்திற்கு வந்து, அந்த அதிகாரி பிடிபடுகிறார். அது மட்டுமல்ல, டாமின் சார்பாக ஏற்றுமதி செய்யப்பட்ட சாம்பல் வண்ணப் பாறை மிக நல்ல தரம் வாய்ந்தது. தனியார் ஏற்றுமதி செய்த சாம்பல் வண்ணப்பாறை மிகமிகக்குறைந்த தரம் வாய்ந்தவை. அவை அதிக விலைக்கு விற்று டாமின் சார்பாகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டதால், பெரும் ஊழல் நடைபெற்ற காரணத்தால்தான் பெரும் இழப்புக்கு இந்த நிறுவனம் ஆளானது. கருப்பு வண்ணப் பாறையை 1986-87-ல் என்ன பெரிய அநியாயம் நடந்திருக்கிறது என்று பார்த்தால் - ஒரு கன மீட்டர், டாமின் 714 டாலர், தனியார் 1,500 டாலர். தரக் குறைவான அந்தக் கருப்பு வண்ணப் பாறை தனியார் 1,500 டாலருக்கு விற்ற நேரத்தில், நம் முடைய டாமின் 714 டாலருக்கு விற்றிருக்கிறது, இதன் காரணமாக ஒரு சுரங்கத்தில் ஏற்பட்ட நஷ்டம் மாத்திரம் 48 இலட்சம் ரூபாய். 1986-ம் ஆண்டில் திருவக்கரையில் உள்ள சுரங்கப் பாறைக்கு 1,281 டாலர் கொடுக்க ஜப்பான் நிறுவனம் "ஓரியன்ட் சான்யோ" முன்வந்தது. ஒரு கன மீட்டருக்கு 1,281 டாலர் கொடுக்க அந்த நிறுவனம் வந்தது. ஆனால் டாமின் நிறுவனம் அவர்களுக்குக் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டு மிட்சுபிஷி கார்பரேஷனுக்கு ஒரு கன மீட்டருக்கு 550 டாலர் வீதம் 1982 ஆம் ஆண்டு கொடுத்த அதே விலைக்கே ஏற்றுமதி செய்தது. இதனால் அந்த ஒரு சுரங்கத்திலே மாத்திரம் ஏற்பட்ட நஷ்டம் 41 இலட்சம் ரூபாய். கவர்னர் ஆட்சியிலே பழைய நிர்வாக இயக்குநரை மாற்றி விட்டு பாண்டியன் குறிப்பிட்டாரே, அந்த நிர்வாக இயக்குநர் - அவரை மாற்றிவிட்டு புது நிர்வாக இயக்குநரைப் போட்டஉடன், நவம்பர் மாதம் 714 டாலர் என்ற நிலை மாற்றப்பட்டு. டிசம்பர் மாதம் முதல் 2,050 டாலர் என கன மீட்டருக்கு விற்கப்படுகிற

நிலை உருவானது என்பதையும் நான் ஞாபகப்படுத்த கடமைப்பட்டு இருக்கிறேன்.

இதனால், இப்படி இந்த விலை மாற்றங்களின் காரணமாக டாமினுக்கு ஏகப்பட்ட நஷ்டம். கிட்டத்தட்ட டாமின் வசம் 3,500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் இருக்கிறது. அதிலே 2,500 ஏக்கரில் ஏற்பட்ட நஷ்டம் அந்த நேரத்திலே 10 கோடி ரூபாய், எனவேதான் அந்த அதிகாரி மீது நாம் இன்றைக்கு நடவடிக்கைகளை மேற் கொண்டு இருக்கிறோம்; விசாரணை முறைப்படி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது; மேலும் நடவடிக்கை எடுக்க சில ஆதாரங்கள் தேவைப்படுகிற காணத்தால் இங்கு மாத்திரம் அல்ல, வெளிநாட்டிலே இருந்தும் கூட ஆதாரங்கள் தேவைப்படுகின்ற காரணத்தாலே சற்றுக் கால தாமதம் ஆகிறதேயல்லாமல் நிச்சயம் தவறு செய்தவர்கள் விடுவிக்கப்படமாட்டார்கள்; தண்டிக்கப் படுவார்கள் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). 1987-88-ல் இதைப் பார்த்தால் புரியும். 1987-88-ல் விற்பனை 11.75 கோடி ரூபாய்; மொத்த நஷ்டம் 11 இலட்சம் ரூபாய். 1988-89-ல் விற்பனை 10.63 கோடி ரூபாய்; லாபம் 2.12 கோடி ரூபாய், புத்தகத்திலே கூட தவறாக 2.1 என்று போட்டு விட்டார்கள். இப்போது 1989-90-ல் விற்பனை 14.14 கோடி ரூபாய்; லாபம் 5.27 கோடி ரூபாய். இந்த 5.27-ஐ புத்தகத்திலே 2.12 என்று தவறாக அச்சாகி இருக்கிறது; திருத்திப்படித்துக்கொள்ள வேண்டு கிறேன். 11 கோடிக்கு விற்பனையான போது 11 இலட்சம் நஷ்டம். 14 கோடிக்கு விற்பனை ஆகிற போது இப்போது 5 கோடி ரூபாய் லாபம் என்றால், எவ்வளவு பெரும் தவறு அதிலே நடைபெற்று இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம். எனவே தான் இதிலே நடைபெற்று இருக்கின்ற தவறுகளை விசாரிக்க, நடவடிக்கைகளை எடுக்க அரசு தயங்காது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவகங்கை கிராஃபைட்டைப் பற்றியும் இங்கே பேசி இருக்கின்றார்கள். அதிலும் இந்த அதிகாரிதான் இருந்தார். இந்த அதிகாரி இருந்து தீட்டப்பட்ட திட்டம் அது. 1984ஆம் ஆண்டு 85 சதவீத கரிச்சத்தோடு கூடிய கிராஃபைட் சுத்திக்கரிப்பாலை

ஒன்றை 3.4 கோடி ரூபாய் செலவில் அமைக்க முதலிலே திட்டம் தயாரிக்கப்பட்டது. இன்றைக்கு 96 சதவீத கரிச் சத்தோடு கூடிய கிராஃபைட்டுக்கு வெளிநாட்டில் நல்ல கிராக்கி இருக்கும் என்ற ஒரு கருத்து அறிவிக்கப்பட்டு, 27 கோடி ரூபாய் திட்டச் செலவில் நூறு சதவீத ஏற்றுமதி நோக்கோடு தொழிற்சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டது. முதலிலே 3.4 கோடி ரூபாய் என்று ஆரம்பித்து இது அதிகச் சத்தோடு கூடியது; நூறு சதவீதம் ஏற்றுமதிக்கு உரியதாக ஆக்கலாம் என்று 27 கோடி ரூபாயில் அது திட்டமிப்பட்டது. இந்தத் திட்டத்துக்கு அனுமதி கோரி தமிழக அரசின் திட்ட ஆய்வுக் குழுக் கூட்டத்திலே ஆகஸ்ட் - செப்டம்பர் மாதங்களில் 1988-லே விவாதிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்திலே தலைமைச் செயலாளர், உலகில் வேறு தொழில் நுட்பம் உள்ளதாக, ஹம்போல் ஹெவி ஆலை நிறுவனத்திடம் இயந்திரங்கள் மதிப்பீடு முதலிய விவரங்களை எல்லாம் கோரலாம் என்று அவர் கூறினார். அப்போதைய, நிறுவனத் தலைவர் இந்தத் தலைவர் அந்த ஆதாரங்கள், தகவல்கள் தன்னிடத்திலே இல்லை என்று கூறிவிட்டார். பிறகு அவர் மாற்றப்பட்டார். கவர்னர் ஆட்சியில் மாற்றப்பட்டார் என்பது நான் முன்பே கூறியுள்ள செய்தியாகும். அதற்குப் பிறகு நம்முடைய நண்பர்கள் இங்கே எடுத்துக்காட்டியதப் போல அங்கே அந்தப் பாறைகள் மாத்திரம் வெட்டப்படுகின்ற வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆய்வு அறிக்கை இன்னும் வந்து சேரவில்லை. அந்த ஆய்வு அறிக்கைக்காக "இந்தியன் பியூரோ ஆஃப் மைன்ஸ்" பாண்டியன் கிராஃபைட்ஸ் மற்றும் தேசிய உலோகத் தொழிற்கூடம் இவைகளிடமிருந்து அந்த அறிக்கைகளைப் பெற சில காலம் ஆகும். இப்பொழுது அந்த அறிக்கையை, விரிவான திட்ட அறிக்கையை ஜூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் சமர்ப்பிப்பதாக 9-4-1990 அன்று பெறப்பட்ட கடிதத்திலே உறுதி அளித்து இருக்கிறார்கள். 14 ஆயிரம் டன் கிராஃபைட் கனிமம் அங்கே வெட்டி எடுக்கப்பட்டு இருக்கிறது. அதனுடைய மதிப்பு ஏறத்தாழ 55 இலட்சம் ரூபாய் ஆகும் என்று சொல்லப்படுகிறது. இதற்கு மேலும் அங்கே கிராஃபைட் எடுத்து வெளியிலே வீனாக அவைகளைப் போட்டால் அது கெட்டுவிடக் கூடும் என்பதற்காக அந்த வெட்டுகின்ற பணி நிறுத்தி வைக்கப்பட்டு, அந்த ஆய்வு அறிக்கையை முழுமையாக ஆராய்ந்த பிறகு நடவடிக்கைகள்

எடுக்கப்படும்; கிராஃபைட் தொழில் அங்கே தொடங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திற்கு வேதாரண்யத்திலே சோடா தொழிற்சாலை தொடங்குவதைப் பற்றி நம்முடைய ராஜேந்திரன் அவர்கள் இங்கே பேசி இருக்கிறார்கள். நம்முடைய நண்பர் அழகர்சாமி அவர்களும் அதைக் குறிப்பிட்டார்கள், தேர்தல் அறிக்கையிலே சோடா ஆஷ் ஆக ஆரம்பித்து இப்போது அது குறுகிவிட்டது; இதுவாவது வருமா என்ற சந்தேகத்தை நம்முடைய ராஜேந்திரன் அவர்கள் எழுப்பினார்கள் நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டம், சோடா ஆஷ் திட்டம் என்று ஆரம்பிக்க வேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்ட பொழுது, 250 கோடி ரூபாய் செலவாகும் என்றெல்லாம் மதிப்பீடு செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தை நடத்து வதைப்பற்றி 'டாக்' - அவர்கள் சொன்னார்களே, ஏன் டாட்டாவை நாடிப்போனீர்கள், 'டாக்'-ஐ நாடிப்போகக் கூடாதா என்று. தூத்துக்குடி ஆல்கலி அன்ட் கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்குத் தெரிவிக்கப்பட்ட பொழுது, அவர்கள் சொன்னார்கள். நம்முடைய நாட்டில், அதாவது இந்தியாவில் தற்போது சோடா ஆஷ் உற்பத்தி மிக அதிகமாக இருக்கிறது; 1989-90 ஆம் ஆண்டில் மாத்திரம் தேவை 15.40 இலட்சம் டன், ஆனால் இது இப்பொழுது கிடைப்பது 15.496 இலட்சம் டன் என்கின்ற அளவிற்குத் தயாரிக்கப்படுகிறது. எனவே, சோடா ஆஷ் தொழிற்சாலையை ஆரம்பித்தால், அந்த உற்பத்தியை விற்பனை செய்வதற்குப் பதிலாக வேறு ஆரம்பிக் கலாம், என்று சொல்லி, கேஸ்ட்டிக் சோடா தொழிற் சாலைத் திட்டத்தை, அந்த யோசனையை அவர்கள் வெளியிட்டார்கள். அதற்கு 60 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று கணக்கிடப்பட்டது. மேலும் அந்தப் பகுதியிலே கிடைக்கின்ற உப்பைப் பயன்படுத்தி, மரைன் கெமிக்கல் காம்ப்ளக்ஸ் ஒன்று 14 அல்லது 15 கோடி ரூபாய் செலவிலே நிறுவுவதற்கும் அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்காக ஒரு திட்ட அறிக்கை தயார் செய்யும் பொருட்டு, டாட்டா கன்சல்டன்சி நிறுவனத்தார் நியமிப்பதற்குக் கூட்டுத்துறை நிறுவனமான 'டாக்' நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக் கிறது. 'டாக்' நிறுவனம் சோடா ஆஷ் தயாரிக்கும் தொழில் நுட்பம்

தான் அவர்களிடத்திலே உள்ளது. இந்தத் தொழில் நுட்பத்தைப் பற்றிய திட்டவட்டமான நிலைமைகள் அவர்களிடத்திலே இல்லாத காரணத்தால் அவர்களே இவர்களுடைய உதவியை நாடி, டாட்டா கன்சல்டன்சியைப் பயன்படுத்தி அவர்கள் அதனைக் கோரியிருக் கிறார்கள். வேதாரண்யம் பகுதியிலே காஸ்ட்டிக் சோடா ஆலை நிறுவுவதற்குத் தேவைப்படும் 15 மெகாவாட் மின்சாரத்தைக்கூட தமிழ்நாடு மின்சார வாரியம் தருவதற்குத் தயாராக இருக்கிறது. இவ்வளவு ஏற்பாடுகளும் நடந்து விட்ட காரணத்தால், இந்த இரண்டு தொழிற்சாலைகளும் நிச்சயமாக வேதாரண்யம் பகுதியிலே வரும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

என்.ஆர்.ஐ.-யைப் பற்றிப் பேசப்பட்டது. நான் முதலிலே கோடு காட்டினேன். என்.ஆர்.ஐ-யைப் பொறுத்தவரையிலே இங்கே நம்முடைய நண்பர் பொன்னுசாமி அவர்கள் சொன்னார்கள். பழனி பெரியசாமிக்குப் பல இடையூறுகளை யெல்லாம் தந்து விட்டோம் என்று, அவர் இங்கே ஒரு ஓட்டல் கட்டுவதற்குக் கடந்த அரசில், அந்த அரசோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். அது ஒரு ஜாயிண்ட் செக்டார் என்றெல்லாம் கூடப் பேசப்பட்டது. "பல்லவா ஓட்டல்" என்றெல்லாம் பேசப் பட்டது. அதிலே ஒன்றும் தவறு இருப்பதாக நான் சொல்ல மாட்டேன். ஆனால், தவறு என்னவென்றால், அவருக்காக ஒரு இடத்தைக் கொடுத்து விட்டு, அந்த இடத்தினுடைய மதிப்பு ஒரு கோடியே எழுபத்தைந்து இலட்சம் என்று சொன்னார்களே, அது தான் தவறு, நாற்பது கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு இடத்திற்கு, ஒன்றே முக்கால் கோடி ரூபாய் என்று மதிப்பிட்டு, அந்த ஒன்றே முக்கால் கோடி ரூபாயைக்கூட அவர் தரவேண்டியதில்லை, அரசு ஒரு பங்குதாரராக, அந்த ஒன்றே முக்கால் கோடி ரூபாய் தருகிறது என்ற காரணத்தினாலேதான், நம்முடைய அரசின் நிலம் வீணாக யாரிடத்திலோ போய்ச் சேரக்கூடாது என்பதற்காகத்தான் அதை மீண்டும் அரசே எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்தோமே அல்லாமல், தனிப்பட்ட யாரிடத்திலும் எந்த விரோதமும் கிடையாது. அவர்கள் ஒரு சர்க்கரை ஆலையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலே நாம் ஒன்றும் தவறாகக் குறுக்கிட வில்லை. இது நியாயமான குறுக்கீடு. ஏனென்றால், நாற்பது கோடி

ரூபாய் பெறுமானமுள்ள ஒரு நிலத்தை, யாரோ ஒருவருக்குத் தனியாக ஒன்றே முக்கால் கோடி ரூபாய்க்கு, அதுவும் அரசு ஒரு பங்குதாரராகச் சேர்த்து, பணத்தையும் பெறாமல் ஒரு நிலைமையை ஏற்படுத்துவது என்றால், அதை இந்தப் புதிய அரசு ஏற்றுக்கொள்ள முடியாது என்பதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர, வேறு அல்ல.

அதற்காக, என்.ஆர்.ஐ. மக்கள் யாரும் இங்கே வராமல் போய் விடவில்லை. நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் கூட அதைப்பற்றிப் பேசினார்கள். நம்முடைய உகம்சந்த் கூட அதைப்பற்றிப் பேசினார்கள். என்.ஆர்.ஐ. சார்பாகப் பலபேர் தமிழ்நாட்டிலே தொழில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மெட்ராஸ் ஹைட்ராலிக் ஹோஸ் பைப் பிரைவேட் லிமிடெட், ஏறத்தாழ மூன்று கோடி ரூபாய்; மிஸ்டர் விஸ்வநாத் என்பவர், கென்யா நாட்டுக்காரர், அங்கே இருப்பவர், அவர் நடத்திக்கொண்டு இருக்கிறார்.

அதைப்போலவே, மீஞ்சூர் ஷெல் கேஸ்ட்டிக் பிரைவேட் லிமிடெட், நாடிமுத்து அண்ட் எம்.எஸ். துரை, சவுதி அராபியா. அவர் இங்கே தொழில் நடத்துகிறார்.

கிரசண்ட் செராமிக், ஜான் சுந்தரராஜன், யூ.ஏ.ஈ., பிரீஸ் ஓட்டல் பிரைவேட் லிமிடெட், மெசர்ஸ் ஆர். சிவராமன் அண்ட் அசோசியேட், ஸ்ரீலங்கா, உமா ஓயர் பிராடக்ட் பிரைவேட் லிமிடெட், தசரதன், நைஜீரியா, வஸ்திரா அப்பியரல்ஸ் பிரைவேட் லிமிடெட், நித்தியானந்தம், இந்தோநேஷியா, அதைப்போல, யு.எஸ்.ஏ. விலேயிருந்து, சிங்கப்பூரிலேயிருந்து, கல்ப் - இலேயிருந்து, மலேசியாவிலேயிருந்து, யூ.கே. விலேயிருந்து, பிரான்சிலேயிருந்து, இப்படி 19 பேர் கிட்டத்தட்ட ஐம்பது கோடி ரூபாய் அளவுக்கான தொழிலைத் தமிழ்நாட்டிலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். என்.ஆர்.ஐ. என்றால் நமக்கு ஒன்றும் அலர்ஜி இல்லை. அவர்கள் நடந்து கொள்கிற விதத்தில் ஏற்படுகிற முரண்பாடுகள், நம்முடைய அரசுக்கு அல்லது நாட்டிற்கு, நம்முடைய மக்களுக்குத் தீமை பயக்கிற வகையிலே வருகிற நிலைமைகளைத்தான், அந்த ஊழல்களை மூடி மறைக்கின்ற

நேரத்திலே அதை வெளிக் கொணர்ந்து அவைகளை நாம் அடையாளம் காட்ட வேண்டிய நிலைமைக்கு ஆளாகிறோமே அல்லாமல் வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூடப்பட்ட ஆலைகளைப் பற்றிப் பேசப்பட்டது நம்முடைய ரமணி அவர்கள் காலையில் அதைப்பற்றி விரிவாகப் பேசி இருக்கிறார். மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கான முயற்சி களில் அரசு ஈடுபடும் என்று தேர்தல் நேரத்தில் அறிவித்ததற் கிணங்க, தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், அவிநாசி 10-3-1989-ல் திறக்கப்பட்டது. வாசுதேவா டெக்ஸ்டைல்ஸ், கோவை 13-3-1989-ல் திறக்கப்பட்டது. ஆர்.ஏ.வி. டெக்ஸ்டைல்ஸ், கோவை 12-4-1989-ல் திறக்கப்பட்டது. பாலாஜி காட்டன் மில்ஸ், சேலம் 21-8-1989-ல் திறக்கப்பட்டது. ருக்மணி மில்ஸ், சிலைமான் 7-8-1989-ல் திறக்கப் பட்டது. சற்குணா டெக்ஸ்டைல்ஸ், கோவை 10-7-1989-ல் திறக்கப் பட்டது. பாலாஜி ஸ்பின்னர்ஸ், கோவை 25-11-1989-ல் திறக்கப் பட்டது. அமராவதி டையிங் அண்ட் காட்டன் மில்ஸ் 8-11-1989-ல் திறக்கப்பட்டது. தெய்வசிகாமணி ஸ்பின்னிங்க மில்ஸ் 1-1-1990-ல் திறக்கப்பட்டது. ஆக மூடப்பட்டிருந்த ஆலைகளில் 9 ஆலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. திறக்க உத்தேசித்து, மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தப்படுகிற நிலையில் உள்ள ஆலைகள் 6. மிகச் சிறியவை என்பதாலும், அவைகளை ஏற்று நடத்தினால் லாபகரமாக இராது என்பதாலும் விடப்பட்ட ஆலைகள் 7. இன்னும் எந்த ஒரு முடிவும் எடுக்காமல் ஆய்வில் உள்ள ஆலைகள் 8. அரசாங்கமே ஏற்று நடத்துவது என்ற முடிவை அறிவித்து மத்திய அரசுக்கு அன்று எழுதி இதுவரையில் சரியான பதில் கிடைக்காத காரணத்தால் அண்மையில் இங்கே வந்த அமைச்சர் யாதவ் அவர்கள் இதைப்பற்றி நான் கவனிக்கிறேன் என்று சொன்ன உறுதிமொழியின் காரணமாக நம்முடைய அமைச்சர்கள் அங்கே டெல்லிக்குச் செல்கிறார்கள். நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் டெல்லியில் மத்திய அரசு அமைச்சர்களைக் கலந்து பேசி நல்ல முடிவோடு இன்னும் இரண்டொரு நாட்களில் வருவார்கள் என்பதையும், இந்த 6 ஆலைகள் வெகு விரைவில் திறக்கப்படும் என்பதையும், நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நெய்வேலி ராயல்டி பற்றி ஏதாவது குறை சொல்ல வேண்டும், அப்படியில்லாமல் பேசக்கூடாது என்ற நிலையில் பொன்னுசாமி அவர்கள் பேசுகிறபோது, அது என்ன 2½ ரூபாய், 5 ரூபாய் வாங்கி இருக்கக்கூடாதா என்று கோட்டார், நெய்வேலி நிலக்கரி ராயல்டிக்கு ஒரு அட்டவணை தயாரித்து இருக்கிறார்கள். என்னென்ன நிலக்கரிக்கு எவ்வளவு ரூபாய் என்று அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அட்டவணையின்படி நெய்வேலி நிலக்கரி என்பது தரத்தில் சற்றுத் தாழ்ந்த நிலக்கரி லிக்னைட், எனவே அதற்கு 2½ ரூபாய் ராயல்டி என்று அட்டவணை போட்டிருக்கிறார்கள். ஆனால், நடந்தது என்னவென்றால் முன்பிருந்த அரசு அதனுடைய மத்திய அமைச்சர் வசந்த்சாத்தே அவர்கள், 1989-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26-ம் தேதி எனக்கு எழுதிய கடிதத்தில் ராயல்டி டன் ஒன்றுக்கு 2½ ரூபாய் வீதம் இனிமேல் வழங்கப்படும் என்றும், 1976-லிருந்து அதற்கு ஈடாக ஒரு மானியக் தொகை வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டு இருந்தார், 1976-லிருந்து தரப்படும் என்று சொல்லியிருந்தார். நாங்கள் கூடாது, 1956 முதல் 1976 வரையில் அப்போதிருந்த காங்கிரஸ் அரசு எங்களுக்கு லாபத்தில் பங்கு வேண்டுமென்று கேட்டார்கள். அதனால் அங்கே லாபமே வரவில்லை. அதனால் பங்கு கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு 1976 வரையில் லாபம் கிடைக்கவில்லை என்று கணக்குக் காட்டியவர்கள், 1976-க்குப் பிறகு லாபம் வர ஆரம்பித்ததும், லாபத்தில் பங்கு என்ற ஒப்பந்தம் முடிந்துவிட்டது - காவிரிப் பிரச்சினை மாதிரி - அந்த ஒப்பந்தம் முடிந்துவிட்டது. இனிமேல் ராயல்டிதான் தரப்படும் என்று சொன்னார்கள். அந்தக் கணக்கு என்ன என்று நாங்கள் கேட்டோம். இடையில், இடைக்காலத்தில் யாரும் வலியுறுத்தவில்லை. இந்த அரசு வந்த பிறகு அதை வலியுறுத்திக் கேட்கத் தொடங்கியது. ராஜீவ் காந்தி காலத்தில் அதைக் கேட்கத் தொடங்கினோம். அப்போது எங்களுக்குச் சொல்லப்பட்ட பதில் 1976-லிருந்து 1989 வரையில் வழங்க வேண்டிய உரிமைத் தொகைக்கு ஈடான மானியத் தொகை ரூ. 19.09 கோடி என்றும், அதிலே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் வழங்கிய மின்சாரத்திற்காக - அதாவது மின்சார வாரியத்திற்கு வழங்கிய மின்சாரத்திற்காக ரூ. 7.09 கோடி என்றும், அதைக் கழித்துக்கொண்டு நிகரமாக உங்களுக்கு தர வேண்டியது 12 கோடி

ரூபாய்தான் என்றும் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள். 12 கோடிதான் என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு நாம் அவர்களோடு வாதாடி, அதிகாரிகள் மட்டத்தில் டெல்லியில் அண்மையில் பேச்சு நடைபெற்று, அவர்கள் 1956-லிருந்து 1976 வரைக்கும் உள்ள உரிமைத் தொகையான ரூ. 4.28 கோடி தர சம்மதித்து, 1976-லிருந்து 1986 வரையில் உள்ள ராயல்டி 19 கோடி ரூபாயும் சேர்த்து, மொத்தமாக ரூ. 23.37 கோடி கொடுக்கிறோம். அதிலே நீங்கள் தரவேண்டிய ரூ. 7.09 கோடியைக் கழித்துக் கொண்டு 16.28 கோடி கொடுக்கிறோம் என்றார்கள். பிறகுதான் இந்த வயதானவன் டெல்லிக்குச் சென்று நம்முடைய அமைச்சர் ஆரிப்முகமது அவர்களைச் சந்தித்து அவர்களிடத்திலே நீண்டநேரம் வாதாடி 30 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த ரூ. 7 கோடியை நீங்களே தள்ளிவிடுங்கள் என்று சொல்லி அந்த ரூ. 7 கோடியையும் சேர்த்து, ரூ. 23 கோடி - அஃதன்னியில் இது வரையில் தராததற்கு வட்டியைக் கொடுங்கள் என்று கேட்டு அவர்கள் வட்டியையும் சேர்த்துக் கொடுத்து, 30 கோடி ரூபாயை நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம். அதற்காகவாவது பொன்னுசாமி மகிழ்ச்சி அடைந்து இருக்கவேண்டும். மகிழ்ச்சி அடையாமல் ஏன் இன்னும் அதிகம் வாங்கவில்லை என்று கேட்டார். நல்லதுதான். அப்படிக் கேட்பது நல்லது. இப்படி எல்லாம் கேட்டால்தான் நாங்கள் அங்கே செல்லும்போது இப்படியெல்லாம் கேட்கிறார்கள் ஆகவே தயவு செய்து கொடுங்கள், இல்லாவிட்டால் உங்கள் ஆட்சிக்குத்தான் கெட்ட பெயர் வரும் என்று சொல்லி, அவர்களிடத்திலே கேட்பதற்கு, இங்கே எதிர்க்கட்சிகள் வேகமாகப் பேசுவதை நான் நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்வேன் என்பதை மாத்திரம் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் சொக்கர் அவர்கள் நேற்றையதினம் பேசியபோது, டி.ஐ.ஐ.சி. பற்றிக் குறிப்பிட்டு, அனுமதி அளிப்பதற்கும் தொகை வழங்குவதற்கும் உள்ள முரண்பாடுகள் என்று ஒன்றைக் குறிப்பிட்டார். இது ஓர் ஆண்டு கூட அல்ல. 9 மாத காலத்திற்கானது. அவர் அதிலே உள்ள ஒரு அடிக்குறிப்பைப்

படித்துவிட்டு, அப்படிச் சொல்லியிருக்கிறார். கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட தொகை டி.ஐ.ஐ.சி.-யின் 103.97 கோடி ரூபாய். வழங்கப்பட்ட தொகை 60.78 கோடி ரூபாய். இதைத்தான் கவனிக்க வேண்டும். அனுமதிக்கப்பட்டது ரூ. 103 கோடி, வழக்கப்பட்டது ரூ. 60 கோடி, இப்போது அவர்கள் நமக்கு அறிவித்து விட்டார்கள். நீங்கள் அனுமதிப்பதை அதிகமாகச் சொல்லி, வழங்குவது குறைவாக இருக்கும்போது, அனுமதிப்பதையும் அளவோடு அனுமதியுங்கள் என்று அவர்கள் கூறிய பிறகு இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட தொகை 97.10 கோடி ரூபாயாகவும், வழங்கப் பட்ட தொகை 65.07 கோடி ரூபாயாகவும் அமைந்திருக்கிறது. அதிலே வழங்கப்பட்ட தொகை என்று எடுத்துக் கொண்டால் கடந்த ஆண்டு ரூ. 60 கோடி சொச்சம், இந்த ஆண்டு ரூ. 65 கோடி சொச்சம், அதிகமாத்தான் வழங்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் கூறிய அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டுதான் ஐ.டி.பி.ஐ. கருத்துக் கூறும்போது எதைச் சொன்னார்களோ, அந்த அடிப்படையில் நாம் இதை இன்றைக்கு அனுமதித்து வழங்கியிருக்கிறோமே அல்லாமல் வேறு அல்ல. இன்னொன்று சொன்னார்கள், நல்ல உதாரணத்தோடு Old wine in new bottle or different bottles என்று சொன்னார்கள். மலிவு விலை மது பற்றிப் பேசப்படுகிற நேரத்தில் அவர்கள் ஒயினைப் பற்றிப் பேசினார்கள். பேசிவிட்டு, அந்த விற்பனை வரி ஒத்திவைப்பு, சேல்ஸ்டாக்ஸ் deferral என்பதும் Interest free Sales Tax Loan என்பதும் இரண்டும் ஒன்றுதான். அதனால்தான் இது, ஒரேவிதமான ஒயினை இரண்டு பாட்டில்களில் ஊற்றித் தரப்படுகிறது என்ற விதத்திலே பேசினார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. உண்மை என்ன வென்றால், வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டத்தில் விற்பனை வரியை முறையாகச் செலுத்திவிட்டு பிறகு ஒரு உச்ச வரம்புக்கு உட்பட்டு அதற்கு ஈடாக அரசு தொழில் வளர்ச்சி நிறுவனங்களிடமிருந்த வட்டி இல்லாத கடன் வழங்கும், அதுதான் விற்பனை வரிக் கடன் திட்டம். விற்பனை வரியைக் கட்டுவதற்கும் வட்டியில்லாத கடன் பெறுவதற்கும் சில நேரங்களில் கால இடைவெளி ஏற்பட்டு தாமதம் ஏற்படுகிற காரணத்தால் அதற்கு நிதி நெருக்கடி, நிறுவனத்திற்கு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இதைத் தவிர்க்கும் பொருட்டுதான் விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டத்தினை முழுமையாக இந்த அரசு செயல்படுத்தியது.

விற்பனை வரியைத் தள்ளி வைப்பது என்று ஒரு திட்டம். விற்பனை வரிக்கடன் திட்டம் என்பது ஒன்று. விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டம் என்பது மற்றொன்று. இரண்டும் ஒன்றல்ல. இதைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்காக மாவட்ட அளவிலே உதவி ஆணையர், வணிகவரி அவர்களுக்கு இதனை வழங்க அதிகாரமும் அளிக்கப்பட இருக்கிறது. இதைச் செயல்படுத்து வதற்கு சட்டத்திருத்தமும் கொண்டுவர இருக்கிறோம். அதனால் விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டம் உரிய நேரத்தில் விரைவாக மாவட்ட அளவிலேயே செயல்பட வழிவகை செய்யப்படும் என்றாலும் கூட, முன்பு இருந்த விற்பனை வரி கடன் திட்டத்தின் அடிப்படையிலே ஓரிரு ஆண்டுகளாகக் கடன் பெற்று வருகிற தொழில்கள் தொடர்ந்து விற்பனை வரி கடன் பெறுவதற்கு நிதிநிலை அறிக்கையிலே 10.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். மேலும் இவர்கள், தங்கள் விருப்பப்படி விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டதின் கீழ் தங்களை மாற்றிக் கொள்ளலாம். ஆப்ஷனல், அல்லது தொடர்ந்து விற்பனை வரி கடன் திட்டத்தில் கடனைப் பெற்றுக்கொள்ளலாம். எனவே இரண்டு திட்டங்களுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இன்னும் சில செய்திகள் இந்த அவைக்கு நான் அறிவிக்க விரும்புகிறேன்.

நேற்றைக்கு சொக்கர், தேடினார். தேடுகிறேன், தேடுகிறேன், தேடிக்கொண்டே இருக்கிறேன், காணவில்லை என்றார்கள். இந்த விற்பனை வரிச் சலுகைகளை எல்லாம் அறிவித்தீர்கள், 105 வட்டங்களிலே 30 மிகவும் பின்தங்கிய வட்டங்கள் வரும் என்றீர்கள். எங்கே தேடுவேன் என்று கேட்டார். நான், தேடட்டும், ஒருநாள் வரையிலும் தேடட்டும் என்பதற்காகத் காத்திருந்தேன். இன்றைக்கு அது குறித்து சில அறிவிப்புகளைச் சொன்னால்கூட அவை பத்திரிகைகளில் சில நேரங்களில் தவறாக வந்துவிடுகிறது என்பதற்காக அந்த அறிவிப்புகளை அச்சடித்தே வைத்திருக் கிறேன், அது பிறகு வழங்கப்படும்.

இந்த 105 பகுதிகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பகுதிகளாக இருக்கிறதே, அதற்கு நாம் நம்முடைய தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம். 'TIIC' சார்பாக ரூ. 6 கோடி வழங்கியிருக்கிறோம். சிப்காட் வாயிலாக ரூ. 2.74 கோடி

வழங்கியிருக்கிறோம். தொழில் வணிக இயக்குநரகம் வாயிலாக ரூ. 56 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 9.30 கோடி வழங்கியிருக் கிறோம். ஆனால் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட 105 இடங்களிலே, 17 மாவட்டத்திலுள்ள 44 வட்டங்கள் மாத்திரமே இந்த மானியத்தைப் பயன்படுத்தி தொழில்கள் நிறுவி உள்ளன. இங்கே 323 நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தொடங்கப் பட்டுள்ளன, இங்கே 105 இடங்களில் 44 வட்டங்களில் மாத்திரம் 17 மாவட்டங்களில் 323 நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவைகளை நேரம் இல்லாவிட்டாலும் சொல்லவது பயனுள்ளதாக இருக்கும் என்பதால் சொல்ல விரும்புகிறேன், தொழில் மானியமாக இருப்பதால்.

செங்கை - அண்ணா மாவட்டத்தில் செய்யூர் 1. காஞ்சிபுரம் பயன்பெற்ற தொழில் 1. மதுராந்தகம் 27, பொன்னேரி 22, திருத்தணி 1, கும்மிடிப்பூண்டி 15, அது இந்த 105-ல் வராது, சிதம்பரனார் மாவட்டம் விளாத்திகுளம் 2, கோவை பொள்ளாச்சி 2, அவிநாசி 18, தர்மபுரி தென்கனிக்கோட்டை 4, தர்மபுரி 7, அரூர் 4, கிருஷ்ணகிரியில் 2, பென்னாகரம் 1, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் பழனி 28, வாடிப்பட்டி 3, வேடசந்தூர் 3, கன்னியா குமரியில் தோவாளை 3, மதுரை ஆண்டிப்பட்டி 5, பெரியகுளம் 4, நெல்லை கட்டபொம்மன் நாங்குநேரி 7, ராதாபுரம் 4, தென்காசி 1, நீலகிரியில் கூடலூரில் சில தொழில்கள். அவ்வளவுதான். வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் செய்யாரில் 4, போளூர் 1, பசும்பொன் தேவர் திருமகனார் காரைக்குடி 2, சிவகங்கை 1, தாராபுரம் 7, கோபிச்செட்டிப்பாளையம் 2, பெருந்துறை 6. புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி 3, 1, அறந்தாங்கி 4, ஆவுடையார்கோவில் 6, கந்தர்வகோட்டை திருமயம் 3, இராமநாத புரத்தில் இராமநாதபுரம் - 2, சேலம் - அத்தூர் 1, சங்ககிரி 1, தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் 8, செஞ்சி 1, கள்ளக்குறிச்சி 15, காட்டுமன்னார்கோவில் 3, திண்டிவனம் 10, உளுந்தூர்பேட்டை 7, விழுப்புரம் 1, திருச்சியில் முசிறி 64, பெரும்பலூர் 5, இப்படி 323 தொழில்கள் பயன் பெற்றிருக்கின்றன. 105 இடங்களில் 44 வட்டங்களிலே மாத்திரம்தான் அவர்கள் இந்த உதவியைப் பெற்று தொழில் தொடங்கியிருக்கிறார்கள். அதனால்தான் 105-லேயே 'பேக்வோர்டு, மோஸ்ட் பேக்வேடர்ட்' என்று பிரித்து, 30 வட்டங்

களைத் தனியாக அறிவித்து அவர்களுக்கு மேலும் சில சலுகைகளைச் செய்யலாம் என்ற முயற்சியை இப்போது அரசு மேற்கொண்டிருக்கிறது, அதை அறிவிக்க நான் விரும்புகிறேன். இதை எப்படி இந்த பின்தங்கிய பகுதி, மிகவும் பின்தங்கிய பகுதி என்று நீங்கள் நிர்ணயிக்கின்றீர்கள் என்று கேட்டால் பின்தங்கிய பகுதி என்பது தொழிலாளர்களுடைய சராசரி விகிதம். அதிலே மாநில சராசரி விகிதம், 1.26 விழுக்காட்டிற்குக் குறைவாகத் தொழிலாளர்கள் இருக்கின்ற பகுதி. அதே வட்டத்தில் பெரிய தொழில்களோ, நடுத்தரத் தொழில்களோ ரூ. 15 கோடிக்குக் குறைவாக இருக்கவேண்டும். அவைகளை எல்லாம் பி.சி. - பின் தங்கிய பகுதியிலே சேர்க்கின்றோம். இந்த அடிப்படையில் 105 இடங்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே மீண்டும் எம்.பி.சி. என்று எப்படி நிர்ணயிக்கிறோம் என்றால் அந்த வட்டத்தில் ஆலைத் தொழிலாளர்களாக சராசரி 25 சதவிகிதத் திற்குக் குறைவாக இருக்கவேண்டும். அந்த வட்டத்தில் நடுத்தரத் தொழில்கள் அல்லது எந்தப் பெரிய தொழிலும் இல்லாமல் இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே 30 பின்தங்கிய வட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அவைகளுடைய பெயர்களை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். செங்கை - அண்ணா மாவட்டத்தில். பள்ளிப்பட்டு, தர்மபுரியில் பென்னாகரம், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் வேடசந்தூர், கொடைக்கானல். காமராசர் மாவட்டத்தில் திருச்சுளி, மதுரையில் உசிலம்பட்டி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்காசி, இராதாபுரம் பெரியார் மாவட்டத்தில் கோபிச்செட்டிப்பாளையம்; சேலம் மாவட்டத்தில் ஏற்காடு, தென்னாற்காடு மாவட்டத்தில் காட்டுமன்னார்கோயில், திருக்கோவிலூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் - யாரும் பொறாமைப் படக்கூடாது. அங்கே தொழிலே இல்லாத மாவட்டம் - தஞ்சாவூர் மாவட்டத்தில் பாபநாசம், வலங்கைமான், குடவாசல். பேராவூரணி, நன்னிலம், ஒரத்தநாடு, சீர்காழி, பட்டுக்கோட்டை, திருவாரூர், திருத் துறைப்பூண்டி. (சிரிப்பு, குறுக்கீடு). அவர் கேட்ட அந்த பைப் லைன் வந்தால் அங்கேயெல்லாம் தொழில் வரும்.

திருச்சி மாவட்டத்தில் உடையார் பாளையம், துறையூர், வட ஆற்காடு - அம்பேத்கார் மாவட்டத்தில் ஆற்காடு, திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டத்தில் செங்கம், போளூர், செய்யார், வந்தவாசி, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆவுடையார் கோவில். இவைகளையன்னியில் மேலும் சில அறிவிப்புகளை நான் உங்கள் முன்னிலையில் வைக்க விரும்புகிறேன்.

அகில இந்திய அளவிலே மிகச் சிறப்பான ஊக்கச் சலுகைத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் மேலும் சில சலுகைகளை அளிக்க முன் வந்துள்ளேன்; கூடலூர். புதுக்கோட்டை, மானாமதுரை சிப்காட் தொழில் வளாகங்களிலும் மேலே கூறிய 30 வட்டங்களிலும் தொடங்கப்படும் தொழில்களுக்கு விற்பனை வரி விலக்கு மேலே குறிப்பிட்டதைப் போல அதாவது 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும். மீதம் உள்ள 75 பின்தங்கிய வட்டங்களிலும் அரசு நிறுவனங்கள் நடத்தக்கூடிய தொழில் மையங்களிலும் தொடங்கப்படும் தொழில்களுக்கு விற்பனை வரி தள்ளி வைப்புத்திட்டம் முழுமையாக மாற்றி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). தொழில்களை விரிவு படுத்துவதற்கும் (பகுதி 1) மற்றும் புதிய தொழில்களை ஏற்படுத்துவதற்கும் (பகுதி 2) விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டம் மாற்றி அமைக்கப்படுகிறது. தற்போது இந்த இரண்டு திட்டங்களிலும் விற்பனை வரி தள்ளி வைக்கும் உச்ச வரம்பு ரூ. 3 கோடியாக இருக்கிறது. புதிதாக தொடங்கப்படும் தொழில்களுக்கு இனிமேல் 3 கோடி ரூபாய் என்ற உச்ச வரம்பு தளர்த்தப்பட்டு மூலதனச் செலவு அளவிற்கு உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விரிவு படுத்தக்கூடிய தொழில்களுக்கு அது மூலதனச் செலவில் 80 சதவீத அளவிற்கு வழங்கப்படும். இந்த இரண்டு பிரிவு திட்டங்களிலும் விற்பனை வரி தள்ளி வைப்பு 9 ஆண்டுகள் வரை வழங்கப்படும். மராட்டியத்தில், குஜராத்தில் இதன் காரணமாக தொழில் வருவதை எண்ணிப் பார்த்து இங்கே இதை அறிவிக்கிறேன்.

9 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தொழில் நிறுவனங்கள். விற்பனை வரி செலுத்தினால் போதுமானது. 9 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த ஆண்டிற்கான விற்பனை வரியையும், தள்ளி வைக்கப்

பட்ட முதல் ஆண்டிற்கான விற்பனை வரியையும் சேர்த்துச் செலுத்த வேண்டும். இஃதன்னியில் தற்போது தமிழகத்தில் இதர பகுதிகளில் முன்னோடித் தொழில்களைத் (பையனியர் இன்டஸ்ட்ரீஸ்) தவிர, இதர தொழில்களுக்கு விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டம் கிடையாது - இதுவரையிலும் கிடையாது - இனி மேல் இதரத் பகுதிகளில் உள்ள அனைத்து தொழில்களுக்கும் விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டம் விரிவுப்படுத்தப்படும். இதர பகுதிகளில் தொழில்களை விரிவுபடுத்துவதற்கும் (பகுதி 1) புதிய தொழில்கள் தொடங்குவதற்கும் (பகுதி 2) இந்தத் திட்டம் பொருந்தும். புதிய தொழில்களுக்கு 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளி வைப்பு வழங்கப்பட்டு உச்ச வரம்பு மூலதனச் செலவில் 60 சதவீதம் என்று வழங்கப்படும். ஏற்கெனவே இருக்கும் தொழில்களுக்கு விரிவுபடுத்துவதற்கு இந்த உச்ச வரம்பு மூலதனச் செலவில் 50 சதவீதமாக இருக்கும்.

மேலும் மாநிலத்தில் பெரிய தொழில்கள் தொடங்கப்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் 50 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனச் செலவில் தொடங்கப்படும் தொழில்களுக்கு சிறப்புச் சலுகையாக மாநிலத்தில் எந்தப் பகுதியில் தொடங்கினாலும் 9 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டம் மூலதனச் செலவு அளவிற்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த அறிவிப்பின் மூலம் மாநிலத்தில் பெரிய தொழில்கள் ஏற்பட நல்ல வாய்ப்பு உருவாகும் என்று நான் நம்புகிறேன். எனவே நீங்கள் தந்துள்ள பல்வேறு கருத்துக்களை - எல்லாக் கருத்துக் களுக்கும் விடை அளிக்க, விளக்கம் அளிக்க நேரம் இல்லை என்றாலும் கூட அவைகளையெல்லாம் நெஞ்சிலே பதிய வைத்து ஆவன செய்வேன், அனைவரும் சேர்ந்து தமிழகத்திலே தொழில் வளர்ப்போம், வாரீர் என்று கேட்டு வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெறவேண்டும் என்று இறைஞ்சி அமருகின்றேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியில் செய்யப்பட்ட தொழில்களிலே இன்றைக்கு நிறைவேற்றப்படுவதற்கான அறிவிப்புகளில் இரண்டு விடுபட்டிருக்கின்றன, ஒருவேளை விடுபட்டதோ அல்லது திட்டமே இல்லையோ என்று தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறேன். மேலூர் பகுதியில்

15 கோடி ரூபாயில் டைமண்ட் தொழிற்சாலைக்கான திட்டம் இடப்பட்டது. அதே போல பல்சால் குரூப்பும், டிட்கோவும் சேர்ந்து 5 கோடி ரூபாயில் தண்ணீர்க் கசிவை தடுத்து நிறுத்துவதற்கான ஒரு தொழில் திட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த இரண்டும் விடுபட்டிருக்கின்றன. எனவே கடந்த கால ஆட்சியிலே செய்யப்பட்டிருந்த அந்தத் திட்டங்களும் நிறைவேற்றப்படுமா என்பதோடு, திருச்சி பகுதியிலே இருக்கின்ற செயற்கை வைரக் கல் தயாரிக்கின்ற அந்தத் தொழில் இன்றைக்கு நெருக்கடிக்கு ஆளாகி 20 நாட்களாக அவர்களுக்கு மூலப்பொருள் கிடைக்காத நிலை இருக்கிறது. நாம் உருவாக்கியிருக்கின்ற கார்ப்பரேஷன் இந்த நெருக்கடிக்குக் காரணமாக இருப்பதாக அங்கிருக்கின்ற தொழிலாளர்கள் சொல்கிறார்கள். எனவே அவையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது கருத்தில் வைக்கப்படும்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலே எல்லாம்கூட ஏதோ நிலக்கோட்டைக்கு விவசாயத்தைச் சார்ந்த தொழில் ஆரம்பிக்கப்படும் என்று அதிலே இருக்கிறது. நானும் ஏதாவது வரும், வரும் என்று இவ்வளவு நேரம் காத்துக்கொண்டிருந்தும் பயன் எதுவும் இல்லை. நிலக்கோட்டை மிகவும் பின்தங்கிய பகுதி. ஏற்கனவே முந்தைய அரசு அறிவித்த ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பிலே அதாவது திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒரு இண்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ் போடுவதாகச் சொல்லி. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன வேண்டும் என்று கேளுங்கள். விரிவுரையிலேயே எங்களுக்கு என்ன கேட்கிறீர்கள் என்று விளங்காமல் போகிறது (சிரிப்பு).

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : அதாவது விவசாயத் தொழில் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது என்ன தொழில்? லெமன் கிராஸை நிலத்திலே உற்பத்தி பண்ணி அந்தப் புல்லிலிருந்து ஏதோ தைலம் தயாரித்து அதை ஃபாரினுக்கு

எல்லாம் அனுப்புவதாக ஒரு திட்டம் கிண்டியிலே இருக்கிறதே அது செய்யப்படுமா? சோயாபீன்ஸிலிருந்து எண்ணெய் தயாரிக்க வேண்டிய திட்டம் அதையாவது செய்வார்களா? ஒன்றுமே இல்லாமல் சும்மா ஸீரோ மாதிரி விட்டுவிட்டீர்களே?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பெருந் "தொழில்கள்" கொள்கை விளக்கக் குறிப்பில் 3-ஆம் பக்கத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலே இரப்பரை அடிப் படையாகக் கொண்ட பெருந் தொழிற்சாலை ஒன்றையும், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள நிலக் கோட்டையில் விவசாயத்தினைச் சார்ந்த தொழிற் பிரிவு ஒன்றையும் அரசு அமைக்கும் என்று இருக்கிறது. அதை அம்மையார் படிக்கவில்லை என்று கருதுகிறேன். அங்கே எதை மூலப்பொருளாகக் கொண்ட தொழில் ஆரம்பிக்கலாம் என்பதை அக்கா சொன்னால், தம்பி கேட்கத் தயாராக இருக்கிறேன். (சிரிப்பு).

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மத்தியத் தொழில் வள அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்திலே ஒரு அறிவிப்பைச் செய்திருக் கிறார்கள். நலிந்த தொழிற்சாலைகளை எல்லாம் அரசாங்கம் எடுத்து நடத்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி மாநில அரசினுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது மத்திய அரசால் இயலாது என்று சொல்லியிருக் கிறார்கள். மாநில அரசு முன் வந்தால் அதைத் தடுப்பதாக அவர்கள் இல்லை.

***திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்** : தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த பேக்வேர்டு ஏரியாஸ்ஸுக்கு கேபிடல் சப்ஸிடி திட்டத்தை அறிவித்தார்கள். அதிலே சின்ன விளக்கம் கேட்க விரும்புகிறேன். அதாவது ப்ராஸஸிங் இண்டஸ்ட்ரிக்கும், மேன்யூஃபேக்சரிங் இண்டஸ்ட்ரிக்கும் ஒரு டிஃபரன்ஸ் உண்டுபண்ணி அந்த கேபிடல் சப்ஸிடி மேன்யூஃபேக்ச்சரிங் இண்டஸ்ட்ரிக்குதான் உண்டு, ப்ராஸஸிங் இண்டஸ்ட்ரிக்கு கிடையாது என்று சொல்கிறார்களே, அதைப்பற்றி நம்முடைய முதல்வர் கருத்தை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது எனக்குப் புதிய தகவலாக இருக்கிறது. அதைப் பற்றி விசாரித்து அவருக்கு விவரம் தருகிறேன்.

திரு. இரா. மோகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலப் பொருட்களுடைய திடீர் தட்டுப்பாட்டின் காரணமாக இயங்கிக் கொண்டிருக்கின்ற பல தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிலே திடீரென்று மூடப்படக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. பல்வேறு மூலப் பொருள்கள் வடநாட்டிலிருந்து, பல்வேறு மாநிலங் களிலிருந்து நமக்கு வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தனியாக நம்முடைய மாநில அரசு மூலப் பொருட்கள் ஒழுங்காக தமிழகத்திற்கு வந்து சேர்கிறதா என்பதைக் கவனித்து, அந்த மூலப் பொருட்கள் முழுவதும் தொழிற்சாலைகளை சென்றடைகின்ற வண்ணம் ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன். காரணம், பிக் அயர்னுடைய தட்டுப்பாட்டின் காரணமாக கோவையிலே நூற்றுக்கும் மேற்பட்ட ஃபவுண்டரிகள் இப்போது மூடப்பட்டிருக்கின்றன. அதைப் போல பல மூலப் பொருட்கள் தட்டுப்பாடு திடீரென்று ஏற்படுகிறது. ஆகவே அதைப் போக்குவதற்கு ஒரு நல்ல மானிடரிங் ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பிக் அயர்னுக்காக சட்டமன்ற உறுப்பினர் ரமணியும் வாதித்து விட்டார். மோகனும் வாதித்து விட்டார், போதும்.

திரு. எம். முகமதுசித்திக் : தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியிலே ஏற்படுத்த இருக்கின்ற சிப்காட் நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துவிட்டதா? அதற்கான திட்டப் பணிகள் எப்போது துவங்கப்படும் என முதல்வர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அந்த மூன்று வளாகங்களுக்கும் மத்திய அரசினுடைய அனுமதி எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, என்னுடைய அந்த உரையின்போதுகூட, சாத்தான்குளத்தினுடைய பின்தங்கிய நிலையைச் சொன்னேன். நேற்று நமது மாண்புமிகு டாக்டர் பொன்முடி அவர்கள் கூட்டிய அந்தக் குடிநீர்த் திட்டக் கூட்டத்திலே கூட, 'ஒன்றுமே கிடையாது, நீங்கள் ஏதாவது கொடுத்தால்தான் உண்டு குடிப்பதற்கு' என்று சொன்னேன். அதைப்போலவே தயவு செய்து மிகப் பின்தங்கிய பகுதி, நீங்கள். . . . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கவலைப்பட வேண்டாம்; சாத்தான், குளத்தில் விழமாட்டான். (சிரிப்பு).

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பின்தங்கிய வட்டமாக அறிவித்திருந்த அவினாசி இப்போது கொஞ்சம் வளர்ச்சியடைந்து, அந்தப் பட்டியலிலிருந்து போய்விட்டது. ஆனால் பல்லடம் தாலுக்கா இருக்கிறதே, அதிலே முக்கியமான பகுதி, நம் பாலசுப்பிரமணியம், எம்.எல்.ஏ., இருக்கக் கூடிய பகுதி கூட இருக்கிறது. அதைப்பற்றி ஒன்றும் வரவில்லை. நான் முக்கியமாகக் கேட்கக்கூடியது அந்த மூடப்பட்ட பஞ்சாலை களைப் பற்றிச் சொன்னதிலே, அதைப்பற்றி ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை நடக்கிறது என்று சொன்னார். அதை வரவேற்கிறேன். புதுக்கோட்டையில் இருக்கும்படியான காவேரி மில்லும், நமன சமுத்திரத்திலே இருக்கக்கூடிய மில்லும், மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு மேலாகவே மூடிக் கிடக்கின்றன. அந்தத் தொழிலாளிகள் இப்போது ரொம்பக் கஷ்டத்திற்கு ஆளாகி அவர்கள் போராட்டம் எல்லாம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி இந்தப் பட்டியலிலும் வரவில்லை. ஒன்றுமே சொல்லப்படாமல் இருக்கக்கூடிய ஒரு நிலை. . . . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் திறக்கப் படவே முடியாது என்று சொன்ன பட்டியலில் அந்த மில் இல்லை. ஆய்வு நடத்தப்படுகின்ற பட்டியலில் அந்த மில் இருக்கிறது.

உரை : 5 நாள் : 14.08.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் தொழிற்கொள்கை குறித்தும், தொழில் திட்டங்கள் குறித்தும் வளர்ச்சிக்கான நிலைகள் குறித்தும் இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அழகிரி அவர்களும், தா. கிருட்டிணன் அவர்களும், சி. டி. தண்டபாணி அவர்களும், ப. ரங்கநாதன் அவர்களும், இராம. சிவராமன் அவர்களும், பெரியண்ணன், அப்துல்நாசர் அவர்களும், பொள்ளாச்சி ராஜு அவர்களும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மணி அவர்கள் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் தீரன் அவர்களும், அ.தி.மு.க. சார்பில் பழனிசாமி அவர்களும் நல்ல கருத்துக்கள் பலவற்றை எடுத்துக்கூறி, தொழில்துறையிலே இன்னும் ஆற்றிட வேண்டிய பணிகளையும் ஆக்கப்பூர்வமாகச் சுட்டிக்காட்டி, இந்தத் துறையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்கான முனைப்புடன் முயற்சிகளை மேற்கொள்கின்ற இந்த அரசுக்கு மேலும் ஊக்கத்தைத் தந்துள்ளமைக்காக என்னுடைய நன்றியை அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்தகால ஆட்சி நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு முடிவுற்று, ஆட்சி தொடங்கி சற்றொப்ப 95 நாட்கள் ஆகின்றன என்கிற நிலையில், இந்த 95 நாட்களில் தமிழகத்தில் எல்லாத் துறைகளிலும் எவ்வளவு முற்போக்கான காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அவையின் பெருமக்கள், அதற்கான பாராட்டுகளையும், இன்னும் பாராட்டப்படவேண்டிய அளவுக்கு இந்த அரசு எப்படி எல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுரைகளையும் வழங்கி இருக்கிறார்கள்.

தொழில் கொள்கையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் ஒரு ஏற்ற இறக்கம் அடிக்கடி ஏற்படுவதும், பிறகு

அது சரிசெய்யப்படுவதும், மீண்டும் அந்த இறக்கம் உருவாவதும், மீண்டும் சரிசெய்யப்படுவதுமான ஒரு சூழ்நிலை தவிர்க்க முடியாததாக இருந்து வருகிறது. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தொழில் வளம் தமிழ்நாட்டில் பெருகியது என்றெல்லாம் சொல்லப்படுகிறபொழுது, முதலாவது ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இவைகளுக்காக பெருநிதி மத்திய அரசால் ஒதுக்கப்பட்டு, அதன் காரணமாகத் தமிழ்நாடு தொழில் வளம் பெறக்கூடிய அந்தப் பயனைப் பெற்றது. ஆனால், நான்காவது, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் எல்லாம் தொடங்கப்பட்ட காலத்தில் அந்தத் திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கப்படாமல், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டியதைப் போல தமிழகம், வடக்கே உள்ள சில மாநிலங்களுக்குக் கிடைத்த அளவுக்கு நிதியைப் பெறமுடியாமல், அதுமாத்திரமல்லாமல், முதலீட்டிற்கான ஒதுக்கீடுகளைப் பெறமுடியாமல், தொழில் வளத்திலே தாழ்ந்துபோய் இருக்கின்றது. அதிலும் குறிப்பாக, கடந்த ஐந்து ஆண்டுகளில், தொழில் துறையிலே பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஏனென்றால் தொழில் தொடங்க என்னுகின்ற தொழில் அதிபர்கள், தொழில் முனைவர்கள், தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் நுழைவதே சிரமமான ஒரு காரியமாக இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, தொழில் தொடங்க வருகின்றவர்கள் உரியவர்களைச் சந்திப்பது என்றால் அதற்கே தொகை வழங்க வேண்டும் என்ற ஒரு தீங்கான நிலைமை, வரவேற்க இயலாத ஒரு நிலைமை, வருந்தத்தக்க ஒரு நிலைமை தமிழ்நாட்டிலே இருந்தது. இந்த இரண்டு, மூன்று மாத காலங்களிலேதான் அரசிலே உள்ள நாங்கள் வெளிப்டையாகத் தொழில் அதிபர்களைச் சந்தித்துப் பேசுகிறோம். நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டதைப் போலவும், அந்த விவாதத்தில் நடைபெற்ற பதிலுரையிலே நான் சுட்டிக்காட்டியதைப் போலவும், தொழிலைப் பொறுத்தவரையில், தொழில் திட்டங்களைப் பொறுத்தவரையில், தொழில் அதிபர்களோடு நடத்தப்படுகின்ற பேச்சுவார்த்தையைப் பொறுத்தவரையில், கழக அரசு ஒரு திறந்த புத்தகமாக இருக்கிறதென்பதை உணர்ந்துகொண்ட தொழில் அதிபர்கள் நம்பிக்கையோடு தொழில் தொடங்க இன்றைக்கு முன்வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மூன்று மாத காலத்தில்

தமிழகத்தில் எந்த அளவுக்குத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். தொழில் அதிபர்கள் எல்லாம் இது ஒரு நல்ல தொடக்கம் என்று பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் இந்தியாவிலே, தொழில் வளர்ச்சியிலே முன்னால் இருந்த தமிழகத்திற்கு இந்த நிலை ஏன் ஏற்பட்டது என்பதை நான் விரிவாக யாரையும் குறைசொல்ல வேண்டும், குற்றம் சாட்ட வேண்டும் என்ற முறையிலே சொல்ல விரும்பா விட்டாலும், பொதுவாக உணரப்பட்ட ஒரு உண்மையை யாரும் மறைத்துப் பயன் இல்லை. 1967-ஆம் ஆண்டு அண்ணா அவர்களுடைய தலைமையிலும் 1969, 1971 பின்னர் 1989 ஆம் ஆண்டுகளில் என் தலைமையிலும் கழக அரசு அமைந்தபோது, தொழில் துறையிலே சிறந்த கொள்கைகளை இந்த அரசு கடைப் பிடித்தது, ஆனால் அந்த முறை மாற்றப்பட்டு, தொழிலதிபர்கள் தொழில் தொடங்குவதற்கு முன்பே செலுத்த வேண்டிய காணிக்கை செலுத்தினால்தான் அவர்களைக் சந்திக்கவே இயலும் என்ற ஒரு நிலை இருந்ததை யாரும் மறுக்க முடியாது. அதனால்தான் தொழில் துறையிலே பெரும் பின்னடைவு தமிழகத்திலே ஏற்பட்டது என்பதை நான் திட்டவட்டமாகக் கூற முடியும். இந்த மூன்று மாத காலத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், பிரதிநிதிகள் என்னுடனும், தொழில் துறை அதிகாரிகளுடனும், அரசின் தலைமைச் செயலாளருடனும் கலந்து பேசி ஒருசில தொழில்களைத் தொடங்க எம்.ஓ.யூ. கையெழுத்து ஆகியுள்ளது என்பதையும் இந்த அவையிலே உள்ள நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். எம்.ஓ.யூ. என்றால் Memorandum of Understanding என்கின்ற உடன்பாட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்து ஆகியிருக்கின்றன. உதாரணமாக கொரிய நாட்டைச் சேர்ந்த ஹூண்டாய் மோட்டார் நிறுவனம், திருபெரும்புதூர் வட்டத்தில், இருங்காட்டுக் கோட்டையில் முதற்கட்டமாக 1500 கோடி ரூபாய் முதலீட்டிற்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் கார்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவுகிறது. அதிலே நேரடியாக 3,000 பேருக்கும், அதன் தொடர்பு தொழிலாக ஈடுபடுகின்றவர்கள் 20,000 பேருக்கும் வேலை வாய்ப்புகள்

ஏற்படும் என்பதை ஏற்கெனவே நான் அறிவித்திருக்கின்றேன். இந்தக் கார் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், ஏற்கெனவே இருந்த அரசு ஆரம்பித்த திட்டங்களும் இந்தக் குறிப்பேட்டிலே இடம் பெற்றிருக்கின்றன என்று கூறினார்கள். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்து பல திட்டங்கள் ஐந்தாண்டுக் காலத்தில் நிறைவேற்றப் படாவிட்டாலும்கூட, கடைசி காலத்தில் ஒரே ஒரு கார் திட்டம், மெகா திட்டம் - சூப்பர் மெகா திட்டம் என்கின்ற பெயரிலே அறிவிக்கப்பட்டது உண்மை. மகேந்திரா ஃபோர்டு கார் நிறுவனத்தினுடைய திட்டம் அது. அதிலே ஏற்பட்ட விசித்திரம் என்னவென்றால், 3-1-1996-இல் அதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. அதற்கு முதல் நாள் 3-1-1996 அன்று அது குறித்த ஆணையை அரசு பிறப்பிக்கின்றது. அந்த ஆணைப்படி, அரசு ஆணைக்கும் ஒப்பந்தத்திற்கும் உள்ள வேறுபாட்டுக்குத் தான் நான் இதைக் குறிப்பிடுகின்றேன் - அரசின் ஆணைப்படி அந்த சூப்பர் மெகா திட்டம் என்ற பெயரில் 1500 கோடி ரூபாய்க்கு முதலீடு செய்யப்படும் திட்டங்கள் எல்லாம் சூப்பர் மெகா திட்டங்கள் என்று கருதப்பட்டு, அதற்காக சில பிரத்தியேகச் சலுகைகள் அளிக்கப்படும் என்று அந்த ஆணையிலே அறிவிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்ட தொழில்களுக்கு 14 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளுபடி, இதுதான் முதன்முதலாக தமிழ்நாட்டில் அளிக்கப்பட்ட சலுகை. அது சூப்பர் மெகா திட்டம், 1500 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்யப்படுகிற திட்டம் என்பதால் 14 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளுபடி அல்லது விற்பனை வரி ஒத்திப்போடுதல் இந்த இரண்டில் ஒன்றை, அந்தத் தயாரிப்பாளர் அவருடைய ஆப்ஷனுக்கு எடுத்துக்கொள்ளலாம். இதிலே விற்பனை வரியை அறவே தள்ளுவதைவிட ஒத்திப்போடுவதுதான் அவருக்குச் சௌகரியமானது. அதைத்தான் அவர்கள் அனேகமாகத் தேர்ந்தெடுப்பார்கள் என்று கருதுகின்றேன். ஏனென்றால் தள்ளி விட்டால் 100 ரூபாய்க்கு ஒரு பொருளை விற்கும்போது வரி இல்லை என்றால் 100 ரூபாயோடு போய்விடும். வரி என்றால் 110 ரூபாய்க்கு --- அந்த 10 ரூபாய் -- அதை சர்க்காருக்குக் கட்டாமல்

அவர்களே வைத்துக் கொண்டு இந்த 14 ஆண்டுக் காலம் அந்தப் பணத்தை புரட்டிக் கொண்டே இருப்பார்கள். எனவே அதைத்தான் அவர்கள் விரும்புவார்கள். தாராளமான சலுகை இப்படி வழங்கப் பட்டது. இந்த விற்பனை வரி தள்ளுபடி 14 ஆண்டு காலத்தில், முதலீட்டுத் தொகையைவிட குறைவாக வந்தால் மீண்டும் சலுகை நீட்டிக்கப்படும் என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இது அதிகபட்சமாக 7 ஆண்டுகள் கூட நீடிக்க இயலும் என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. எல்லை இல்லாமலேயே விற்பனை வரி சலுகை 14 ஆண்டுகள் முடிவடையும் வரையிலே அனுபவிக்க அவர்களால் இயலும். இந்தச் சலுகையெல்லாம் நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல 1500 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்து தொடங்கும் தொழிற்சாலைக்கு மாத்திரமே உண்டு. ஆனால் 3 ஆம் தேதியன்று ஃபோர்டு கம்பெனியோடு ஒப்பந்தம் கையெழுத்தான நேரத்தில், அந்த ஒப்பந்தத்தில் இந்தச் சலுகைகள் எல்லாம் குறிக்கப்பட்டு உறுதியளிக்கப்பட்ட போதிலும், ஃபோர்டு நிறுவனம் 5 ஆண்டு காலத்தில் முதலீடு செய்ய உத்தேசித்துள்ள தொகை எவ்வளவு என்பது குறிப்பிடப்படவே இல்லை. 1500 கோடி முதலீடு செய்தால்தான் இந்த சலுகைகள் என்று அரசின் ஆணையில் இருக்கிறது. ஆனால், செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இந்த 1500 கோடியும் இல்லை; அடுத்தடுத்து வருகின்ற ஆண்டுகளிலே எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும் என்ற குறிப்பும் அந்த ஒப்பந்தத்திலே இல்லை.

ஆனால், அதற்கு அடுத்து, கொரியாவை சேர்ந்த ஹுண்டாய் நிறுவனத்தோடு இந்த அரசு, இந்த புதிய அரசு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி, முதலீடு தொகை எவ்வளவு என்று அதிலே உறுதியாகக் குறிப்பிடப்பட்டது. துவக்கத்தில் 1500 கோடி ரூபாய்; முதற்கட்ட முடிவில், அதாவது 5 ஆண்டுகளில் 2400 கோடி ரூபாய்; இரண்டாவது கட்ட முடிவில், அதாவது 10 ஆண்டுகளில் 3400 கோடி ரூபாய் என்று திட்ட வட்டமாக நாம் செய்துகொண்ட கொரிய கார் ஒப்பந்தத்தில், உறுதியாகக் குறிப்பிட்டு இருக்கிறோம். மேலும், அ.தி.மு.க.

ஆட்சியில் ஃபோர்டு நிறுவனத்திற்கு நில ஆர்ஜித சட்டத்தின்கீழ் 335 ஏக்கர் ஒப்படை செய்யப்பட்டது. தற்பொழுது கொரியாவின் ஹுண்டாய் நிறுவனத்திற்கு, அதே நில ஆர்ஜித சட்டத்தின்கீழ் 534 ஏக்கர் தரப்பட்டுள்ளது. இதிலே, நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் இந்த நிலத்தை அரசாங்கத்தின் அனுமதியின்றி அந்த நிறுவனம் வேற யாருக்கும் விற்கவோ மாற்றவோ கூடாது - இது நம்முடைய ஒப்பந்தம். ஆனால், அ.தி.மு.க. அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அதுபோன்ற கட்டுப்பாடு எதுவும் இல்லை. அவர்கள் இஷ்டத்திற்கு யாருக்கும் விற்றுக் கொள்ளலாம். இந்தக் கட்டுப்பாடு அந்த ஒப்பந்தத்திலே இல்லாத காரணத்தால், அரசாங்கம் தொழிற்சாலை தொடங்குவதற்கு ஒப்படை செய்த நிலத்திலே ஒரு பகுதியை அவர்கள் விலைக்கு விற்கக்கூட உரிமை உண்டு என்று ஆகிறது.

எனவே, இந்த 3 மாத காலத்தில் இந்த இரண்டு கார் ஒப்பந்தங்களுக்குப் பிறகு, இந்த அரசு செய்து கொண்ட மற்றொரு ஒப்பந்தம், எம்.ஓ.யூ. கையெழுத்தான மற்றொரு தொழிற்சாலை, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பில்கிங்டன் நிறுவனம் 550 கோடி ரூபாய் முதலீட்டில் செங்கற்பட்டுக்கு அருகில் செங்குன்றம் கிராமத்தில் கண்ணாடி தொழிற்சாலை -- இதற்கான கையெழுத்து 16-7-1996-ல் ஆனது. கொரியா காருக்கான கையெழுத்து 18-7-1996-ல் ஆகி இருக்கிறது. இந்த இரண்டு மூன்று மாத காலத்திலே இந்த இரண்டு பெரிய தொழிற்சாலைகளை தமிழகத்திற்குக் கொண்டுவந்த பெருமை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்களுக்கும் இந்த அரசுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மூன்றாவதாக எம்.ஓ.யூ. கையெழுத்தான மற்றொரு தொழிற்சாலை டிட்கோ நிறுவனமும் மத்திய அரசுக்கு சொந்தமான டெலிகம்யூனிகேஷன் கன்சல்டன்ஸி இந்தியா லிமிடெட் நிறுவனமும் இணைந்து 'கியூஜி குரா' என்ற ஜப்பான் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவி மற்றும் நிதி உதவியுடன் ஆப்டிக்கல் ஃபைபர் டெலிஃபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை 41.5 கோடி ரூபாய் முதலீட்டில் மறைமலைநகரில் தொடங்குவதற்கான

ஒப்பந்தம் 2-8-1996-லே கையெழுத்து ஆகி இருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதைத் தவிர பரிசீலனையில் உள்ள திட்டங்கள், பரிசீலனையில் உள்ள திட்டங்கள் என்றால் பரிசீலனையிலேயே இருந்துவிடாது; விரைவிலே நிறைவேறப் போகின்ற திட்டங்கள் என்றுதான் அதற்குப் பொருள்.

(1) 45 கோடி ரூபாய் செலவில் பல்க் டிரக் மற்றும் இன்டர்மீடியட்ஸ்.

(2) 60 கோடி ரூபாய் செலவில் பிளட் பேக்ஸ் மற்றும் லார்ஜ் வால்யூம் ஆஃப் ஐ.வி. ப்ளூயிட்ஸ்.

(3) 70 கோடி ரூபாய் முதலீட்டில் இண்டஸ்ட்ரியல் என்சைம்ஸ்.

(4) 40 கோடி ரூபாய் முதலீட்டில் பென்சைல் கெமிக்கல்ஸ்.

(5) 1200 கோடி ரூபாய் செலவில் கேஸ் வாங்கி வைக்குமிடம் எல்.என்.ஜி. ரிசீவிங் டெர்மினல்.

(6) 300 கோடி மதிப்பீட்டில் ஹெவி மினரல் செபரேஷன் மற்றும் இல்மினேட் பெனிபிசியேசன்ஸ் & ரூடைல் தயாரிப்பு.

(7) 550 கோடி ரூபாய் முதலீட்டில் செயின்ட் கோபைன் கிளாஸ் திட்டம் - கண்ணாடி தொழிற்சாலை திட்டம்.

இஃதன்னியில், நான் டில்லி சென்று வந்த பிறகு சொல்லுகின்ற செய்தி, மத்திய அரசு லைசென்ஸ் வழங்க - உரிமம் வழங்க தயார் நிலையிலே உள்ள தொழிற்சாலைகள். திருப்பெரும்புத்தூரில் 13 கோடி ரூபாய் முதலீட்டில் இரத்தம் சேகரிக்கும் பைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றுக்கான அனுமதியை இன்வால் மெடிக்கல் இன்டியா என்ற நிறுவனத்திற்கு வழங்குவதற்கு இந்த அரசு பரிந்துரைத்து, அதற்கான முடிவை மத்திய அரசு விரைவிலே அறிவிக்க உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தப்

புதிய தொழிற்சாலை அமைப்பதில் அரசு நிறுவனமான டிட்கோ, 11 சதவிகிதம் முதலீடு செய்யவுள்ளது. தொழில் நுட்ப உதவி, ஜெர்மனியைச் சேர்ந்த BIRKMEIER G.M.B.H. என்ற நிறுவனம் வழங்கி உள்ளது. அடுத்து, 240 கோடி ரூபாய் முதலீட்டில், டிட்கோவின் பங்கு முதலீட்டுடன் 100 சதவிகித பெட்ரோலியம் ரிபைனரி ப்ராஜக்ட்டுக்கான அனுமதியும் வந்துகொண்டிருக்கிறது. ஐதராபாத் மற்றும் குவைத் தொழிலதிபர்களை முதலீட்டாளர் களாகக் கொண்ட பென்னர் குரூப் நிறுவனம் அமைப்பதற்கான உரிமம், மத்திய அரசால் விரைவில் வழங்கப்பட உள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மணி அவர்கள் பேசுகின்றபோது, ரப்பர் டயர் தொழிற்சாலை பற்றிக் குறிப்பிட்டார்கள். டிட்கோ மூலம், ரப்பர் டயர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் 500 கோடி ரூபாய் முதலீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இடத் தேர்வு நடைபெறும் நிலையில், நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றத்திலே தடையுத்தரவைப் பெற்றுவிட்ட காரணத்தால், அது நின்றுவிட்டது. ஆனால் தடையுத்தரவைத் தளர்த்தவோ அல்லது நீக்கவோ முன்பிருந்த அரசு தொடர் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. நான் மணி அவர்களுக்கு உறுதி கூறிக் கொள்கின்றேன். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் இத்தொழிற்சாலை துவக்கப்படுவதில் உள்ள சிக்கல்களை ஆய்வு செய்து, வேறு ஒரு இடத்தை - இப்போது தகராறுக்குள்ளான இடத்தை மாற்றிவிட்டு, வேறு ஒரு இடத்தை, குமரி - நெல்லை மாவட்ட எல்லையில் விரைவில் தேர்வு செய்து, ரப்பர் தொழிற்சாலை உடனடியாகத் தொடங்கப்படவேண்டுமென்று முடிவெடுத்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தூத்துக்குடி, திருச்செந்தூர் பகுதிகளிலும், குமரி மாவட்டப் பகுதிகளிலும் கிடைக்கும் மணலைப் பயன்படுத்தி, சிந்தெடிக் ரூடைல் என்ற பொருளை உற்பத்தி செய்ய. ரூ. 400 கோடி செலவில் ஒரு திட்டம் பரிசீலனையில் உள்ளது. ஆஸ்திரேலியா

நாட்டு நிறுவனம் இதற்காக நம்மை அணுகியிருக்கின்றது. அதுவும் விரைவில் நிறைவுறும், தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கன்னியாகுமரி மாவட்டம் தொழில் வளம் இல்லாத மாவட்டம் என்றால், அதைப்போலத்தான் எங்களுடைய மாவட்டமும் தொழில் வளம் இல்லாத மாவட்டம். எனவே, நாம் இருவரும் வருங்காலத்தில் போட்டி போட்டுக்கொண்டு, கன்னியா குமரியிலும் தஞ்சையிலும் தொழில் வளர்ப்போம். பொதுவாகத் தமிழகத்திலேயும் தொழிலை வளர்ப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்வோமாக.

மாண்புமிகு உறுப்பினர் தா. கிருட்டிணன். பொட்டாசியம் குளோரைடு தீப்பெட்டி தயாரிக்க மூலப் பொருளாகப் பயன் படுத்தப்படுகிறது என்றும். அதற்குத் தமிழ்நாட்டில் 11 சதவீதம் விற்பனை வரி செலுத்தவேண்டியுள்ளது என்றும் கூறினார்கள். தற்போது தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு நாம் அறிவித்த வரிச்சலுகையின் அடிப்படையில், தமிழ்நாட்டில் தீப்பெட்டி தயாரிப்பதற்காக பொட்டாசியம் குளோரைடு மூலப் பொருளாக வாங்கப்பட்டால், அதற்கு விற்பனை வரி 3 சதவீதம்தான் விதிக்கவேண்டுமென்று இந்த மன்றத்திலே அறிவித்திருப்பதை நான் திரு. கிருட்டிணன் அவர்களுக்கு நினைவுபடுத்துகின்றேன். அதற்கான நோட்டிபிகேஷன் விரைவில் வெளியிடப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழக ஆட்சியின்போது, தொழில் துறையில் ஒரு முற்போக்குக் கட்டமாக ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஜாயிண்ட் செக்டார் என்று இருந்தது. ஜாயிண்ட் செக்டார் என்றால் அரசு சார்பிலே 26 சதவீதம் பங்கு. அசோசியேட் செக்டார் என்றால் அரசின் சார்பில் 11 சதவீதம் பங்கு. கழக ஆட்சி முன்பிருந்த போது அப்படி ஒன்றை முன்பு ஆரம்பித்தோம். இப்படி 11 அல்லது அதற்கும் குறைவான சதவிகிதத்தை அரசு முதலீடு செய்யும். இதன் மூலம், தனியார் நிறுவனங்கள். அரசின் ஆதிக்கம் அதிகம் இல்லாமல், அதே நேரத்தில் தொழில் வளர்ச்சிக்கான அனைத்து அரசு

உதவிகளையும் பெற்றுச் சுதந்திரமாகத் தொழிற்சாலைகளைச் செயல்படுத்த அப்போதே வழிவகை காணப்பட்டது. 1989-ல் கழக ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின்படி, இதுவரை 49 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழக ஆட்சியிலே தொழிற்சாலைகளைப் பெருக்க இவ்வாறு வழிவகைகளைக் கண்டதற்கு மாறாக, அ.தி.மு.க. ஆட்சியில். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல, நன்றாக நடைபெற்ற தொழிற்சாலைகளையும் தனியாருக்குத் தாரை வார்க்க ஏற்பாடுகள் நடைபெற்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் விளக்கமாகச் சொன்னார். ரங்கநாதன் அவர்கள் அதைச் சுட்டிக் காட்டினார். தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் கீழ் இயங்குகின்ற அரியலூர் சிமெண்ட் ஆலை, ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, ஆலங்குளம் ஆஸ்பெஸ்டாஸ் பயிற்சித் தொழிற்சாலை, ஸ்டோன்வேர் பைப்ஸ், விருத்தாசலம் ஆகியவை 1995-96-ல் மாத்திரம் 186 கோடி ரூபாய்க்கு சிமெண்ட் பைப் போன்றவைகளை விற்பனை செய்து. அந்த ஆண்டு 7.5 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளது. ஆனால் இந்த கம்பெனியை தனியார்மயமாக்க டெண்டர் கோரப்பட்டது. நலிவடைந்த தொழிற் சாலையாக இருந்தால், நிறுவனமாக இருந்தால், தனியாரிடத்தில் தள்ளிவிடலாம் என்று அரசு எண்ணுவது இயற்கை. ஆனால் 7 கோடி ரூபாய் இலாபம் ஈட்டிய ஒரு தொழிற்சாலையை தனியார்மயமாக்க டெண்டர் கோரப்பட்டது. அதை எதிர்த்து தொழிலாளர்கள் நீதிமன்றம் சென்றார்கள். அப்போது இன்றைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். அன்றையதினம் கழகத்தின் பொருளாளர் என்ற முறையில் - இன்றைக்கும் பொருளாளர்தான் - அன்றையதினம் கழகத்தின் பொருளாளர் என்ற முறையில் ஒரு வழக்கைத் தொடுத்து இடைக்கால தடை வாங்குகிற அந்த வழக்கில் தொழிலாளர்களோடு பங்கு கொண்டு, அந்த வழக்கில் ஈடுபட்டார். அதன்காரணமாக அப்போது விற்பனை தடுக்கப்பட்டு 3,000 தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்பட்டது என்பதை நான் இங்கே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1000 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள் - எங்கே? தமிழ் நாடு தொழில் வெடி மருந்து தொழிற்சாலையில். அது முதன் முதலாக 1995-96 ஆம் ஆண்டுதான் லாபம் பெறவே தொடங்கியது.

அது ஆரம்பத்திலேயிருந்தே நஷ்டத்தில் போய்க் கொண்டிருந்தது. அதை அவ்வப்போது சீர்திருத்தி, கொஞ்சம் கொஞ்சமாக அந்த நலிவைப் போக்கி, 1995-96 ஆம் ஆண்டில் தான் அது இலாபம் பெறத் தொடங்கியது. அன்று அந்தப் பணியை ஏற்றுகொண்டிருந்த இன்றைய தொழில் துறை செயலாளர் அந்த இலாபத்திற்கு காரணகர்த்தாவாக விளங்கினார். உடனே, இலாபம் பெற்றால் இருக்கலாமா? அதையும் தனியாருக்கு விற்பனை செய்ய அன்றைக்கிருந்த அரசு, கோவையைச் சேர்ந்த ஒரு தனியார் - ஒரு தனியார் அல்ல இரண்டு தனியார்கள் - தெரியும் என்று கருதுகிறேன் - நான் சொல்ல விரும்பவில்லை பெயர்களை எல்லாம். இரண்டு தனியார்களுக்கு விற்பனை செய்ய முன் வந்தார்கள். 10 ரூபாய் ஷேரை, 10 ரூபாய் பங்குத் தொகையை, 2 ரூபாய் 50 காசுக்கு முதலில் விற்க முனைந்தார்கள். பிறகு, அவர்கள் சரிதான், 10 ரூபாய் ஷேரை 2½ ரூபாய்க்கு கொடுக்க வருகிறார்களே என்று, அவர்கள் ஒரு ரூபாய்க்கு கேட்டார்கள். அதைக் கொடுக்கிற நேரத்தில், எப்படி கொடைக்கானல் ஓட்டலுக்கு மறுப்பு எழுதினாரோ அந்தச் செயலாளர், அதைப்போல இந்தச் செயலாளர் அங்கே இருந்த காரணத்தால், இதற்கு வன்மையாக ஒரு மறுப்பை அவர் எழுதினார். இந்த எதிர்ப்பின் காரணமாக அந்த விற்பனையும் நல்லவேளையாக நின்றுவிட்டது. இல்லாவிட்டால் இந்த அரசு வரும்போது, இந்த தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலைகளும் இருந்திருக்காது. இந்த வெடி மருந்து தொழிற்சாலையும் இருந்திருக்காது.

அதைப்போலவே அரக்கோணம் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் - எஃகு நிறுவனம். அது 1972 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட நிறுவனம் ஆகும். சுமார்

ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலை. 1995-96 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் விற்பனை செய்த பொருள்களின் மதிப்பு 87.72 கோடி ரூபாய். அந்த நிறுவனத்தினுடைய ஆதாயத்தை விட, அதிலே மிக முக்கியமானது என்ன வென்றால். அந்த நிறுவனத்திற்கான நிலம் 645 ஏக்கர் - அந்த 645 ஏக்கர் நிலத்தின் மீது மாத்திரமே குறிவைத்திருந்த ஒருவர், அந்த நிறுவனத்தை தான் வாங்கிக் கொள்வதாகச் சொல்லி, பேரம் பேசி, விலை பேசிய நேரத்தில், அப்போதும் நல்லவேளை தொழிலாளர்கள் - தொழிலாளர்கள் தங்களை மாத்திரம் காப்பாற்றிக் கொள்ளவில்லை. தொழிற்சாலைகளையும் காப்பாற்றுகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு இதை விட வேறு ஒரு எடுத்துக்காட்டு இருக்க முடியாது. அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தடையாணை பெற்றார்கள். எனவே அந்த விற்பனையும் தடுக்கப்பட்டது. இல்லாவிட்டால் அரக்கோணம் எஃகு நிறுவனமும் இந்த அரசை விட்டு போய் இருக்கும் தனியாருக்கு. ஆனால் இந்தக் கழக அரசைப் பொறுத்தவரையில் அரசுக்குச் சொந்தமான இதுபோன்ற நிறுவனங்களை, அது நலிவடையாதபட்சத்தில், நலிவடைந்திருந்தாலும் அதை மீண்டும் தூக்கி நிமிர்த்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கும்பட்சத்தில், நிச்சயமாக தனியாருக்கு அவைகளை தாரை வார்க்காது என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கடந்த கால ஆட்சியில் தொழிற்சாலைகள் எந்த அளவுக்கு நடத்தப்பட்டன என்பதற்கு மத்திய அரசினுடைய ஆய்வுத் துறை - ஆடிட்டிங் - அவர்கள் இதே அவையில் வைத்த கணக்குப் புள்ளி விவரமே சான்று. அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே இருப்பவர்கள் எல்லாம் அன்று இருந்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பு என்ன சொல்கிறது? ஸ்பிக் நிறுவனப் பங்குகளை டிட்கோ நிறுவனம் வாங்கிக் கொள்ளாமல் அந்த நிறுவனமே குறைந்த விலையிலே அந்தப் பங்குகளை வாங்கிக்கொள்ள வழி செய்த வகையில், அரசாங்கத்திற்கு 12.37 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது என்று மத்திய அரசின் தணிக்கை அதிகாரி

அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அவருக்குக் கிடைத்த விவரம் அவ்வளவுதான். ஆனால், உண்மையிலேயே ஏற்பட்ட நஷ்டம் 33 கோடி ரூபாய் அரசுக்கு. 58.45 இலட்சம் பங்குக்குக் கிடைத்திருக்கவேண்டிய நஷ்ட ஈடு 46.76 கோடி. ஆனால் இவர்கள் மிகக் குறைந்த விலைக்கு விற்ற காரணத்தால், கிடைத்த நஷ்ட ஈடு 12.37 கோடி. ஆகவே, டிட்கோவிற்கு ஏற்பட்ட நஷ்டம் 33 கோடி ரூபாய்.

திரு. ஆர். சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிட்கோவினுடைய. 1991-92 ஆம் ஆண்டு அறிக்கை யின்படி 31-3-1992 ஆம் தேதியில் ஸ்பிக்கினுடைய ஒரு பங்கின் விலை 210 ரூபாய். டிட்கோ கொடுத்த பங்கு மொத்தம் 50 இலட்சத்து 83 ஆயிரம் பங்குகள். ஆகவே, டிட்கோவினுடைய அறிக்கையின்படியே 106 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பு. இதை 12 கோடியே 37 இலட்சம் ரூபாயை வாங்கிக் கொண்டு, கொடுத்துவிட்டார்கள். இந்தக் கணக்கின்படி. அவர்களுடைய கணக்கின்படியே 82 கோடி ரூபாய் நஷ்டம் என்பதுதான் சரியான கணக்கு என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தேதியைக் கூட திருத்திச் சொல்லவேண்டும். 21-3-1992. 21-3-1992 ஆம் தேதிதான் பங்கை விட்டுக் கொடுக்கிறார்கள். அதற்கு முன்தினம் 20-3-1992 ஆம் தேதி. ஸ்பிக் பங்கின் சந்தை விலை ரூபாய் 105. முதல்நாள் 105 ரூபாயாக இருந்தது. பங்கினுடைய சந்தை விலை, ஒரு பங்கு ஒரு ஷேர் விலை 105 ரூபாயாக இருந்தது. நியாயமாக 105 ரூபாயை அடிப்படையாக வைத்து விற்றிருக்க வேண்டும்.

திரு. ஆர். சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிட்டுச் சொல்வதற்கு மன்னிக்கவேண்டும். அந்தப் பங்கைக் கொடுப்பதாக அப்போதைய அரசு முடிவு எடுத்த தேதிதான் 21-3-1992. ஆனால் பங்கைக் கொடுக்கலாமா, வேண்டாமா என்று முடிவு எடுப்பதற்கு ஏப்ரல் மாதம் வரையிலும் கடைசி தேதி இருந்தது. ஆனால் பங்கினுடைய விலை ஏறிக்

கொண்டே போகிற நேரத்தில், அதற்காக காத்திராமல் மிகக் குறைந்த தேதியிலே ரெக்கார்டு தேதியை அடிப்படையாகக் கொண்டு, அவர்கள் நிர்ணயம் செய்த காரணத்தால்தான் இந்த 82 கோடி ரூபாய் அளவிற்கு அந்த நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மத்திய அரசினுடைய தணிக்கை அதிகாரி 12 கோடி என்கிறார். எனக்குக் கிடைத்த விவரத்தின்படி 80 கோடிக்கு மேல். எப்படியோ கோடி கோடியாக போய் இருக்கிறது. இதுதான் உண்மை. இதிலே, இந்த மத்திய அரசினுடைய தணிக்கை அதிகாரியினுடைய அறிக்கை இந்த அவையிலே இருந்தபோது, அதைப்பற்றிப் பேச எந்த உறுப்பினருக்காவது வாய்ப்பு கிடைத்ததா, பேச முடிந்ததா? (குறுக்கீடு). 'had TIDCO adopted this rate for computing the value of premium to be received it would have a revenue advantage of Rs. 12.09 crores' அதாவது டிட்கோ நிறுவனம் இந்த முறையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, பிரிமியம் வசூலித்து இருந்தால். 12.09 கோடிரூபாய் வருவாய் கூடுதலாகக் கிடைத்திருக்கும் என்று மத்திய அரசின் தணிக்கை அறிக்கை குறிப்பிடுகிறது. மேலும் 'as such discounting the rate further to arrive at the present value was not proper and was not supported by said formula'. அதாவது, இந்த நிலையில், தற்போதைய நிலையில், மேலும் தள்ளுபடி செய்தது முறையானது அல்ல, எந்தக் கொள்கையையும் அடிப்படையாகக் கொள்ளாமல், இருக்கலாம். கொள்கையை அடிப்படையாகக் கொண்டது என்பதில் யாருக்கும் இன்னொரு கருத்து இருக்க முடியாது அந்த நிலையிலேதான் அந்தப் பங்கு விற்பனை நடைபெற்றிருக்கிறது.

தலைவர் அவர்களே, இந்த அரசு தொழில் அதிபர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு அரசாங்கம் உதவியாக இருக்கவேண்டும். அதாவது 'Investor-friendly' என்று நிதிநிலை அறிக்கையிலேயே நான் குறிப்பிட்டு இருக்கிறேன். அதுமாத்திர மல்ல, விரைந்து முடிவு எடுக்கவேண்டிய ஒரு அரசுதான் முதலீட்டாளர்களுக்குத் தேவையும் கூட. நம்முடைய பழனிசாமி அவர்கள் பேசும்போது இதைக் குறிப்பிட்டார். விரைவில்

காரியங்கள் நடைபெறவேண்டும். திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். அதைத்தான் முதலீட்டாளர்களும் விரும்புகிறார்கள். அவர்களுக்கு அளவுக்கு மீறிய சலுகைகள் கூட முக்கியமல்ல. அவர்கள் கேட்காத சலுகைகளை அளிப்பதாகக் கூறி இடையிலே பேரம் பேசுவதைத்தான் அவர்கள் விரும்புவதில்லை. தொழிற்சாலைகள் அமைக்க 'Good atmosphere' பொருத்தமான ஒரு சூழ்நிலையைத்தான் தொழிலதிபர்கள், தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கின்றார்கள். அவர்களுடைய பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அதனைத் தீர்த்துவைக்கும் அரசைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள், விரும்புகிறார்கள். தொழில் முனைவோருக்கு முக்கியமான தேவைகளிலே ஒன்று மின்சாரம். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அதைக் குறிப்பிடத் தவறவில்லை. மின்சாரத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் எந்தப் புதிய முதலீடும் செய்யப்படவில்லை. 1989-லே நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்பு அன்றைய முதலமைச்சராக இருந்த மறைந்துவிட்ட அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் வடசென்னையிலே ஒரு மின் நிலையத்தை உருவாக்க மத்திய அரசோடு பேசி அதற்கான அனுமதியைப் பெற்றிருந்தார். ஆனால் அந்த நிலையத்தை உருவாக்கமுடியாமல் அந்த இடத்திற்கு உரியவர்கள் உச்சநீதிமன்றத்திலே சென்று தடையாணை பெற்றுவிட்டார்கள். ரூ. 500 கோடியிலே உருவாக வேண்டிய அந்தத் திட்டம் தாமதப்பட்டது. 1989-லே நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அந்தத் திட்டத்தைப் பற்றி ஆய்வு செய்து, இந்த ரூ. 500 கோடியிலே உருவாகி இருக்கவேண்டிய திட்டம், இப்போது ரூ. 700 கோடி அளவிற்கு வளர்ந்து விட்டது. இருந்தாலும் அதை நிறைவேற்றவேண்டுமென்று நிலத்திற்கு உரியவர்கள் யார் என்று தேடிப் பார்த்து பன்னீர்தாஸ் குடும்பத்தினர் என்பதை அறிந்து பன்னீர்தாஸினுடைய இளவல் சந்தோஷம் அவர்களை அழைத்துப் பேசி, அவர் என்னிடத்திலே சொன்னார், பன்னீர்தாஸினுடைய பெயரிலே அங்கே ஒரு பொருட்காட்சியோ, கண்காட்சியோ அமைக்கப் போகிறோம். தங்கக் கடற்கரையைப் போல, அது எங்கள் அண்ணனின் ஆசை என்று சொன்னார். நான் அவரிடத்திலே சொன்னேன். உங்கள் அண்ணனின் ஆசை அந்த

இடத்தை மாத்திரம் வளப்படுத்துவது. எங்கள் அண்ணாவின் ஆசை தமிழ்நாட்டையே வளப்படுத்துவது. ஆகவே தயவுசெய்து அந்த இடத்தை விட்டுக்கொடுங்கள் என்று கேட்டு அவரிடத்திலே பிறகு பேச வேண்டிய முறையில் எல்லாம் பேசி, பிறகு அவர் வேறு வழி இல்லாமல் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அவர் தாக்கல் செய்திருந்த வழக்கைத் திரும்பப் பெற்று, அடுத்த ஒரு வாரத்திற்கெல்லாம் அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வி. அவர்களை அழைத்து அதனுடைய தொடக்க விழா நடைபெற்றது. அதற்குப் பிறகு அதனுடைய பணிகள் பாதி அளவிற்கு நிறைவேறிய நேரத்திலே ஆட்சி கலைக்கப்பட்டது. அடுத்து வந்த ஆட்சியிலே இந்தத் திட்டம் தொடர்ந்தது என்பதைத் தவிர, தொடர்ந்த நேரத்திலே எவ்வளவு ஊழல்கள் அதிலே உருவாயின. எத்தனை வழக்குகள் நடைபெற்றன என்பதையும் நாடு மிக நன்றாக அறியும். இந்த ஒரு திட்டத்தைத் தவிர மின்சாரத் துறையில் வேறு எதுவும் நடைபெறவில்லை. அதுவும் எம்.ஜி.ஆர். தொடங்கி, பிறகு கைவிடப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்ட திட்டம் அந்த ஒரு திட்டம்தான். அதன் பிறகு இப்போது இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 100 மெகாவாட் திறன் கொண்ட 20 மின் திட்டங்களை டிட்கோ மூலம் இணைத்துறையிலோ அல்லது கூட்டுத் துறையிலோ. அசோசியேட் செக்டாரிலோ அல்லது ஜாயிண்ட் செக்டாரிலோ தொடங்குவது என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை மின்சாரம் தேவை தொழிலுக்கு என்று இங்கே வலியுறுத்திய அறிவுறுத்திய உறுப்பினர்களுக்கு எல்லாம் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஒவ்வொன்றும் 100 மெகாவாட் திறன் உள்ள 20 மின் திட்டங்கள் தொடங்கப்பட இருக்கின்றன. இந்த 100 மெகாவாட் திட்டம் ஒவ்வொன்றின் உத்தேச மதிப்பீடு ரூ. 400 கோடியாகும். மொத்தம் 2000 மெகாவாட் இந்த 20 திட்டங்களில். 20 திட்டங்களுக்கும் சேர்ந்து மொத்த முதலீடு ரூ. 8000 கோடியாகும். இந்தத் திட்டம் நிறைவேற உத்தேசிக்கப்பட்ட இடங்கள் - மணலி, கும்மிடிப் பூண்டி, அரக்கோணம், ராணிப்பேட்டை, திருப்பெரும்புதூர், மறைமலை நகர், கடலூர்-1, கடலூர்-2, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், திண்டுக்கல், திருமங்கலம், வாடிப்பட்டி,

நிலக்கோட்டை, ஓசூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி, பெருந்துரை, 20-வது திட்டம் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. திருவாரூருக்கு இருக்கலாம் என்று நினைக்கிறேன். (சிரிப்பு) (குறுக்கீடு). மின்சாரத்தைப் பெருக்கு வதற்கு இந்தத் திட்டங்கள் மாத்திரமல்ல, NAPTHA அல்லது L.S.H.S. என்று சொல்லப்படுகிற Light Sulphur Heavy Stock அல்லது Furnace Oil பயன்படுத்துகின்ற ஒரு எரிபொருள், அந்த எரிபொருள் ஒதுக்கீட்டிற்காக மத்திய எண்ணெய் மற்றும் எரிவாயு அமைச்சகத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம்.

நேரிலேயும் பேசியிருக்கிறோம். கடிதங்கள் தொடர்ந்து எழுதிக்கொண்டும் இருக்கிறோம். இந்த மின்நிலையங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்து. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விநியோகம் செய்யும். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு. இந்த 100 மெகாவாட் தமிழ்நாடு மின் நிலையங்களுக்குமிடையே ஒரு 'பவர் பர்சேஸ் அக்ரீமெண்ட்' ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும். மின்சார வாரியம் 100 மெகாவாட் மின்நிலையங்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகைக்கு. கவர்ன்மெண்ட் கேரன்டி, அரசின் உத்திரவாதம் வழங்கப்படும். 15 ஏக்கர் நிலத்தை ஒவ்வொரு இடத்திலேயும் டிட்கோ நிறுவனம் ஏற்பாடு செய்யும். சிறிய திட்டம் என்பதால் 18 முதல் 20 மாதங்களுக்குள் கட்டுமானப் பணிகளை முடித்துக்கொண்டு, மின் உற்பத்தியைத் தொடங்கும் என்பதை மகிழ்ச்சியோடு, இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மின்சாரப் பற்றாக்குறையை எதிர்பார்த்து. முன்னெச் சரிக்கையாக, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விருப்பம் இல்லாதவர்களையெல்லாம் அழைத்து. இந்தத் திட்டத்தைத் தொடங்கக் கூறாமல் டெண்டர் மூலம் இந்தத் திட்டங்களை ஒப்படைக்க இருக்கிறோம். மேலும், இடம் கொடுக்கிறோம். எரிபொருள் ஏற்பாடு செய்து கொடுக்கிறோம். மின்சார வாரியத்தின் மூலம் பல உத்தரவாதங்களைத் தருகிறோம். சர்க்கார் உத்தரவாதம் தருகிறோம். ஜாயிண்ட் செக்டாரிலோ, அசோசியேட் செக்டாரிலோ நடத்தத் தயாராக இருக்கிறோம். தொழில் முனைவோருக்கு முழு சுதந்திரமும் தந்து அழைப்பதால், பலரும் இத்தொழில்களைத்

தொடங்க முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். மின்சாரத்தை அடுத்து தொழிற்சாலைக்கு முக்கியமான தேவை சாலை வசதி ஆகும். நான் நம்முடைய மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்களோடு பேசிக்கொண்டு இருந்தேன். அவர்கள் சென்ற முறை வந்தபோதும் அதைப்பற்றி என்னிடத்திலே பேசினார்கள். இப்போதும் நான் அவர்களிடத்திலே பேசினேன். அகலமான, அதே நேரத்தில் நீளமான சாலைகள் தொழிற்சாலை உருவாவதற்குத் தேவை என்பதைப் பற்றி இருவரும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டோம். இப்பொழுது, சென்னையிலிருந்து பெங்களூருக்குச் செல்லும் சாலையை, சென்னையிலிருந்து ஒசூர் வரையிலே இன்னும் அகலப்படுத்தி, ராணிப்பேட்டையிலே எப்படி தொழிற்பேட்டை இருக்கிறதோ, அதைப்போல சாலையின் இருமருங்கிலும் தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற ஒரு மாபெரும் திட்டத்தை இந்த அரசு வகுக்கவிருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி). அதைப்போலவே, சென்னையிலிருந்து மறைமலை நகர், விழுப்புரம் வரையிலும், விழுப்புரம் தாண்டியும்கூட சாலைகளை அகலப்படுத்தி, இருமருங்கிலும் தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற ஒரு மகத்தான திட்டத்தை இந்த அரசு வகுக்கவிருக்கின்றது என்பதையும், திரு. அழகிரி அவர்கள் குறிப்பிட்டதைபோல், சென்னை - திருச்சி புகைவண்டிப் பாதையை இன்றைக்கு மீட்டர் கேஜ்-ஆக இருப்பதை பிராட் கேஜ்-ஆக மாற்றுவதற்கு எல்லாப் பணிகளையும், எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது என்பதையும் நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, தண்ணீர் ஒரு முக்கியமான பிரச்சினை. தண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், உதாரணமாக கடலூரில் நிலத்தடி நீர் அதிகமாக உள்ளது. அந்தப் பகுதியிலே ஏராளமான தொழிற்சாலைகளைத் தொடங்கலாம் என்கின்ற எண்ணமும், அதற்கான திட்டங்களும் இந்த அரசுக்கு இருக்கின்றது. சென்னையிலே, நாங்கள் இன்றைக்கு 65 மில்லியன் கேலன் தண்ணீர் விநியோகம் செய்கிறோம். அதிலே, ஏராளமான நீர் கழிவுநீராக வீண் ஆகிவிடுகிறது. இந்தக் கழிவுநீரைச் சுத்தம் செய்து தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்த முடியும்.

வெளிநாடுகளில், இந்தக் கழிவு நீரைச் சுத்தம் செய்து குடிநீருக்கே பயன்படுத்துகிறார்கள். அவர்கள் குடிநீருக்கே பயன்படுத்தும் போது, நாம் ஏன் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது? சென்னையில், தற்போது மெட்ராஸ் ரீஃபைனரீஸ், தொழிற்சாலையில் இந்த முறை இப்போது கடைபிடிக்கப்பட்டு வருகின்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, தொழிற்சாலைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை யெல்லாம் செய்து கொடுக்க இந்த அரசு முனைப்பான பணிகளிலே ஈடுபட்டுள்ளது. ஆனால், கடந்த ஆட்சியில் தமிழகத்திற்கு வரவேண்டிய, எல்லை வரையில் வந்துவிட்ட சிங்கப்பூர் காரிடார் பெங்களூருக்குப் போய்விட்டது என்பதை யாரும் மறப்பதற்கில்லை. அதைப்பற்றி அப்போது எவ்வளவு வேகமாக அறிக்கைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள். பல்வேறு கட்சித் தலைவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதும். தொழில் துறையிலே அக்கறை உள்ளவர்கள், தமிழகம் தொழில்மயமாக வேண்டுமென்று எண்ணியவர்கள் எல்லாம் வெளியிட்டார்கள் என்பதும் நாம் மறந்துவிட்ட செய்திகள் அல்ல. எனவேதான், மத்தியிலே, டெல்லியிலே உள்ள பிரதமரை சந்தியுங்கள். அவரிடத்தில் பேசுங்கள் என்றெல்லாம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களும் மற்றவர் களும் சொன்னார்கள். நான் டெல்லியிலே உள்ள பிரதமரை மாத்திரமல்ல, சிங்கப்பூர் பிரதமருக்கும் எழுதியிருக்கிறேன். சிங்கப்பூர் காரிடார் போன கவலையில், சிங்கப்பூர் பிரதமருக்கே நான் கடிதம் எழுதினேன். 19, ஜூலை 1996-ல் சிங்கப்பூர் பிரதமர் எனக்கு எழுதிய பதில்.

To

Mr. Karunanidhi,
Chief Minister of Tamil Nadu,
Republic of India.

Excellency,

Thank you for letter, dated 2nd July 1996. Please accept my congratulations on your appointment as Chief Minister of Tamil Nadu. Our closed historical and cultural ties make for

strong, mutual trust and confidence which are fundamental for good rapport between our businessmen. I welcome your interest to strengthen Singapore-Tamil Nadu economic relations. Your letter to me is a strong assurance to Singapore of your commitment to bring Tamil Nadu closer to Sigapore. Since India's economic liberalisation in 1991, Singapore has been taking an active interest in Tamil Nadu. One of our three Singapore Trade Development Board Offices in India is based in Madras. Today, the Foreign Investment Promotion Board (FIPB) has approved 215 Singapore economic projects, of which 36 are joint ventures with the Tamil Nadu based companies. Your determination to put in place pro-business and investors-friendly economic policy will encourage not only Singapore Companies, but more international investors to put a higher stake in Tamil Nadu's economic development.

I look forward to closer relations between Singapore and Tamil Nadu for the mutual benefit of our two people.

Sd/- GOH CHOK TONG,
Prime Minister of Singapore.

என்று நாம் மகிழத்தக்க ஒரு கடிதத்தை சிங்கப்பூர் பிரதமர் நமக்கு எழுதியிருக்கிறார் என்றால் பிரதமர் கடிதம் எழுதினார் என்பது அல்ல, இந்த 2 மாத காலத்தில் 3 மாத காலத்தில் - தொழில் வளம் மிக்க வளமான தமிழகம் வலிவான இந்தியா என்று முழங்குகின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவூட்டு கிறேன் - வளமான தமிழகமாக தமிழகத்தை ஆக்குவதற்கு எவ்வளவு முயற்சிகளில் எல்லாம் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டத்தான் இந்தக் கடிதத்தை நான் இங்கே படித்துக் காட்டினேன். (மேசையைத் தட்டும் ஒலி).

'பிஸினஸ் இண்டியா' என்று ஒரு பத்திரிகை. அது ஒரு கட்டுரை ஜூன் மாதம் 94 ஆம் ஆண்டு எழுதியது. அதிலே முகப்பில் - அந்தக் கட்டுரையின் முகப்பில் குறிப்பிடுவது : அதை தமிழிலேயே சொல்கிறேன். அமைப்பு ரீதியாகப் பார்த்தால் தொழில்

தொடங்க நாட்டிலேயே தமிழ்நாடு ஒரு சிறந்த மாநிலம் ஆகும். சாலைகள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளன. 4,010 கிலோ மீட்டர் தொலைவுக்கு ரெயில் பாதைகள் உள்ளன. இரண்டு பன்னாட்டுத் துறைமுகங்கள் உள்ளன. ஒரு பன்னாட்டு விமான நிலையமும். 5 உள்நாட்டு விமான நிலையங்களும் தமிழ்நாட்டில் உள்ளன. அதுமட்டுமல்ல, 4366 வங்கிக் கிளைகள் தமிழகத்தில் உள்ளன. 100 சதவீதம் மின்மயமாக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடு. (இது 72-ஆம் வருடமே சாதிக்கப்பட்ட ஒரு காரியம் ஆகும்.) நகர்புற வளர்ச்சி 36 சதவிகிதமாக உள்ளது என்று சொல்லிவிட்டு இவ்வளவுக்கும் மேலே ஒரு இண்டஸ்ட்ரியலிஸ்ட் என்ன சொன்னார் என்பதைத்தான் பத்திரிகை எழுதுகிறது. Says one well-known Industrialist, "We do not mind corruption so long as it delivers the goods. In the case of the AIADMK Government, the irritant is that it fails to honour its commitment for which we have already paid a fee." கரப்ஷனைப்பற்றி எங்களுக்கு கவலையில்லை; கொடுத்து காரியம் நடக்க வில்லையே என்பதுதான் கஷ்டமாக இருக்கிறது என்று ஒரு இண்டஸ்ட்ரியலிஸ்ட் சொன்னார் என்பதாக பிஸினஸ் இண்டியா எழுதுகிறது.

Says one Madras-based Industrialist : "You need not cultivate every Tom, Tick & Harry. If you can please the presiding Deity"

- மூலவிக்கிரகத்தைப் பார்த்தால் போதும் -

"Your interests are taken care of. But, if you fall out ever, your life is a mess. Jayalalitha's whimsical behaviour has been reported to put off several major industrial houses."

எந்த ஒரு காரியம் நடைபெற வேண்டும் என்றாலும் அதற்கு லஞ்சம் தரவேண்டும் என்பது எங்களுக்குத் தெரிந்த ஒன்றுதான். ஆனால் அ.தி.மு.க. அரசைப் பொறுத்தவரையில் எரிச்சலூட்டும் விஷயம் என்னவென்றால் நாங்கள் லஞ்சம் கொடுத்தாலும்கூட எந்த காரியமும் நடைபெறவில்லை என்பது தான் என்று ஒரு பிரபல தொழிலதிபர் ஒருவர் அண்ணா தி.மு.க. அரசில் எல்லோரையும் திருப்திப்படுத்த வேண்டும் என்ற

அவசியம் இல்லை, தலைமைப் பொறுப்பிலே இருக்கும் மூலவிக்கிரகத்தை திருப்திப்படுத்தினாலே நினைத்த காரியம் முடிந்து விடும். ஆனால் அப்படி திருப்திப்படுத்தி காரியம் நடைபெறாது போனால் பெரும் சிக்கல்தான் என்று கூறியிருக்கிறார். இப்படி முன்னாள் முதலமைச்சர் அவர்களின் பிரதான போக்கு காரணமாக பல பெரும் தொழிற்சாலைகளை தமிழ்நாடு இழந்து விட்டது என்று பத்திரிகை எழுதுகிறது. "Although Tamil Nadu's infrastructure is one of the best, Jayalalitha's behaviour has put off business-men. தொழில் தொடங்குவதற்கான அனைத்து வசதிகளும் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இருந்தாலும்கூட ஜெயலலிதாவின் நடவடிக்கை பல தொழிலதிபர்களை தொழில் தொடங்க வொட்டாமல் செய்துவிட்டது என்று வேதனையோடு அந்தச் செய்தி வெளியிடுகிறது.

மின்சாரத்தை இன்னும் விரிவாக்குவதற்கு மேலும் ஒரு பெரிய திட்டம். இந்தத் திட்டத்தை அறிவித்தால் அது பெரிய கனவு போல் உங்களுக்குத் தோன்றும். ஆனால் கனவுகளும் நனவாகக்கூடிய காலம் இது. திரு. திருநாவுக்கரசு அவர்களுடைய கனவே - 10 ஆண்டுக் காலக் கனவே - இன்றைக்கு நினைவாகி இருக்கின்றபோது இது நிறைவேறாமலா போய்விடும். குஜராத் மாநிலத்திலே அஜிரா துறைமுகத்திலிருந்து ஒரு பெட்ரோலிய குழாய் ஆரம்பித்து ராஜஸ்தான், உத்திர பிரதேசம், ஹரியானா முதலிய மாநிலங்களில் கேஸ் எடுத்துச் சென்று பெரிய மின் நிலையங்கள், உரத்தொழிற்சாலைகள், பெட்ரோ கெமிக்கல் ஆலைகள் போன்றவைகளை செயல்படவைக்கிறது. இந்த பைப் லைன் அந்த மாநிலங்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இந்தியாவின் மேற்குப் பகுதியில் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஜீவநாடியாக இந்த பைப்லைன் விளங்குகிறது. நிலக்கரி இல்லாத தென் இந்தியாவில் இதுபோன்ற ஒரு கேஸ் பைப்லைன் Southern Gas Grid அமைக்கவேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளாக கோரிக்கை இருந்து வருகிறது. திரு. குருபாதசாமி அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தபோது, திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது, அடையார் ஓட்டலில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் முதன்முதலாக நான் Southern Gas Grid தேவை என்பதை

வலியுறுத்தி அவரும் அதைப் பாராட்டிச் சொல்லி வரவேற்று உடனடியாக கவனிப்பதாகச் சொன்னார். கவனிக்க ஆரம்பித்தபோது அந்த ஆட்சி கவிழ்ந்து விட்டது. ஆனால், அந்தத் திட்டம், நான் குறிப்பிட்ட Southern Gas Grid கேஸ் பைப் லைன், அந்தத் திட்டம் இப்போது அமல்படுத்த இயலாது என்ற நிலையிலே இருக்கிறது. ஆனால் மின் உற்பத்திக்கு நிலக்கரி இல்லாத நமக்கு கேஸ். மிக, மிக அவசியம். மேலும் கேஸைப் பயன்படுத்தி பெரிய ரசாயன தொழிற்சாலைகளும், பெட்ரோ கெமிக்கல் காம்பிளக்ஸ்களும், பிளாஸ்டிக், செயற்கை ரப்பர் முதலியவையும் கேஸ் கிராக்கர்களும் நிச்சயமாக அமைக்க முடியும். இந்த சூழ்நிலையில் Southern Gas Grid வெறும் கனவாக இருந்துவிட்டாலும் கேஸை இங்கே கொண்டுவந்து விநியோகம் செய்வதற்கு வேறு வழிகளை கையாள முடியும். துபாய், இந்தோனேஷியா போன்ற இடங்களில் உபரியாக இயற்கை கேஸ், (Natural Gas) உண்டு. அதை மிகக் குறைந்த வெப்ப நிலையில் தமிழகத்திற்குக் கொண்டு வர முடியும். இப்படி வரும் கேஸை இறக்கி சேகரித்து வைக்க கேஸ் டெர்மினல்கள் தேவைப்படு கின்றன. பெரிய கப்பல்களில் வந்தடைந்த கேஸை பம்பு செய்து வெளியேற்றி குறைந்த வெப்ப நிலையிலேயே சேகரித்து வைக்க வசதிகளும், கேஸை குழாய் மூலமாக தொழில் மையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான வசதிகளும் கேஸ் டெர்மினலில் அமைக்க வேண்டும். எண்ணூரில் கட்டப்பட்டு வரும் துணை துறைமுகம் 50 அடி ஆழம் இருக்குமாதலால் பெரிய Gas carrier ship அங்கே சென்று அடைந்து கேஸை unload செய்ய வசதியாக இருக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது. அங்கேயே ஒரு கேஸ் டெரிமினஸ் எல்லா வசதிகளோடும் அமைக்கவும் முடியும். அதற்கு ரூபாய் 1500 கோடி செலவாகும். இங்கே ஆண்டு ஒன்றுக்கு 10 மில்லியன் டன் வரைக்கும் கேஸ் வர முடியும். 2000 மெகா வாட் திறன் உடைய ஒரு பெரிய மின் நிலையத்திற்கு 2½ மில்லியன் டன் எல்.என்.ஜி. (Liquified Natural Gas) கேஸ் கிடைத்தால் போதுமானது. இந்த 2000 மெகா வாட் திறன் உள்ள மின் நிலையத்தை அமைக்க 8 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும்.

அடுத்ததாக ஒரு ரசாயன உரத் தொழிற்சாலை ரூபாய் 2500 கோடி. கேஸ் கிராக்கர் ரூபாய் 4 ஆயிரம் கோடி; பெட்ரோ கெமிக்கல் காம்பிளக்ஸ் 2000 கோடி ரூபாய், இவைகளையும் அமைக்கலாம். இதற்கு எண்ணூர் வட்டாரத்தில் டிட்கோ நிறுவனம் ஆர்ஜிதம் செய்ய உத்தேசித்துள்ள 7 ஆயிரம் ஏக்கர் நிலம் போதுமானது. எனவே, கேஸ் டெர்மினல், பவர் ஸ்டேஷன், பெர்ட்டிலைசர் பிளாண்ட், பெட்ரோ கெமிக்கல் காம்பிளக்ஸ், இவை எல்லாம் சேர்த்து 8 ஆயிரம் கோடி ரூபாய்க்கான திட்டங்களை அங்கே அமல்படுத்தலாம். கேஸை எண்ணூரிலிருந்து பைப் லைன் மூலமாக அரக்கோணம், ராணிப்பேட்டை, ஜோலார்ப்பேட்டை, சேலம் முதலிய இடங்களுக்கு எடுத்துச் சென்று அந்தப் பகுதிகளிலும் தொழில் வளர்ச்சிக்காக நிச்சயமாக பயன்படுத்த முடியும். இதைப்போல கடலூர் அல்லது நாகப்பட்டினத்திலும் நேச்சுரல் கேஸ் இறக்குமதி செய்து மின் நிலையங்களையும் இதர தொழில் நிறுவனங்களையும் ஏற்படுத்த முடியும். இப்படி தமிழ்நாட்டில் 2 கேஸ் டெரிமினல்கள் நிறுவி அவைகளை பைப்லைன் மூலமாக இணைத்து ஒரு தமிழ்நாடு கேஸ் கிரிட்-ஐ நாம் உருவாக்கலாம். 2 டெர்மினல் பைப்லைன் மற்ற திட்டங்களுக்கு எல்லாம் சேர்த்து மொத்தம் 30 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். இந்த மிகப்பெரிய திட்டங்களுக்கு என்ன சோர்ஸ் (Source) என்று கேட்டால் இதில் முதலீடு செய்வதற்கு தனியார் நிறுவனங்கள் மிகவும் அக்கறையுள்ளவர்களாக இருக்கின்றார்கள். யார் அவர்கள் என்றால் இரண்டு அமெரிக்க கம்பெனிகள், ஒரு மலேசியன் குரூப், ஒரு பிரன்ச் கம்பெனி, இந்த LNG Terminal (Liquified) - அதாவது Natural Gas Terminal திட்டத்தை அமல்படுத்த விரும்பி நமது அரசிடம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்திகளையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வைக்கப்பட்டுள்ள குறிப்புகளில் சர்க்கரை ஆலைகள் பற்றிய குறிப்புகளும் இருக்கின்றன. சர்க்கரை ஆலைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் நிறையப் பேசியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் 1.8 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு

பயிரிடப்பட்டு வருகின்றது. இந்தக் கரும்பு முழுவதையும் அரைத்து விவசாயிகள் நல்ல பயனடையும் அளவிற்கு வழிவகை செய்ய வேண்டுமேயானால் 45 ஆலைகள் அமைக்கப்பட வேண்டியிருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற ஆலைகள் - மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டதைப் போல மிகக் குறைவானவைகள்தான். மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற ஆலைகளோடு ஒப்பிடும்பொழுது மிகக் குறைவான ஆலைகள்தான். தற்பொழுது தமிழ்நாட்டிலே கூட்டுறவுத் துறையிலே 15, பொதுத் துறையிலே 3, தனியார் துறையிலே 16, ஆகமொத்தம் 34 ஆலைகள்தான் இருக்கின்றன. இவை தவிர கூட்டுறவுத் துறையிலே 2 புதிய சர்க்கரை ஆலைகள் கள்ளக் குறிச்சி, கும்மிடிபூண்டி இவற்றில் அமைக்க கழக அரசு 89-இல் பொறுப்பிலேயிருந்தபொழுது மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப் பட்டு, அதற்கான உரிமங்களும் பெறப்பட்டு இருந்தன. அதற்குப் பிறகு வந்த அரசு என்ன காரணத்தாலோ அதை விட்டுவிட்டது; அந்தப் பணி முடிவடையாமலே உள்ளது.

11-3-1996 இல் அறந்தாங்கி தொகுதியிலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியது. ஆனால் 21-7-1992 ஆம் நாளிட்ட அரசு கடித எண் 888 - தொழில் துறையிலே இந்த ஆலை நிர்மாணம் செய்யப்படுவது குறித்து மேல் நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டு விட்டது என்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்குப் பவ்வியமாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இருந்தாலும், அவருடைய மன வருத்தத்தைப் போக்க நான் இருக்கிறேன். தம்பி, கவலைப்படாதே என்ற வகையில் அறந்தாங்கி தொகுதியிலே ஒரு சர்க்கரை ஆலையை, அது தனியார் துறையிலும் இருக்கலாம் அல்லது கூட்டுறவுத் துறையிலும் இருக்கலாம்; அந்தத் தொகுதியிலே நிச்சயமாக உருவாக்கப்படும். ஒருவர், நம்முடைய கோயம்புத்தூரைச் சேர்ந்த ஒருவர்; இன்னொன்று, பாரி கம்பெனி. இரண்டிலே யார் உடனடியாக நிறுவக் கூடிய சக்தி வாய்ந்தவர்கள் என்பதைப் பார்த்து அவர்களுக்குத் தருவதாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மற்ற சர்க்கரை ஆலைகளைப்பற்றி குறிப்பு புத்தகத்தி லேயே செய்தி தரப்பட்டிருக்கிறது. எனவே, அவைகளை யெல்லாம் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டிலே உள்ள சர்க்கரை ஆலைகளின் மூலமாக 300 மெகாவாட் இணை மின் உற்பத்தி - கோ ஜெனரேஷன் - உருவாக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. இந்த ஆண்டு 80 மெகாவாட் மின் சக்தி உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தம் 300 மெகாவாட் உற்பத்தி செய்ய இருக்கிறோம் சர்க்கரை ஆலைகளின் மூலமாக. அதிலே இந்த ஆண்டு 80 மெகாவாட் மின் சக்தியை உற்பத்தி செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது. 3 ஆண்டுகளில் 300 மெகாவாட் மின் உற்பத்தி சர்க்கரை ஆலைகளின் மூலமாகத் தயாரிக்கத் தேவையான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழ்நாட்டிலே உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் மொலாசஸ் விற்பனையிலே நடைபெற்ற, அரசுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். 1 டன் மொலாசஸ் 800 ரூபாய் விலைக்கு விற்றபோது அது 600 ரூபாய்க்கு விற்கப் பட்டதாகக் கணக்கிலே வரவு வைத்துவிட்டு மீதி 200 ரூபாய் பங்கிடப்பட்டு விட்டது. இது உண்மை. யாரும் மறுக்க முடியாது. ஆதாரபூர்வமான உண்மை. 800 ரூபாய் ஒரு டன் மொலாசஸ் என்று விற்கப்பட்டது. ஆனால் கணக்கிலே 600 ரூபாய்தான் வரவு வைக்கப்பட்டது. மீதி 200 ரூபாய் பங்கிடப்பட்டுவிட்டது. யார் யாருக்கென்றெல்லாம் சொல்ல நான் விரும்பவில்லை. யாருக்கும் சங்கடத்தை ஏற்படுத்தவும் நான் கருதவில்லை. கழக அரசு வந்த பிறகு. இந்த 2 மாத காலத்தில், ஒப்பன் டென்டர் சிஸ்டம் கொண்டு வரப்பட்டு, எங்கேயோ போய்க்கொண்டிருந்த இந்த 200 ரூபாய் அரசாங்கத்திற்கு சர்வீஸ் சார்ஜ் - சேவைக் கட்டணம் - என்று அந்த 200 ரூபாய் செலுத்த வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப் பட்டு, அதன் மூலமாக அந்த எங்கேயோ போயிருந்த பணம் அரசு கஜானவுக்கு வந்து கொண்டிருக்கின்றது.

அதைப்போலவே, கூட்டுறவு ஆலைகளுக்குத் தேவையான கோணிப் பைகள் - நேற்று கூட்டுறவுத் துறை அமைச்சர் பேசும்பொழுதும் அந்தக் கோணிப் பைகளைப் பற்றிப் பேசியிருக்கிறார். அவருக்கு நான் என்ன இளப்பமா என்பதைப் போல, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் இந்தக் கோணிப் பை தகராறு நிறைய நடைபெற்றிருக்கிறது.

உதாரணமாக, 900 பேல்களுக்கு ஒப்பந்தப் புள்ளி கோரப் பட்டு சித்தவலசா நிறுவனம் 100 கோணிப் பைகளுக்கு ரூபாய் 198 வீதம் விலை குறிப்பிட்டிருந்தார்கள். அவன் குறிப்பிட்ட விலை. 100 கோணிப் பைக்கு 198 ரூபாய். இவர்கள் அவனைக் கேட்கிறார்கள். இது மிகக் குறைவாகக் குறிப்பிட்டிருக்கே, நீ அதிக விலை குறிப்பிடு என்று சொல்லி 100 கோணிப் பைக்கு 299 ரூபாய் விலை குறிப்பிட்டு அதன்படி மறு ஒப்பந்தப் புள்ளி கொடுத்து வாங்கப்பட்டதில் இழப்பு 3 கோடி ரூபாய். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு.

மேலும், அருணா ஷுகர்ஸ் என்ற தனியார் நிறுவனம் கோணிப் பைகள் வாங்கிய விலையைவிட சர்க்கரை ஆலை ஃபெடரேஷன் அதிக விலை கொடுத்து, இந்தக் கோணிப் பைகளை வாங்கியுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. அங்கே தனியார் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். அதைவிட இந்த நிறுவனம், பெடரேஷன், அதிக விலை கொடுத்து அந்தக் கோணிப் பைகளை வாங்கியிருக்கிறது.

அதே போல, சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் மற்றும் சுண்ணாம்பு வாங்கியதிலே மாத்திரம் 1994-95 ஆம் ஆண்டு சுண்ணாம்பு ஒரு மெட்ரிக் டன் 200 ரூபாய் வீதம், 15,200 மெட்ரிக் டன் வாங்கினார்கள். டன் ஒன்றுக்கு கூடுதலாகக் கொடுத்து. நீங்களே கணக்குப் பார்த்துக்கொள்ளுங்கள். ஆனால், அடுத்த ஆண்டு 1995-96-ல் மெட்ரிக் டன்னுக்கு கூடுதலாக கொடுத்து விட்டது 439 ரூபாய். அது மாத்திரமல்ல, முதலாம் ஆண்டு 15,200 மெட்ரிக் டன் வாங்கினார்கள். அடுத்த ஆண்டு தேவையில்லாமலேயே 23,990 மெட்ரிக் டன் வாங்கியிருக்கிறார்கள், அதிக விலை கொடுத்து.

இதையெல்லாம்விட ஒரு சில்லறைத்தனமான வேடிக்கை, ஒரு கொள்ளை. 1995-ஆம் ஆண்டு தேவையேயில்லாமல்,, கூட்டுறவு, பொதுப் பணித் துறை சர்க்கரை ஆலைகளுக்கெல்லாம் உத்தரவு. என்ன உத்தரவு தெரியுமா? ஒரு காலண்டர் சாதாரண விலை, வெளி மார்க்கெட்டில் ஒரு காலண்டர் தயாரிக்கப்பட்டு 9 ரூபாய், 9.50 ரூபாய் ஆகும் விலை. 10 ரூபாய் வைத்துக் கொள்வோம். இங்கே போட்ட காலண்டரில் படம் ஒட்டியிருந்தது போல இருக்கிறது. அது என்ன படம் என்று தெரியவில்லை. 48 ரூபாய் ஒரு காலண்டர் விலை. 48.77 ரூபாய் விலை, அந்தக் கணக்கில் அச்சடித்தார்கள். அதை விவசாயிகள் வாங்கியாக வேண்டும். எந்த விவசாயிகள், அந்தச் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு கொண்டுவந்து போடுகிறார்களே அவர்கள் வாங்கியாக வேண்டும். அவன் வாங்காவிட்டால் என்ன, இந்த 48 ரூபாயை அவனுக்குச் சேரவேண்டிய பணத்தில் பிடித்துக்கொண்டு கொடுத்துவிடுவார்கள். இந்தக் கரும்பு விலையில், இந்த 48 ரூபாயை, காலண்டர் விலையை பிடித்துக் கொண்டு கொடுத்துவிடுவார்கள். இந்தக் காலண்டரே மறுபடியும் காலண்டராக மாறிவிட்டது என்று நினைக்கிறேன். மூன்று சுழி 'ண்', இரண்டு சுழி 'ன்' - ஆக மாறிவிட்டது என்று நினைக்கிறேன். இப்படி ஆகிவிட்டது. அதிலேதான் 1 கோடி மக்களுடைய வரிப்பணம், அந்தக் காலண்டரிலே விவசாயிகளுடைய பணம் போயிருக்கிறது. ஆக, நான் சொன்ன கணக்கின்படி மொத்தம் இந்தத் துறையில் இப்படி ஊழலின் காரணமாக 25 கோடி ரூபாய்க்கு ஊழல் நடத்திருக்கிறது. இதையெல்லாம் சொன்னவுடனே சொக்கர் எழுந்திருப்பார், ஞானசேகரன் எழுத்திருப்பார், ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை, ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்பார்கள். (குறுக்கீடுகள்). மனோகரா படம் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். யாரோ சொன்னார்கள், யாரையோ வசந்தசேனையென்று; சொன்னவர்கள் இன்னும் அங்கேயேதான் இருக்கிறார்கள். வசந்தசேனையை மனோகரன் ஒன்றும் பண்ணவில்லை. கேசரிவர்மனிடம் விடுவான். அதுமாதிரி, பொது மக்களிடம் விட்டுவிடுகிறேன் பிரச்சினையை அவ்வளவுதான். (மேசையைத் தட்டும் ஒலி).

கிரேனைட் கொள்கை. ஒரு புதுக் கொள்கை இங்கே பேசப் பட்டது. கிரேனைட்டில் கழக ஆட்சியிருந்தபோது, 2-9-1989-ல் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி முறையிலே, சீல்டு டெண்டர் சிஸ்டம் முறையிலே பணிகள் கொடுக்கப்படும். இரண்டு ஆண்டு காலத்திற்குள் வெட்டி மெருகூட்டும் தொழிற்சாலை தொடங்கப்பட வேண்டும். இந்த முறை சரியானதுதான் என்று நீதிமன்றமும் பரிந்துரை செய்தது. எல்லோரும் கேஸுக்கு போனார்கள். நீதிமன்றம் இந்த முறை சரிதான் என்று தீர்ப்பு வழங்கியது. 1989-90 இரண்டு ஆண்டுகளில் நான் சொன்னபடி கழக ஆட்சியிலே போட்ட உத்தரவின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 262 ஹெக்டேர் பரப்பளவில் 98 குவாரிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டன. இதன்மூலம் மாநில அரசுக்கு 20 கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது. 2 வருடத்தில் கிடைத்த வருமானம் 20 கோடி ரூபாய். அ.தி.மு.க. அரசு 1993-ல் தமிழ்நாடு சிறப்புக் கனிம விதி 39 என்ற ஒரு விதியை புதியதாக அறிமுகப் படுத்தியது. அதன்படி, தனியாக சிறப்பு நேர்வாக குத்தகை வழங்கப்படுவதாகக் கூறப்பட்டது. தனித்தனியாக. அந்தந்த ஸ்பெசிபிக் நேர்வு, அதைப் பார்த்துத்தான் நாங்கள் குத்தகை கொடுப்போம் என்று வழங்கப்பட்டது. மேலும், முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப்புள்ளி முறை ரத்து செய்யப்பட்டது. ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. அந்த உயர்மட்டக் குழுவிலே யார் யார் இருந்தார்கள் என்பது தெரியும். அவர்களெல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்றும் தெரியும் (சிரிப்பு). அவர்க ளெல்லாம் உயர்மட்டக் குழுவிலே இருந்தார்கள். அவர்கள்தான் இந்தக் கொள்கையை நிர்ணயித்துக் கொண்டிருந்தார்கள். இந்த முறை மூலம் 1993 முதல் 1996 வரை, 160 ஹெக்டேர் பரப்பளவிற்கு, 125 குத்தகை மூலமாக, அரசுக்கு கிடைத்த வருமானம் 5.12 கோடி ரூபாய்தான். 2 வருடத்தில் அரசுக்கு கிடைத்த வருமானம் கழக ஆட்சியிலே 20 கோடி ரூபாய். இப்போது 5.12 கோடிதான். 1989-90-லே கழக ஆட்சியிலே 20 கோடி கிடைத்ததற்கு மாறாக இப்படி கிடைத்தது என்பதை யாரும் மறந்திடக் கூடாது. இப்போது புதியது உங்களுக்குத் தெரியும். ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை நான் விரிவாக சொல்ல வேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறேன். மூன்று

ஆண்டு காலத்திற்குள்ளே மெருகூட்டும் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அந்த உறுதியோடுதான் ஏலம் எடுக்க வேண்டும். அதுவும் ஒப்பன் டெண்டர். அது மாத்திரமல்ல, ஏற்கெனவே 10 ஆண்டு காலம் என்று கொடுத்திருந்த அந்தக் குத்தகையை, 20 ஆண்டு காலம் என்று மாற்றியிருக்கிறோம். அவர்களுக்குச் சௌகரியமாக 20 ஆண்டு காலம் என்று மாற்றியிருக்கிறோம். இதன் மூலமாக நிறைய வருமானம் - இந்தக் கனிமப் பொருட்களின் மூலமாக கிடைக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கின்றது. இந்தக் கனிமத்திலே - நான் வெளியிலே இருக்கும்போது வீரபாண்டி சொன்னதுதான் காதிலே விழுந்தது - இதிலே அந்த மணல்கூட சேரும். அந்தக் கிரேனைட் மாதிரியே மணலில் எல்லாம்கூட, இந்த மணலை எடுப்பதிலேகூட - அந்த மணலையும் விடவில்லை. அ.தி.மு.க. ஆட்சியில் மணல் எடுக்கிற குவாரியினை, அதுவும் 39-ன் கீழ்தான், அந்த கனிம விதி 39-ன்படி மனு செய்தால், மணல் எடுப்பதற்கான உரிமையை வழங்குகிற அதிகாரம் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் இருந்தது. கலெக்டரிடம் இருந்தது கூடாது என்று கலெக்டரிடம் இருந்ததை மாற்றி அதையும் மேல் மட்டத்திலே வைத்தாயிற்று. இதன் காரணமாக ஏற்பட்ட ஊழல்,. மணல் எடுப்பதிலே வாயக்கால்களிலே மணல் எடுப்பதிலேகூட ஏற்படக்கூடிய வாய்ப்பு அதனாலே ஏற்பட்டது. எனவேதான் நாம் இந்தப் புதிய கொள்கையை இன்றைக்குக் கடைபிடித்து அதிகலாபத்தை, அதிக வருமானத்தை ஈட்டவிருக்கின்றோம்.

கிராபைட் நிறுவனத்தைப் பற்றி உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் பேசினார். சிவகங்கையிலே கிராபைட்டை அடிப்படையாகக் கொண்ட, இந்தப் பொருளைத் தயாரிப்பதற்கு ஒரு பெரிய தொழிற்சாலையாக அது உருவாகக்கூடியது. எனவேதான், அதை இப்போது தமிழ்நாடு கிராபைட் நிறுவனம் என்ற ஒரு நிறுவனத்தை, லிமிடெட் கன்சர்னையே உருவாக்கி யிருக்கின்றோம். அதன் மூலம் இந்த கிராபைட் தொழிற்சாலை பெரும் அளவிற்கு எதிர்காலத்திலே வளரவும், அந்த மாவட்டம் தொழில் வளம் பெருகுவதுமான ஒரு சூழ்நிலை ஏற்படும்

என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன்.

இறைச்சி பதனிடும் தொழிற்சாலை பற்றி இங்கே பேசப் பட்டது. வேறு சில தொழிற்சாலைகள் பற்றியும் பேசப்பட்டது. ஏற்கெனவே நம்முடைய பேராசிரியர் தீரன் அவர்கள் வேறு ஒரு மானியத்திலே பேசும்போது மிகுந்த ஆத்திரத்தோடு கும்மிடிப்பூண்டியிலே தொடங்கவிருக்கின்ற அந்த ஆலையை, தொழிற்சாலைப் பற்றியும், வேறு பல தொழிற்சாலைகளைப் பற்றியும் பேசி, மாசுக்கட்டுப்பாடு உரிய முறையிலே இருந்திட வேண்டும் என்று எடுத்துக் கூறினார்கள். இன்றைக்கும் அதை ஜாடையாகத் தெரிவித்தார்கள். மற்றும் பலரும் பேசினார்கள். பொள்ளாச்சி ராஜு கூட இங்கே பேசும்போது அங்கே உருவாகின்ற அந்த - அவர் வாயெல்லாம் பல்லாகச் சிரிக்கிறார் – ஏனென்றால் இங்கே இதைப் பேசிவிட்டால், அவர் அங்கே தப்பித்துக் கொள்ளலாம்; தொகுதி மக்களிடத்திலே, இதற்குத்தான் அதைப் பற்றி பேசினார். இந்த இறைச்சி பதனிடும் தொழிற்சாலை என்பது தமிழ்நாட்டிற்கு ஒன்றும் புதியது அல்ல. ஏற்கெனவே சென்னையில் இருக்கிறது. ஸ்லாட்டர் ஹவுஸ் – அங்கே ஆடுகள், மாடுகள் வெட்டுகிறார்கள். விடியற்காலை நான் வாக்கிங் செல்வதற்காகப் போகும்போது அண்ணா சாலையிலே நூற்றுக் கணக்கான மாடுகளை ஓட்டிக்கொண்டே போகிறார்கள். காளை மாடுகளெல்லாம் இருக்கின்றன. இங்கே பொள்ளாச்சியிலே எருமை மாடுகள் மாத்திரம்தான்; பசு வர்க்கம் இல்லை. எருமை மாடுகள், ஆடுகள் இவைகள் அங்கே இறைச்சியைத் தரவிருக்கின்ற பிராணிகள், ஆனால் சென்னையிலே ஸ்லாட்டர் ஹவுஸுக்கு ஓட்டிச் செல்கிற மாடுகளைப் பார்க்கிறோம். பொள்ளாச்சியில் இதுவரை நான் கண்ட காட்சி என்ன? கேரளாவிற்கு மாடுகளை ஓட்டிச் செல்கின்றார்கள். எதற்காக? அங்கே வெட்டி, அங்கே அந்த இறைச்சியைப் பதப்படுத்து வதற்காக, அப்படி நம்முடைய மாநிலத்து மாடுகள் கேரளாவிற்குச் சென்று கேரள மாநிலத்தில் வருமானத்தை ஈட்டுகிற அதே நேரத்தில், தமிழ்நாட்டிலேயும் வருமானத்தை ஈட்டக்கூடிய அளவிற்கு இருக்கும் என்பதற்காகத்தான் இந்தத் தொழிற் சாலைக்கு நாம் அனுமதி கொடுத்திருக்கின்றோம். இது தமிழ்

நாட்டிலே மாத்திரமல்ல; உங்களுக்கு சொல்லவேண்டுமேயானால். ராஜஸ்தான் ஷிப் அண்டு உல்ஃபெடரேஷன். ராஜஸ்தானத்திலே ஆல்வார் என்ற இடத்திலே இருக்கிறது. பஞ்சாபில், பஞ்சாப் மீட் லிமிடெட், தேராபாணி என்ற இடத்திலே இருக்கிறது. டியோனர் அபட்டார் பி.எம்.சி. மும்பையிலே இருக்கிறது - பம்பாயிலே இருக்கிறது. பாம்பாயிலே இருப்பது யார்? பி.ஜே.பி. ஆட்சி. சிவசேனை ஆட்சி அங்கே நடக்கிறது. அங்கேயே இருக்கின்றது (குறுக்கீடு) டியோனர் அபட்டார். அப்புறம் ஹிண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், அலிகார், உ.பி.யிலே இருக்கிறது. அல்பீர் எக்ஸ்போர்ட் லிமிடெட், ஹைதராபாத், ஆந்திர பிரதேசத்திலே இருக்கிறது. அல்லானா சன்ஸ், ஔரங்காபாத், மகாராஷ்டிரத்திலே இருக்கிறது. அரேபியன் எக்ஸ்போர்ட்ஸ், கொரேகான், மகாராஷ்டிரத்திலே, எம்.கே. ஓவர்சீஸ் எக்ஸ்போர்ட்ஸ், நண்டி. மகாராஷ்டிரத்திலே, மராட்டியத்திலே மாத்திரம் நான்கு, ஐந்து இருக்கின்றன. அலானா சன்ஸ், கோவா - இப்படி, எல்லா இடங்களிலும் இந்த இறைச்சி ஒரு உணவாக இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, உணவு தயாரிக்கின்ற தொழிற்சாலையினால் பாதகம் ஏற்படும் என்று கருதுவது தவறு. அங்கே வெட்டப்படுகிற மாடுகளின் இரத்தம் கீழே ஒழுகி அவைகளெல்லாம் அந்தப் பகுதியை அசுத்தமாக்கும், மாசுபடியும் என்று எண்ணுகிறார்கள். அந்த பயத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த அச்சத்திற்கு அந்தப் பகுதி மக்கள், விவசாயிகள் ஆளாவது இயற்கைதான். நான் தவறாகச் சொல்லவில்லை. வேண்டுமென்றே வதந்தியை கிளப்பிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு சொட்டு இரத்தம்கூட கீழே விழாமல் வெட்டுகின்ற விஞ்ஞான முறையில் அதை வெட்டுகிறார்கள். அப்படி வெட்டுகிறபோது சிந்துகின்ற இரத்தத்தையும், அதையும் மருந்துகள் உற்பத்தி செய்யப் பயன்படுத்தும் முறை - அதுதான் இறைச்சி தொழிற்சாலையில் கடைப்பிடிக்கப்படுகிறது.

மற்றொன்று இங்கே, கும்மிடிப்பூண்டி தொழிற்சாலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் எடுத்துச் சொன்னார். அவர்களுக்குக் கண்டிப்பாகச் சொல்லிக்கொள்கிறேன்.

எந்தவொரு தொழிற்சாலையானாலும், மாசுக் கட்டுபாட்டை மீறி தமிழ் நாட்டில் நடத்த முடியாது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எந்தவொரு தொழிற்சாலையானாலும் அதற்குரிய சுத்திகரிப்பு தொழிற் சாலையை முதலில் அமைக்கவேண்டும். நாங்கள் அதற்கு அனுமதி கொடுத்த பிறகுதான் அந்தத் தொழிற்சாலைகள் இயங்க முடியும். எனவே கும்மிடிப்பூண்டி வட்டாரத்திலுள்ள மக்கள் அஞ்சத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பும் வேண்டும். வறுமை தேள் எனக் கொட்டுகிறது. வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால். அந்த வேலைவாய்ப்பைத் தரக்கூடிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், சில நல்லவைகளைச் செய்யும்போது சில தீயவைகளும் ஏற்படும். மருந்தை உடலுக்குச் சாப்பிடும்போது, அதனுடைய side effects சில நேரத்தில் வரத்தான் செய்யும். உடலுக்கு நோய் வந்தால் anti-biotic சாப்பிடுகிறோம். anti-biotic சாப்பிட்டால், அதனால் ஏற்படுகிற கெடுதியை நீக்குவதற்கு உடனடியாக சிண்டாக் என்ற மருந்தைச் சாப்பிடுகிறோம். நான் சாப்பிட்டிருக்கிறேன். அதுதான் பழக்கம். (சிரிப்பு). எனவே anti-biotic சாப்பிட்டவுடனே 'சிண்டாக்' சாப்பிட வேண்டும். அதைப்போல, வேலையில்லாத திண்டாட்டம் என்ற நோய் வரும்போது அதைப் போக்க தொழிற்சாலை என்ற anti-biotic வேண்டியிருக்கிறது. தொழிற்சாலையில் ஏற்படுகிற கழிவுப் பொருட்களால் ஏற்படுகின்ற மாசுவைத் துடைக்க இந்த 'சிண்டாக்' போன்ற (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) சிகிச்சைத் தொழிற்சாலைகளும் வேண்டியிருக்கிறது. எனவே, இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து கிடப்பதால் வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற அளவுக்கு நாம் இந்தக் காரியங்களில் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கின்றோம், என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழகத்திலே தொழில் வளம் பெருக, தொழிலதிபர் களுக்கு என்னென்ன வரிச் சலுகைகளையெல்லாம் அளித்திருக் கிறோம். சிலபேர்கூட வரிச் சலுகைகளெல்லாம் அளிக்கவேண்டு மென்று இங்கே சொன்னார்கள். நிதிநிலை அறிக்கையிலே அளிக்கப்பட்ட வரிச் சலுகைகள், பிறகு வணிகவரி மானிய

விவாதத்தின்போது நாம் அளித்திருக்கிற வரிச் சலுகைகள் பற்றி யெல்லாம் விரிவாகப் பேசப்பட்டது. எனவே, விரிவுக்கு அஞ்சி அதை விடுக்கின்றேன். இந்தத் திட்டங்களையெல்லாம் தகுந்த முறையில் நிறைவேற்ற இந்தியாவிலே மத்திய அளவிலே ஒரு திட்டக் குழு இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான் மாநில அளவிலே ஒரு திட்டக் குழுவை அமைத்தோம். அதைப் பாராட்டி அன்றைக்குப் பெரியவர் சி. சுப்பிரமணியம் அவர்கள் எனக்குக் கடிதமே எழுதினார்கள். பத்திரிகையிலே அறிக்கை விடுத்தார்கள். அந்தத் திட்டக்குழு தொடக்க காலத்தில் எவ்வளவோ அருமையான திட்டங்களை யெல்லாம் தீட்டியது. இடைக் காலத்தில் என்ன ஆனது என்பது உங்களுக்கே தெரியும். எனவே, திட்டங்களெல்லாம் நிறைவேற்று வதற்கு உரிய புதிய திட்டக் குழுவை இன்றைக்கு உங்கள் முன்னிலையில் அறிவிக்கின்றேன். அந்தத் திட்டக் குழுவின் தலைவராக முதலமைச்சர் இருப்பார். உறுப்பினர்களாக, மத்திய திட்டக் குழு உறுப்பினராக ஏற்கெனவே இருந்த

திரு. எல்.சி. ஜெயின்

திரு. எஸ். வெங்கிட ரமணன்
(முன்னாள் ரிசர்வ் வங்கி கவர்னர்
முன்னாள் மத்திய நிதித்துறைச் செயலாளர்
முன்னாள் தமிழக நிதித்துறைச் செயலாளர்)

திரு. எஸ். குகன்
(முன்னாள் நிதித்துறைச் செயலாளர்)

திரு. டி.வி. அந்தோணி
(முன்னாள் தலைமைச் செயலாளர்)

திருமதி. லலிதா காமேஸ்வரன்
(முன்னாள் துணைவேந்தர்)

டாக்டர் வைத்தியநாதன்,
(Madras Institute of Development Studies)

டாக்டர் சண்முகசுந்தரம்,
(முன்னாள் துணை வேந்தர்)

திரு. கே.வி. பழனிதுரை
(முழு நேர உறுப்பினர்)

இந்தத் திட்டக் குழு அமைந்து மாநில திட்டங்களுக்கான அரிய யோசனைகளை வழங்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்களிடம் சொல்லி, இங்கே எடுத்து கூறிய தொழில் திட்டங்களும். நாம் எண்ணுகின்ற எல்லா நல்ல திட்டங்களும் தமிழகத்திலே உருவாகி வெற்றிபெற உங்கள் வாழ்த்துக்கள் தேவை என்று கூறி, இதற்குப் பிறகும் வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தமாட்டீர்கள் என்று எண்ணி, திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன். வணக்கம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரிட மிருந்தே பாயிண்ட் ஆப் ஆர்டரா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலங்கைமான் சர்க்கரை ஆலை உருவாக இருப்பதாக திட்டத்திலே அறிவித்திருக்கிறார்கள். ஏராளமான சங்கடம் இப்போது கரும்பு ஆலையிலே இருக்கின்றது. ஏராளமான கரும்புகள் இன்னும் அரவைக்கு போகாமல் இருக்கின்றன. இந்த நிலையில் கரும்பு ஆலையை வலங்கைமானில் துவக்க முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த வாரம் அமைச்சரவைக் கூட்டம் இருக்கின்றது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராணைட் பொறுத்தவரையில் எக்கச் சக்கமாக ஊழல் நடந்து புறம்போக்கு நிலங்களெல்லாம் முறைகேடாக பலபேருக்கு உரிமம் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைங்களை மீட்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக ஆணை பிறப்பிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிங்கப்பூர் காரிடார்' ஏற்கெனவே தமிழகத்திற்கு வர வேண்டியது. பல்வேறு காரணங்களினால் கர்நாடகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விட்டது. ஆனால் கர்நாடகத்தில் இந்த சிங்கப்பூர் காரிடார் அமைப்பதற்கு பல்வேறு சிரமங்கள் இருப்பதாகச் சொல்கின்றனர். அந்தக் கருத்து சரியானதுதானா என்பதைப் பார்த்து, இன்னும் அங்கே ஆரம்பிக்கப்படவில்லை யென்றால் தமிழகத்திற்கு அதை மீண்டும் கொண்டு வர வேண்டும். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து சிங்கப்பூர் காரிடார் மறுபடியும் இங்கு அமைய வாய்ப்பு இருக்குமானால் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிங்கப்பூர் காரிடார்' என்ற பெயரிலே அல்ல. சிங்கப்பூரிலிருந்து காரிடார் போன்ற ஒரு பெருந்தொழிலை தமிழகத்தில் கொண்டுவருவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

உரை : 6 நாள் : 23.04.1997

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தொழில்கள் துறை மானியத்தின் அடிப்படையில், எதிர்க்கட்சியைச் சேர்ந்த, தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் நல்ல விளக்கங்களை வழங்கி, தொழில் தமிழகத்திலே மேலும் வளர, ஆக்கப்பூர்வமான கருத்துக்களையும் அளித்து அவற்றைத் தொடர்ந்து இந்த அரசு தொழில் துறையிலே இதுவரை ஏற்றுள்ள வாய்ப்பினைப் பெற்று, இந்த அவையில் இப்போது நான் நின்று கொண்டிருக்கிறேன்.

முதலில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள், இந்த மானியத்திலே உரையாற்றத் தொடங்கியபோது, கனத்த இதயத்தோடு பேசுவதாகக் குறிப்பிட்டு, அவரைப்போலவே நானும் கனத்த இதயத்தோடுதான் இருப்பேன் என்று சொன்னார்கள். ஒருவேளை கனரகத் தொழில்களைப் பற்றியெல்லாம் நாம் பேசவிருக்கிற காரணத்தால் 'கனம்' என்ற சொல் அவருடைய உள்ளத்திலே இடம் பெற்றது போலும். என்னைப் பொறுத்த வரையில் இதயத்தை நான் எப்போதும் கனமாக்கிக் கொள்ள விரும்புபவன் அல்ல; ஆக்கிக் கொண்டவனும் அல்ல. ஏனென்றால் அண்ணா அவர்கள் மறைந்தபோது, அவருடைய இதயத்தை இரவலாகத் தா என்று கேட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த எதையும் தாங்கும் இதயத்தோடுதான் நான் என்னுடைய பொது வாழ்க்கையை, குறிப்பாக அரசியல் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறேன்.

"மனச்சாட்சி உறங்கும்போதுதான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்பிவிடும்" என்ற உரையாடலைப் பூம்புகார் படத்திலே நான் எழுதியிருக்கிறேன். அதை நான் மாத்திரம் அல்ல; எல்லோரும்

எண்ணிப் பார்க்கத் தலைப்பட்டால், உண்மை பலகாலம் இருட்டிலே இருக்காது, வெளிச்சத்திற்கு வந்துவிடும். இருள் எப்படிச் சூரியனைத் தொடர்ந்து மூடிக்கொண்டிருக்க முடியாதோ, எப்படியாவது விடியல வந்தே தீரும் என்ற நிலை இருக்கிறதோ, அதைப்போல, உண்மை வெளிவந்தே தீரும்.

இந்த மானியக் கோரிக்கையிலே, திரு. அழகிரி அவர்களும், இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும் எடுத்துரைத்த இரண்டு கருத்துக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துக்கள்தான். திரு. அப்துல் லத்தீப் அவர்கள், தொழில் துறையைப் பற்றி எடுத்து வைத்த கருத்துக்களைவிட, அரசியல் துறைக் கருத்துக்களையே அதிகமாக இங்கே எடுத்து வைத்தபோதிலும், நாம் எப்படியிருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும், இந்தியாவிலே மதச் சார்பற்ற ஒரு அரசு அமைந்திடவும் ஜனநாயக ஆட்சி தொடர்ந்து நடந்திடவும் பாடுபடக்கூடிய அந்தப் பாசறையில்தான் நாம் இருக்கிறோம் என்பதைக் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே, விவாதத்தைத் தொடங்கி வைத்த அன்பிற்குரிய திரு. அழகிரி அவர்களுக்கும், தொடர்ந்து சில கருத்துக்களைச் சொன்ன அருமை நண்பர், திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தொழில் துறையைப் பற்றிப் பேசும்போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு. மணி அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு. சுப்பராயன் அவர்களும், தமிழகத்திலே பொதுத் துறை நிறுவனங்கள் மேலும் ஊக்கப்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். இந்த மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பிலேயே, தமிழகத்தில் தற்போது 20,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டுடன் 13 பொதுத் துறை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், மேலும், நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம், சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிறுவனம், சேலம் உருக்காலை, இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் போன்ற பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் சுமார் 16,000 கோடி ரூபாய் மதிப்பில், விரிவாக்கல், உற்பத்தித் திறன் அதிகரித்தல் ஆகிய பணிகளை உடனடியாக

மேற்கொள்ள தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளதை மறந்துவிடக்கூடாது. எனவே, இன்றுள்ள நிலையில், நாம் ஏற்றுக்கொண்டுள்ள புதிய பொருளாதாரக் கொள்கையின்படி தனியார் தொழில்களை ஊக்கப்படுத்துகின்ற அதேநேரத்தில், ஏற்கெனவே கழக அரசு உருவாக்கிய கூட்டுத் துறை, இணைத் துறை போன்ற துறைகளோடு, பொதுத் துறைக்கும் நிச்சயமாக நல்ல இடத்தைத் தரும் என்ற நம்பிக்கையை அனைவரும் பெறலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. அழகிரி அவர்கள், ஏற்றுமதிப் பிரச்சினையில் நாம் மிக அடுத்த நிலையிலே இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அதிலும் குறிப்பாக, நியூஸ் பிரிண்ட் ஏற்றுமதியை அவர்கள் எடுத்துக்காட்டி சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மைதான். ஏனென்றால், நியூஸ் பிரிண்டினுடைய விலை வெளிநாடுகளில் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், ஏற்றுமதியிலே அக்கறை குறைந்திருக்கிறது. அதுமாத்திரமல்ல, இந்த ஏற்றுமதி குறித்து 19-4-1997 'இந்து' பத்திரிகையிலே தலையங்கம் வந்திருக்கிறது. அதில், "1996-97-ஆம் ஆண்டில் உலக ஏற்றுமதி-இறக்குமதி சந்தையில் கையாளப்பட்ட அளவு 6 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்த புள்ளிவிவரத்தை World Trade Organisation (W.T.O.) தெரிவித்துள்ளது. 1995-96ஆம் ஆண்டு வியாபாரப் பொருட்களின் மதிப்பு 5,100 பில்லியன் டாலர் ஆகும். அந்த ஏற்றுமதி வியாபாரத்தின் அளவு 14 சதவிகித வளர்ச்சியிலிருந்து 5 சதவிகிதம் என்ற அளவிற்கு வீழ்ச்சியை இந்த ஆண்டு சந்தித்துள்ளது. குறிப்பாக ஆசியாவில் ஏற்றுமதி குறைந்துள்ளது. தொழிலில் வளர்ச்சி அடைந்த நாடுகளான ஜப்பான், தைவான், தென்கொரியா ஆகிய நாடுகளின் ஏற்றுமதியும் கணிசமாகக் குறைந்துள்ளது. மேலும் குறிப்பாக, இந்தியாவின் குறியீடான 7 சதவிகிதம் ஏற்றுமதியை அடைய முயற்சிகள் எடுக்கப்பட்டு, 6 சதவிகிதம் அடையப்பட்டுள்ளன என்று புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழகத்தின் ஏற்றுமதியும் இந்த அளவிலேயே உள்ளது; உலகச் சந்தையின் ஏற்றுமதியும், இறக்குமதியும் வெகுவாகக் குறைந்துள்ளது; இந்தியாவின் ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்க

வகையில் உயரவில்லை; இருப்பினும், தமிழகத்திலே இருந்து செய்யப்படும் ஏற்றுமதி, உலக அளவிலான விழுக்காடு வீழ்ச்சி இல்லை; இருந்தாலும் ஏற்றமதியை அதிகப்படுத்த, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை நான், திரு. அழகிரி போன்றவர்களுடைய அந்தக் கருத்துக்குப் பதிலாகத் தரக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இந்தியாவினுடைய மொத்த எற்றுமதியிலே, 16 சதவீதம், தமிழ்நாட்டிலே இருந்துதான் செய்யப்படுகிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இந்தியாவினுடைய மொத்த மக்கள் தொகையிலே, தமிழ்நாட்டு மக்கள் தொகை 6 சதவீதம்தான். ஆனால், இந்தியாவினுடைய மொத்த ஏற்றுமதியிலே, 16 சதவீதம், தமிழ்நாட்டிலே இருந்து செய்யப்படுகிறது. அதிலும், முக்கியமாக 'காட்டன் யார்ன்', 'டெக்ஸ்டைல்ஸ்' தோல் பொருள்கள், பனியன்கள் ஆகியவை, அந்த ஏற்றுமதியாகின்ற பொருள்கள் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. அழகிரி, இன்னொரு குற்றச்சாட்டையும் சொன்னார், 'சிப்காட்' நிறுவனத்தைப் பற்றி. அது ரொம்பக் கஞ்சத்தனமாக 'ஷைலக்' போல நடந்து கொள்கிறது என்று குறிப்பிட்டு, 'கொரமாண்டல் பாலிபேக்ஸ்' என்ற கடலூரிலுள்ள நிறுவனத்திற்குக் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டதிலே, ரொம்பக் கஞ்சத்தனமாக நடந்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிய விவரத்தை நான் கேட்டபோது, "சிப்காட்" நிறுவனம், 45.50 இலட்சம் ரூபாய், கொரமண்டல் நிறுவனத்திற்குக் கடன் கொடுத்திருந்தது. அந்த 45 இலட்சம் ரூபாய்க்கு, வட்டியையும் சேர்த்து, மொத்தம் 117 இலட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது. இதுவரையில், அது பணம் கட்டாததால், 'சிப்காட்' நிறுவனம், சட்டரீதியான நடவடிக்கை எடுத்து, ஏலம் நடத்தப்பட்டு, 'சிப்காட்'டினுடைய பணத்தைத் திரும்பப்பெற நடவடிக்கை எடுக்க நேர்ந்தது என்றுதான் குறிப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. எனவே, இதிலே வேண்டுமென்று கஞ்சத்தனமாக, 'சிப்காட்' நிறுவனம் நடந்து கொள்ளவில்லை என்பதையும், கொடுத்த பணத்தைத் திருப்பித் தரவில்லை; வட்டியையும் செலுத்தவில்லை; சமரசப் பேச்சில் ஒத்துக்கொண்ட தொகையும் கட்டப்படவில்லை. எனவே,

அந்தப் பணம் கட்டாத சூழ்நிலையிலேதான், சட்டரீதியான நடவடிக்கையை இந்த நிறுவனம் எடுக்க நேர்ந்தது என்பதையும் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, தொழில்துறை வளர்ந்ததா என்பதை ஒரு கேள்விக்குறியாக்கி, வளரவில்லை என்ற ஒரு தவறான பிரச்சாரம், நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நான் அதற்குச் சொல்லக்கூடிய சில விளக்கங்கள், யாரையும் புண்படுத்தாது என்று கருதுகிறேன். ஏனென்றால், 1967ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த நேரத்தில், தமிழகத்திலே இயங்கிவந்த, தூத்துக்குடி துறைமுகத் திட்டம், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் முதலிய பொதுத்துறை நிறுவனங்கள் விரிவாக ஆக்கப்படவும், உற்பத்தியை அதிகரிக்கவும், வேலை வாய்ப்புக்களைப் பெருக்கவும், தக்க வகையில் மத்திய அரசை வற்புறுத்தியதோடு, மாநில அரசின் சார்பில் அத்தகைய ஏற்பாடுகளுக்கான, தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம். நெய்வேலியிலே, இரண்டாவது சுரங்கம் வெட்டப்படவும், சேலம் இரும்பாலை அமைக்கப்படவும், மத்திய அரசோடு தொடர்ந்து போராடி, அவை நிறைவேற்றப்படுவதற்கு வழிவகுத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நாடு மிக நன்றாக அறியும்.

தூத்துக்குடியிலே, இன்றைக்கு உலக நாடுகளெல்லாம் பாராட்டக்கூடிய அளவுக்கு வளர்ந்திருக்கின்ற, ஆயிரம் அல்லது இரண்டாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மதிப்பீடு என்று சொல்லத்தக்க அளவுக்குள்ள 'ஸ்பிக்' உரத் தொழிற்சாலை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் நிறுவப்பட்டது என்பதையும் யாரும் மறந்துவிட இயலாது.

அதைப்போல, கழக ஆட்சிக் காலத்திலேதான், பொதுத் துறையின் மூலம் உருவாக்கப்படும் தொழிற்சாலைகள் மாத்திரம், தமிழகத்திலே தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்த முடியாது என்ற எண்ணத்தோடு, ஆர்வமிக்க தொழில் முனைவோர்களை உற்சாகப் படுத்த, ஊக்கப்படுத்த, தொழில் வளாகங்களை அமைத்து, குறைந்த விலையிலே இடங்களை ஒதுக்கீடு செய்திட, தொழில்

திட்டங்களுக்குத் தேவையான கடன் உதவியை, மூலதன மானியத்தோடு - 'Capital Subsidy' - வழங்கிட ஒரு முடிவெடுத்து, State Industries Promotion Corporation of Tamil Nadu - 'சிப்காட்' என்ற புதிய நிறுவனத்தைக் கழக அரசுதான், 1971ஆம் ஆண்டு தோற்றுவித்தது என்பதையும் யாரும் மறந்திட இயலாது. அதைத் தொடர்ந்து 'சிப்காட்' நிறுவனம், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான, அடிப்படை வசதிகள் அனைத்தையும், ஒரே இடத்தில் வழங்கக்கூடிய தொழில் வளாகங்களை அமைத்தது. அப்படி அமைக்கப்பட்ட இடங்களில் ஒன்றுதான், இராணிப்பேட்டை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

1973ஆம் ஆண்டு 729.78 ஏக்கர் நிலப்பரப்பில் 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 தொழில் நிறுவனங்கள் கழக ஆட்சிக் காலத்தில் அங்கே உருவாக்கப்பட்டன. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது இராணிப்பேட்டையிலே உள்ள அந்த இடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டோம். அப்போது தொழில் அமைச்சராக நண்பர் திரு. மாதவன் இருந்தார். இந்தச் செய்தியை என்னிடத்திலே அறிவித்தார். என்ன செய்தி என்றால் ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்காக அந்த இடம் வாங்கப்பட்டிருப்பதாகவும், அந்த இடத்தில் தொழிற்பேட்டை அமையாத காரணத்தால் அதை விற்றுவிட அல்லது அந்த எண்ணத்தை கைவிட்டுவிட அதற்கு முன்பிருந்த காங்கிரஸ் அரசு எண்ணியிருந்ததாகவும் அதன் தொடர்பாக நாம் அந்த இடத்தைப் போய்க் காணவேண்டும் என்று எடுத்துச்சொல்லி, நானும், தொழில் அமைச்சரும் - அன்றையத் தொழில் அமைச்சரும் - மற்ற அதிகாரிகளும் சென்று இராணிப்பேட்டையிலே அந்த இடத்தைப் பார்வையிட்டு இதை விற்கவோ, யாருக்கும் கொடுக்கவோ தேவையில்லை, இங்கேயே 'சிப்காட்டின்' சார்பாக ஒரு தொழில் நிறுவனத்தை அமைக்கலாம் என்று முடிவெடுத்ததினுடைய விளைவுதான் அந்த 730 ஏக்கர் பரப்பில் 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 தொழில் நிறுவனங்கள் அன்றைக்கே அமைந்தன.

அதேபோல, ஓசூரிலே 1974ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்திலேதான் 500 கோடி ரூபாய்க்கு மேலான முதலீட்டில் 20,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெறக்கூடிய அளவுக்கு 186 தொழில் நிறுவனங்களை உருவாக்கினோம். இதுவும் கழக ஆட்சிக் காலத்திலேதான். தமிழகத்திலே பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளத்தைப் பெருக்கிடத் திட்டமிட்டு மானாமதுரையில் 225 ஏக்கரிலும், புதுக்கோட்டையிலே 10 ஏக்கரிலும் தொழில் வளாகங்கள் உருவாக்கப்பட்டன. இவை தவிர இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள ஆணைக்காரன்பட்டி போன்ற பின்தங்கிய பகுதிகளில் தனியார் முயற்சியிலே தொழில் வளாகங்கள் அமைக்கும் முயற்சிகளுக்கும் 'சிப்காட்' மூலம் அன்றிருந்த கழக அரசு ஊக்கமளித்தது என்பது நிதர்சனமான உண்மைகள் ஆகும்.

இதைத் தொடர்ந்து சிறு தொழில்களுக்கு உறுதுணையாக இருந்து உதவுவதற்காக 'சிட்கோ' நிறுவனத்தையும் கழக அரசுதான் 1971ஆம் ஆண்டு தொடங்கியது.

தமிழ்நாட்டிலே சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் Small Industries Development Corporation 'சிட்கோ' என்ற நிறுவனம் உருவாக்கப் பட்டது. அதைப்போல 'டிட்கோ' ஏற்கெனவே 1965ஆம் ஆண்டிலேயே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே உருவான ஒரு நிறுவனம். அந்த நிறுவனத்தின் சார்பில் கழக ஆட்சிக் காலத்திலே ஒரு மாறுதல் செய்யப்பட்டு கூட்டுத் துறையிலே Joint Sector -லே தொழில்கள் அமைக்கவும், அதைப்போலவே கூட்டுத்துறை என்றால் 26% அரசின் பங்கு, இணைத் துறை என்றால் அதாவது Associate Sector 11% அரசின் பங்கு என்ற அளவில் இந்த இரண்டு செக்டார்களையும் 'டிட்கோ'-வுடன் இணைந்து செயல்படுத்தத் தொடங்கிப் பல தொழில்கள் தமிழகத்திலே அமைக்கப்பட்டன.

அதேபோல, 1972ஆம் ஆண்டில்தான் தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் 'எல்காட்', மின்னணுத் தொழில்கள் தமிழகத்திலே வளம்பெற வேண்டுமென்பதற்காக ஒரு தொலை நோக்கான திட்டத்தோடு 1972-லே தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் மின்னணுப் பிரிவு ஒன்றை உருவாக்கி அதன் தொடர்பாக பல்வேறு தொழில் பிரிவுகளை ஏற்படுத்தியது. Electronic Corporation of Tamil Nadu தான் 1975ஆம் ஆண்டு 'எல்காட்'

என்று சுருக்கமான பெயரோடு அமைந்தது என்பதையும் அவை உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு 'எல்காட்' நிறுவனம் வளர்ந்து ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவுக்குத் தமிழகம் முழுவதும் மின்னணுத் தொழில் பிரிவுகள் வளர்ச்சி பெற்றுள்ளன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி 'சிப்காட்' 'சிட்கோ', 'எல்காட்' போன்ற நிறுவனங்களைத் தோற்றுவித்ததன் மூலம் தொழில் பெருவாரியாகத் தமிழ்நாட்டிலே வளருவதற்குக் கழக அரசு வழி வகுத்தது. தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தவும், கடன் வசதிகளை அவர்கள் தாராளமாகப் பெறவும் கழக அரசு உதவிடத் தொடங்கியது. மேலும் வரி விலக்கு அளித்தல், விற்பனை வரி வசூலைத் தள்ளி வைத்தல், மின்கட்டணச் சலுகை அளித்தல் போன்ற பல்வேறு உதவிகளை வழங்கி புதிய தொழில்கள் தமிழகத்திலே உருவாகக் கழக அரசு காரணமாக இருந்தது. 1975ஆம் ஆண்டு மேற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு சட்டமன்ற உறுப்பினர் திரு. வில்லியம் வித்தர்ஸ் என்பவர் தமிழ்நாட்டுக்கு வந்து திரும்பிச் சென்றார். அவர் தாயகம் திரும்பியவுடன் மேற்கு ஆஸ்திரேலியா சட்டமன்றத்திலே பேசினார்.

தமிழகத் தொழில் வளத்தைப் பற்றி அங்கே பேசினார். என்ன பேசினார் என்றால், 'தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளுக்கு உதவுவதற்கான பல கவர்ச்சிகரமான கருத்துக்களைக் கொண்டுள்ளது, தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் தொழிற் சாலைகளைத் தொடங்கிட பெரு முயற்சி செய்வதோடு, பல்வேறு சலுகைகளையும் அளிக்கிறது. அச்சலுகைகளில், தமிழ்நாட்டில் தொடங்கப்படும் எந்த ஒரு வெளிநாட்டு தொழிற்சாலைக்கும் இரண்டு ஆண்டு காலத்திற்கு வரி கிடையாது என்பதும், புதிய தொழிற்சாலைகளின் வளர்ச்சி காலத்தில் மின் கட்டணச் சலுகை அளிக்கப்படும் என்பதும் அடங்கியுள்ளன. இவற்றைச் சிறந்த பணிகள் என்று நான் கருதுகிறேன். நம் நாட்டில் தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிடும்போது, அதாவது மேற்கு

ஆஸ்திரேலியாவினுடைய தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிடும் போது இவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்' என்று அவர்கள் மனம் திறந்து பாராட்டியது அப்போதே ஏடுகளில் வெளிவந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இப்படி இந்தியாவிலே மாத்திரம் அல்லாமல், வெளிநாட்டுக்காரர்களும் பாராட்டக்கூடிய அளவுக்கு நாம் தொழில் வளத்தைப் பெருக்கியிருக்கிறோம். குறிப்பாக நான் முதலிலே குறிப்பிட்டதுபோல, கூட்டுத்துறை மூலமாக மாத்திரம் நம்முடைய அரசு உருவாக்கிய தொழிற்சாலைகளை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

1. தூத்துக்குடியிலே ஸ்பிக்-சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்.

2. ஸ்பிக் நிறுவனத்தில் உபரியாகக் கிடைக்கும் அமோனியத்தைப் பயன்படுத்தி 'சோடா ஆஷ்' அமோனியம் குளோரைடு தயாரிக்கும் தூத்துக்குடி அல்கலி கெமிக்கல்ஸ் தொழிற்சாலை.

3. பஞ்சாலைத் தொழிலுக்குத் தேவைப்படும் பாக்ஸ் சாயங்களில் பயன்படுத்தப்படும் சோடியம் ஹைட்ரோ சல்பைட் தயாரிக்கும், தமிழ்நாடு கெமிக்கல் பிராசஸ் லிமிடெட் தொழிற்சாலை, காரைக்குடி.

4. இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் தென் இந்தியாவிலுள்ள சாயத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் குரோமியம் சல்பேட், சோடியம் டெக்ரோமேட், சோடியம் சல்பேட் ஆகிய பொருட்களை தயாரிக்கும் தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிக்கல் லிமிடெட் தொழிற்சாலை.

5. மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் நரசிங்கம்பட்டியில் பொட்டாசியம் குளோரைட் உற்பத்தி செய்யும் பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

6. பழைய இராமநாதபுரம் மாவட்டம், மணலூரில் அலுமினிய குளோரைடு தயாரிக்கும் தமிழ்நாடு குளோரின் அலைட் கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

7. பல்லாவரத்தில் மருந்துகள் தயாரிக்கும் தமிழ்நாடு தாதா பார்மசூட்டிகல்ஸ் தொழிற்சாலை.

8. அடையாரில் டெலிவிஷன் பெட்டிகள் தயாரிக்கும் டைனவிஷன் லிமிடெட் தொழிற்சாலை.

9. கோவளம் பகுதியில் தொழில் உப்பு தயாரிக்கும் மார்த்திக் கிறிஸ்டல் சால்ட் தொழிற்சாலை.

10. ஓசூருக்கு அருகில் ஆசியா புகையிலை நிறுவனம்.

11. மீன்பிடி படகுகள் கட்ட மண்டபம் பகுதியில் கடல்சார்ந்த பெரும் இழுவைப் படகு கட்டும் தொழிற்சாலை.

12. அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தமிழ்நாடு ஆல்கலைன் பேட்டரீஸ் லிமிடெட் தொழிற்சாலை.

13. ஓசூருக்கு அருகில் ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

14. அரக்கோணத்தில் வார்ப்படம் கொல்லுலை தொழிற்சாலை.

15. கையுறைத் தோல், ஆடைகள், தோல், மேல் தோல் முதலியவற்றை தயாரிப்பதற்காக இண்டர் காண்டினென்டல் லெதர்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

ஆகியவை கூட்டுத் தொழிற்சாலைகளாக வடிவம் பெற்றன என்பதையும் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு ஆட்சி கலைக்கப்பட்டு, 13 ஆண்டுகளுக்குப் பிறகு 1989-90-ல் கழக ஆட்சியிலே தொழில் வளம் சிறக்க என்னென்ன ஏற்பாடுகள் நடைபெற்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

வட சென்னை அனல் மின் நிலையத்தை உங்களுக்குத் தெரியும். அந்த நிலையத்திற்கு இடமெல்லாம் பார்க்கப்பட்டு, முதலிலே 500 கோடி ரூபாய் என்று திட்டமிடப்பட்டு, அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்ய யாரும் இணங்காத காரணத்தால்,

உச்சநீதிமன்றம் வரையிலே சென்று வழக்காடிய காரணத்தால், அந்த இடம் அரசால் கையகப்படுத்தப்படாத சூழ்நிலையில், திராவிட முன்னேற்றக் கழக அரசு 1989ஆம் ஆண்டு பொறுப்பேற்றது. பொறுப்பேற்றவுடன் அந்த இடத்திற்கு உடையவர்களை அழைத்துப் பேசி, அவர்களை இணங்க வைத்து, அந்த இடத்தில் வட சென்னை அனல் மின் நிலையத் தொடக்க விழாவை அன்றிருந்த குடியரசுத் தலைவரை அழைத்து நடத்தியதையும் யாரும் மறந்திருக்க இயலாது. ஆனால் 500 கோடி ரூபாய்த் திட்டம், இரண்டு ஆண்டு காலதாமதத்தின் காரணமாக 700 கோடியாக ஆகி இப்போது 1,000 அல்லது 1,200 கோடி ரூபாய் அளவுக்கு வளர்ந்துவிட்டிருக்கிறது. எனவே, வடசென்னை அனல் மின் நிலையத்தை கழக ஆட்சியிலேதான், மீண்டும் பொறுப்புக்கு வந்த உடனே தொடங்கினோம். இன்றைக்கு அது இயங்கிக் கொண்டிருக்கிறது.

இராணிப்பேட்டையில் ஏற்கெனவே இருந்த வளாகத்தில், இரண்டாம் பிரிவு தொழில் வளாகத்தை 113 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பில் - மேலும் 113 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பில் - அமைத்து அதன் மூலம் 3,400 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, ஓசூர் இரண்டாம் பிரிவு தொழில் வளாகம் 457 ஏக்கர் பரப்பளவில், ஏறத்தாழ 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டது. இதில் 6 ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். தொடர்ந்து கும்மிடிப்பூண்டியில் 800 ஏக்கர் நிலப்பரப்பில் விரிவாக்கம் செய்யத் திட்டமிடப்பட்டது. பெரியார் மாவட்டம், பெருந்துறையிலே, இதைப்போல ஒரு வளாகம் அமைக்கும் திட்டம். நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கைகொண்டானிலே 2,000 ஏக்கர் பரப்பில் இதைப்போல பொறியியலுக்காக ஒரு வளாகம் அமைக்கும் திட்டம், இந்தத் திட்டங்கள் எல்லாம் செயல்படவிருந்த நேரத்தில் கழக ஆட்சி இரண்டாவது முறையாகக் கலைக்கப்பட்டது. இப்படி கலைக்கப்பட்டவுடன் கடந்த ஐந்தாண்டுகளில் இப்படி அறிவிக்கப்பட்ட திட்டங்கள் - பெருந்துறை, கங்கைகொண்டான்

போன்ற இந்த வளாகத் திட்டங்கள், நிறைவேற்றப்படுவதற்கு ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை யென்பதை தொடர்புடையவர்கள் மாத்திரமல்ல, தமிழகத்திலுள்ள அனைவரும் அறிவார்கள். 1989-90-ல்தான் கழக அரசு பொறுப்பில் இருந்தபோதுதான், 22 கோடி ரூபாய் முதலீட்டில், 'ஏஷியன் பெயிண்ட்ஸ்' என்ற தொழில் நிறுவனம்; 29 கோடி ரூபாய் முதலீட்டில் 'டெலிகம்யூனிகேஷன்ஸ் கன்சல்டன்ட் இண்டியா லிமிடெட்' என்ற நிறுவனம்; 10 கோடி ரூபாய் முதலீட்டில், திருச்சி 'எஸ். எஸ். சங்கரரெட்டி அசோசியேட்ஸ்' என்ற நிறுவனங்கள் கூட்டுத் துறையிலே உருவாக்கப்பட்டு அவை உற்பத்திகளைத் தொடங்கிவிட்டன. மேலும் 140 கோடி ரூபாயில் 'டைட்டானியம் டை-ஆக்ஸைடு' தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் 'டிட்கோ' மூலம் அமைத்திட கழக அரசு திட்டமிட்டது. இப்படி தமிழக தொழில் வளர்ச்சிக்கு முறையாக திட்டமிட்டு ஊக்கமுடன் மீண்டும் பாடுபடத் தொடங்கிய வேளையில்தான், நான் முன்பு கூறியபடி, கழக அரசு கலைக்கப்பட்டது. அதனால், தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக திட்டங்களைத் தீட்டவே பயமாக இருக்கின்றது. ஏனென்றால், இப்படித் திட்டங்களைத் தீட்டுகின்ற நேரத்திலே எல்லாம், கழக அரசைக் கலைப்பதற்கு அவர்கள் கத்தியைத் தீட்டி விடுவார்களே என்ற அந்தக் காரணமும் கூட, கழக அரசில் நலிவு நீங்கி நலம் பெற்ற தொழில்களையும் நான் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். நிர்வாகச் சீர்கேடுகளால் நலிவடைந்த, தமிழ்நாடு கனிம வளர்ச்சி நிறுவனம் 1989-90-ல் கழக ஆட்சி மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளால், 4 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியது. தமிழ்நாடு பத்திரிகை அச்சுத்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் 1989 வரையில் தொடர்ந்து ஏற்பட்டு வந்த இழப்பு, 49 முதல் 50 கோடி ரூபாய் வரையில் இழப்பு. ஆனால் கழக அரசு நிறுவனத்தைச் சீரமைத்து, ஒரு ஆண்டிலேயே 28 கோடி ரூபாய் நிகர இலாபம் பெறுகின்ற அளவிற்கு உயர்த்தியது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் பெருமகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் முதலிலேயே குறிப்பிட்டேன் கிரானைட் கொள்கை பற்றி. இந்த கிரானைட் கொள்கை ஏற்கெனவே கன்னாபின்னா என இருந்தது. யார் வேண்டுமானாலும் ஆதிக்கம் செலுத்தலாம், யார் வேண்டுமானாலும் கொள்ளையடிக்கலாம் என்ற சூழ்நிலையில்

இருந்தது கிரானைட் கொள்கை. கழக ஆட்சிக் காலத்தில் 1989-90-ல் முயற்சியெடுத்து கனிமங்கள் வெட்டியெடுக்கும் உரிமங்கள் வழங்குவதற்கான கொள்கையை ஒழுங்குபடுத்தி, டெண்டர் முறை ஏற்படுத்தப்பட்டது. டெண்டர் முறை 1989-90 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 272 ஹெக்டேர் மொத்த நிலப்பரப்புடைய 103 இடங்களில் குவாரிகள் டெண்டர் விட்டதால், கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைத்தது. ஆனால் கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு வந்த கடந்த கால ஆட்சியில் என்ன நடைபெற்றது என்பதை நான் பலமுறை இந்த அவையிலே விளக்கி இருக்கிறேன். எனவே, விரிவாக அதற்குள் செல்ல நான் விரும்பவில்லை. டெண்டர் முறை மாற்றப்பட்டது. டெண்டர் முறைதான் நியாயமாக, நேர்மையாக நடைபெற கூடிய ஒரு முறை. அனைவரும் போற்றுகின்ற, பாராட்டுகின்ற ஒரு முறை. கடந்த காலத்திலே ஜெயலலிதா அவர்கள் முதல்வர் பொறுப்பை ஏற்று, அவர்கள் தலைமையிலே ஆட்சி அமைந்தவுடன், இந்த டெண்டர் முறையையே மாற்றி, விதி 39 என்ற ஒரு நடைமுறையை புகுத்தி, அதன் பலனாக, 1993-லிருந்து 1996 ஏப்ரல் வரையில் மூன்று ஆண்டு காலத்தில் குவாரி குத்தகை மூலம் அரசுக்குக் கிட்டிய வருவாய் 5.12 கோடிதான். ஏற்கெனவே 20 கோடி ரூபாய் வருமானம் வந்தது இந்த அரசுக்கு கழக ஆட்சியில் 1989-90-ல். ஆனால் 1993 முதல் 1996 வரை மூன்று ஆண்டு காலத்திலே 5.12 கோடி ரூபாய்தான் வருமானம் வந்தது அந்த முறை மாற்றப்பட்ட காரணத்தினால். இதன் தொடர்பாக விழிப்புப் பணிக்குழு செய்த, 'விஜிலென்ஸ் கமிஷன்' செய்த ஆய்வு ஒன்றில் முந்தைய ஆட்சிக் காலத்தில் குத்தகை விடுவதில் சரியான நடைமுறை பின்பற்றப் படாததாலும், குத்தகைத் தொகை வசூலிக்கப்படாததாலும், அரசுக்கு 70 கோடி ரூபாயிலிருந்து 95 கோடி ரூபாய் வரை வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மீண்டும் கழக அரசு, 1996-ஆம் ஆண்டு பொறுப்பு ஏற்ற பிறகு, அந்த 39 விதியை நீக்கிவிட்டு மறுபடியும் ஒப்பந்தபுள்ளி, டெண்டர்முறை கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு இலாபகரமாக, அந்தத் தொழில் நடந்து கொண்டிருக்கின்றது என்பதையும், அதிலே எவ்வளவு இலாபம் என்பதை அடுத்து அறிவிக்கின்ற ஒரு கட்டத்திலே அறிவிப்பேன் என்பதையும் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதேபோல், ஜல்லி, சிறு கனிமங்கள் என்று சொல்லப் படுகின்ற மணல் போன்ற சிறு கனிமங்கள் சம்பந்தப்பட்ட விதிகள் 8, 8-ஏ, இவைகளுக்கு இந்த அரசு திருத்தம் கொண்டுவந்து டெண்டர் முறையை மீண்டும் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இந்த நடைமுறை மாற்றத்தின் காரணமாக, உதாரணமாக கோவை மாவட்டத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு சொல்லுகிறேன். ஏனென்றால், எல்லா மாவட்டக் கணக்குகளும் எனக்கு வரவில்லை. கோவை மாவட்டத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு சொன்னால், சென்ற ஆண்டு கிடைத்த வருமானம், அந்த ஆட்சியில் கிடைத்த வருமானம் ரூ. 2.88 இலட்சம். அதாவது, ஜல்லி, மணல் போன்ற சிறு கனிமங்கள் மூலம் கிடைத்தது ரூ. 2.88 இலட்சம். அதாவது, கோவை மாவட்டத்தில் மாத்திரம் கிடைத்த வருமானம். இந்த ஆண்டு ரூ. 26.17 இலட்சம் கோவை மாவட்டத்திலே மாத்திரம் கிடைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு கொள்ளை போயிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன். இது, பழைய முறைப்படியே, அவர்கள் வைத்திருந்தார்களே டெண்டர் இல்லாத பழைய முறைப்படி அவர்கள் வசூலித்தது ரூ. 2.88 இலட்சம், அதே முறைப்படி நாம் புதியதாக ஆக்கியிருக்கிற காரணத்தால் நமக்கு கிடைக்க இருப்பது 67.32 இலட்சம், கோவை மாவட்டத்திலே மாத்திரம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது, இந்தப் புதிய மாற்றத்தின் அடிப்படையிலே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்படி, பொறுப்பற்ற தன்மையில் தொழில் துறை கவனிக்கப்படாமல் இருந்தது என்பது மாத்திரமல்ல, தொழில் முனைவோர்கள் யாரைக் கவனிக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை வகுக்கப்பட்டு, தொழில்துறை அடியோடு நாசமாகிப் போனதை, நானல்ல, "Economist Intelligence Unit" என்ற ஒரு ரிசர்ச் யூனிட்டினுடைய ரிப்போர்ட் "India uncaged" என்ற தலைப்பில் "Seeking opportunities in the South" - தெற்கே உள்ள வாய்ப்புகள் "India uncaged" என்ற தலைப்பில், நவம்பர் 1995-ல் வந்த கட்டுரை. அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். "The Report says - "If there is any State. . . கவனமாக பார்க்கவேண்டும், "If there is any State with a reputation for corruption, it is Tamil Nadu". 'ஏதாவது ஒரு

மாநிலம் கரப்ஷனிலே சிறந்து விளங்குகிறது என்று சொல்ல வேண்டுமானால், அந்த ரெபுடேஷன் உள்ள மாநிலம் எது என்றால், அது தமிழ்நாடுதான். எப்போது 1995-ஆம் ஆண்டு, சொல்வது யார்? கருணாநிதி அல்ல, ரிசர்ச் ரிப்போர்ட். Economist Intelligence Unit - னுடைய ரிசர்ச் ரிப்போர்ட் குறிப்பிட்டிருக்கிறது. "The going rate for back handers in the form of commission is said to be about 10 to 15 percent of even the project cost". ஒவ்வொரு திட்டத்தினுடைய மதிப்பீட்டில், அதனுடைய காஸ்ட்டில், அதனுடைய மதிப்பீட்டில் 10 முதல் 15 சதவீதம் வரையில் கமிஷன் கொடுக்க வேண்டும், இடையிலேயிருந்து அந்த நிகழ்வுகளை நடத்திக் கொடுப்பவர்களுக்கு என்று ரிசர்ச் செய்து, ஒரு பெரிய கட்டுரையே வெளியாகி இருக்கிற அளவுக்கு தமிழ்நாட்டினுடைய புகழ் 1995-ஆம் ஆண்டில் ஓங்கி, வளர்ந்து, உயர்ந்து நின்றிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு எந்த எடுத்துக்காட்டும் தேவையில்லை. எனவேதான், அத்தகைய எந்தக் குந்தகங்களும், ஊனங்களும், இந்த அரசுக்கு, தமிழகத்திற்கு வரக்கூடாது என்பதற்குத்தான், நம்முடைய ஒப்பந்தப்புள்ளிகள் திறந்த அளவில் இருக்க வேண்டும் என்ற வகையில், யாரும் அதைப்பற்றித் தகவல்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்ற அந்தச் சூழ்நிலையையும் உருவாக்கி, அந்த வாய்ப்பையும் அவர்களுக்குத் தருகின்ற அளவில் தொழில் துறை இன்றைக்கு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்குக்கூட ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அதிலே அனுபவம் வாய்ந்த தொழில் அதிபர்களும், அரசு அதிகாரிகளும், இளம் தொழில் முனைவோர்களும் இடம்பெற்று, அடிக்கடி அந்தக் குழு கூடி, அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை அது வழங்கி வருகிறது.

இந்த அரசின் தொழில் நேயம் கொண்ட கொள்கைகள் 'Industry-Friendly Policies' மற்றும் ஒளிவு மறைவற்ற, வெளிப்படையான 'transparent appoach' அணுகுமுறைகள் காரணமாகப் பல புதிய தொழில்கள் தமிழகத்திலே உருவாகிக் கொண்டிருக்கின்றன. 10 மாத காலத்தில் பல தொழில்கள் தொடங்கப்பட வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை

மாத்திரம் இங்கே உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். ஏற்கெனவே, அவ்வப்போது கேள்விப்பட்டவைகள் என்றாலும், தொகுத்துத் தருவது என்னுடைய கடமை என்பதால் தொகுத்துத் தருகிறேன்.

100 விழுக்காடு ஏற்றுமதியுடன் கூடிய புளூமிங் மீடோவஸ் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் மலர் வளர்ப்பு (Flori-Culture) திட்டம் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரில் அமைக்கப்படுகிறது. 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எரி சாம்பலைப் பயன்படுத்தி பொருள்கள் தயாரிக்கும் திட்டம் "ப்ளை ஆஷ்பேஸ்ட் பிளக்ஸ் கோல்ஸ்" நிறுவனத்தின் மூலம் எண்ணூரில் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. பொள்ளாச்சிக்கு அருகில் 100 விழுக்காடு ஏற்றுமதியுடன் கூடிய இறைச்சிப் பதப்படுத்தும் திட்டம் ரூ. 169 கோடியில் தொடங்கப்படுகிறது. 38.42 கோடி ரூபாய் செலவில் நவீன ஒருங்கிணைந்த தேங்காய்ப் பொருள்கள் உற்பத்தித் திட்டம் பொள்ளாச்சிக்கு அருகில் தொடங்கப்பட உள்ளது.

இங்கிலாந்து நாட்டு பில்கிங்டன் நிறுவனத்தின் சார்பில் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிங்கபெருமாள்கோவிலில் கண்ணாடித் தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது. 40 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு டெலிகாம் நிறுவனத்தின் கண்ணாடித் தொழிற்சாலை மறைமலை நகரில் அமைக்கப்பட இருக்கிறது.

அசோக் லேலண்டு நிறுவனம் ஓசூரில் உள்ள தனது பிரிவை 630 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவுபடுத்தி ஆண்டுக்கு 10,000 லாரிகளை உற்பத்தி செய்யும் திட்டத்தை தொடங்கியுள்ளது. சென்னை விமான நிலையத்திற்கு அருகில் 35 ஏக்கர் நிலத்தில் ஒரு நிரந்தர வர்த்தக மையம் அமைக்கப்பட உள்ளது. ரூபாய் 350 கோடி மதிப்பீட்டில் தென்கொரியா நாட்டின் கும்ஹோ டயர்ஸ் நிறுவனம் டயர் தொழிற்சாலை ஒன்றை நிறுவுகிறது. தென்கொரியா நாட்டின் ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் இருங்காட்டுக் கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் 2450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கார் தொழிற்சாலை ஒன்றை அமைத்து வருகிறது.

கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழில் வளாகத்தில் 115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கார்பன் பிளாக் தொழிற்சாலை ஒன்று ஹிடெக் நிறுவனத்தினால் அமைக்கப்பட இருக்கிறது.

ஜப்பான் நாட்டு மிச்சுபிஷி கம்பெனியுடன் இணைந்து இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் 300 கோடி ரூபாய் மதிப்பில் லேன்சர் கார் தயாரிக்கும் தொழிற்சாலையைத் திருவள்ளூரில் அமைத்து வருகிறது.

இப்படி பெருந்தொழில்களை அமைப்பதைப் பற்றி ஒரு குறிப்பு. மார்க் நிக்கல்சன் என்கிற தலைச் சிறந்த பத்திரிகை நிருபர், Financial Time 10 ஏப்ரல் 1997, பத்திரிகையில் ஒரு பெரிய கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் குறிப்பிடுகிறார், "Tamil Nadu car industry is perhaps the most spectacular result of the race between States to attract foreign investment and develop new industries". - தமிழ்நாடு கார் தொழிற்சாலை மிக உயர்ந்த அளவிற்கு ரிசல்டைத் தருகின்ற அளவிற்கு மற்ற மாநிலங்களோடு போட்டியிடுகின்ற அளவிற்கு வளர்ந்து வருகிறது என்று குறிப்பிட்டுவிட்டு மேலும் சொல்கிறார், "Tamil Nadu does not yet produce one finished car" இன்னும் ஃபினிஸ்டு கார் ஒன்றும் தரவில்லை. ஆனால் "But within three years new production lines near Madras will roll out 2,44,000 a year". 2,44,000 கார்களை வருடத்திற்கு தரக்கூடிய அளவிற்கு அது வளரும் என்று குறிப்பிட்டுவிட்டு சொல்கிறார்கள். "I don't think anywhere else in the world at this point offers this level of opportunities to the British component industry", says Mr. Bernard Fintlay, International Trade Manager for the British Society of Motor Manufacturers and Traders, recently on reconnaissance in Madras". இப்படிப்பட்ட பாராட்டுகள் தமிழகத்திலே இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்ற கார் தொழிற்சாலைகளைப் பற்றி பத்திரிகையிலே வெளியிடப்பட்டு, மிகச் சிறந்த ஒரு நிருபர் - "Madras revs up to achieve car ambitions" - Tamil Nadu State is profiting from India's liberalised Industry policy, writes Mark Nicholson", என்ற தலைப்பிலே எழுதப்பட்ட கட்டுரையிலே சில குறிப்புகளைத் தான் இங்கே நான் படித்துக் காட்டினேன்.

மேலும் தமிழ்நாடு கிராஃபைட் லிமிடெட் இந்த கிராஃபைட் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்காக நம்முடைய திரு. தா. கிருட்டிணன் அவர்கள் அடிக்கடி இங்கே பேசியிருக்கிறார்கள். இதிலே மிகுந்த அக்கறை கொண்டவராக மத்தியிலே நிதியமைச்சராக இருந்த, இருக்கப் போகிற திரு. சிதம்பரம் அவர்கள் மிகுந்த அக்கறைகொண்டு, அதற்கான பணிகளில் அவரும் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

சிவகங்கை பகுதியிலே கிடைக்கிற கிராஃபைட் தாதுவைக் கண்டறிந்து ஒரு தொழிற்கூடத்தை உருவாக்குவதற்கு அனுபவமிக்க ஆலோசகர்களோடு (Consultants) கலந்து பேசுவதற்காக ஒரு கம்பெனி இப்போது ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. அதுதான் தமிழ்நாடு கிராஃபைட் லிமிடெட் என்ற பெயர் கொண்டு அந்தக் கம்பெனி உருவாக்கப்பட்டிருக்கிறது. அது அந்த ஆய்வுகளிலே ஈடுபட்டிருக்கிறது. இருக்கிற பிரச்சினை என்னவென்றால், அந்தப் பகுதியில் 35.41 இலட்சம் டன் கிராஃபைட் கனிமம் மொத்த இருப்பு இருப்பதாக சிவகங்கை பகுதியிலே மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பகுதியிலே இருக்கும் கிராஃபைட் 14 சதவீதம் சுத்தமாக உள்ளது. இதை 96 சதவீதம் சுத்தமாக ஆக்கும் பொருட்டு ஒரு திட்டம் தீட்டப்பட்டு ஆலோசகர்களோடு கலந்து பேசப்பட்டு வருகின்றது. எனவே, அந்தக் கிராஃபைட் தொழிற்சாலை வருவதற்கான முன் ஏற்பாடுகளை அரசு முனைந்து நிறைவேற்றும் என்பதை இந்த அவைக்கு உறுதியாக நான் தெரிவித்துக்கொண்டு, சில அறிவிப்புக்களை இந்த அவைமுன் வைக்க நான் விரும்புகின்றேன்.

தொழில்கள் தொடங்கப்படுவதற்குத் தேவையான உரிமங்கள் அனைத்தையும் ஒரே இடத்திலே வழங்கிட வகை செய்யும் ஒற்றை சாளரம் Single Window Clearance குறித்து மசோதா ஒன்று ஏற்கெனவே சட்டப்பேரவையிலே வைக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா சட்டம் ஆன பின், தொழில் மையங்கள் அனைத்திலும் தொழில் நகரியங்கள் - Industrial Township ஏற்படுத்தப்படும். அந்த தொழில் நகரியங்களை நிர்வகிக்க நிர்வாக

ஆணையகங்கள் Executive Authority ஏற்படுத்தப்படும். நிர்வாக ஆணையகங்கள் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா உரிமங்களையும் உடனுக்குடன் வழங்குவதற்கு அதிகாரம் உள்ள ஓர் அமைப்பாகச் செயல்படும்.

மணல், ஜல்லி, களிமண் குவாரிகள் மாவட்ட ஆட்சியர், புவியியல் துறை அலுவலர்களால் முறைப்படி குத்தகைக்கு விடப்பட்ட பின், குவாரிகளிலே இருந்து கனிமங்களை எடுத்துச் செல்வதில் எவ்வித முறைகேடுகளும் இல்லாமல், உள்ளாட்சிக்கு வரவேண்டிய முழு வருவாயும் வந்துசேர ஏதுவாக குவாரி நடவடிக்கைகளை கவனிக்கும் பொறுப்பு உள்ளாட்சி மன்றங் களுக்கே இனிமேல் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). இதன்படி குவாரியிலிருந்து Load - சரக்கு ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு முறையும் அதற்குரிய காணிக் கட்டணத்தை (Seignior-age fee) உள்ளாட்சி அமைப்பின் கணக்கில் வங்கியில் செலுத்தி விட்டு, அதன்பின், உள்ளாட்சி அமைப்பு வழங்கும் வாகன அனுமதியைக் (Transport Permit) கொண்டுதான் லாரி சரக்குடன் செல்ல அனுமதிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). அனுமதி வழங்கும் பொறுப்பை ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவருடனோ அல்லது வேறொரு உறுப்பினருடனோ இணைந்து கவனிக்க வேண்டும். ஊராட்சி மன்றத்திற்கு இப்பொறுப்பு வழங்கப்படுவதால், தவறான வழிகளில் மணல், ஜல்லி முதலியன கடத்தப்படுவது தடுக்கப்படுவதோடு, ஊராட்சி மன்றத்திற்கு வருவாயும் பெருக வழியேற்படும்.

புதிதாக உருவாகும் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் அளவில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பதில் சிரமம் உள்ளது. எனவே, பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், நிறைய எண்ணிக்கையில் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் (ஐ.டி.ஐ) தொடங்கிட இந்த அரசு ஆவன செய்யும். இதன் விளைவாக ஏராளமான இளைஞர்கள் பல்வேறு தொழிற்பயிற்சிப் பிரிவுகளில் முறையான பயிற்சி பெற்று, உருவாகி வரும் புதிய தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஐ.டி.ஐ. அமைக்க முடிவெடுத்து அத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிரானைட் கற்களைப் பயன்படுத்தி கூட்டுத் துறையில் 4 புதிய திட்டங்கள் - ஒவ்வொன்றும் 50 ஹெக்டேர் பரப்பளவில், இந்த நான்கும் சேர்ந்து 200 ஹெக்டேர் பரப்பளவில் கிரானைட் கற்களைப் பயன்படுத்தி நடத்துகின்ற தொழில்களைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்குரிய விலைப்புள்ளிகள் விரைவில் முறைப்படி கோரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சுப்பராயன் பேசும்போது குறிப்பிட்டார்கள், ஒவ்வொரு தொழிலும் தொடங்கும்போது சுற்றுப்புறச் சூழல் எப்படி அமையும் என்பதைக் கருத்தில் கொண்டு தொடங்க வேண்டும்; இல்லாவிட்டால், தொடங்கிய பிறகு பிரச்சினைகள் உருவாகும் என்பதை இங்கே எடுத்துக்காட்டினார். அதற்கு ஏற்ப தோல் பதனிடும் தொழில், சாயத் தொழில், உருக்குத் தொழில், கல் உடைக்கும் தொழில் முதலிய பல தொழில்கள் சுற்றுப்புறக் சூழல் பாதுகாப்புக் குறித்த கவலையின்றி, கழிவுப் பொருள்களைத் தாறுமாறாகத் தொடர்ந்து வெளியேற்றி வந்தன. இதனால் ஏற்பட்ட சுற்றுப்புறச் சூழல் கேடுகள் தொடர்பாக அண்மையில் நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பையொட்டி, இத்தொழில்களைத் தொடர்ந்து நடத்துவதில் சில சிரமங்கள் தோன்றியுள்ளன. இச்சிரமங்களைக் களைந்து மீண்டும் இவ்வகைத் தொழிற்சாலைகள் திறம்படச் செயல்பட உதவும் வகையில் புறநகர்ப் பகுதிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய தொழில் வளாகங்கள் அமைத்திட அம்மையங்களில் தோல் பதனிடும் பூங்கா வளாகம், சாயத் தொழில் பூங்கா வளாகம், தோல் பொருள் தொழில் பூங்கா வளாகம், உருக்குத் தொழில் பூங்கா (பவுண்டரி) வளாகம் எனத் தனித்தனிப் பிரிவுகளை அமைத்திடவும், அந்தந்த தொழில்களுக்கு ஏற்ப கழிவுப் பொருள் சுத்திகரிப்பு வசதிகளைச் செய்து கொடுத்திடவும் இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்னணுப் பூங்காக்கள் மின்னணுப் பூங்காக்கள் என்று சொல்லும் போது, நந்தவனம் என்று கருதிக்கொள்ளக் கூடாது. அதைத் தொழில் பார்க் என்றும் அழைப்பது உண்டு. அந்த

அளவிலே மின்னணுப் பார்க், மின்னணுத் துறையிலே ஏற்பட்டு வரும் தீவிர வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் சென்னையில் கேளம்பாக்கத்திலும், கோவையிலும் தொழில்நுட்பப் பூங்காக்களை (Technology Parks) நிறுவிட விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. அதேபோல சென்னைக்கு அருகில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக இரண்டு இடங்களில் மென்பொருள் நுட்பவியல் பூங்காக்களை (Software Techno Parks) நிறுவுவதற்கும் இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய தொழில் மையங்கள். வளர்ந்து வரும் தொழில் வாய்ப்புக்களை கருதி இளைஞர் சமுதாயத்திற்கு முறையான வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டுமென்ற நிலையில், சென்னைப் புறநகர்ப் பகுதியிலும், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியும், கோவை மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும், புதிய தொழில் மையங்களைத் தொடங்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாட்டின் எதிர்கால மின்சாரக் கனவுகள் அனைத்தும் பெரிய அளவிலேயே நம்பியிருப்பது, L.N.G. (Liquified Natural Gas) என்ற எரிவாயுத் திட்டம். அந்த எல்.என்.ஜி. திட்டத்திற்கு, எண்ணூரில் ஒரு எல்.என்.ஜி. டெர்மினல் அமைக்கப்பட்டு, கப்பலில் கொண்டுவரப்படும் 2 மில்லியன் டன் திரவமயமாக்கப் பட்ட எரிவாயு அங்கே சேமித்து வைக்கப்படும். அதன் அருகிலே, முதல் கட்டமாக 2,500 மெகாவாட் திறனுள்ள ஒரு மின் நிலையம் அமைக்கப்பட்டு, திரவ நிலையிலே உள்ள எரிவாயுவை மீண்டும் வாயு நிலைக்கு மாற்றி, குழாய்கள் மூலம் அதனை மின் உற்பத்தி நிலையத்திற்கு அனுப்பி, அதன்மூலம் மின்சாரம் தயாரிக்கப்படும்.

இந்த பிரமாண்டமான திட்டத்திற்கான முதல்கட்ட செலவு ரூ. 12,000 கோடி ஆகும். இந்த 12,000 கோடி ரூபாய்க்கு பொதுத் துறையிலே எங்கே போக முடியும்? எனவேதான், அதற்காக விடப்பட்ட டெண்டர்களை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த, அந்த

ஒப்பந்தங்களுக்குத் தயார் என்று முன்வந்திருக்கிறவர்கள் எத்தனை பேர் என்றால், –

1. மோபில் எல்.என்.ஜி., அமெரிக்கா.
2. ஷெல் இண்டர்நேஷனல் காஸ், இங்கிலாந்து.
3. கோஸ்டல் காஸ் கார்ப்பரேஷன், அமெரிக்கா.
4. அமோகா பவர் ரிசோர்சஸ் கார்ப்பரேஷன், அமெரிக்கா.
5. பிலிப்ஸ் பெட்ரோலியம் கம்பெனி, அமெரிக்கா.
6. ஓக்ஸிடண்டல் நிறுவனம், அமெரிக்கா.
7. காஸ் டி'பிரான்ஸ், பிரான்ஸ்.
8. டோடல், பிரான்ஸ்.
9. நிசோ இவாய், ஜப்பான்.
10. மருபேனி கார்ப்பரேஷன், ஜப்பான்.
11. க்ளெளக் இஞ்சினியரிங் குரூப், ஆஸ்திரேலியா.
12. இம்ப்ரெப் எஸ்டிஎன் பிஹெச்டி, மலேசியா.
13. ரிலையன்ஸ் பவர் லிமிடெட், மும்பை.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே, ஒப்பந்தத்தில் கலந்து கொள்வதிலே, ஆர்வத்தோடு அவர்கள் முன்வந்திருக் கின்றார்கள். அவர்களில் யாருக்காவது ஒருவருக்கு இந்தத் திட்டம் கிடைக்கும். ஒரு பிரமாண்டமான திட்டத்தைத் தமிழ்நாடு விரைவிலே அடைய இருக்கின்றது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னையைச் சுற்றியே பல பெருந்தொழில் திட்டங்கள் உருவாகி வருகின்றன என்ற ஒரு குறைபாடு இருந்து வருகின்றது. இட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, தொழில் துறையின் சார்பில், ஹூண்டாய் கார் தொழிற்சாலை அமையும் திருப்பெரும் புதூருக்கு அருகில் 2,000 ஏக்கர் பரப்பில் ஒரு துணை நகரமும், போர்டு கார் தொழிற்சாலை அமையும் சிங்கப்பெருமாள்கோவில்

பகுதியில் 500 ஏக்கர் பரப்பில் ஒரு துணை நகரமும் அமைக்கப்படும். சென்னையிலேயே தொழில்கள் உருவாகின்றன என்பதை ஓரளவுக்கு மாற்றுவதற்காக இந்த இரண்டு துணை நகரங்களும் பயன்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஏற்கெனவே, 1989-90-91-ல் கழக அரசு பொறுப்பில் இருந்தபொழுது, தனியார் பின்னலாடைத் தொழில் வளாகம் ஒன்றை (பனியன் தொழில் வளாகம்) திருப்பூரை ஒட்டியுள்ள முதலிப் பாளையத்தில் அமைக்கத் திட்டம் வகுத்து, குறுகிய காலத்திலேயே அப்பணியும் முடிக்கப்பட்டது என்பதை அனைவரும் அறிவார்கள். அதேபோல, அனைத்து வசதிகளும் கொண்ட தொழில் மையங்களைத் தனியார் சேர்ந்து உருவாக்க முயன்றால், அதற்கு அரசு நிறுவும் தொழில் வளாகங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தையும் வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணூர், தூத்துக்குடி, மேட்டூர், நெய்வேலி, வடசென்னை ஆகிய இடங்களில் அமைந்த அனல் மின் நிலையங்களில் இருந்து வெளியாகும் எரிசாம்பலைப் பயன்படுத்தி, செங்கல் போன்ற கட்டுமானப் பொருள் (Construction Blocks) தயாரிக்க முன்வரும் தொழில் முனைவோருக்குத் தக்க உதவிகள் செய்திட அரசு முடிவு செய்துள்ளது.

ஜெயங்கொண்டத்திலே நிலக்கரி நிறுவனம். இது நீண்டகாலமாக தீர்க்கப்படாதப் பெரிய பிரச்சினை. 1991-ல் பதிவு செய்யப்பட்ட ஜெயங்கொண்டம் நிலக்கரி நிறுவனம் முந்தைய அரசினுடைய அணுகுமுறை காரணமாகத் தொடங்கப்படாமல் அறிவிப்பு நிலையிலேயே இருக்கின்றது. ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படாமலேயே நிலக்கரியைத் தோண்டி எடுப்பதற்கும், தேவைப்படும் இயந்திரங்களை வழங்குவதற்கும் முந்தைய அரசில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் இந்த அரசினால் ரத்து செய்யப்பட்டுவிட்டன. டெண்டர் கோராமல் அந்த அரசு ஜெயங்கொண்டம் நிலக்கரி நிறுவனத்துக்கான பணிகளை ஒப்படைக்க முன்வந்தபோது, இந்த அரசு பொறுப்பேற்றது. பின்னர் அந்த ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டன. ஆண்டொன்றுக்கு

4 மில்லியன் டன் நிலக்கரியையும், 500 மெகாவாட் மின்சாரத்தையும் குறைந்த விலைக்கு, வழங்க விரும்பும் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு விடிவுகாலம் ஏற்படும் என்பது உறுதி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சிங்கப்பூரிலே இருக்கிற சிங்கப்பூர் இந்திய வர்த்தகக் கழகம் - Singapore Indian Chamber of Commerce - என்கின்ற அமைப்பு, தமிழ்நாட்டில், முதலீடு செய்வதைப்பற்றி சிங்கப்பூரில் இருக்கும் தொழில் முனைவோருக்குத் தகவல்கள் கொடுக்கும் ஒரு சாளரமாகச் (Window) செயல்பட ஒத்துக் கொண்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய அரசு அதிகாரிகள், தொழில் முனைவோர்கள் கொண்ட ஒரு குழு சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கே உள்ளவர்களோடு கலந்து பேசி அவர்கள் இதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். இதற்காக இந்த அமைப்புடன் ஓர் ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட இருக்கிறது என்பதையும், இந்த முயற்சிகள் தமிழகத்திலே சிங்கப்பூர் நிறுவனங்களின் முதலீடுகள் வந்தடைவதற்குத் தூண்டுகோலாக அமையும் என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

டிட்கோவின் புதிய திட்டங்கள். புதிய எண்ணூர் துறைமுகத்தின் சுற்றுப்புறங்களில் சுமார் 7,000 ஏக்கர் நிலப்பரப்பில் பெட்ரோகெமிக்கல் பூங்கா ஒன்று நிறுவப்படும். கழிவுநீரைச் சுத்தப்படுத்தி மீண்டும் பயன்படுத்தும் வகையில் நல்ல நீராக மாற்ற சுத்திகரிக்கும் நிலையங்கள் அங்கு அமைக்கப்படும்.

எஸ்.கே.எம். குரூப் நிறுவனத்துடன் இணைந்து 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முட்டைப் பதப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

நேஷனல் பிளைவுட் லிமிடெட் நிறுவனம் மற்றும் ஜெர்மனியைச் சார்ந்த சையம்பெல்கெம்ப் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து 150 கோடி ரூபாய்ச் செலவில் கரும்புச்

சக்கையிலிருந்து சிறு பலகைகள் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்டு இரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

நார்வே நாட்டைச் சார்ந்த நார்ஸ்கே ஹைட்ரோ நிறுவனத்துடன் இணைந்து பி.வி.சி. குழாய்க்குத் தேவையான மூலப்பொருட்கள் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான ஒப்பந்தம் கடந்த மாதம் கையெழுத்தாகிவிட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

7,500 கோடி ரூபாய் முதலீட்டில், நாப்தா கிராக்கர்ஸ் மற்றும் ஒலிபின்ஸ் (Naphtha Crackers & Olefins) வளாகம் ஒன்று அமைக்கப்படும்.

சென்னை ஏற்றுமதி வளாகத்தில் 27 கோடி ரூபாய்ச் செலவில் 100 சதவீத ஏற்றுமதியுடன் இணைத் துறையில் செயல்படுத்தக்கூடிய உலோகக் குழல் விளக்கு (ஹேலைடு லாம்ப்) தயாரிக்கும் திட்டம் தொடங்கப்படவிருக்கிறது.

ஒசூர் பகுதியில் மலர் வளர்ப்புத் திட்டம் பல நிறைவேற்றப் பட்டு வருவதால், அத்திட்டங்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அங்கு 75 கோடி ரூபாய்ச் செலவில் குளிரூட்டு வசதி, குளிரூட்டப் பட்ட வாகன வசதி முதலியவைகளைக் கொண்ட மையம் ஒன்று அமைக்கப்படும்.

டிட்கோவுடன் இணைந்து ஈஸ்ட் பாலி புரொபிலின் Biaxially oriented poly propylene - (Bopp) பிஸ்பினால்-ஏ (Bisphenol-A) - மற்றும் சக்தியூட்டப்பட்ட கரி ஆகியவற்றைத் தயாரிக்க 325 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்சாலை அமைக்கப்படும்.

பெயர்பெற்ற லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸ் நிறுவனம் மற்றும் டிட்கோவின் இணை நிறுவனமான சிஸ்கால் (Siscol) மூலமாக 450 கோடி ரூபாய் முதலீட்டில் தேனிரும்புத் தொழிற்சாலை தொடங்கப்பட்டுள்ளது. 210 கோடி ரூபாய் மதிப்பில், இரும்புத் தொழிற்சாலை அடுத்த ஆண்டு சனவரித் திங்கள் வாக்கில் உற்பத்தியைத் தொடங்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1,000 கோடி ரூபாய் முதலீட்டில் ஸ்டெர்லைட் நிறுவனம் தூத்துக்குடியில் தாமிரத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. அந்தத் தொழிற்சாலைக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள், அந்த எதிர்ப்பின் காரணமாக அரசு எடுத்த முயற்சிகள் - தொழிற்சாலையும் நடக்கவேண்டும், தொழிற்சாலையிலிருந்து வருகிற கழிவுப் பொருள்கள் காரணமாக மக்களும் பாதிக்கப்படக் கூடாது, மீனவர்களும் பாதிக்கப்படக் கூடாது என்று எடுத்த முயற்சியின் அடிப்படையில், அந்தத் தொல்லைகள் எல்லாம் தீர்க்கப்பட்டு, தொழிற்சாலை தொடங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மணலியில் கூட்டுத் துறையில் ரூ. 50 கோடியில் பல்க்டிரக் இண்டர்மீடியட்ஸ் தொழிற்சாலை அமைக்கப்படும்.

70 கோடி ரூபாய் முதலீட்டில் இண்டஸ்ட்ரியல் என்சைம் தொழிற்சாலை தொடங்கப்படும்.

'டான்சம்' நிறுவனம் மூலம் விருத்தாசலத்தில் 1.4 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டு ஒன்றுக்கு 1,920 டன் உயர்தர அலுமினிய கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நடப்பாண்டில் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியில் ரப்பர் தொழிலைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மோசஸ் அவர்களும் எடுத்துச்சொல்லி, எப்படி ஊருக்குப் போவோம் என்றெல்லாம் கேட்டார்கள். தைரியமாக நீங்கள் ஊருக்குச் செல்லலாம், நானும் பல ஆண்டு காலமாக அங்கே எப்படியும் ரப்பர் தொழிற்சாலை வந்தே தீர வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். ரப்பர் தொழிற்சாலை என்ற காரணத்தால் அது நீண்டு கொண்டே போகிறது. (சிரிப்பு) எனவே, இந்த ஆண்டில் எப்படியும் தொழிற்சாலை வர நான் விடேன் தொடேன் என்று முயற்சி மேற்கொள்வேன், அதுதான் எனக்கு முதல் வேலை என்பதை கன்னியாகுமரியில் உள்ள மக்களுக்கும், உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே திருமதி காஞ்சனா கமலநாதன் அவர்கள் முன்வரிசையில் உள்ளவர்களுக்குத்தான் எல்லாவற்றையும் வழங்குகிறீர்கள், நான் பின்னால் இருக்கிறேன் என்று சொன்னார். நீங்கள் பின்னால் இருங்கள், பின்னாக இருக்காதீர்கள் என்று மட்டும் அவர்களையெல்லாம் கேட்டுக் கொண்டு, இனிமேல் பின்னாக இருக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையோடு, மாம்பழத் தொழிற்சாலை நிச்சயமாக கிருஷ்ணகிரியில் அமையும் என்ற வாக்குறுதியைத் தந்து, இந்த அளவில், இந்த மானியத்தில் உரையாற்றிய, கருத்துக்களைத் தந்த அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டு, வெட்டுப் பிரேரணைகளை எல்லாம் திரும்பப் பெற்று இந்த மானியத்தில் கோரப்பட்டுள்ள தொகையை அனுமதிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

உரை : 7 நாள் : 14.05.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கியுள்ள கருத்துக்களின் அடிப்படையிலும், தமிழகத்திலே தொழில் வளர்ந்துள்ள நிலையின் அடிப்படையிலும், சில கருத்துக்களை இங்கே கூறி, சில முக்கியமான அறிவிப்புக்களையும் தெரிவிக்க இருக்கின்றேன்.

விவாதத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள், இதுவரையிலே அறிவிக்கப்பட்ட தொழில் துறைத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றினீர்களா என்ற கேள்வி கேட்டு, அந்தப் பட்டியலை நான் இங்கே வெளியிட வேண்டிய அவசியத்தை எனக்கு உருவாக்கி இருக்கின்றார்கள். எனவே, அதுபற்றி என்னுடைய உரையிலே நான் விளக்க இருக்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் தொழில் வளர்ச்சிக்கு மின் உற்பத்திதான் அடிப்படையிலே மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறிப்பிட்டு, அதற்காக இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாம் எவை எவை, தேவைக்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவுக்கு மின் உற்பத்தியை நாம் செய்திருக்கிறோமா, ஏன் செய்யவில்லை என்ற வினாவினை அவர்களும் எழுப்பியிருக்கின்றார்கள்.

பல உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதிக்கு, மாவட்டத்திற்குத் தேவையான தொழிற்சாலையைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஒன்றிரண்டை மாத்திரம் நான் இங்கே சொல்வதால், மற்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் புறக்கணித்துவிட்டதாகப் பொருள் அல்ல.

குறிப்பாக நம்முடைய இந்திய தேசிய லீக்கினுடைய தலைவர் திரு. லத்தீப் அவர்கள், சந்தனத் தொழிற்சாலை கேட்டு, பல ஆண்டுகாலமாக சங்கடத்தோடு இங்கே போராடி வருகின்றார்கள். எப்படியாவது அவருடைய ஆசையை நிறைவேற்றுவதற்காகவாவது, நட்டம் வந்தாலும் சரி, இலாபம் வந்தாலும் சரி, பரவாயில்லை என்ற அளவில் அதைத் தொடங்கிட இந்த ஆண்டு முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியினுடைய தலைவர், திரு. சந்தானம் அவர்கள், தன்னுடைய தொகுதியில் தேங்காய் அதிகமாக உற்பத்தியாகிறது; தேங்காய்த் தொழில் அங்கே தொடங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதுபற்றியும் அரசு பரிசீலித்து ஆவனச் செய்யும் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய ஒட்டப்பிடாரம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், நூற்பாலை ஒன்று கேட்டு இருக்கின்றார்கள். அந்தத் தொகுதியிலே நூற்பாலை வைப்பதிலே உள்ள நன்மை, தீமைகள், சாத்தியக்கூறுகள், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள், கிடைக்கக்கூடிய இலாபம், பயன்பெறக்கூடிய வேலைவாய்ப்பு, அந்த வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவர்களுடைய எண்ணிக்கை, இவற்றை எல்லாம் ஆய்ந்து பார்த்து, நூற்பாலைதான் வேண்டும் என்ற கட்டாயம் இல்லாமல், அந்த வறண்டு இருக்கின்ற பகுதியில் வேலை வாய்ப்பைத் தரக்கூடிய ஏதாவது ஒரு தொழிற்சாலையை உருவாக்க இந்த அரசு முன்வரும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மணி அவர்கள் இரப்பர் தொழிற்சாலையைப் பற்றி அடிக்கடி இந்த அவையிலே குறிப்பிட்டு, நானும், சென்ற ஆண்டு அதற்கான உறுதி அளித்து, நானே முன்நின்று அந்த முயற்சியிலே ஈடுபடுவேன் என்று உறுதி அளித்ததை, நல்லவேளையாக அவர் அதை இங்கே குறிப்பிட்டுக் காட்டவில்லை. ஆனால் எனக்கு நினைவு இருக்கிறது. நான் அவருக்கு விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு இரப்பர்

தொழிற்பேட்டை தொடங்குவதற்காக 'Consultancy' செய்வதற்கு 'Rubber Board, Kottayam' என்ற நிறுவனத்திற்கு அளிக்கப் பட்டுள்ளது. அந்த ஆய்வு செய்வதற்கான உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. 3 மாதங்களுக்குள் அந்த இரப்பர் போர்டின் அறிக்கை பெறப்பட்டுவிடும். அதன் பேரில் முதலீடு எவ்வளவு செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, உடனடியாக மேல் நடிவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாட்டாளி மக்கள் கட்சி 1-இன் உறுப்பினர் திரு. மணி அவர்கள் பெண்ணாகரத்திலே ஏதாவது ஒரு தொழில் வளாகம் அமைய வேண்டுமென்று சொன்னார்கள். நான் தமிழகத்திலே அமைந்துள்ள தொழில் வளாகங்கள் எல்லாம் எப்படி இயங்குகின்றன என்று பட்டியலிட்டுக் காட்டிவிட்டு, அதன் தொடர்ச்சியாக அங்கே ஒரு தொழில் வளாகம் அமைவதற்குச் சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதையும் ஆராய்ந்து, அதற்கேற்ப அரசு முடிவு எடுக்கும் என்பதை நான் திரு. மணி அவர்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக உரையாற்றிய திரு. இராமன் அவர்களும், தொடக்கத்திலே உரையாற்றிய திரு. ரங்கநாதன் அவர்களும் அரக்கோணம் ஆலையைப் பற்றி இங்கே சொன்னார்கள். அங்கே தொழிலாளர்கள் வேலையிழந்து வாழ்கிற நிலையை எடுத்துக் காட்டினார்கள். அந்தக் கவலை இந்த அரசுக்கு இல்லாமல் இல்லை. ஆனால் அதைப் பற்றிய சில விவரங்களை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் அறிந்துகொள்வது நலம் என்று நான் கருதுகின்றேன்.

அரக்கோணத்திலே உள்ள தமிழ்நாடு எஃகு நிறுவனம் 1972ஆம் ஆண்டு பொதுத் துறையாக நிறுவப்பட்ட நிறுவனமாகும். இந்த அரசுதான் அதை நிறுவியது. இந்த நிறுவனம் இரண்டு பகுதிகளாக இயங்கி வந்தது. ஒன்று, இரும்பு உருக்குப் பட்டறை - Steel Melting Shop, மற்றொன்று மீள் உருளை ஆலை - Re-rolling Mill. ஆரம்பக் கட்டங்களில் இலாபகரமாக இயங்கி வந்த இந்த ஆலை தற்போது மிகவும் நலிவடைந்த நிலையை எய்தியது. இதற்கான காரணம் வழக்கொழிந்த மற்றும் செயலிழந்த கருவிகள்.

இடைக்காலத்திலே இவை எல்லாம் வழக்கொழிந்தும், செயலிழந்தும் ஆகிவிட்ட கருவிகளாக மாறின.

அதுமாத்திரமல்ல, உற்பத்திக்கான மூலப் பொருள்களுடைய விலை அதிகரித்தது. பராமரிப்பு இடைக்காலத்தில் சரியாக இல்லாதது; இன்னொன்று, விற்பனை விலையைவிட உற்பத்தி விலை அதிகமாக ஆனது. இவை எல்லாம் இந்த ஆலையினுடைய அவலத்திற்கு காரணங்களாக ஆகிவிட்டன. தொடர்ந்து இழப்பிலேயே இந்த ஆலை இயங்கி வந்தது. 1994-95-இல் நட்டம் ரூ. 1.88 கோடி, 1995-96-இல் நட்டம் ரூ. 5.91 கோடி, 1996-97-இல் நட்டம் ரூ. 11.78 கோடி, 1997-98-க்கான கணக்கு இன்னும் முடிக்கப்படவில்லை. எனவே, 1996-97 வரையிலும் மொத்த நட்டம் ரூ. 19.57 கோடி.

தமிழ்நாடு எஃகு நிறுவனத்திலே உற்பத்தியாகும் பொருட்களுக்கு அரசே விலை நிர்ணயம் செய்வதால் administered price - உற்பத்தி விலைக்கும், விற்கப்படுகிற விலைக்கும் உள்ள வித்தியாசத்தை அரசே மானியமாகவும் வழங்க நேரிடுகின்றது. உற்பத்தி விலைக்கும், விற்கின்ற விலைக்கும் உள்ள அந்த இடைப்பட்ட தொய்வை நிறைவு செய்ய அரசாங்கமே மானியம் வழங்க நேருகின்றது. இந்த முறையில் இதுவரையிலே வழங்கப்பட்ட ரூ. 53 கோடியைச் சேர்த்தால் மொத்த நட்டம் ரூ. 72 கோடியே 57 இலட்சமாகும்.

இரும்பு உருக்குப் பட்டறையின் செயல்பாட்டை 25-6-1997 முதல் ஒரு பகுதியை நிறுத்தி வைத்து ஊழியர்கள் மீள் உருளை ஆலையில், அதாவது முறுக்குதல் Twisting - பணி - இன்னொரு பகுதி இருக்கிறதல்லவா? Twisting பணி செய்கின்ற பகுதி. அங்கே பணி செய்யுங்கள் என்று நிர்வாகம் சொன்னபோது ஊழியர்கள் அப்பணியைச் செய்ய மறுத்துவிட்டார்கள்.

இதன் தொடர் விளைவாக மீள் உருளை ஆலையும் 18-8-1997 முதல் இயங்கவில்லை. இந்த ஆலையைப் புனரமைக்க அமைக்கப்பட்ட வல்லுநர் குழு எஃகு நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்களை விற்று, அதன் கடன்களையெல்லாம் செலுத்திவிடலாம் என்று கருத்து தெரிவித்தது.

அதாவது எஃகு நிறுவனத்தினுடைய சொத்துக்களை விற்றுவிட்டு, இந்த Twisting பணியை மாத்திரம் செய்யலாம் என்று

ஒரு யோசனை சொன்னது அந்த வல்லுநர் குழு. தமிழ்நாடு எஃகு நிறுவனத்திற்கு வர வேண்டிய வரவு ரூ. 5.75 கோடி மாத்திரம் தான் என்றிருந்ததால், இந்நிறுவனம் செலுத்த வேண்டிய கடன் ரூ. 40 கோடியாக இருந்ததால் அதுவும் சரிப்பட்டு வரவில்லை. இந்நிலையில், இந்த ஆலையைச் சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலன் அளிக்காததாலும், தொழிலாளர்களும் ஒத்துழைக்காததாலும், இந்த ஆலையை மூடிவிடுவது என அரசு முடிவு செய்ததது. என்றாலும்கூட, தொழிலாளர்களைத் தவிக்க விட்டுவிடக் கூடாது என்ற காரணத்தினால், எப்படி பி அண்டு சி மில்லில் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதோ, விருப்பப்படுகிற தொழிலாளர்கள் விலகிக் கொள்ளலாம் என்ற அந்த அடிப்படையிலே பி அண்டு சி மில் தொழிலாளர்களுக்குத் தரப்பட்டதைவிட, அதிகமாக - அரக்கோணம் உருக்காலைத் தொழிலாளர்களுக்கு தரப்பட்டது. ரூ. 1.25 இலட்சம் பிளஸ் கிராஜுட்டி - இதுபோன்ற இந்தச் சலுகைகள் எல்லாம் அவர்களுக்கு வழங்கப்பட்டன. அவர்களிலே ஏறத்தாழ 90 சதவிகிதம் பேர் அதற்கு உடன்பட்டு அந்த விண்ணப்பங்களைப் பெற்று, விண்ணப்பங்களையும் திருப்பி அளித்து, அதற்கு உடன்படுகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோல, இந்தச் சுய விருப்பு ஓய்வுத் திட்டத்தை அங்கே அமல்படுத்த எண்ணியபோது, தொழிலாளர்கள், இங்கே பி அண்டு சி மில்லிலே தந்ததைவிட எங்களுக்கு அதிகமாகத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அப்படித் தருவதற்கும் நாம் சம்மதித்து இருக்கின்றோம். இங்கே ரூ. 1.25 இலட்சம் என்றால் அதைவிட அதிகமாக, அவர்கள் நிறைவு கொள்ளத்தக்க அளவிற்குத் தருவதற்கும் ஒத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், மிக மிக அதிகமாக அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இது இன்றைக்கு நிறைவேற்றப்பட்டுவிட்டால் அடுத்து மற்ற தொழிற்சாலைகளிலே உள்ள தொழிலாளர்களுக்கு இதே போன்ற ஒரு கோரிக்கை வைக்கின்ற நிலைமை ஏற்படும் என்ற காரணத்தினால் அரசு இதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தக் காரணங்களினாலேதான் அரக்கோணத்திலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல 200 கோடி ரூபாய்

செலவிலே மீண்டும் அரசே அந்த ஆலையை நடத்த வேண்டும் என்ற நிலை இயலாததாக இருக்கிறது என்பதை நான் மீண்டும் மீண்டும் இங்கே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. சுந்தரம் அவர்கள் இங்கே பேசும்போது பல குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். கடைசியாக, தொகுதியைப் பற்றிப் பேச நேரம் இல்லாத காரணத்தினால் அவர் பிடிவாதம் செய்து, நானே விரும்பாத சூழ்நிலையில், வேண்டாமே என்று எண்ணிய சூழ்நிலையில், துணைச் சபாநாயகருக்கு வேறு வழியில்லாமல் அவர் வெளியேற்றப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதற்காக நான் வருந்துகின்றேன்; அவர் இருந்து என்னுடைய பதிலைக் கேட்டிருக்க வேண்டும் என்பதற்காக; இருந்தாலும் அவர் கேட்கக் கூடும் என்பதால் நான் சொல்கின்றேன். அவர் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார், காகித ஆலையைப் பற்றிய ஒரு அதிகாரியின்மீது. நான் அப்போதே உறுதி அளித்து இருக்கின்றேன். இப்படி ஒரு குற்றச்சாட்டை இன்றைக்குத் துணைச் சபாநாயகராக வீற்றிருக்கின்ற மாண்புமிகு திரு. பரிதி அவர்கள், அல்லது வேறு யாராவது இந்த அவையிலே இதற்கு முன்பு சொல்லியிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று அவர்களுக்கே தெரியும். அப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை இங்கு இருக்கின்ற டாக்டர் செல்லக்குமார் ஒருமுறை சொல்லியிருக்கிறார் சென்ற ஆட்சியில். நம்முடைய திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் சொல்லியிருக்கின்றார். நம்முடைய திரு. சி. ஞானசேகரன் எல்லாம் சொல்லி, அவர்கள் எல்லாம் என்ன பாடுபட்டார்கள் என்பது எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால், இங்கே இந்தக் குற்றச்சாட்டு இந்த ஆட்சியிலே சொல்லப்பட்டவுடன், அந்த அதிகாரி யாராக இருந்தாலும், விவரங்களை எழுதிக் கொடுங்கள், நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று உறுதி அளித்திருக்கின்றேன். அந்தக் குற்றச்சாட்டு உண்மையா, உண்மைக்கு மாறானதா என்பது விசாரணையின் போதுதான் தெரியவரும். தெரிய வருகின்ற அந்த விளக்கத்தை இந்த அவைக்கு நிச்சயமாக அறிவிப்பேன். ஏனென்றால், அவையிலே நான் ஏற்றுக்கொண்ட ஒன்று. அதனால் இந்த அவைக்கு அறிவிப்பேன்.

அவர் ஒன்று சொன்னார். டிட்கோ பெரும் நஷ்டத்திலே இருக்கிறது என்று சொன்னார். அது தவறான தகவல். டிட்கோவிற்கு 1995-96-ஆம் ஆண்டு ரூ. 3.21 கோடி இலாபம். 1996-97-இல் ரூ. 2.35 கோடி இலாபம். 1997-98-இல் ரூ. 4.26 கோடி இலாபம். எனவே, திரு. சுந்தரம் சொன்னது மெய் அல்ல. நான் வேறு வார்த்தையைப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக மெய் அல்ல என்று சொல்லுகின்றேன். ரூ. 4.26 கோடி 1997-98-லே டிட்கோவிற்கு இலாபம் என்ற செய்தியை அவருக்குச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கின்றேன்.

நண்பர் திரு. அழகராஜா அவர்கள் இங்கே பேசும்போதும், திரு. இராமன் அவர்களும் மற்றும் சிலரும் இங்கே பேசும்போதும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறைச் சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் ஏன் ஏற்படுகிறது. அதே நேரத்திலே தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு இலாபம் ஏற்படுகிறதே என்று சுட்டிக்காட்டினார்கள்.

நம்முடைய திரு. சந்தானம் அவர்கள்கூட அவர்களுடைய பேச்சில் சர்க்கரை ஆலைகளில் நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் நீங்கள் விவசாயிகளுக்கு கரும்புக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்காததுதான் என்று சொன்னார். அதாவது அதிக நஷ்டம் ஏற்படவேண்டும் என்பதற்காக அவர் அந்தக் கருத்தைச் சொன்னார் என்று நான் கருதுகிறேன். ஆயிரம் ரூபாயைத் தருவதாகத் தேர்தல் நேரத்திலே, தேர்தல் அறிக்கையிலே திராவிட முன்னேற்றக் கழகம் தெரிவித்தது உண்மை. கரும்பு விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய் தரப்பட வேண்டும் என்பது ஒரு கொள்கை, ஒரு குறிக்கோள். அதை நோக்கி நடைபோடுகிற காரணத்தால்தான் மாநில அரசு, மத்திய அரசு நிர்ணயிக்கின்ற விலையைவிட அதிக விலை தமிழகத்திலே கரும்புக்குத் தந்து வருகின்றது. உதாரணமாக 450 ரூபாய், 470 ரூபாய் அளவிலேதான் மத்திய அரசு விலை நிர்ணயிக்கிறது. இங்கே தமிழக அரசு அதை 650 ரூபாய் என்ற அளவுக்கு, அதாவது பிழி திறனுக்கு ஏற்றவாறு 650 ரூபாய் என்றும், நல்ல பிழி திறன் உள்ள கரும்புக்கு 700 ரூபாயைத் தாண்டுகின்ற அளவுக்கும் இங்கே நாம் விலை கொடுத்து வருகின்றோம். அதனால் இந்த ஆயிரம் ரூபாயை

எப்போது தருவீர்கள் என்றால் 2 ஆண்டுதான் முடிந்திருக்கிறது. இன்னும் 3 ஆண்டு இருக்கிறது. இந்த 3 ஆண்டு காலத்திற் குள்ளாக இந்த ஆயிரம் ரூபாயை கரும்பு விலையாகத் தந்து உங்களுடைய பாராட்டுக்களை எல்லாம் பெறுவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அவர்கள் கேட்டார்கள்; தனியார் சர்க்கரை ஆலைகளில் இலாபம் ஏற்படும்போது ஏன் கூட்டுறவு, பொதுத் துறைச் சர்க்கரை ஆலைகளிலே இலாபம் இல்லை என்று திரு. அழகராஜா அவர்கள் கேட்டார்கள். அதற்கான சில விளக்கங்களைத் தர விரும்புகிறேன். 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டு அகில இந்திய அளவிலும், அதேபோல மாநில அளவிலே தமிழகத்திலும் கூடுதலான கரும்பு உற்பத்தி, கூடுதலான சர்க்கரை உற்பத்தி ஆகியவற்றின் காரணமாக சர்க்கரையினுடைய விற்பனை விலை சர்க்கரையினுடைய உற்பத்திச் செலவைவிடக் குறைந்து போய்விட்டது. அது நஷ்டத்திற்கு முக்கியமான காரணம். 1994-95 மற்றும் 1995-96ஆம் ஆண்டில் தனியார் ஆலைகள் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கூட்டுறவு ஆலைகளிலே பதிவு செய்யப்பட்ட கரும்பைச் சம்பந்தப்பட்ட தனியார் ஆலைகள் அரைவைக்கு எடுத்துக் கொள்ளாததால் அவற்றையும் கூட்டுறவு ஆலைகளிலே அரைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தனியார் ஆலைக்காக ஒதுக்கப்பட்டு வைக்கப்பட்ட அந்தக் கரும்பை அவர்கள் எடுத்துக்கொள்ளாத காரணத்தால் அவற்றையும் கூட்டுறவு ஆலைகளே ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் கரும்பு விவசாயிகள் பயிரிட்டுவிட்ட கரும்பை எப்படியாவது அரைவை செய்ய வேண்டும் என்ற நோக்கில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளில் கரும்பு அரைவைக் காலத்தை நீட்டிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தினுடைய ஆணையின் அடிப்படையில் நீட்டித்த அரைவையின் காரணமாகவும் நஷ்டம் ஏற்பட்டது என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தனியார் ஆலைகளைப் பொறுத்தவரை சர்க்கரைத் தொழில் மட்டும் அல்லாமல், அதைச் சார்ந்த எரிசாராயத் தொழிற்சாலை போன்ற இதர தொழில்களின் வருவாயும் தனியார் ஆலைகளுக்கு இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இருப்பினும் அரசு எடுத்த பல நடவடிக்கைகளின்

காரணமாக அவர்கள் இங்கே வருத்தப்பட்டார்கள்; அதற்கு மாறாக 1996-97-இல் 108 கோடி ரூபாய் நஷ்டமாக இருந்த நிலை மாறி 1997-98-இல் 50 கோடி ரூபாய்தான் நஷ்டம் என்ற அளவிற்கு இழப்பின் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்கரை விலை, கழிவுப் பாகு விலை ஆகியவை இலாபகரமாக இருக்கும் பட்சத்தில் சர்க்கரை ஆலைகளை மீண்டும் இலாபத்திலே இயக்க வாய்ப்பு உள்ளது என்பதையும் நான் இங்கே திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய திரு. ரங்கநாதன் அவர்கள் தன்னுடைய தொடக்க உரையிலே, அறிவித்ததை எல்லாம் நிறைவேற்றினீர்களா, புதிதாக எத்தனை தொழிற்சாலைகள் என்றெல்லாம் கேட்டார்கள்.

திரு. சுப்பராயன் அவர்கள் அன்னிய முதலீட்டிலே சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று நான் ஓராண்டுக்கு முன்பு சொன்ன அந்த வாசகத்தை நினைவு வைத்துக்கொண்டு திரும்ப இங்கே சொன்னார்கள். அன்னிய முதலீடுகள், அவர்களை நாம் இங்கே ஆதரிப்பது எந்த அளவிலே இருக்க வேண்டும் என்றால், நான் அப்போது சொன்னேன், கழுத்திலே விழும் மாலை என்கின்ற அளவிற்கு இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். அதுவே கயிறாக ஆகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டினார். அதிலே மிகுந்த எச்சரிக்கையோடு இந்த அரசு இருக்கும் என்பதும், இந்த அரசைத் தலைமையேற்று நடத்திச் செல்கின்ற நான், இந்தப் பிரச்சினையிலே எந்த அளவிற்கு முற்போக்கான கொள்கை உடையவன்; இந்த அமைச்சரவையிலே இருக்கின்ற அமைச்சர்கள் எல்லாம் எத்தகைய முற்போக்கான கொள்கை உடையவர்கள்; யாரால் வளர்க்கப்பட்டவர்கள் என்பது திரு. சுப்பராயன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

எனவே அந்தக் கவலை அவருக்குத் தேவையில்லை. நம்முடைய திரு. இராமன் அவர்கள் கூட ஒரு உதாரணத்தைச் சொன்னார்கள். குதிரையிலே சவாரி செய்யும்போது உடற்பயிற்சி குதிரைக்குத்தான், சவாரி செய்பவனுக்கு அல்ல; அதை மறந்து விடக்கூடாது. எனவே அன்னிய முதலீடு செய்கின்ற

வெளிநாட்டுக்காரர்களுக்குத்தான் இலாபம் ஏற்படும். நமக்கு ஒன்றும் ஏற்படாது என்ற உவமையைச் சொன்னார்கள். அவர்கள் சரியாகச் சொன்னார்களா அல்லது ஏறிப் பார்த்துச் சொன்னார்களா என்று எனக்குத் தெரியாது. குதிரைக்கும் உடற்பயிற்சி உண்டு. அதே நேரத்தில் ஏறிச் செல்கிறவனுக்கும் ஒரு இலாபம் உண்டு. ஏறிச் செல்கிறவனுக்கு அவன் எண்ணுகிற தூரத்திற்குச் செல்லலாம்; குறிப்பிடுகின்ற அந்த இடத்திற்கு அவன் செல்லலாம் குதிரையிலே இருந்தால். குதிரைக்கு உடற்பயிற்சி இருக்கலாம், அது வேறு விஷயம். அதற்காகக் குதிரையிலேயே ஏறாமல் இருந்துவிட முடியாது. குதிரையிலேதான் ஏற வேண்டும் என்ற சூழ்நிலை வரும்போது, கழுதையிலே ஏறாமல், குதிரையிலே ஏறுகின்ற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நாம் நம்முடைய தொழில் வளத்தை, பொருளாதார வளத்தைப் பெருக்கிக் கொள்கின்ற முயற்சியில் ஈடுபடுவது தவறு அல்ல என்று நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே குற்றச்சாட்டுக்களைச் சொல்லியே இந்தத் தொழில் துறை மானியத்திலே பேச வேண்டும் என்ற முனைப்போடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் வந்து இருந்தார்கள். ஆனால் கடந்த காலத்திலே தமிழகத்தினுடைய பொருளாதாரம், தொழில் வளம் எப்படி எல்லாம் கெட்டது என்பதை நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே அதிக நேரம் இல்லாத காரணத்தால் ஓரிரு வரிகளில் விளக்கினார்கள்.

நான் ஒன்றை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1994ஆம் ஆண்டு 'பிசினஸ் இந்தியா' என்ற ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது. அந்தக் கட்டுரையிலே வந்த ஒரு பகுதியை படித்துக் காட்டுகிறேன்.

Says one Madras-based Industrialist. You need not cultivate every Tom, Tick and Harry. If you can please the Presiding Deity, your interests are taken care of. But if you fall out ever, your life is a mess. Jayalalitha's whimsical behaviour has reported to put off several major industrial houses.

Although Tamil Nadu's infrastructure is one of the best, Jayalalitha's behaviour has put off businessmen.

"சென்னையைச் சார்ந்த தொழில் அதிபர் சொல்லுவது. குப்பன், சுப்பன், முனியனை எல்லாம் நீங்கள் தாஜா செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மூல விக்கிரகத்தை, ஜெயலலிதாவை, தாஜா செய்து விட்டாலே போதும், உங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படும், ஆனால் அதிலிருந்து தவறி விட்டாலோ உங்களுடைய வாழ்க்கை முழுவதுமேகூட குழப்பம்தான். ஜெயலலிதாவின் வினோதமான குணாம்சங்கள் பல பெரிய தொழிலகங்களை வர விடாமலேயே செய்து விட்டன.

தமிழ்நாடு மிகச் சிறந்த கட்டமைப்பு வசதிகளைப் பெற்றிருந்தும் ஜெயலலிதாவின் செயல்பாடுகள் தொழில் அதிபர்களை தடுத்து விட்டது என்று "Business India" -வில் வந்த ஆங்கிலக் கட்டுரை குறிப்பிடுகின்றது.

அது மாத்திரம் அல்ல, நான் சென்ற ஆண்டே சுட்டிக் காட்டியிருக்கிறேன். இந்த அவையிலே. Economic Intelligency Unit என்ற ஒரு Research Unitனுடைய Report-ல் India Uncaged என்ற தலைப்பில் "Seeking opportunities in the South" "தெற்கே உள்ள வாய்ப்புகள்" என்ற தலைப்பில் நவம்பர் 1995-இல் இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

The report says:

If there is any State with a reputation for corruption, it is Tamil Nadu'.

ஊழலிலே Corruption-னிலே சிறந்து விளங்குகிறது என்று சொல்ல வேண்டுமானால் அந்த reputation உள்ள மாநிலம் எது என்றால் அது தமிழ்நாடுதான் என்று 1995-ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சி நடைபெற்றபோது Economic Intelligency Unit என்ற Research Unit-னுடைய Report குறிப்பிடுகின்றது. இந்த பிரக்ஞாதி பெற்ற அம்மையார்தான் இன்றைக்கு முன்னாள் நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் பற்றியும், முன்னாள் தொழில் அமைச்சர் திரு. முரசொலி மாறன் பற்றியும், ஏதோ அவர்கள் தமிழ்நாட்டையே கெடுத்துக் குட்டிச்சுவர் ஆக்கிவிட்டார்கள் என்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். நான் அந்த அறிக்கைக் குள்ளே அதிகமாகச் சென்று விளக்கம் அளிக்க விரும்பவில்லை. ஏதோ வரி விதிப்பார்கள் இறக்குமதிக்கு ஒரு வரி, ஏற்றுமதிக்கு

ஒரு வரி விதிப்பார்கள் என்றெல்லாம் சொல்லி அதற்கு உடந்தையாக திரு. முரசொலி மாறன் இருந்தார் என்று சொல்லி, இருவரும் சேர்ந்து தமிழ்நாட்டு மக்களை, ஏன் இந்திய நாட்டு மக்களையே வேதனைப் படுத்தி விட்டார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால் ஊழலில் நிலைக்களமாக, லஞ்ச அவதாரமாக, தமிழ்நாட்டினுடைய தொழில் வளம் உள்ளிட்ட எல்லா வளங்களையுமே பாழ்படுத்திய ஒருவர், இந்தியாவினுடைய அமைச்சர்களாக இருந்தாலும் கூட, இந்தியாவிலே உள்ள மாநிலங்கள் அனைத்திற்கும் நன்மை செய்ய வேண்டும் என்பதோடு, சொந்த மாநிலம் இந்த மாநிலம் என்கிற எண்ணத்தோடு, தமிழ்நாட்டுக்குப் பல தொழில் வளங்களைத் தருவதற்கு நிதியும் தந்து, உரிமைகளும் தந்த திரு. சிதம்பரத்தையும், முரசொலி மாறனையும் குறை கூறியிருப்பது தமிழ்நாட்டிற்கு இவர்கள் செய்கின்ற பெரும் துரோகம் என்றுதான் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் - சிதம்பரமும், மாறனும் - ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று பேசவில்லை என்ற குறை அவர்களுக்கு இருக்கலாம். இப்பொழுது அமைச்சர்களாக மத்தியிலே இருப்பவர்களுக்கெல்லாம் - நான் எல்லா அமைச்சர் களையும் சொல்லவில்லை - அ.தி.மு.க. அமைச்சர்களுக் கெல்லாம் - மற்ற அமைச்சர்களெல்லாம் நம்மையும் திட்டுகிறார்கள், அவர்களுடைய வேலையையும் பார்க்கிறார்கள். இப்பொழுது திரு. வாழப்பாடி இராமமூர்த்தி என்று எடுத்துக் கொண்டாலும், திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் என்று எடுத்துக் கொண்டாலும், திரு. தலித் எழில்மலை என்று எடுத்துக் கொண்டாலும், ஏதோ சில நேரங்களில் நம்மைப் பற்றியும் பேசுகிறார்கள், அதே நேரத்தில் அவர்களுடைய இலாகா சம்பந்தமான வேலை களையும் கவனிக்கிறார்கள். மற்ற அ.தி.மு.க. அமைச்சர்களுக்கு அவர்களுடைய இலாகா சம்பந்தமான வேலையே இங்கே யிருக்கின்ற ஆட்சியைக் கவிழ்ப்பதுதான்; அம்மாவைக் காப்பாற்றுவதுதான். அந்த வேலையை அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதுபோன்ற வேலையிலே ஈடுபடாமல், நாட்டினுடைய வளத்திற்காக, நாட்டினுடைய மேன்மைக்காக,

தொழில் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள் என்பதற்காக இரண்டு அமைச்சர்களைக் குறை கூறி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்ற அம்மையார் அவர்கள், இன்றைக்கும் பார்த்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்கள்.

இவர்களைப் பற்றி நாடு என்ன நினைத்தது, நாட்டிலே உள்ள தொழிலதிபர்கள் என்ன எண்ணினார்கள், தொழில் வளர்ச்சியிலே அக்கறை கொண்ட ஏடுகள் என்ன எண்ணின என்பதற்காகத்தான் இந்த இரண்டையும் நான் இங்கே படித்துக் காட்டினேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பொதுத்துறை நிறுவனங்களில் நமக்கு மிகுந்த அக்கறை உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமேயானால், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், அரியலூர், ஆலங்குளம் இங்கே நிறுவப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்.

தமிழ்நாடு மேக்னசைட், சேலம். தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் அந்தப் பொதுத் துறை நிறுவனம் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம், அது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். காலத்திலே நிறுவப்பட்டது; பொதுத் துறை நிறுவனம்.

சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் நிறுவனம். பொதுத் துறை, தி.மு.க. ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு மினரல்ஸ் - கனிம நிறுவனம் (டாமின்), தி.மு.க. ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்), திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தொழில் அடிப்படை மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்), அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே நிறுவப்பட்டது.

பிறகு நான் அதிலே சில விவரங்களைச் சொல்ல வேண்டுமேயானால், இராணிப்பேட்டையிலே உள்ள 'சிப்காட்' - அந்த வளாகம் 1971ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உருவாக்கப்பட்டது. நான் பலமுறை இங்கே சொல்லியிருக்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இடம் வாங்கப்பட்டு, பிறகு அந்த இடம் தொழில் வளாகம் அமைப்பதற்குத் தகுதி அல்ல என்று அதை விற்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கான கோப்பு வருகிற நேரத்திலேதான் - 1967-லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றது. அண்ணா மறைவிற்குப் பிறகு, நான் பொறுப்பேற்ற பிறகு, நானும், அன்றைய தொழிலமைச்சர் திரு. மாதவனும் அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, இதை எதற்காக விற்க வேண்டும், இங்கே ஒரு வளாகத்தை ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்து, இராணிப்பேட்டையிலே சிப்காட் வளாகம் 1971ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

உங்களுக்கு ஒரு விவரம் சொல்லுகின்றேன். 3 ஆண்டு காலத்தில், 1971-லே ஆரம்பிக்கப்பட்ட 'சிப்காட்' வளாகம், 1973-லேயிருந்து 1976 வரை, மூன்றாண்டு காலத்தில் 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 தொழில் நிறுவனங்களை 729 ஏக்கர் பரப்பிலே அங்கே தொடங்கி நடத்திக் கொண்டிருக்கின்றது. அதற்குப் பிறகு 12 ஆண்டு காலம், 1976-லேயிருந்து 1988 வரை அங்கே உருவான தொழில் நிறுவனங்கள் 49 தான். பிறகு 1989-லேயிருந்து 90 மீண்டும் நாங்கள் ஆட்சியிலே இருந்தபோது, 1989, 1990 - இரண்டு ஆண்டுகளில் 25 தொழில் நிறுவனங்கள். 1991 முதல் 1996 வரை 5 ஆண்டு காலத்தில், கடந்த ஜெயலலிதா ஆட்சியில் 30 தொழில் நிறுவனங்கள், 5 வருஷத்திலே. 1996 மே

முதல் 1998 மார்ச் வரை 65 தொழில் நிறுவனங்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்.

1974ஆம் ஆண்டு 500 கோடி முதலீட்டில் 186 தொழில் நிறுவனங்கள் ஒசூரில் தொடங்கப்பட்டன. 1991-96, 5 ஆண்டு காலத்தில் ஜெயலலிதா ஆட்சியில் 35 தொழில் நிறுனங்கள். 1996-98 இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 133 நிறுவனங்கள். புதுக்கோட்டை சிப்காட், 1991-96, 5 ஆண்டுகளில் 13 தொழில்கள். 1996-98 இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 14 தொழில் நிறுவனங்கள். கும்மிடிப்பூண்டியில் 1991-96 வரை 5 ஆண்டுகளில் 65 தொழில் நிறுவனங்கள். 1996-98, இந்த இரண்டு ஆண்டுகளில் கழக ஆட்சியில் 78 தொழில் நிறுவனங்கள்.

நமது அரசு மத்தியிலே உள்ளவர்களிடத்திலே வலியுறுத்தி சில பொதுத் துறை நிறுவனங்களை, தொழில்களைப் பெற வேண்டுமென்று திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நெய்வேலி என்ன ஆயிற்று என்று கேட்டார். நான் கடந்த ஆண்டு தொழில் மானியத்திற்குப் பதில் அளிக்கும்போது குறிப்பிட்டிருக்கின்றேன். ஏறத்தாழ 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கான பொதுத் துறை நிறுனங்கள் தமிழக அரசால் இன்றைக்குப் பரிபாலிக்கப்படுகின்றன என்றாலும்கூட மேலும் 16 ஆயிரம் கோடி ரூபாய்க்கான தொழில்கள் பொதுத் துறையிலே வர வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துகிறோம் என்று குறிப்பிட்டேன். அப்படிக் குறிப்பிட்ட 4, 5 பெரிய தொழில்களில் ஒன்றாக நெய்வேலி சுரங்கம், Third mine cut, அவர்கள் கேட்டார்களே, அந்த Third mine cut-க்கு 6,100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன், தொடர்ந்து வற்புறுத்தியதன் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே, எம்.ஆர்.எல். எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம். அதனுடைய உற்பத்தித் திறனை அதிகரிக்கும் திட்டம், அதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டது. 1,200 கோடி ரூபாய் அதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், எண்ணெய்க் கசடு

வருகிறதே, அதிலேயிருந்து மின்சாரம் தயாரிக்கலாம், 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்று அந்தத் திட்டத்திற்கு விரைவில் அனுமதி தேவை என்ற முறைப்படி நம்முடைய அலுவலர்கள், அதிகாரிகள் எல்லாம் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அதைப் பற்றிப் பல நேரங்களிலே மத்திய அரசிடம் பேசும்போது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வலியுறுத்தி அந்த எண்ணெய்க் கசடு மூலமாக 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற திட்டத்திற்கு விரைவில் அனுமதி பெறுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இஃதன்னியில், சிப்காட் வாயிலாக உருவாக்கப்படும் புதிய தொழில் வளாகங்கள் என்று எடுத்துக் கொண்டால் - புதியவை என்ன என்று கேட்டார் திரு. ரங்கநாதன். அதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமேயானால் - 1996-97ஆம் ஆண்டினுடைய அறிவிப்புகள், செய்யாறு தொழில் வளாகம், இருங்காட்டுக்கோட்டை தொழில் வளாகம், கும்மிடிப்பூண்டி இரண்டாம் கட்டத் தொழில் வளாகம்; இதிலே செய்யாறைப் பொறுத்தவரையில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் செய்யாறு தொழில் வளாகத்தின் முதல் கட்டம் நிறைவேற்றப்படத் திட்டமிடப்பட்டது. 260 ஏக்கர் நிலம் அதற்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளது. செய்யாறு தொழில் வளாகத்திற்குரிய முதன்மைத் திட்டம், மாஸ்டர் பிளான் தயாரிக்க, ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். பாலாற்றுப் படுகையிலிருந்து செய்யாறு தொழில் வளாகத்திற்குத் தண்ணீர் கொணருவது குறித்து ஆராயுமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இருங்காட்டுக்கோட்டை தொழில் வளாகம் - 1,829 ஏக்கர் நிலப்பரப்பில் இருங்காட்டுக்கோட்டைத் தொழில் வளாகம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. 1,314 ஏக்கர் நிலம் அதற்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 700 ஏக்கர் நிலம் தொழில் முகவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதிலேதான் யுண்டாய் மோட்டார் கார் தொழிற்சாலைக்கு மாத்திரம் 532 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகின்றேன். இருங்காட்டுக்கோட்டையிலே சிப்காட் மேம்படுத்தியுள்ள உள்கட்டமைப்பு வசதிகள், 10 கிலோ மீட்டர்

நீளத்திற்குச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மெயின் சாலைப் பணிகள் 1998 ஜூன் மாதத்திற்குள் முடிவடைய இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கும்மிடிப்பூண்டி இரண்டாம் கட்டத் தொழில் வளாகத்தில் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா அமைக்க 224 ஏக்கர் நிலப்பரப்பு; அதிலே 160 ஏக்கர் நிலம் ஒதுக்கீட்டிற்குத் தயாராக ஆக்கப்பட்டுள்ளது. 15 ஏக்கர் நிலம் வாசனைத் திரவியப் பொருள்களை உற்பத்தி செய்யும் 'புஷ்போக் ஆலன்' கம்பெனிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சாலைப் பணிகள் ஜூன் மாதத்திற்குள்ளேயே முடிவடையவிருக்கின்றன.

அடுத்து, 1997-98ஆம் ஆண்டுக்கான அறிவிப்புகளும் நிறைவேற்றமும், 1997-98ஆம் ஆண்டு திருப்பெரும்புதூர், நெமிலி, வடமங்கலம் ஆகிய இடங்களில் தொழில் வளாகங்கள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அவற்றின் முன்னேற்ற விவரங்களைச் சொல்ல வேண்டுமேயானால் திருப்பெரும்புதூர் சிப்காட் தொழில் வளாகம் 2,469 ஏக்கரில் உருவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 292 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில், 125 ஏக்கர் நிலம் செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. வளாகம் உருவாக்கத்திற்கு ஆலோசகர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டுவிட்டன. சாலை முதலிய உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மண், தண்ணீர் குறித்த ஆரம்ப நிலை ஆய்வு முதலியன மேற்கொள்ளப் பட்டுள்ளன. நெமிலி சாட்டிலைட் நகரையும் 2,429 ஏக்கர் பரப்பிலும், வடமங்கலம் தொழில் பூங்கா 1,408 ஏக்கர் பரப்பிலும் - தொழில் வளாகங்கள் - அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றுக்கான நில எடுப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது நம்முடைய மாநிலத்தினுடைய நிலையை நாம் சற்றுக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். 1991 ஜூலை முதல் 1996 ஏப்ரல் வரை தமிழக தொழில் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட

மொத்த முதலீடு 90,609 கோடி ரூபாய் ஆகும். அதாவது 60 மாதத்திலே 90,609 கோடி ரூபாய். அப்போது இம்மாநிலம் அகில இந்திய அளவில் ஐந்தாவது இடத்தைப் பெற்றிருந்தது, கழக ஆட்சியில். 1998 சனவரி வரை, 20 மாதங்களில் இம்மாநிலம் 33,560 கோடி ரூபாயை முதலீடாகப் பெற்று, அது நாட்டின் மொத்த மூலதனத்தில் 17.6 சதவீதம் என்ற நிலையில், மூன்றாவது இடத்தை அடைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

1991-92-இல் 6.781 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டின் ஏற்றுமதி 1996-97-இல் 18.500 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது 1997-98-இல் 20,000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவின் ஏற்றுமதியிலே தமிழகம் 17 சதவீதத்தை அடக்கியதாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'பி.டி. கேலம்' 1997 டிசம்பரில் வெளியிட்ட முதுநிலை வணிக நிர்வாக ஆய்வு அறிக்கையில் முதலீட்டாளர்களை மிகவும் கவருவதில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும்கூட, Business Today 'the best States to invest in' என்ற இந்த பத்திரிகையில், முதல் இடத்திலே திரு. மனோகர் ஜோஷி அவர்களுடைய படத்தைப் போட்டு மகாராஷ்டிரா மாநிலத்திற்கு முதல் இடமும், இரண்டாவது இடம் குஜராத் - அதிலே திரு. திலீப் பரீக் அவர்களுடைய படத்தைப் போட்டு இரண்டாவது இடமும், தமிழ்நாடு என்று என்னுடைய படத்தைப் போட்டு, தமிழ்நாடு மூன்றாம் இடம் என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) வெளியிட்டு இருப்பதை உங்களுக்கு எல்லாம் நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன். அதிலே ஒன்றைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த இடங்களிலே ஒரு சிறு தகராறு என்னவென்றால், மகாராஷ்டிரா, Objective-லும் 1, Perception-லும் 1, Rank-லும் 1: இந்தப் புள்ளிவிவரம் காட்டுகிறது. குஜராத் Objective-லே 3, Perception-லே 2, Rank-லே 2; தமிழ்நாடு Objective-லே 2, Perception-லே 3, Rank-லே 3: இதற்கு என்ன விளக்கம் என்றால் Objective என்றால், உண்மை, உண்மையான நிலை. Perception என்றால் பார்வையிலே பார்க்கும்போது உள்ள நிலை. நாம் உண்மையிலேயே இரண்டாவது இடத்திற்கு வந்திருக்கிறோமாம். ஆனால், வெளி உலகத்திற்கு நாம் மூன்றாவது

இடமாகத் தெரிகிறோமாம். காரணம், அந்த அளவிற்கு விளம்பரம் இதுவரையிலும் செய்துகொள்ளாமல் இருந்ததினாலே நாம் மூன்றாவது இடத்திலே இருக்கிறோமாம். (மேசையைத் தட்டும் ஒலி). இதையும் அது குறிப்பிட்டுக் காட்டுகிறது.

மகாராஷ்டிரா, Objective-ல் 1, Perception-ல் 1, Rank-ல் 1: குஜராத் Objective-ல் 3, Perception-ல் 2, Rank-ல் 2; தமிழ்நாடு Objective-ல் 2, Perception-ல் 3, Rank-ல் 3: ஆனால் உண்மையிலேயே நாம் இரண்டாவது இடத்திலே இருக்கிறோம். முதல் இடத்திற்குச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்று நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

அயல்நாட்டினுடைய நேரடி முதலீடுகளின் காரணமாக இருக்கக்கூடிய சாதக பாதகங்கள் இவைகளைப் பற்றி நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள்கூட இங்கே பேசினார்கள். அதிகமாக நாம் அவர்களிடத்திலே பலியாகி விடக்கூடாது என்பது போன்ற கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்துரைத்தார். அணுகுண்டு சோதனை பற்றி எடுத்துரைத்தார். அயல்நாடுகளெல்லாம் எந்த அளவுக்கு இந்தியாவை இன்றைக்கு எச்சரித்துக் கொண்டிருக்கின்றன என்பதைப் பற்றியும் எடுத்துச் சொன்னார். ஆனால் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 1996ஆம் ஆண்டு மே மாதம் முதல் 1998ஆம் ஆண்ட ஜனவரி மாதம் வரை உத்தேசிக்கப்பட்டுள்ள மற்றும் செயலாக்கத்திலே உள்ள அயல் நாட்டு நேரடி முதலீடுகளின் அளவு மொத்தம் 43,515 கோடி ரூபாய் ஆகும். இதில் காலகட்டத்திலே கணக்கு முடிக்கப்பட்டவை, கைவிடப்பட்ட முதலீடு இவைகளின் அளவுகளையெல்லாம் கழித்தால், 8,522 கோடி ரூபாய் கழிக்கப்பட்டால் 1998ஆம் ஆண்டு ஜனவரி வரை 34,993 கோடி ரூபாய். அது அப்ரூவ்டு முதலீடு. இதற்கான ஒப்புதல் கிடைக்கப் பெற்றிருக்கிறது. இந்த 34,993 கோடி ரூபாய்க்குள் பல தொழில்கள் இங்கே முதலீடு செய்வதற்கும், வருவதற்குமான வாய்ப்புக் கூறுகள் நிறைய இருக்கின்றன. அப்படி வருகின்ற தொழில்கள் என்னென்ன என்று பார்த்தால், அடிப்படை இரசாயனத் தொழில் 16,329 கோடி ரூபாய், பெட்ரோலியப் பொருள்

2,264 கோடி ரூபாய், உரம் 1,125 கோடி ரூபாய், உலோகம் அல்லாத கனிமப் பொருள் 936 கோடி ரூபாய், தொழில் இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழில் 913 கோடி ரூபாய், மின்னணுத் தொழில் 242 கோடி ரூபாய், போக்குவரத்துச் சாதனத் தொழில் 1,157 கோடி ரூபாய், கனிமத் தொழில் 412 கோடி ரூபாய், மின் உற்பத்தித் திட்டம் 18,392 கோடி ரூபாய், இரயில்வே தொழில்களில் 765 கோடி ரூபாய் சாலைகள் மற்றும் பாலங்கள் 480 கோடி ரூபாய், தொலைத் தொடர்புத் தொழில்கள் 100 கோடி ரூபாய். அயல்நாட்டு நேரடி முதலீட்டால் ஏற்படக்கூடிய சமூக விளைவுகள் என்னவென்று பார்த்தால், இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதன் விளைவாக, இந்தியாவில் அயல்நாட்டு நேரடி முதலீடு ஏறுமுகமாக உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. அயல்நாட்டு நேரடி முதலீடு உலகின் பல்வேறு இடங்களிலிருந்தும் நவீன தொழில் நுட்பத்தை மாநிலத்திற்குக் கொண்டுவர உதவுகிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. அந்த நுட்பம்கூடத் தேவையில்லை என்கின்ற அளவிற்கு இன்றைக்கு அரசியல் வட்டாரத்திலே சில பகுதிகளிலே பேசப்பட்டாலும்கூட, அந்தத் தொழில்நுட்பம் இன்றைய விஞ்ஞான உலகத்தில், வளரும் விஞ்ஞான உலகத்தில் எவ்வளவு தேவை என்பதை அதிலும் இந்தியா போன்ற வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற ஒரு நாட்டு மக்கள், அதிகம் பேர் அடங்கிய நாட்டுக்கு எவ்வளவு தேவை என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

மாநிலத்தினுடைய சொந்த நிதி ஆதாரத்திற்குக் கூடுதலாக கணிசமான வெளிநாட்டு நிதியாதாரங்களை இந்த அயல்நாட்டு மூலதனம் மூலமாகக் கொண்டுவர முடிகிறது. வெளிநாட்டின் சிறந்த வர்த்தகத்தையும், நிர்வாகத் திறமையையும் கொண்டு வெற்றிகரமாக இயங்கி வரும் நிறுவனங்கள் தங்களுடைய தொழிலைத் தமிழ்நாட்டில் விரிவாக்கம் செய்ய முடிகிறது. பல்வேறு நிலையிலே உள்ள நம்முடைய பொறியாளர்கள், இளநிலை மேற்பார்வை யாளர்கள், பணியாளர்கள் போன்றவர்களின் தொழில் திறமைகள் மற்றும் தொழில் அறிவுத் திறமைகள் கணிசமாக உயர்வடை கின்றன. அவர்களது மதிப்பும் வேலைவாய்ப்பும் அதிகரிக்கின்றன. மாநிலப் பொருளாதாரத்தில் ஒட்டுமொத்தமான உற்பத்தித் திறன் அதிகரிப்பதோடு, ஏராளமான புதிய வேலைவாய்ப்புகள் உருவாகவும் வழிகோலப்படுகிறது.

வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்கள் மாநிலத்திற்கு வருவதன் காரணமாக, அவர்களுடைய உறைவிடம், உணவு, பொழுதுபோக்கு முதலிய தேவைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இன்றைய தேதியில் சென்னையில் மாத்திரம் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் தங்கியிருக்கின்றார்கள். இத்தாலி, மெக்சிகோ, ஜப்பான், தாய்லாந்து, மற்றும் கொரியா உணவு வகைகளைத் தயாரிக்கும் பலதரப்பட்ட உணவகங்கள் சென்னையிலே தொடங்கப்பட்டு, நல்ல வர்த்தகங்கள் புரிந்து வருகின்றன. வெளிநாட்டினருடைய தேவைகளைப் பூர்த்திச் செய்ய மிகச் சிறந்த உறைவிடங்கள் தோன்றியுள்ளன. பன்னாட்டுப் பாடத் திட்டங்களை அளிக்கும் புதிய பள்ளிகளும் தொடங்கப் பட்டுள்ளன. மாநிலத்திலே வசிக்கும் வெளிநாட்டினருடைய பயண விருப்பம் காரணமாக சுற்றுலாத் துறையும் பயனடைகிறது. சுற்றுலா விரிவடைந்தால், அதன்மூலமாக அன்னியச் செலாவணி அதிகமாக ஒரு நாட்டுக்குக் கிட்டும் என்பது அனைவரும் அறிந்த பொருளாதார இலக்கணம். வெளிநாட்டு நேரடி முதலீட்டால் அதிக அளவில் வேலைவாய்ப்புகள், அதிகம் உற்பத்தி, பொருளாதாரம், உள்ளூர் பணியாளர்களுடைய திறமை உயர்வு, தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக ஆதாரங்கள் மேம்பாடு ஆகியவை பெருகிட வாய்ப்பு ஆகிறது. இவ்வளவு சீலங்களையும் சொல்கின்ற காரணத்தால் சிச்கிக் கொள்வீர்களா என்று திரு. சுப்பராயன் கேட்கத் தேவையில்லை. சிக்கிக் கொள்ளாமலேதான் இவற்றை யெல்லாம், இந்தப் பயன்களையெல்லாம் நாம் அனுபவிக்க இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின் திட்டங்களைப் பற்றி இங்கே திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். மற்றவர்களும் அதைப்பற்றிப் பேசியிருக்கின்றார்கள். 900 கோடி ரூபாய்த் திட்ட மதிப்பீட்டில் சேலம் உருக்காலையிலே அமைய இருக்கின்ற ஒருங்கிணைந்த எஃகு உற்பத்தித் திட்டத்திற்கு மத்திய எஃகு அமைச்சகத் தினுடைய அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வருகின்றோம்.

குறுகிய காலத்திலே மின்சார உற்பத்தி செய்யும் 20 மின் திட்டங்களைத் தமிழகத்திலே அமைக்கத் திட்டமிடப்பட்டது. இந்த அவையிலே ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட செய்திதான். இவற்றிலே தூத்துக்குடியிலே இரண்டு திட்டங்கள், எண்ணூர், கள்ளிக்குடி, ஒசூர் ஆகிய இடங்களில் மூன்று திட்டங்கள், ஆக மொத்தம் ஐந்து மின் திட்டங்களுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்கிட மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஐந்து மின் திட்டங்களின் மூலம் மொத்தம் 480 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். ஏறத்தாழ 2,300 மெகாவாட் திறனுள்ள மின்சாரத்தை உற்பத்தி செய்யும். எஞ்சிய 15 திட்டங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கப்படுவதில் மத்திய அரசின் அனுமதி தாமதமாகிக் கொண்டே வருகிறது. இப்பொழுது மாத்திரம் அல்ல, கடந்த ஐக்கிய முன்னணி ஆட்சியிலேகூட பலமுறை வலியுறுத்தியும், பிரதமரிடத்திலே நான் சென்று வலியுறுத்தியும், மின்சாரத் துறை அமைச்சர் சென்று வலியுறுத்தியும், அங்கிருந்த நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் வலியுறுத்தியும்கூட, இந்த ஐந்து திட்டங்களுக்கு மேல் அங்கிருந்து நமக்கு அனுமதி கிடைக்கவில்லை. மற்ற 15 திட்டங்களுக்காக நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். அந்த 15 திட்டங்கள், துவாக்குடியிலே பிரிஸ்டன் ஸ்ட்ரக்சர் கம்பெனி. இந்தத் திட்டம் நிறைவேறினால் 102 மெகாவாட்ஸ். இராணிப்பேட்டையில் என்சோன் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், திட்டம் நிறைவேறினால் 242 மெகாவாட்ஸ், மணலியில் பி.டி.விஷ்மக்கார்ய பிரசட்யா, திட்டம் நிறைவேறினால் 138 மெகாவாட்ஸ், சிறுமுகையில் டி.சி.எம். ஸ்ரீராம் கன்சாலிடெட் லிமிடெட், திட்டம் நிறைவேறினால் 103 மெகாவாட்ஸ், வாடிப்பட்டியில் பாலாஜி பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் திட்டம் நிறைவேறினால் 118 மெகாவாட்ஸ், திருப்பெரும் புதூர்-1-இல் சாம்சங் கார்ப்பரேஷன், திட்டம் நிறைவேறினால் 109 மெகாவாட்ஸ், திருப்பெரும்புதூர்-2-இல் சாம்சங் கார்ப்பரேஷன், திட்டம் நிறைவேறினால் 109 மெகாவாட்ஸ், கும்மிடிப்பூண்டியில் டி.என்.பி. என்ஜினியரிங் அண்டு கன்சல்டன்சி எஸ்.டி.என்.பி.எச்.டி., திட்டம் நிறைவேறினால் 162 மெகாவாட்ஸ், செங்கல்பட்டில் டி.எல்.எப். பவர் லிமிடெட், திட்டம் நிறைவேறினால் 53 மெகாவாட்ஸ், கும்மிடிப்பூண்டி-2-இல் அசோக் லேலண்டு, திட்டம்

நிறைவேறினால் 225 மெகாவாட்ஸ், செங்கல்பட்டு-1-இல் அசோக் லேலண்டு, திட்டம் நிறைவேறினால் 231 மெகாவாட்ஸ், பெருந் துறையில் டி.என்.பி. என்ஜினியரிங் அண்டு கன்சல்டன்சி எஸ்.டி.என். பி.எச்.டி., திட்டம் நிறைவேறினால் 154 மெகாவாட்ஸ், கடலூரில் அசோக் லேலண்டு, திட்டம் நிறைவேறினால் 225 மெகாவாட்ஸ், அரக்கோணத்தில் ஸ்ரீராயலிசிம்தா ஐ டிரான்ஸ் ஐப்போ லிமிடெட், திட்டம் நிறைவேறினால் 118 மெகாவாட்ஸ், பள்ளிப்பாளையத்தில் அசோக் லேலண்டு, திட்டம் நிறைவேறினால் 219 மெகாவாட்ஸ், ஆக, 15 மின் திட்டங்களிலும் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ள மின்சாரம் 2,307 மெகாவாட்ஸ் ஆகும். இந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசினுடைய ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகின்றது. தொடர்ந்து வலியுறுத்துவோம். இதுவரையிலும் ஐந்து திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்றிருக்கிறோம். அந்தப் பணியை முடுக்கிவிட்டு, விரைவிலே முடிப்போம். இந்தத் திட்டங்களுக்கான ஆயத்தப் பணிகளை மெற்கொள்ள, நம்முடைய அமைச்சர், சமீபத்திலேகூட டெல்லிக்கு சென்று மின்சாரத் துறை அமைச்சர், மாண்புமிகு குமாரமங்கலம் அவர்களைச் சந்தித்துப் பேசி வந்திருக்கின்றார். விரைவிலே இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் மத்திய அரசு அனுமதியைத் தரவேண்டுமென்று இந்த அவையிலே உங்கள் அனைவரின் மூலமாகவும் நான் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கு, கட்சி மாறுபாடுகளுக்கு இடமில்லாமல் பணியாற்றுவேன் என்று எனக்கு குமாரமங்கலம் அவர்கள் எழுதிய கடிதத்திலேகூட குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதை அவர் நிறைவேற்றுவார் என்று நான் நம்புகின்றேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் சிப்காட் நிறுவனம் செய்துகொண்ட தொழில் ஒப்பந்தங்களை மாத்திரம் இங்கே வரிசைப்படுத்த விரும்புகின்றேன். என்னென்ன தொழில் என்ற பட்டியலை திரு. ரங்கநாதன் அவர்கள் கேட்டார்கள். ஆகவே, அவற்றை மாத்திரம் நினைவுபடுத்துகின்றேன்.

யூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட், கொரியா நாட்டைச் சேர்ந்த மோட்டார் நிறுவனம் கார் தொழிற்சாலை ஒன்றை நிறுவ, 18-7-1996 அன்று சிப்காட் நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டது. 18-7-1996-லே ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தாரா,

இல்லையா என்பது எனக்குத் தெரியாது. திரு. சுந்தரம்தான் சொல்ல வேண்டும். என்னவோ, "நாங்கள்தான் கொண்டு வந்தோம்; நாங்கள் சமைத்து வைத்தோம்; நீங்கள் சாப்பிட்டு விட்டீர்கள்" என்று சொன்னார்கள். யாரோ சமைத்ததை யாரோ சாப்பிடுகின்ற நிலை இன்றைக்கு இல்லை. 18-7-1996 அன்று சிப்காட் நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, யூண்டாய் மோட்டார் நிறுவனம் கார் தொழிற்சாலையை நிறுவியது.

இருங்காட்டுக்கோட்டை 'சிப்காட்' வளாகத்தில், 543 ஏக்கர் பரப்பில் அமையும் 'யூண்டாய் கார் தொழிற்சாலை', 2,450 கோடி ரூபாய் மூலதனத்தோடு அமைக்கப்படுகிறது. தொழிற்சாலை அமைக்கும் பணி முடிவடைந்து, 1998 ஜூன் திங்களில் சோதனை அளவில், கார் உற்பத்தி தொடங்கப்பட இருக்கிறது. அக்டோபர் திங்களில், வணிக முறையிலான கார் உற்பத்தி தொடங்க இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால், ஏறத்தாழ 2,500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 20 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

Integrated Iron and Steel Plant தொழிற்சாலை. இத்திட்டத்தை, 'டிட்கோ' நிறுவனம், அமெரிக்காவைச் சேர்ந்த Rynex International என்ற நிறுவனத்தோடு இணைந்து, இணைத் துறையில் சுமார் 3,300 கோடி ரூபாய் செலவில், சேலத்தில் நிறுவ உள்ளது. தொழில் முனைவோருக்கான ஒப்பந்தம், 3-3-1997 அன்று கையெழுத்தானது. அதுவும் எங்கள் ஆட்சியில்தான். திரு. சுந்தரம் சொன்னதுமாதிரி, அந்த ஆட்சியில் அல்ல. இந்தத் திட்டத்திற்கான ஆய்வு அறிக்கையை 'Mega' நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தத் தொழிற்சாலை மூலம் 1,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், சுமார் 3,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

Fenner Refineries Limited தொழிற்சாலை. ஹைதராபாத்திலுள்ள நாகார்ஜூனா குரூப் நிறுவனத்தினை சக தொழில் முனைவோர்களாகக் கொண்டு, 6 மில்லியன் டன் எண்ணெய் சுத்திகரிப்புத் திட்டம் ஒன்றை, இணைத் துறையிலே 'டிட்கோ' நிறுவி வருகிறது. தொழில் முனைவோர்களுக்கான ஒப்பந்தம்,

9-1-1998 அன்று கையெழுத்தாகியுள்ளது. இத்தொழில் பிரிவு, கடலூர் மாவட்டம் திரிச்சுவபுரம் கிராமத்தில் நிறுவப்பட்டு வருகிறது. முதற் கட்டத்திற்குத் தேவையான நிலத்தை வாங்கும் பணி, முடிவடையும் தருவாயில் உள்ளது. இத்திட்டம் ஏறத்தாழ 3,000 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்படுகின்ற ஒரு திட்டமாகும். இத்திட்டத்திற்குத் தேவையான கட்டட வேலை, வரும் ஜூன் மாதம் தொடங்கும்.

உயர்தர தொழில்நுட்பத் தொழில் பூங்கா - Hi-Tech Technology Industrial Park (TNFAC) - மற்றும் Axes Technologies ஆகிய அமெரிக்க நிறுவனங்களோடு, 'டிட்கோ' இணைந்து, தனியார் ஏற்றுமதி வளாகப் பூங்கா ஒன்றை, நெல்லை மாவட்டம் நாங்குனேரி தாலுகாவில் நிறுவி வருகிறது. 800 கோடி ரூபாய் முதலீட்டில் இப்பூங்காவிற்குத் தேவையான நிலம், அடிப்படை வசதிகள் உருவாக்கப்படும். இப்பூங்காவில் அமையவிருக்கும் தொழில் நிறுவனங்களின் மொத்த முதலீடு, சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய். இத்திட்டத்தின் தொழில் முனைவோருக்கான ஒப்பந்தம் 24-2-1998 அன்று கையெழுத்தாகியுள்ளது. சுமார் 2,500 ஏக்கர் நிலம், ஜூன் மாதத்தில், ஆர்ஜிதம் செய்வது முடிவடையும். 5 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், 10 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

ஆட்டோ உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் Mahindra Industries Park Limited தொழில் வளாம். இத்தொழில் வளாகத்தை 'Mahindra Reality and Infrastructural Development Limited' என்ற நிறுவனம் மற்றும் ILFS நிறுவனம் ஆகியோருடன் இணைந்து உருவாக்க, 'டிட்கோ' நிறுவனம், 12-6-1997 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

இத்தொழில் வளாகம். சென்னையை அடுத்த மறைமலை நகரில் 1,200 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படுகிறது. இத்தொழில் வளாகத்தில், மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களைத் தயாரிக்கும் பல்வேறு தொழிற்சாலைகள் தொடங்கப் படவுள்ளன. 3,000 பேருக்கு நேரடியாகவும், 5,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும். நடப்பாண்டு இறுதியில், இவ்வளாகத்தின் பணிகள் முடிவடையும்.

'செயிண்ட் கோபைன்' கண்ணாடித் தொழிற்சாலை, பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த 'செயின்ட் கோபைன்' கண்ணாடித் தொழிற்சாலையோடு, இத்தொழிற்சாலையை அமைப்பதற்கான ஒப்பந்தம், 6-1-1997 அன்று நடைபெற்றது. 450 கோடி ரூபாய் முதலீட்டில் அமையும் இந்தக் கண்ணாடித் தொழிற்சாலை திருப்பெரும்புதூர் தொழில் வளர்ச்சிப் பூங்காவில் அமைகிறது. 1999ஆம் ஆண்டு இறுதியில் இது உற்பத்தியைத் தொடங்கும்.

பி.வி.சி. ரெக்சின் தொழிற்சாலை, டென்மார்க் நாட்டைச் சேர்ந்த 'நார்த் சைட்டோ" நிறுவனத்தினரின் பி.வி.சி. தொழிற்சாலை திட்டத்தை, எண்ணூர் பெட்ரோலியம் தொழில் வளாகத்தில், இணைத் துறையில் அமைக்கும் திட்டத்திற்கான ஆய்வறிக்கை 'டிட்கோ'-விடம் வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் டன் எடையுள்ள பி.வி.சி. பொருள்கள் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருள்களை, இத்தொழிற்சாலை உற்பத்தி செய்யும். இத்திட்டத்தின் முதலீடு 350 கோடி ரூபாய். இத்திட்டத்திற்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம் 10-3-1997 அன்று நடைபெற்றுள்ளது.

பிஸ்-பினால்-ஏ இரசாயனத் தொழிற்சாலை. புது டில்லியிலே உள்ள மோடி கார்ப் நிறுவனம், 'டிட்கோ'-வுடன் சேர்ந்து ஆண்டுக்கு 40 ஆயிரம் டன் பிஸ்-பினால்-ஏ என்ற இரசாயனத்தை உற்பத்திச் செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை கடலூர் மாவட்டத்தில் தொடங்கவுள்ளது. இந்தத் திட்டத்திற்கான தொழில் முனைவோருக்கான ஒப்பந்தம் 16-7-1997 அன்று கையெழுத்தாகியுள்ளது. 250 கோடி ரூபாய் முதலீட்டில் 300 நபர்களுக்கு நேரடியாகவும் 500 பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் இத்தொழிற்சாலை அமையும். ஜப்பானிய தொழில்நுட்பத்தோடு இணைத் துறையில் தொடங்கப் படவுள்ள இந்தத் தொழிற்சாலை இரண்டு ஆண்டுகளில் உற்பத்தியை தொடங்கும்.

தமிழ்நாடு சாலை மேம்பாடு மற்றும் வரிவசூல் நிர்வாகத் திட்டம், Tamil Nadu Toll Road Management Company Ltd., நெடுஞ்சாலைகள், பாலங்கள் மற்றும் குறுக்கு வழிச்சாலைகள்

ஆகியவற்றை அமைக்க 'டிட்கோ' ஐ.எல்.எப்.எஸ். மற்றும் பிரான்சு நாட்டைச் சேர்ந்த டிரான்ஸ்ரூட் இண்டர்நேஷனல் நிறுவனம் மற்றும் சி.சி.எஃப். நிறுவனம் ஆகியோரை சக முனைவராகக் கொண்டு இணைத் துறையிலே இந்தத் திட்டத்தை நிறுவி வருகிறது. இந்தத் திட்டத்திற்கு தொழில் முனைவோருடனான ஒப்பந்தம் 21-1-1998 அன்று கையெழுத்தாகியுள்ளது. முதல்கட்டமாக 160 கோடி ரூபாய் செலவில் சென்னைத் துறைமுகத்திலிருந்து எண்ணூர் செல்லும் சாலையை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஃபையாக்சிலி ஓரியண்டட் பாலிப் புரொஃபிளின் தொழிற்சாலை. புதுடில்லியிலே உள்ள திருவாளர்கள் மோடி கார்ப் நிறுவனமும், இத்தாலியிலே உள்ள விபாக் நிறுவனமும் சேர்ந்து தமிழ்நாட்டில் ஆண்டிற்கு 15,000 டன் உற்பத்தி செய்யக்கூடிய திட்டத்தை டிட்கோவுடன் இணைத் துறையிலே தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

விபாக் நிறுவனம் உலகில் இத்தொழிலில் மூன்றாம் இடத்திலிலுள்ளது. இத்திட்டத்திற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் 16-7-1997 அன்று கையெழுத்தாகியுள்ளது. இத்திட்டத்திற்கான தொழில் திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறது. இதற்கு 150 கோடி ரூபாய் முதலீடு.

இல்ஜின் ஆட்டோமோட்டிவ். உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை. கார்களுக்கு வேண்டிய பாகங்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை அமைப்பதற்காக கொரியாவைச் சேர்ந்த இல்ஜின் தொழிற்சாலை நிறுவனம் சிப்காட்டோடு 2-7-1997 அன்று ஒப்பந்தம் செய்துகொண்டது. 40 கோடி ரூபாய் செலவிலே அமையும் இந்தத் தொழிற்சாலைக்கு ஒரு ஏக்கர் நிலம் இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்திலே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திரங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

மசூஸ்த்தா ஏர்கண்டிஷன் இந்தியா தொழிற்சாலை. ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மசூஸ்த்தா எலக்ட்ரிக்கல் தொழிற்சாலையும் இந்தியாவைச் சேர்ந்த ஸ்ரீதூத் வாணிப நிறுவனமும் இணைந்து 59.40 கோடி ரூபாய் முதலீட்டில் மசூஸ்த்தா ஏர்கண்டிஷன்

தொழிற்சாலையை அமைத்திட 12-9-1997 அன்று ஒப்பந்தம் செய்துகொண்டது. இருங்காட்டுக்கோட்டை வளாகத்தில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் இத்தொழிற்சாலையின் கட்டுமானப் பணி விரைவில் முடிவடையவுள்ளது.

டைனமேட்டிக் தொழிற்சாலை. கொரியா நாட்டைச் சேர்ந்த டேரிம் என்டர்பிரைசஸ் கம்பெனி. அதேபோல் ஜே.கே.எம். ஆட்டோமோட்டிவ் நிறுவனம். இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த யாங்கோப் தொழில் நிறுவனம் ஆகிய மூன்று நிறுவனங்களும் இருங்காட்டுக்கோட்டையில் 23 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கும் தொழிற்சாலைகளுக்கு ஒப்பந்தங்கள் 7-1-1998 அன்று கையெழுத்தாயின. 1,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 2,000 நபர்களுக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

மார்க்யூப் இந்தியத் தொழிற்சாலை. மொரீஷியல் நாட்டைச் சேர்ந்த மார்க்யூப் ஏசியா நிறுவனம், மார்க்யூப் இந்தியத் தொழிற்சாலையை அமைத்திட முன்வந்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் 7-1-1998 அன்று நடைபெற்றது. 36 கோடியே 50 இலட்சம் ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக்கோட்டை தொழில் வளாகத்தில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் இத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு விட்டன. இத்தொழிற்சாலை அட்டைப் பெட்டிகளைத் தயாரிக்கும் இயந்திரங்களை உற்பத்தி செய்யும். இது 100 விழுக்காடு ஏற்றுமதித் தொழிற்சாலையாகும்.

மேண்டோ பிரேக் சிஸ்டம் தொழிற்சாலை. கொரியா நாட்டைச் சேர்ந்த மேண்டோ மிஷினரி கார்ப்பரேஷன் நிறுவனம், மேண்டோ பிரேக் சிஸ்டம் தொழிற்சாலையை 30 கோடி ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கிறது. ஏறத்தாழ 9 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் இத்தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. இத்தொழிற்சாலை கார் உதிரி பாகங்களைத் தயாரிக்கும். இதற்கான ஒப்பந்தம் 9-1-1998 அன்று ஏற்பட்டது.

போஸ் யூண்டாய் ஸ்டீல் மேனுஃபேக்சரிங் இந்தியா தொழிற்சாலை. கொரியா நாட்டைச் சேர்ந்த யூண்டாய் கார்ப்பரேஷனில் போஸ் ஸ்டீல் மற்றும் போஸ் கோ நிறுவனம் போஸ் யூண்டாய் ஸ்டீல் மேனுஃபேக்சரிங் இந்தியா தொழிற்சாலையை 44 கோடியே 19 இலட்சம் ரூபாய் முதலீட்டில் அமைக்க முன்வந்துள்ளது. இருங்காட்டுக்கோட்டை

தொழில் வளாகத்தில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் இத் தொழிற்சாலைக்குரிய ஒப்பந்தம் 9-1-1998 அன்று கையெழுத்தானது. கார்களுக்குப் பயன்படும் இரும்புத் தகடுகளைத் தயாரிக்கும் இந்தத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் முடிந்து இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

மறைமலை நகரில் ஆப்டிக்கல் ஃபைபர் கேபிள் தொழிற்சாலை. காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலைநகரில் ஆப்டிக்கல் ஃபைபர் கேபிள்ஸ் சிஸ்டத்தை டிட்கோ மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் Telecommunication Consultant India Limited, ஜப்பானைச் சேர்ந்த ப்யூஜிகுரா லிமிடெட் ஆகியவற்றோடு இணைந்து கூட்டுத் துறையில் தொடங்குவதற்குரிய ஒப்பந்தம் 2-8-1996 அன்று கையெழுத்தானது. மொத்த மதிப்பீடு இந்தத் திட்டத்திற்கு 40 கோடி ரூபாய். இத்தொழிற்சாலைக்காக 10 ஏக்கர் நிலம் மறைமலைநகருக்கு அருகில் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கும், கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1999ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இந்தத் தொழிற்சாலை செயல்படத் தொடங்கும்.

MCC Scrab Agro Limited தேங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை 38 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் 'டிட்கோ' நிறுவனம் கூட்டுத் துறையில் திருவாளர்கள் MCC Scrab Agro Limited உடன் இணைந்து, கோவை மாவட்டம், பொள்ளாச்சி அருகே, கிணத்துக்கடவு என்ற -கிராமத்தில் தேங்காய்ப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ 29-8-1996 அன்று ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தத் தொழிற்சாலையில் தேங்காய் எண்ணெய், தேங்காய்ப் பால் மற்றும் தேங்காய் நார் சம்பந்தப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை 44 ஏக்கர் நிலப் பரப்பில் அமைகிறது. ஜூன் 1999-இல் உற்பத்தி தொடங்கப்படும்.

Metal Halide Lamp தொழிற்சாலை. தமிழக அரசு இத்திட்டத்திற்கு 27-1-1997 அன்று ஒப்புதல் அளித்தது. தொழில்

முனைவோரோடு ஒப்பந்தம் 10-3-1997 அன்று கையெழுத்தானது. இத்திட்டத்தின் மதிப்பு 28.6 கோடியாகும். இந்நிறுவனம் 'டிட்கோ' மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த Advanced Lighting Technology மற்றும் Axes Technology ஆகியோரால் இணைத் துறையில் நிறுவப்பட்டுள்ளது. இது 100 சதவிகிதம் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழிலாகும். தாம்பரத்தில் உள்ள சென்னை ஏற்றுமதி வளாகத்தில் அமைந்துள்ள இத்தொழிற்சாலை 26-3-1998 அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது.

அடுத்து Tauraus Novelties Limited தென்கொரியா நாட்டு தொழில் நுட்பத்தோடு இத்திட்டத்தை 'டிட்கோ' பெங்களூரைச் சேர்ந்த Srivathsan and Associates நிறுவனத்தோடு இணைந்து இணைத் துறையிலே தர்மபுரி மாவட்டத்திலேயுள்ள, ஒசூரிலே நிறுவியுள்ளது. இத்திட்டம் dolomite மற்றும் stoneware பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஆகும். இதன் மதிப்பீடு 10 கோடி ரூபாய் ஆகும். இதற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் 30-5-1997 அன்று கையெழுத்தானது. ஜூன் மாதம் முதல் வணிக அளவிலான உற்பத்தி நடைபெறும். சோதனை அடிப்படையில் தற்போது உற்பத்தி தொடங்கப்பட்டு விட்டது.

100 சதவிகிதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கோழி இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை. இத்திட்டம் 32 கோடி ரூபாய் முதலீட்டில் Pioneer Breeding Farms நிறுவனத்தால் இணைத் துறையில் கோவை மாவட்டம், பொங்கலூரில் அமைய உள்ளது. இதற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் 7-1-1998 அன்று கையெழுத்தானது. இத்தொழிலுக்கான சந்தை நிலவரம் ஆய்வு செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. இன்னும் ஓராண்டு காலத்தில் இத்திட்டம் உற்பத்தியைத் தொடங்கும்.

100 சதவிகிதம் ஏற்றுமதி செய்யும் Frozen French Fries நிறுவனம். குவைத் நாட்டைச் சேர்ந்த ஆர்.சி. சுரேஷ் மற்றும் அசோசியேட் நிறுவனத்தோடு 'டிட்கோ' இணைந்து, இணைத் துறையில் சுமார் 32 கோடி ரூபாய் முதலீட்டில் உருளைக் கிழங்கு பதப்படுத்தும் திட்டம் நிறுவப்பட உள்ளது. இத்திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில், மேட்டுப்பாளையத்தில் அமைய உள்ளது. இதற்கான ஒப்பந்தம் 7-1-1998 அன்று கையெழுத்தானது.

PVC foamed sheets -செயற்கை மரப்பொருள் திட்டம். இத்திட்டம் இத்தாலியைச் சேர்ந்த வினோத் சகாய் என்பவரால் இணைத் துறையிலே சுமார் 45 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் சென்னையை அடுத்த இருங்காட்டுக்கோட்டையில் அமையவுள்ளது. இதற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் 25-2-1998-இல் கையெழுத்தானது. இத்திட்டத்திற்குத் தேவையான 6 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது. தேவையான இயந்திரங்கள் இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

Sriram Auto Components (Madras) Limited தொழிற்சாலை. 'டிட்கோ' சென்னையைச் சேர்ந்த ஸ்ரீராம் உறுப்பு நிறுவனத்துடன் இணைந்து வாகனங்களுக்குத் தேவையான நுட்பமான உதிரிப் பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூரில் அமைத்துள்ளது. இத்திட்டம் இணைத் துறையில் 21 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் 7-1-1998-இல் கையெழுத்தானது. 1998ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த நிறுவனம் சோதனை உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது.

ரமண சேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை. 19-6-1997 அன்று ஒப்பந்தம் செய்யப்பட்ட இத்தொழிற்சாலையை 'டிட்கோ' ரமண சேகர் அசோசியேட்ஸ் உடன் இணைந்து, இணைத் துறையில் அமைத்துள்ளது. இத்தொழிற்சாலை உருட்டுச் சுருள்களாக வரும் இரும்பினைத் தகடுகளாக மாற்றும். இது சென்னையை அடுத்த மணலியில் ரூ. 10 கோடியே 18 இலட்சம் முதலீட்டில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. சோதனை உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. வணிக உற்பத்தி ஜூன் மாதத்திலே தொடங்கப்படும்.

எஸ்.கே.எம். முட்டை பதப்படுத்தும் தொழிற்சாலை. ஈரோட்டில் 100 சதவிகிதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட முட்டை பதப்படுத்தும் தொழிற்சாலை 40 கோடி ரூபாய் செலவில் 12-2-1997 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்தொழிற் சாலையில் நாள்தோறும் 10 இலட்சம் முட்டைகளிலிருந்து albumen powder. yolk powder ஆகியவை தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவை எல்லாம், அறிவிக்கப்பட்டவை எத்தனை, நடப்பவை எத்தனை என்ற கேள்விக்கு விளக்கமான பதில்கள்

ஆகும். இன்னும் இரண்டொரு விஷயங்களை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். கழக ஆட்சியிலே, கடந்த இரண்டு ஆண்டு காலத்திலே மொத்தம் 33 புதிய தொழிற்சாலைகள் 'டிட்கோ'-வுடன் சேர்ந்து இணைத் துறையிலும், தனியாகவும் நிறுவுவதற்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. அதில் 8 தொழிற்சாலைகள் உற்பத்தியை தொடங்கிவிட்டன. 6 தொழிற்சாலைகள் 1998ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்க உள்ளன. மூன்று தொழிற்சாலைகளில் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திர சாதனங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 12 தொழிற்சாலைகளில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மூன்றே மூன்று தொழிற்சாலைகளில்தான் இன்னும் எந்தப் பணியும் தொடங்கப்படவில்லை. 33-இல் 30 தொழிற்சாலைகளில் நான் சொன்ன இந்த வளர்ச்சிகள், மூன்று தொழிற்சாலைகளில் எந்தப் பணியும் தொடங்கப்படவில்லை. இதில்தான் யூண்டாய் மோட்டார் தொழிற்சாலையும் ஒன்று.

நான் சொன்ன இந்த 30 தொழிற்சாலைகளில் யூண்டாய் உள்பட எல்லாம் நிவைவேறி முடிந்தால் - முடிப்பதற்கு நாம் எல்லாம் இருக்கக்கூடிய சூழ்நிலை தமிழ்நாடு மக்களால் அளிக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த நம்பிக்கையோடு இவற்றையெல்லாம் நாம் நிறைவேற்றினால் - இந்தத் தொழிற்சாலைகள்மூலம் மாத்திரம், மூன்றரை இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சில அறிவிப்புகளை இந்த மகிழ்ச்சியான நேரத்தில் நான் சொல்ல விரும்புகின்றேன். டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களை அனைவரும் அறிவீர்கள். நல்ல விஞ்ஞானபூர்வமான கருத்துக்களைச் சொல்லக்கூடியவர், செயல்பாடுகளைச் செய்யக் கூடியவர். அவரோடு கலந்து பேசியதில் விளைந்த ஒன்று இந்த அறிவிப்பு. 1998-99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பத்தி 108-இல் கேளம்பாக்கம் அருகே உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா நிறுவுவதுபற்றிக் குறிப்பிட்டிருந்தேன். டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன்

ஆராய்ச்சியகம், மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை மற்றும் டிட்கோவும் இணைந்து ஒரு கூட்டு நிறுவனம் அமைத்து, சிறுசேரியில் ஓர் உயர்ரக உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை நிறுவி வருகின்றன. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இதற்கென 20 ஏக்கர் நிலம் சிறுசேரியில் தமிழக அரசாங்கத்தால் இந்நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. விவரமான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஓரிரு மாதங்களில் கட்டுமானப் பணிகள் தொடங்கும். இந்தப் பூங்கா உயிரியல் தொழில்நுட்பத் துறையில் மிக நவீன அம்சங்களான 'டிஷ்யூ கல்ச்சர்' (tissue culture) காய்கறி மற்றும் பழ உற்பத்தியை பன்மடங்கு அதிகரிப்பது, கலப்பின உயர்ரக விதைகளைத் தயாரித்து எண்ணிக்கையைப் பெருக்குவது, (seed multiplication) அரிய மூலிகைகளை வளர்த்து பரப்புவது ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் 21ஆம் நூற்றாண்டிற்கான முக்கியமான துறைகளில் இத்துறையும் ஒன்று என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இரண்டாவது அறிவிப்பாக மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் தயாரிப்பதில் தமிழ்நாடு ஏற்கெனவே ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. ஃபோர்டு, யூண்டாய், மிட்சுபிஷி போன்ற பெரிய கார் நிறுவனங்களும், அசோக் லேலண்ட், இத்தாலி நாட்டைச் சேர்ந்த 'இவெகோ' (IVECO) நிறுவனத்தோடு சேர்ந்து ஆரம்பிக்கும் புதிய தொழிற்சாலை ஆகியவற்றின் விளைவாக மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் துறை வேகமாக வளர்ந்து வருகின்றது. இவற்றை மேலும் ஊக்குவித்து புதிய முதலீடுகளைத் துறையிலே ஈர்க்கும் பொருட்டு டிட்கோ நிறுவனம், ஐ.எல்.எப்.எஸ். என்ற சர்வதேச நிதி நிறுவனம் (International Finance Corporation) ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த டி.இ.ஜி (D.E.G.) நிறுவனம் ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்து புதிய தொழில் முனைவோர்க்கு உதவ venture capital அட்வென்சர் என்பதுபோல venture capital துணிந்து முதலீடு செய்ய வருகின்றது. venture capital என்ற திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதன் ஆரம்ப மூலதனம் சுமார் 20 கோடி ரூபாய். டிட்கோவும், ஐ.எல்.எப்.எஸ்-ம் சேர்ந்து ஒவ்வொன்றும் 10 கோடி என்ற அளவில் 20 கோடி ரூபாய் ஆரம்ப மூலதனம்.

தமிழ்நாட்டில் மிக வேகமாக வளர்ந்து வரும் மென்பொருள் துறையை ஊக்குவித்து, தொழில்முனைவோருக்கு உதவி செய்ய டிட்கோ, ஐ.எல்.எப்.எஸ். நிறுவனங்கள் கூட்டுச் சேர்ந்து ஒரு புதிய 'venture capital' -ஐ நிறுவி உள்ளன. இதனுடைய ஆரம்ப மூலதனம் 30 கோடி ரூபாய் ஆகும். தமிழக அரசு ஏற்கெனவே மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் தயாரிப்பு, மென்பொருள் தகவல் தொழில் நுட்பம் மற்றும் உணவு பதப்படுத்தும் துறை ஆகியவற்றை முந்துதல் துறைகளாக, thrust sector -ஆக அறிவித்துள்ளது.

உணவு பதப்படுத்தும் துறையைப் பொறுத்தவரையில் விரைவில் தமிழக அரசு தன்னுடைய கொள்கை அறிவிப்பை வெளியிடும். இத்துறைக்கும் தொழில் முனைவோருக்கும் உதவும் நிதி வசதி - venture capital -அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாட்டில் மேற்கூறிய துறைகளில் நிறுவப்படும் - venture capital - நிதித் திட்டம் இத்துறைகளில் முதலீடு செய்யும் சிறு தொழில் முனைவோருக்கு குறிப்பாக முதல் சந்ததி தொழில் முனைவோருக்கு மிக்க பயன் அளிக்கும். இதைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் ஏராளமான புதிய தொழில் முனைவோர்கள் தமிழ்நாட்டில் உருவாகிவிடுவார்கள் என்று நம்ப இடமிருக்கிறது.

1997-98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டு இருந்தேன். அன்றைய மத்திய தொழில்துறை அமைச்சரோடு கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவின்படி 1997-98 நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தேன்.

அதாவது தகவல் தொழில்நுட்பம். (Information Technology) நம்முடைய மாநிலத்தின் விரைவான வளர்ச்சிக்குத் திறவுகோல் என்று கருதப்படுகிறது. தகவல் தொடர்புகளில் ஏற்பட்டுவரும் புரட்சிகரமான மாற்றங்கள் காரணமாக இந்தப் பூமிப் பந்தே குக்கிராமங்களாக Global Village ஆகக் குறுகிக் கொண்டு வருகிறது. அந்தத் துறையில் ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வாரமும், குறிப்பிடும் மாற்றங்கள் தோன்றி, நேற்றைய தொழில்நுட்பத்தைப் பத்தாம்பசலியாக மாற்றிவிடுகின்றன.

அடுத்த நூற்றாண்டு, தகவல் துறை தொழில்நுட்ப நூற்றாண்டு ஆகும். அதற்கேற்ற அடிப்படையை உருவாக்கும் வகையிலும், 21-ஆம் நூற்றாண்டுக்கேற்ப தகவல் துறை தொழில் நுட்பத் துறையில் உலகத்தின் முன்னோடியாக இருக்கும் விதத்திலும், இந்தியாவிலே முதல் முறையாக, சென்னையில் Information Technology Institute of Tamil Nadu (ITIT) என்ற அமைப்பு நிறுவப்படும். முதலில், பதிவு செய்யப்பட்ட சுயநிதி அமைப்பாக Registered society ஆகத் தொடங்கப்பட்டு, படிப்படியாக அது ஒரு சுயநிதி பல்கலைக்கழகமாக மாற்றப்படும். இத்துறையில் முன்னணியிலே இருக்கும் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களோடும், புகழ்பெற்ற தனியார் அமைப்புகளோடும் இந்த அமைப்பு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, Computer Graphics, Software Engineering and Hardware Systems, Multimedia, Telecommunications, Information Technology, Digital Technology போன்ற தகவல் தொழில் நுட்பத் துறையின் அனைத்து அம்சங்களிலும் தன்னிகரற்று விளங்கும் இளைஞர்கள் உருவாக்கப்படுவார்கள். இதற்காக, வரும் ஆண்டு 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று அப்போது அறிவித்திருந்தேன். அதற்கேற்ப, இப்போது அதன் பெயர் மாற்றப்படுகிறது தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பக் கல்வி மையம் என்று. TANITEC என்று சுருக்கமாக அதனுடைய பெயர் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையம் நிறுவ, தொழில் நிறுவனங்களின் உதவிகளுக்காகவும், நடைமுறை வசதிகளுக் காகவும், இந்திய நிறுவனங்கள் சட்டம் 56-ன் பிரிவு 25-ன் கீழ், தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பக் கல்வி மையம் பதிவு செய்யப்பட்டது. இந்த மையம், முதலில் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயல்பட்டு, பின்னர் படிப்படியாக, சுயநிதிப் பல்கலைக்கழகமாக வளர்ச்சியடையும். இந்த மையம் தொடக்கத்தில் 1998-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் தகவல் தொழில் நுட்பப் பட்ட மேற்படிப்பு, பட்ட வகுப்புகளை சென்னைக்கு அருகிலே உள்ள பெருங்குடியில் 'எல்காட்' நிறுவனத்தின் கட்டடத்திலே தொடங்க உள்ளது. இளங்கலை மற்றும் முதுகலைத் தொழில் நுட்பப் பட்டப் படிப்புகளை படிப்படியாக ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த

மையத்திற்காக 1997-98ஆம் ஆண்டு பங்குத் தொகையாக தொடக்கத்தில் 5 கோடி ரூபாயை அரசு அளித்தது. 1998-99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மேலும் 5 கோடி ரூபாயை இந்த மையத்திற்கு அரசு ஒதுக்கியுள்ளது.

'எல்காட்' நிறுவனத்தின், விற்பனையின் சாதனையை எடுத்துக்கொண்டால், 1995-96ஆம் ஆண்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசில், அதனுடைய டர்ன்-ஓவர் 7.86 கோடி ரூபாய். 1997-98இல் 'எல்காட்'டினுடைய மொத்த விற்பனை - டர்ன்-ஓவர்-38.79 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) 'எல்காட்'ன் நிகர இலாபம் 1995-96இல் ரூ. 2.71 இலட்சம். 1996-97இல் ரூ. 33.59 இலட்சம். 1997-98இல் 4½ கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி).

மற்றொரு அறிவிப்பு. 'Software' பற்றியது. இப்படி 'Software' 'Software' என்று சொல்லும்போது, பல பேருக்கு என்ன என்று தெரியாது. எனக்குக்கூட ஆரம்பத்திலே அந்தக் காலத்திலே புரியாமல் இருந்தது. என்ன இது 'Software', 'Software' என்று சொல்லுகிறார்களே என்று. ஒருவரிடம், பையன் என்ன செய்கிறான் என்று கேட்டால் 'Software' தொழிலில் இருக்கிறான் என்பார். 'Hardware' 'Software' என்று சொல்லுகிறோம். 'Software' என்றால் என்ன என்பதை - மன்னித்துக்கொள்ள வேண்டும், உறுப்பினர்கள் யாருக்காவது தெரியாமல்கூட இருக்கும். இருந்தாலும், ஆங்கிலப் படம் பார்ப்பது மாதிரி, என்னோடு சேர்ந்து அவர்களும் தலையாட்டக் கூடும். 'Software' என்றால் என்ன என்பதைச் சொல்லவேண்டுமென்றால் - கணினி மற்றும் அதைச் சார்ந்த Monitor, Key Board, Printer ஆகியவை 'Hardware' என்று சொல்லப்படுகிறது. இந்தக் கணினியை இயக்குவதற்காகக் கொடுக்கப்படுகின்ற தொகுப்புக்குத்தான் 'மென்பொருள்' என்று பெயர். தற்போது மென்பொருள் துறையில், உலகத்திலேயே பரபரப்பாகப் பேசப்படுவது, 2000-ஆவது ஆண்டு -Y2 K-1 பிரச்சினையாகும்.

கடந்த 30 ஆண்டுகளாக, கணினி மொழியிலே இடச் சிக்கனத்தைக் கருதி, ஆண்டுகளைக் குறிப்பிடும்போது, இரண்டு இலக்கங்களை மாத்திரம்தான் பயன்படுத்துகிறார்கள். அது

ஆபத்தாகப் போய்விடுமோ என்ற பயம் இப்போது வந்திருக்கிறது. நான் கோப்புகளில் கையெழுத்துப் போடும்பொழுது எல்லாம், உதாரணமாக 7-2-98 என்று போடுவதில்லை. 7-2-1998 என்றுதான் போடுவேன். என்னிடம் செகரட்டரி எல்லாம்கூட கேட்டார்கள். "எல்லா மினிஸ்டர்களும் '98' என்றுதான் போடுகிறார்கள், ஏன் நீங்கள் மாத்திரம் '1998' என்று போடுகிறீர்கள் என்று கேட்டார்கள்". எல்லா மினிஸ்டர்களும் இந்த வருடம் '98' என்று போடுவார்கள். அடுத்த வருடம் '99' என்று போடுவார்கள். அதற்கு அடுத்த வருடம், இரண்டு இலக்கம் என்ன போடுவார்கள் என்று கேட்டேன். 2000 என்று வரும்போது, இரண்டு சைபர்கள்தான் போடவேண்டும். (சிரிப்பு) அதனால்தான் இப்போதே நான் பழகிக்கொள்கிறேன். இரண்டாயிரத்திற்குத் தயாராகி, இப்போதே '1998' என்று போடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இது Software-ன் தத்துவம். 30 வருடங்களாக கணினி மொழியிலே இடச்சிக்கனத்தைக் கருதி எல்லோருமே இந்த இரண்டு இலக்கங்கள், இரண்டு சைபர்களைப் போடுவதா அல்லது போடாமல் விட்டு விடுவதா, '98', '68', '78' என்று போடுவதா - இதன் விளைவு என்னவாகும் என்றால் 2000-ஆவது ஆண்டு வரும் காலத்தில் கணினி துறையில் '00' என்ற எண்கள் மாத்திரம் வரும்பொழுது அனைத்து கணினிகளைச் சார்ந்து நடக்கும் அத்தனை நடவடிக்கைகளும் திடீரென்ற நின்றுபோக நேரிடும். விமானம் போய்க் கொண்டிருக்கிறது என்றால் - அப்படி நடக்கப் போவதில்லை; உதாரணத்திற்காகச் சொல்கிறேன் - விமானம் போய் கொண்டிருக்கிறது என்றால் அந்த இரண்டு '00' மாத்திரம் வைத்திருந்தால், விமானம் போய்க்கொண்டிருக்கும்பொழுது, 2000 ஆவது வருடத்தில், இந்தக் கணக்கு தவறிவிட்டால், 4 இலக்கத்தில் இல்லாமல் இரண்டு இலக்கத்தில் இருந்தால், விமானம் நடுவழியில் வானத்தில் நின்றுவிடும். நின்றால் என்ன ஆகும் என்று உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட ஆபத்து இந்த கணினி யுகத்தில் ஏற்படக்கூடும். இதன் விளைவாக மிகவும் முன்னேற்றமடைந்துள்ள மேலை நாடுகளில்கூட வாழ்க்கை ஸ்தம்பித்துப் போகும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

இதைச் சரிசெய்யும் பணி நம் நாட்டில் உள்ள மென்பொருள் நிறுவனங்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்பை

அளிக்கும் என்று நம்பப்படுகிறது. சென்னையில் மாத்திரம் தற்பொழுது 2000 மென்பொருள் (Software) வல்லுநர்கள் இந்தப் பணியிலே ஈடுபட்டுள்ளார்கள். இதேபோல் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் ஒரே நாணய முறைக்கு மாறும்போது கணினித் துறையில் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாகும். ஒரு மதிப்பீட்டின்படி சுமார் 2 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்குப் பணிகளின் மதிப்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்மூலமாகவும் நமது நாட்டில் மென்பொருள் துறையில் ஏராளமான வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அதை அடிப்படையாக வைத்துதான் இந்த அறிவிப்பை நான் செய்கின்றேன்.

டைடல் மென்பொருள் பூங்கா, தரமணி, 1998-99ஆம்-ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 74-ஆவது பத்தியில் டிட்கோ நிறுவனம் சென்னையில் தரமணியில் மென்பொருள் தொழில் பூங்கா ஒன்றினை நிறுவுவதுபற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

தமிழ்நாட்டில் தற்பொழுது மென்பொருள் (Software) துறையில் தங்களது அலுவலகங்களையும், வசதிகளையும் நிறுவுவதற்கு பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் (Information Technology Companies) உலகின் பல பாகங்களி லிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தரமணியில் 7.5 ஏக்கர் பரப்பளவில் டிட்கோவும், எல்காட்டும் இணைந்து 160 கோடி ரூபாய் முதலீட்டில் 8 இலட்சம் சதுர அடி அளவில் மிக நவீன மென்பொருள் பூங்கா ஒன்றை நிறுவி வருகின்றன. வேலை ஆரம்பமாகிவிட்டது. நிலத்தைச் சுத்தப்படுத்தும் பணி தற்பொழுது நடந்த வருகின்றது. இதற்கான அனைத்து ஆய்வுகளும் முடியும் தருவாயிலே உள்ளன. ஜூலை மாதத்தில் கட்டுமானப் பணி தொடங்கி பன்னிரண்டே மாதங்களில் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தப் பூங்காவில் மிக நவீன தொழில் நுட்ப வசதிகளைக் கொண்டு மற்றும் வி.எஸ்.என்.எல். மூலமாக உலகின் அனைத்து பகுதிகளோடும் தொடர்புகொள்ள ஏதுவாக தொடர்பு வசதி அளிக்கப்படும். இப்பூங்காவில் ஏறத்தாழ 8,000 மென்பொருள் தொழில் வல்லுநர்கள் Software Professionals

பணிபுரிவார்கள். இதன்மூலம் கணிசமான அன்னியச் செலாவணி ஈட்டப்படும். மற்றும் மென்பொருள் துறையில் நாட்டில் சென்னை ஒரு முன்னோடியான இடத்தை அடைய முடியும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

சென்னையை அடுத்து, கோவை மாநகரிலும் பல தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் தங்கள் அலுவலகங்களையும் கிளைகளையும் நிறுவி வருகின்றன. இவற்றின் தேவைகளைக் கவனத்தில் கொண்டு எல்காட் நிறுவனமும், சிப்காட் நிறுவனமும் இணைந்து கோவை விமான நிலையம் அருகே அமைந்துள்ள 6 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் நவீன மென்பொருள் பூங்கா ஒன்றை நிறுவி வருகின்றன. சுமார் 50 கோடி ரூபாய் செலவில், 2.5 இலட்சம் சதுர அடி கட்டட அளவில் அமையவிருக்கும் இப்பூங்காவின் கட்டுமானப் பணி அடுத்த மாதம் தொடங்கி 12 மாதங்களில் முடிவுறும். இப்பூங்காவில் ஏறத்தாழ 2,500 மென்பொருள் தொழில் வல்லுநர்கள் பணிபுரிவார்கள் என்ற அறிவிப்பையும் இங்கே நான் செய்கிறேன்.

கடைசியாக, உறுப்பினர் திரு. ரங்கநாதன் தொடங்கிய விஷயம். தொடங்கியதோடு முடிக்கின்றேன். 'Single Window System' தொழில் துறையை வளர்ப்பதற்கும், மேலும் முன்னேறுவதற்கும் தேவை என்ற அரிய கருத்தை அவர் சொன்னார். பிற மாநிலங்களில், நம்முடைய அண்டை மாநிலங்களில் எல்லாம் அந்த 'Single Window System' இப்போது கடைப்பிடிக்கப்படுகின்றது. இதிலே முக்கியமாக, தொடங்கிய பெரிய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், உதாரணமாக யூண்டாய், செயிண்ட் கோபைன், மிட்சுபிஷி போன்றவைகளில் அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளைப் பரிசீலிக்க தொழில் துறைச் செயலாளர் தலைமையில் ஒவ்வொரு திங்களும் அனைத்துத் துறைகளையும் சேர்ந்த அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட தொழில் முதலீட்டார்களும் சந்தித்து Pending issues பற்றிப் பரிசீலித்துப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்துக் கொள்கிறார்கள். மேலும் புதிதாகத் தொழில் தொடங்க வருபவர்களுக்கு எளிதாக அனுமதி கிடைக்கத்தக்க வகையில் 100 கோடி ரூபாய்க்குமேல் ஒரு தொழிற்சாலைக்கு முதலீடு செய்து

தொழில் தொடங்கும் திட்டத்தைப் பரிசீலித்து அதற்கு சம்பந்தப்பட்ட துறையின் அனுமதியையும் உடனுக்குடன் பெற்றுத் தருவதற்கு முதலமைச்சர் தலைமையிலே ஓர் உயர்மட்டக் குழு உடனடியாக அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, 100 கோடி ரூபாய்க்குக் குறைவாக முதலீடு செய்து தொழில் தொடங்குவோருக்கு விரைவில் அனைத்துத் துறையின் அனுமதியையும் பெற்றுத்தர தலைமைச் செயலாளர் தலைமையிலே ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, இந்த வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு இந்த அளவில் கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய பொருளாதார வாழ்வில் மிக முக்கியப் பங்கு வகிப்பது பஞ்சாலைகள். அங்கு கடுமையான நெருக்கடி நிலவுவதாக தொடர்ந்து செய்திகள் வந்து கொண்டிருக் கின்றன. பஞ்சாலைகளும் அத்தகைய பிரச்சினையை வெளிப் படுத்துவதற்கு, ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்து மாநில அரசின் கவனத்தை ஈர்த்து இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய குறைபாடு என்ன என்பதையும், பஞ்சு நெருக்கடிக்கு என்ன காரணம் என்பதையும், அவர்களை அழைத்துக் கேட்டு அறிந்து, அவர்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காண மாநில அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பேசும்போது சொன்னார்கள். பஞ்சு நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமானால், பருத்தி அதிகமாக விளைவிக்கப்பட வேண்டும் என்றும், அப்போதுதான் நெருக்கடி தீரும் என்றும் சொன்னார்கள். ஆகவே, அந்த வகையிலே அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நீண்டகாலமாக - 413 ஏக்கர், 413 ஏக்கர் என்று சொல்லிக்கொண்டு இருந்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய காலத்திலேதான் அது எடுக்கப்பட்டது. இப்போது அங்கே என்ன இருக்கிறது? நான், ஒரு கனரகத் தொழிற்சாலை வரும் என்று ஆவலோடு காத்துக் கொண்டு இருந்தேன். சோழவந்தான் தொகுதியில் அலங்காநல்லூர் சுகர் பேக்டரி கொண்டுவந்த காரணத்தினால் - அது எங்களுடைய காலத்திலே தான் கொண்டுவரப்பட்டது; 2,500 பேர் அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையை இந்த 1999-லும் ஏற்படுத்தலாம் என்று நான் கனவு கண்டேன். அதை விடுத்து, இன்றைக்கு அங்கு என்ன போட்டு இருக்கிறீர்கள்? இந்த குறிப்பிலே, 380 ஏக்கர் கையகப் படுத்தப்பட்டு இருப்பதாக இருக்கிறது. இதிலே தொழில் வளாகம் அமைக்கப்படும் என்று இருக்கிறது. இன்னும் எத்தனை ஆண்டுகளில் அது அமைக்கப்படும்? இது எப்போது அமைக்கப்படும்? இதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதுபற்றி எல்லாம் சொல்லாமல், வேலைவாய்ப்புப்பற்றி எல்லாம் சொல்லாமல் இருக்கிறீர்கள். இதையும் சும்மா கண் துடைப்பு வேலையாகத்தான் நான் கருதுகிறேனே தவிர, வேறல்ல. அதைப்பற்றி நான் சொல்வதற்காகத்தான் தங்களிடத்திலே கேட்டேன். இதில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை ஏமாற்றி விட்டார்களா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் இரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். கனவு கண்டேன் என்பது ஒன்று; கண் துடைப்பது என்பது மற்றொன்று. கனவு கண்டு விழித்தவர்கள் கண்ணைத் துடைத்துக்கொள்ள வேண்டியதுதான். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பொன்னம்மாள் அவர்கள் கருத்துச்சொல்ல வேண்டும் என்றால், அவர்கள் கட்சி சார்பிலே பேசி இருக்க வேண்டும். கட்சி சார்பிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுப்பது நான் அல்ல, அடுத்து திரு. பி. வெங்கடசாமி.

THIRU B. VENKATASAMY : Hon. Speaker Sir, Hon. Chief Minister was telling that the ELCOT, Hosur has earned a profit of Rs.4 crores. But I am sorry to state that the ELCOT which was started in Hosur, now converted into ELNET is now under the process of closure because of the mis-management of the Managing Director, who was posted there. So, I request our Hon. Chief Minister to rectify this. I am also giving a letter to the Hon. Chief Minister to set right the things.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஹோசூர் எல்காட் பற்றித்தானே? என்ன பிரச்சினை.

திரு. பி. வெங்கடசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு வேறு எம்.டி.-ஐப் போட்டு விட்டார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றித் தனியாக என்னிடத்திலே விவரம் தருவார்களேயானால், உடனடியாக விசாரித்து அதைப்பற்றிக் கூற இயலும்.

உரை : 8 நாள் : 29.04.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **தொழில்** மானியத்தின் மீது மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய சீரிய, செழுமிய கருத்துக்களை எடுத்துக்கூறி, நல்லவைகளைப் பாராட்டி தேவைகளைத் தொகுத்து அளித்திருக்கின்றார்கள். முதலில் இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள், தமிழகத்திலே இன்றைக்குத் தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கின்ற வேகமான முன்னேற்றத்தைப் பாராட்டி, அதே நேரத்தில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை எல்லாம் திறந்திடல் வேண்டும் என்பதை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தியுள்ளார்கள். அந்தத் தொழிற்சாலைகள் ஏன் மூடப் பட்டன, தொழிலாளர்களுடைய தகராறு காரணமாகவா அல்லது அரசின் செயல்பாடு காரணமாகவா என்ற வினாக்களுக்குக் கிடைக்கின்ற விடை, "அல்ல" என்பதுதான். அந்தத் தொழில் அதிபர்களுடைய நிர்வாகத் திறன், நிதிப் பற்றாக்குறை, அவர்களிடையே ஏற்படுகின்ற பூசல், நீதிமன்றத்திலே அவை கிடப்பிலே இருக்கிற சூழல், இந்தக் காரணங்களால் மூடப் பட்டுள்ள தொழிற்சாலைகள் குறித்து பல விளக்கங்கள் இந்த அவையிலே அரசின் சார்பிலே அளிக்கப்பட்டிருக்கின்றன. தொழிற்சாலைகள் மூடிக் கிடப்பது என்பது அரசுக்கு மகிழ்ச்சிகரமான செய்தி அல்ல. அவற்றை எந்த வகையிலே திறக்கலாம், எந்த முயற்சியில் ஈடுபடலாம் என்பதில் அரசு கவனம் செலுத்தும் என்பதை நண்பர் ரங்கநாதன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் தொழில்கள் தொடங்குவதன் மூலம் நல்ல பொருளாதார மேம்பாட்டை அங்கே ஏற்படுத்தி, இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கிற சாதி சச்சரவுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி

வைக்கலாம் என்ற நல்ல யோசனையை, ஏற்கெனவே அரசு கொண்டிருக்கிற கருத்தை, தி. மு. கழகத்தின் சார்பில் இங்கே பேசிய சிவராமன் அவர்கள் எடுத்துரைத்திருக்கின்றார்கள். அதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு, தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி, மக்கள் முன்னேற்றம், வேறு பல மேம்பாடுகளை எவ்வாறு இந்த அரசு செய்யலாம் என்ற பரிந்துரைகளை அளிக்கும் என்று நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே, அது விரைவிலே செயல்படும், அந்தக் குழு அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய நம்முடைய சுப்பராயன் அவர்கள், இன்று பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள கடுமையான பிரச்சினையை எடுத்துக்காட்டி, அது குறித்து நான் இருசாராரையும் அழைத்து வைத்து, இதே கோட்டையில், நாமக்கல் கவிஞர் மாளிகையிலே நீண்ட நேரம் கலந்து பேசியதையும் சுட்டிக்காட்டி இருக்கிறார். இது மாநில அளவிலான பிரச்சினை அல்ல, அகில இந்தியப் பிரச்சினை என்பதையும், அதற்கு அகில இந்திய அளவிலே மத்திய அரசு வழி காண வேண்டும் என்பதையும் நாம் பல முறை எடுத்துரைத்து, அதை வலியுறுத்தி அரசின் சார்பில் மத்திய அரசுக்குப் பல வேண்டுகோள்களை விடுத்திருக்கிறோம்.

அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள், 'டான் செம்' பற்றி. அதைப்பற்றிப் பேசும்போது தொழில் துறைச் செயலாளரைக் கடுமையாகச் சாடினார்கள். அதிகாரிகளைச் சாடுவது என்றால் சுப்பராயனுக்கு அதிரசம் சாப்பிடுவதுபோல (சிரிப்பு). ஆனால், நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே இந்த அளவிற்குத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டதற்குக் காரணமானவர்களில் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபொழுது இருந்த தொழில்துறைச் செயலாளரும், இப்போதிருக்கின்ற தொழில் துறைச் செயலாளரும் முக்கியமானவர்கள் என்பதை நான் நன்றியுணர்வோடு இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

'டான்செம்' பற்றி அவர்கள் குறிப்பிடும்பொழுது, மாயனூர் கல்நார்த் தொழிற்சாலையைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். அதற்கு, நான் ஒரு சுருக்கமான விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

19-2-1997 அன்று வெளியிடப்பட்ட அரசாணை, நிதித் துறையினுடைய ஆணையின்படி, அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கொள்முதல், பாதுகாப்பு மற்றும் விலை முன்னுரிமை நீக்கப்பட்டது. 30-3-1998 வரை 'ட்வாடு' நிறுவனம் தனது மொத்த, குழாய் மற்றும் இணைப்புகள் தேவைக்கு, 'டான் செம்' நிறுவனத்திடமிருந்தே பெற்று வந்தது. எனவே, இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர், 'ட்வாடு' தனது கல்நார்க் குழாய்த் தேவைகளுக்குப் பொது ஒப்பந்த முறைப்படி பெற முனைந்தது. 'ட்வாடு' தனது 1998-99 ஆம் ஆண்டு தேவைகளைப் பூர்த்தி செய்ய ரூபாய் 22 கோடி மதிப்புள்ள குழாய்களுக்குப் பொது ஒப்பந்த முறைப்படி பெற நடவடிக்கை எடுத்தது. இதில் எல்-1 ஒப்பந்தக்காரர் M/s. Infrastructure - மெஸர்ஸ் இன்ஃப்ராஸ்ட்ரக்சர், இராஜஸ்தான் என்ற நிறுவனம். இதனுடைய விலை ரூபாய் 11,964 per Metric Tonne ஆகும்.

'ட்வாடு' தனது தேவைகளுக்கேற்ப, 'டான்செம்' நிறுவனத்தை, ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட எல்-1 விலைக்கு சம்மதிக்கக் கேட்டுக்கொண்டது. 'டான்செம்' நிறுவனம் எல்-1 விலைக்கு விநியோகம் செய்ய 50 சதவீதம் மட்டும் ஒப்புக் கொண்டு அதைப் பெற்றுக்கொண்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, 'டான்செம்' அறவே புறக்கணிக்கப்பட்டு விடவில்லை. அவர்களுக்கு 50 சதவீதம் தரப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்பொழுது, திருப்பூரிலே கட்டமைப்பில், மேம்பாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கலைக் குறித்துச் சொன்னார்கள். அதைப் பற்றி அவரும், நானும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், எவ்வளவு தூரம் அக்கறை எடுத்துப் பணியாற்றி வருகிறோம் என்பதும், இடையிலே இப்போது ஏற்பட்டுள்ள இந்த நீதிமன்ற இடைக்காலத் தடையை எப்படி எதிர்க்கொண்டு, அதிலிருந்து நாம் மீண்டு வருவது என்பதும், இப்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருகின்றவைகளாகும். எனவே, விரைவில் அந்த மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்குகின்ற முயற்சியில் நாம் வெற்றி அடைவோம் என்பதை திரு. சுப்பராயன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அ.தி.மு.க. சார்பில் உரையாற்றிய திரு. சுந்தரம் அவர்கள், சிங்கப்பூர் போனாயே, யாரைப் பார்த்தாய்; என்ன கொண்டு வந்தாய் என்று கேட்டார்கள், அதற்கு திரு. குழந்தை தமிழரசன் சில விளக்கங்களை அளித்தார்கள் என்றாலும்கூட, சிங்கப்பூரில் பிரதமரைச் சந்தித்தேன்; அமைச்சர்களைச் சந்தித்தேன்; சிங்கப்பூர் தொழிலதிபர்களைச் சந்தித்தேன். அவர்கள் எனக்களித்த வரவேற்பிலே கலந்துகொண்டு, அவர்கள் எல்லாம் தொழில் தொடங்க, தமிழகத்திற்கு வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தேன். அவர்களில் பலர் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். சிலர் வந்தும் இருக்கிறார்கள். மலேசியப் பிரதமரைச் சந்தித்தேன். மலேசியாவில் உள்ள பல அமைச்சர் பெருமக்களைச் சந்தித்தேன். தொழில் விற்பன்னர்களை, தொழிலதிபர்களைச் சந்தித்தேன். அவர்கள் அளித்த விருந்திலே கலந்துகொண்டு, அவர்களும் தமிழகத்திலே தொழில் தொடங்க வரவேண்டும் என்று அழைப்பு விடுத்தேன். இப்போதும்கூட, திரு. டத்தோ சாமிவேல் என்ற பொதுப்பணித் துறை அமைச்சருடைய தலைமையில் 20 பேர் கொண்ட ஒரு பெரிய குழு தமிழகத்திற்கு வந்து, குமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தைச் சீர் படுத்த, ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருந்த துறைமுகத்தை இப்போது இயங்காமல் இருக்கின்ற சூழ்நிலையிலேயிருந்து மாற்றி, அது ஏறத்தாழ சிறிய துறைமுகம் என்றாலும்கூட, தூத்துக்குடித் துறைமுகத்திற்கு அடுத்து, அதற்கு ஈடாகக்கூட அதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை எங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். சுமார் 2 மணி நேரம் அது பற்றி விவாதம் கடந்த சில நாட்களுக்கு முன்பு இதே கோட்டையில் நடை பெற்றிருக்கின்றது. அதைப்போலவே, அவர்களுடைய முழு முயற்சியோடு - இது தனிப்பட்டவர்கள் செய்கின்ற ஒப்பந்தமல்ல - மலேசிய அரசும், தமிழக அரசும் செய்து கொள்கின்ற ஒப்பந்தம். அடுத்து, பறக்கும் சாலை என்று சொன்னால்தான் புரியும் என்பதற்காகச் சொல்கின்றேன். துறைமுகத்திலேயிருந்து மீனம்பாக்கம் விமானநிலையம் வரையில் முதற்கட்டமாக ஈரடுக்குச் சாலை ஒன்றை அமைப்பதற்கும் திட்டம் தீட்டப்பட்டு, அதற்கான வரைவுகளும் அன்றைக்கு விவாதிக்கப்பட்டிருக் கின்றன. எனவே, மலேசியா, சிங்கப்பூர் சென்றது என்பது, அரசாங்கச் செலவில், அரசாங்க விமானத்தை எடுத்துக்கொண்டு

நெல்லூர் சுப்பிராமிரெட்டியாருடைய சாவிற்குப் போனதைப் போல அல்ல என்பதை நான் நம்முடைய சுந்தரம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அவர் "என்னுடைய தொகுதிக்குத் தொழிற்சாலை இல்லை, இரண்டு முறை சொல்லிவிட்டேன்" என்றார். கங்கைக்குக்கூட மூன்று முறை தவணை கொடுப்பார்கள். எனவே, திரு. சுந்தரம் அவர்களை, மூன்றாவது தவணை கொடுக்கும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவது தவணையிலே தொழிற்சாலை தொடங்குவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

"கார் தொழிற்சாலைகள் எல்லாம் நாங்கள் கொண்டு வந்ததுதான். ஃபோர்டு தொழிற்சாலை நாங்கள்தான் கொண்டு வந்தோம். நீங்கள் பெயர்தட்டிக் கொண்டு போகிறீர்கள்" என்று அவர் சொன்னார். இல்லை, ஃபோர்டு தொழிற்சாலைக்கு MoU போட்டதோடு நின்றுவிட்டது. அதற்குப் பிறகு கழக அரசு பொறுப்பேற்றது 1996 ஆம் ஆண்டு. அதற்கு நிலம் வாங்கி ஒப்படைத்தது உட்பட, எல்லாப் பணிகளையும் மேற்கொண்டு, அந்தத் தொழிற்சாலையைத் தொடங்கிவைத்தது வரையில், திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே ஆரம்பித்ததற்காக நான் ஒன்றும் குறை சொல்லவில்லை. ஏன் ஆரம்பித்தீர்கள் என்று கேட்கவில்லை. அவர்கள் ஆரம்பித்த காரணத்தாலே நாங்கள் அதை நிறுத்திவிடவில்லை. இதற்கு முன்பிருந்த அரசு எதைத் தொடங்கியிருந்தாலும், அது நல்லவைகளாக இருந்தால் அவற்றைத் தொடர்ந்து செய்வதுதான் பிறகு வருகின்ற அரசுக்கு ஜனநாயகத்திலே அழகு. அந்த ஜனநாயகக் கடமையை நாங்கள் நிறைவேற்றிக்கொண்டுதான் வருகிறோம் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

புகளூர் பற்றிப் புகார் கொடுத்தேன், என்ன ஆயிற்று என்று அவர் கேட்டார். அது ஊழல் விசாரிப்புக் குழுவிற்கு

அனுப்பப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது என்பதையும், விசாரணை முடிந்து, அதில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் விரைவிலே தெரிவிப்பேன். உடனடியாக அந்தக் குழுவிற்கு அனுப்பப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. அதற்குப் பொறுப்புள்ள அதிகாரிகள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தி.மு.க. சார்பில் பேசிய திரு. சண்முகம் அவர்கள், பொள்ளாச்சியை தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். பின்தங்கிய வட்டமாக ஒரு பகுதியை அறிவிப்பது என்றால், அதற்கு என்னென்ன நிலைகள் தேவை, எத்தகைய அடிப்படைகள் தேவை என்பதையெல்லாம், ஒரு முறை அல்ல, பல முறை இந்த அவையிலே கேள்வி நேரத்திலும், வேறு பல நேரங்களிலும் நான் விளக்கியிருக்கிறேன். அத்தகைய அடிப்படைகள் அமைகின்றபோது பொள்ளாச்சியைப் பின்தங்கிய வட்டமாக அறிவிப்பதற்கான பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்திய தேசிய லீக் சார்பில் பேசிய முகம்மது இஸ்மாயில் அவர்கள், அவருடைய தொகுதியிலே முருங்கைக் காய்த் தொழிற்சாலை ஒன்று வேண்டுமென்று சொன்னார், அதை அமைத்து, பாக்கியராஜை அழைத்துத் திறப்பு விழா நடத்தலாம் என்று (சிரிப்பு) நான் அவருக்கு உறுதி கூறுகிறேன்.

குடகனாற்றில் மணல் எடுப்பதைப் பற்றி, அதிலே இருக்கின்ற குறைபாடுகளைப் பற்றியெல்லாம் இங்கே நம்முடைய இஸ்மாயில் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இப்பொழுது கரூர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கின்ற திரு. அய்யர் அவர்கள், இந்த மணல் குவாரியில் நடைபெறுகின்ற ஊழல்களை யெல்லாம் பெரிதும் கண்டுபிடித்து, தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். அதைப்போல இந்த மாவட்டத்தில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதை முகம்மது இஸ்மாயில் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசிய டாக்டர் செல்லக்குமார் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். Best and Crompton கம்பெனியின் Urban Land Ceiling சம்பந்தமான கோப்பு 10 மாத காலமாக ஏன் உறங்குகிறது, அதிலே மறைந்து கிடக்கின்ற மர்மம் என்ன என்றெல்லாம் கேட்டார். "மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்னவோ" என்பது தில்லானா மோகனாம்பாளிலே நான் கேட்ட பாட்டு. தம்பி செல்லக்குமாரும் அதைக் கேட்டிருப்பார், ஆர்வத்தோடு பார்த்திருப்பார் அதை. ஆகவே, இதிலே எந்த மர்மமும் கிடையாது. ஒரு கோப்பு சில நாள் தங்கி விடுகின்ற காரணத்தாலே, இதிலே மர்மம் இருப்பதாகக் கருதிவிடக் கூடாது. இதிலே என்ன பிரச்சினை என்றால், அவர்கள் ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு மேலாக, அங்கே உள்ள surplus vacant land-ஐ விற்றுவிட வேண்டுமென்று அனுமதி கேட்டார்கள். அதற்கு ஒரேடியாக ஒரு அதிகாரியோ, ஒரு அமைச்சரோ உத்தரவு போட்டு விட முடியாது. முதலமைச்சரேகூட உத்தரவு போட முடியாது. அது மிகத் தேவை, பொது நலனுக்கு உகந்தது என்றால் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டித்தான் அந்த முடிவெடுக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் அப்படித்தான்.

அவருக்கே தெரியும். காங்கிரஸ் மைதானத்திலே 22 மாடிக் கட்டடம் கட்டுவதற்கு அறங்காவல் குழுத் தலைவராக உள்ள சி. சுப்பிரமணியம் அவர்கள் எனக்குக் கடிதம் எழுதினார்கள். அதில்கூட 10 மாதம் ஆயிற்று. 10 மாதம் ஆயிற்றே, இடையிலே என்ன மர்மம் என்றா என்னைக் கேட்பது? அப்படி சி.எஸ்.ஸும் என்னைச் சந்தேகித்து விட மாட்டார், நானும் அப்படிச் சந்தேகத்திற்கு உரியவனாக இருக்க மாட்டேன் என்பது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். ஆனாலும் அந்த அனுமதியைக் கொடுப்பதற்கு அமைச்சரவையைத்தான் கூட்டினோம். நானாக ஒரு கையெழுத்துப் போட்டு, கொடுத்து விட்டோம் அனுமதியை என்று சொல்லவில்லை. புதிதாக ஒரு கொள்கை நிலை எடுக்கும் பொழுது, அமைச்சரவைக் கூட்டத்திலேதான் அந்த நிலையை எடுக்க வேண்டியிருக்கிறது.

அதைப்போலவே Best & Crompton கோரிக்கை அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதித்து முடிவெடுப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறதேயல்லாமல், வேறல்ல. மிகை வெற்று நிலம் அது. Surplus vacant land அதை விற்பனை செய்துகொள்ள இதுவரை யாருக்கும் அரசு அனுமதி கொடுத்தது இல்லை. அவர்கள் விற்பனை செய்துகொள்ள அனுமதி கேட்கின்ற காரணத்தினாலேதான், அமைச்சரவைக் கூட்டம் தேவைப் படுகிறது என்பதை நான் டாக்டர் செல்லக்குமார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போல, அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். L.N.G. இதிலே நீங்கள் படித்த அந்த 13 பேரில் இல்லாதவருக்குக் கொடுத்திருக்கிறீர்களே, எப்படி என்று கேட்டார்கள். அந்தப் படித்த பேர்களில் இப்பொழுது யாருக்குக் கொடுத்திருக்கிறோம் என்றால், Siemens என்ற நிறுவனத்திற்குக் கொடுத்திருக்கிறோம். அப்பொழுது இருந்த பேர்களில் UNOCAL அமெரிக்காவைச் சேர்ந்தது. C.M.S. அமெரிக்காவைச் சேர்ந்தது. GRASIM இந்தியாவைச் சேர்ந்தது. WOODSIDE ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தது. இவைகள் அனைத்தும் சேர்ந்து Siemens என்ற பெயரிலே இப்பொழுது ஒரு தொகுப்பாக அவர்கள் செயல் படுகிறார்கள். இத்தனையும் சேர்ந்ததுதான் Siemens. அதற்குத்தான் இது கொடுக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல், வேறல்ல. மத்திய அமைச்சர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் எழுதிய கடிதத்திற்கு விளக்கமான பதில் கடிதம் அவருக்கு அனுப்பப் பட்டு, அவரும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இடையிலே ஏற்படுகின்ற அரசியல் பேச்சுவார்த்தைகளெல்லாம், இதிலே எந்தவிதமான தொடர்பும் உடையன அல்ல என்பதையும் திரு. செல்லக்குமார் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய ஃபார்வர்டு பிளாக் கட்சியினுடைய சார்பில் உரையாற்றிய திரு. சந்தானம் அவர்கள், அலங்காநல்லூர் தொழிற்சாலை - பொதுத் துறை ஊக்கப்படுத்தப்பட வேண்டு மென்று கேட்டார்கள். அதையேதான் நம்முடைய திருமதி பொன்னம்மாள் அவர்களும் குறிப்பிட்டார்கள். அது நீண்ட காலமாக ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது.

அங்கேயுள்ள விவசாயிகள் எல்லாம்கூட என்னை வந்து பார்த்து, அதை யாராவது ஒரு தனியாருக்கு, நல்ல வாய்ப்பு உள்ளவர்கள், அதை ஒழுங்காகச் செய்யக்கூடியவர்கள், நல்ல முறையிலே நிர்வாகம் நடத்தக்கூடியவர்களுக்குத் தரவேண்டும் என்றுகூடக் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அதற்கு யார் முன்வருகிறார்கள் என்பதை நாங்கள் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம். சில பேர் முன் வந்திருக்கிறார்கள். அதிலே யார் தகுதியுடையவர்கள் என்பதைப் பார்த்து, அந்த ஆலையை ஒழுங்காக நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

நம்முடைய திரு. வேலாயுதன் அவர்கள், கயிறு திரிக்கும் தொழில் கன்னியாகுமரியிலே வேண்டுமென்று கேட்டார்கள். நல்ல முறையிலே கயிறு திரிக்க (சிரிப்பு) கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்தத் தொழிற்சாலை தொடங்குவதற்கு, அது தொடர்ந்து நடப்பதற்குத் தேவையான கச்சாப்பொருட்கள் இவை எல்லாம் கிடைப்பதற்கு, அரசு ஒழுங்கு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பதாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். இன்னும் வரவில்லை என்கிறார்கள். ரப்பர் என்றாலே கொஞ்சம் இழுக்கத்தான் செய்யும். அதற்கும் பல முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அதற்குரியவர்கள் வருகின்ற நேரத்திலே நிச்சயமாக ரப்பர் தொழிற்சாலை அங்கே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாகப் பேசிய திருமதி பொன்னம்மாள் அவர்கள், மல்லிகைப் பூ சென்ட் தொழிற்சாலை ஒன்றை அவரது தொகுதியிலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். சிங்கப்பூருக்குப் பெண்களை எல்லாம் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். பெண்களை அனுப்பலாம் சிங்கப்பூருக்கு; ஆனால், அங்கே போய் சேலைகளை எடுத்துக்கொண்டு வரக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி). தமிழகத்திற்குத் தேவையான, நல்ல வேலைகளை

நல்லத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கானத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டும்.

அவர்கள் இன்னொன்று சொன்னார்கள். கரும்பு விலை பற்றிச் சொன்னார்கள். தேர்தல் அறிக்கையிலே 1,000 ரூபாய் என்று போட்டுவிட்டு ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். நானும் பல முறை இந்த அவையிலே விளக்கி விட்டேன். ஒருவேளை நான் பேசும்போது திருமதி. பொன்னம்மாள் அவர்கள் இல்லையோ அல்லது நான்தான் அவர்களுக்குப் புரியும்படியாக விளக்கவில்லையோ என்பது எனக்குத் தெரிய வில்லை. தேர்தல் அறிக்கையிலே அப்படி ஒன்றும் சொல்லவில்லை. அன்றைக்கு திரு. பழனிசாமி அவர்களுக்கு நினைவூட்டியதைப்போல, திருச்சியில், தேர்தலுக்கு முன்பு நடைபெற்ற ஒரு மாநாட்டில், 1,000 ரூபாய் கரும்புக்குத் தர வேண்டுமென்று தீர்மானம் போட்டது உண்மை. ஏனென்றால், எதிர்க்கட்சி அப்படித்தான் போடும். ஆளுங்கட்சியாக வந்த பிறகுதான் கஷ்டம். அதனுடைய சிரமம் தெரியும். 1,000 ரூபாய் தரவேண்டுமென்று தீர்மானம் போட்டது உண்மை. ஆனால், தேர்தல் அறிக்கையிலே, மிகுந்த எச்சரிக்கையோடு அதை நாங்கள் குறிப்பிடவில்லை. "கட்டுப்படியான விலை தரவும், அவர்களுக்கு வண்டிச் சத்தம் போன்றவைகளை ஏற்றுக் கொள்ளவும், அவர்களுக்கு நிர்வாகத்தின் மூலமாகக் கிடைக்கக் கூடிய ஆதாயங்கள் எவையெவையாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றியும் முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, நல்ல முடிவு காண்பதற்கு, தி.மு.கழகம் வென்றால் பாடுபடும்'' என்றுதான் தேர்தல் அறிக்கையிலே இருக்கிறது. 1,000 ரூபாய் என்று குறிப்பிடவில்லை. அப்படி குறிப்பிடாததற்காக, அதிக விலை கொடுக்க முடியாது என்று சொல்லவில்லை. நான் மீண்டும் ஒருமுறை ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன், மாநில வாரியாக.

சர்க்கரைக் கட்டுமானம் 10.22 சதவிகிதம் இருக்கின்ற ஆந்திராவில் சராசரி கரும்பு விலை, ஒரு டன் 630 ரூபாய். 10.54 சதவிகிதம் கட்டுமானம் உள்ள கர்நாடகத்தில் கரும்பு விலை ஒரு டன் 730 ரூபாய். சர்க்கரைக் கட்டுமானம் 11.11 சதவிகிதம் என்று உள்ள மராட்டியத்தில் கரும்பு விலை டன் ஒன்றுக்கு 680 ரூபாய். 10.72 சதவிகிதம் கட்டுமானம் உள்ள குஜராத்தில்

கரும்பு விலை ஒரு டன் 648 ரூபாய். இவைகளை எல்லாம் விடக் குறைவாக 8.94 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள தமிழ்நாட்டில் சராசரி கரும்பு விலை ஒரு டன் 753 ரூபாய். இது எல்லா மாநிலங்களோடும் ஒப்பிடும்போது அதிக விலையா, இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னும் இந்த விலையைச் சற்று ஏற்றித் தருவதற்கு இயலாத நிலைமையிலே நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இடைக் காலத்தடையை சில தனி அதிபர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரால் இங்கே பலமுறை விளக்கப்பட்டிருக்கிறது. முத்தரப்புப் பேச்சு வார்த்தையின் மூலமாக இன்னும் எந்த அளவுக்கு இதை உயர்த்தித் தரமுடியும் என்பதை அரசு ஆலோசிக்கும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

WORLD TEL நிறுவனத்திப்பற்றி டாக்டர் செல்லக்குமார் அவர்கள் சொன்னார்கள். அந்த WORLD TEL என்பது தனியார் கம்பெனி அல்ல; அந்த நிறுவனத்திலே உள்ள சாம் பிட்ரோடா என்பவர் ஒரு தனிப்பட்ட மனிதர் அல்ல. அவர் நிறுவனத்தி னுடைய தலைவர். WORLD TEL நிறுவனம் என்பது International Telecommunication Union (ITU) என்கின்ற ஒரு யூ.என். ஏஜென்ஸியால் ஏற்படுத்தப்பட்டது. அந்த நிர்வாகத்தில் Assembly of Governors - மத்திய அரசின் பிரதிநிதியும் அதிலே இருக்கிறார். இதுவொரு தனியார் நிறுவனம் அல்ல. சாம் பிட்ரோடாவினுடைய சொந்த நிறுவனம் அல்ல. அவர் அந்த நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார். அவ்வளவுதான். WORLD TEL நிறுவனத்தின் திட்டத்தில் தமிழக அரசும் கூட்டாக இணைந்து, Joint Sector Project ஆக செயல் படுத்துவதால் இதற்கு உலக அளவிலே ஒப்பந்தப்புள்ளி கோரும் அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிலேகூட சமீபத்திலே WORLD TEL நிறுவனத்தோடு நம்முடைய அதிகாரிகள் பேசினார்கள். அவர்கள் இன்னும் சில நிபந்தனைகளை விதித்து, கொஞ்சம் தாமதமாகும்போல்கூட எங்களுக்குத் தெரிகிறது. இந்தப் பெரிய முயற்சி

தாமதமாகுமேயானால் WORLD TEL -க்குப் பதிலாக வேறு ஒரு பெரிய நிறுவனத்தை அணுகி விரைவில் இந்த சமுதாய இணையம் தமிழகம் முழுவதும் பரவிடவும், இலட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் அந்தப் பெருமுயற்சியை அவர்களிடமிருந்து மாற்றிக்கூட வேறு ஒரு நிறுவனத்திற்கு அதை ஒப்படைக்கலாமா என்றுகூட அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது, இன்னும் முடிவாகவில்லை. இப்படிச் சொல்வதால் இவர்களுக்கு அறவே இல்லை என்றும் பொருள் அல்ல. அவர்கள் தாமதம் செய்வார்களேயானால் வேறு ஒருவருக்கு இதை மாற்ற முடியுமா என்பதையும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாம் பிட்ரோடாவினுடைய சொந்த நிறுவனம் என்பது அல்ல என்னுடைய கருத்து. அதைப்போன்று இன்னும் பல நிறுவனங்கள் International Level-ல் இருக்கின்றன. நீங்கள் இந்தத் துறையைப் பொறுத்தவரையில், 1½ இலட்சம் போர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்பதில் மாற்றுக் கருத்து கொள்ளவில்லை. ஆனால் இது ஒரு வணிகமாக நடைபெற இருக்கிறது. நாளையதினம் 13,000 இணையங்கள் ஆங்காங்கு பொருத்தப்பட்ட பிறகு, தமிழகத்து மக்களிடமிருந்து ஒரு மணி நேரத்திற்கு இத்தனை ரூபாய் என்று வசூலிக்க யிருக்கிறார்கள். அதிலே அரசுக்கு ஒரு பங்கு, 26 சதவிகிதம் என்று நான் கருதுகிறேன். அந்த 26 சதவிகிதம் அரசுக்குக் கிடைத்திருந்தாலும் இன்னொரு நிறுவனத்திற்கு போக இருக்கிறது. அதைவிடக் குறைவான கட்டணத்திலே வேறு நிறுவனங்கள், இதைவிடத் திறமையான நிறுவனங்கள் இதிலே பங்கு பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே, Transparency என்று சொல்கிறபோது Global tender -ல் நீங்கள் இதற்கும் அழைப்புகளை விடுத்திருக்கலாம். இதைவிடச் சிறந்தவர்கள் இதிலே பங்கு பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை ஏன் விடவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யோசனையை முன்வைத்து இந்தியா

முழுவதும், எல்லா மாநிலங்களிலும் அலைந்து திரிந்தவர் சாம் பிட்ரோடா. அதை அவரே ஒரு பேட்டியில், சென்னையில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார். எந்த மாநிலமும் இந்த முயற்சிக்கு அவருக்குக் கை கொடுக்க முன்வரவில்லை. அந்தநேரத்திலேதான் நாம் அவரை அழைத்துத் தமிழ்நாட்டிற்கு அந்தப் பணியைச் செய்து கொடுப்பீர்களா என்று கேட்டபோது ஒத்துக்கொண்டார். இப்போது வேறு பல நிறுவனங்களும் அதே அளவிற்கு இருக்கின்றன என்றால் அவர்களை எல்லாம் விட்டுவிட்டு இவருக்கேதான் கொடுக்க வேண்டும் என்கின்ற பிடிவாத குணத்தோடு அரசு செயல்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் குறைந்த அளவிலே, இவர் விதிக்கின்ற நிபந்தனைகளுக்குக் குறைவான நிபந்தனைகளை விதித்து, வேறொரு பெரிய நிறுவனம் முன் வருமானால் - ஆனால் அவர்கள் செய்து முடிக்க வேண்டும்- செய்து முடிக்கின்ற அத்தகைய திறனுள்ள ஒரு நிறுவனம், எந்த நிறுவனமாக இருந்தாலும், அவற்றை அழைப்பதிலே எந்த விதமான தயக்கமும் இந்த அரசுக்குக் கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். யாரோ ஒருவருக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காக அல்ல. அந்த முதல் முயற்சியை அவர் எடுத்தார். திரு. ராஜிவ்காந்தி அவர்களிடத்திலே நல்ல பழக்கம் உடையவர் அவர். ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்தவர். இன்றைக்கு அகில உலகத்தில் இப்படிப்பட்ட ஒரு விஞ்ஞான ரீதியான செயல்களைச் செய்வதிலே நல்ல பாண்டித்யம் பெற்றவராகத் திகழ்பவர். எனவே, அவர் பல மாநிலங்களில் முயன்றும் அது நடைபெறாத சூழ்நிலையில், தமிழகத்திற்கு அவரை அழைத்து இந்தப் பணியை ஒப்படைக்கலாம் என்று கருதியது. தமிழகம் அந்த முயற்சியை மேற்கொண்ட பிறகு, வேறு பல மாநிலங்களிலே உள்ள முதலமைச்சர்கள் எல்லாம் அவரைத் தொடர்பு கொண்டு, 'அங்கே வருக, இங்கே வருக' என்று அழைத்தார்கள். ஆனால் அவர் 'முதலிலே என்னை அழைத்தது தமிழ்நாடுதான். அங்கேதான் இந்தப் பணியைச் செய்வேன்' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் இப்போது அண்மையில் அவர் என்னோடு பேசியபோது, சில நிபந்தனைகள் நாம் உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாதவை களாக இருப்பதை எண்ணிப் பார்த்து, டாக்டர் செல்லக்குமார்

அவர்கள் சொல்வதைப்போல, வேறு நிறுவனங்களையும் அழைத்துப் பேசக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்பதை நாம் யோசித்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் துறையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1967ஆம் ஆண்டு தொடங்கிய பிறகு - அதற்கு முன்பு பெருந் தலைவர் காமராஜருடைய தலைமையில், பக்தவத்சலம் அவர்களுடைய தலைமையில், இந்த ஆட்சி இங்கே நடைபெற்ற பொழுதெல்லாம் தொழிற்சாலைகளிலே பெரும் கவனம் செலுத்தப்பட்டது என்பதும், அன்றைய தொழில்துறை தமிழகத்திலே வளருவதற்குக் காரணமாக அப்போது தீட்டப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் அமைந்தன என்பதும் அனைவரும் அறிந்த உண்மையாகும். ஆனால் ஐந்தாண்டுத் திட்டம் நலிந்து திட்டத்தினுடைய தொகை குறைந்துபோன ஒரு சூழ்நிலையிலே தான் 1967ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே ஏற்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது என்பதையும் அனைவரும் நன்கு அறிவீர்கள். இருந்தாலும் 1969 முதல் 1975 வரையிலே உள்ள அந்த இடைக் காலத்திலேதான் தூத்துக்குடியிலே பெரிய தொழிற்சாலை, ஸ்பிக் உரத் தொழிற்சாலையை தொடங்கினோம்,. அன்றைக்கு ஒரு 100 கோடி, 150 கோடி ரூபாய்தான். இன்றைக்கு 1,000 கோடி, 2,000 கோடி ரூபாய் என்கின்ற அளவுக்கு அது வளர்ந்து பெரிய தொழிற்சாலையாக தூத்துக்குடி உரத் தொழிற்சாலை விளங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாமல், தமிழகத்தில்தான் அன்றைக்கு சிப்காட் என்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கினோம். ஆங்காங்கு ஒரு தொழிற்சாலை அமைவது, ஒரு மாநிலத்திலே, ஒரு நாட்டிலே என்ற நிலைக்கு மாறாக, வளாகங்கள் அமைத்து, அந்த வளாகங்களுக்கு உள்ளே பல தொழிற்சாலைகளை அமைப்பது, Park என்ற பெயராலோ அல்லது வளாகம் என்ற பெயராலோ, பல தொழிற்சாலைகளை அமைக்கின்ற சிப்காட் நிறுவனமே கழக ஆட்சியிலேதான்

1969 முதல் 1975 வரையிலே உள்ள அந்த இடைக்காலத்திலே தான் தொடங்கப்பட்டது. அதிலே அந்த சிப்காட்டின்படி, தூத்துக் குடியிலே ஸ்பிக் தொழிற்சாலை, இராணிப்பேட்டையிலே தொழில் வளாகங்கள், ஓசூரிலே தொழில் வளாகங்கள் இவை எல்லாம் 1969-லிருந்து 1975 வரையிலே தொடங்கப்பட்டன. State Industries Promotion Corporation of Tamil Nadu என்பதுதான் சிப்காட். அந்தக் காலகட்டத்திலேதான் சேலம் இரும்பு ஆலை கிடைத்தது என்பதையும் மறந்துவிடக் கூடாது.

சேலம் இரும்பு ஆலை கிடைப்பதற்காக, அன்றைக்குப் பாராளுமன்றத்திலே இருந்த 24 கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாதிட்டோம், போரிட்டோம். அப்போது இந்திரா காந்தி அவர்கள் மைனாரிட்டி கவர்ன்மென்ட் என்ற நிலையிலே அந்த சர்க்கார் இருந்தபோது, 24 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம் இதுதான் நேரம் என்று பயன் படுத்திக்கொண்டு, இந்திரா காந்தியை நாங்கள் மிரட்டவில்லை; இந்திரா காந்தியிடத்திலே நாங்கள் மிரட்டியதெல்லாம் எங்களுக்குத் தொழிற்சாலை கொடுங்கள் என்பதற்காகத்தான்; இந்திரா காந்தியிடத்திலே நாங்கள் வாதாடினோம், போராடினோம், இன்னும் சொல்லப்போனால் அந்தத் திட்ட வரைவுக்காக முதலமைச்சர்களை எல்லாம் அழைத்து, இந்திரா காந்தி அவர்கள் பிரதமராகவும் மொரார்ஜி தேசாய் அவர்கள் துணைப் பிரதமராகவும் இருந்து நடத்திய அந்தக் கூட்டத்தில், அந்தத் திட்ட வரைவை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு, "இதிலே சேலம் திட்டம் இல்லை. ஆகவே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்" என்று நானும் அன்றைய நிதிஅமைச்சராக இருந்த நண்பர் மதியழகனும் வெளிநடப்பே செய்தோம். அதற்கு அடுத்த ஒரு வாரத்திற்கெல்லாம் இந்திரா காந்தி அம்மையார் டில்லிக்கு என்னை வருமாறு தந்தி கொடுத்து அழைத்து, சேலம் தொழிற்சாலைக்கான அந்த ஆணையை வழங்கினார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். இப்படி நாட்டுக்காக, மாநிலத்திற்காகத்தான் 24 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அன்றைக்குப் பயன்பட்டார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

இந்தக் காலகட்டத்திலேதான் ஆலங்குளம் சிமென்ட் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டது. இவைகளுக்கு எல்லாம் நாம் உருவாக்கிய சிப்காட் நிறுவனம் பெரும் பயனுள்ளதாக அமைந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1973ஆம் ஆண்டில் இராணிப்பேட்டையில் 729 ஏக்கர் பரப்பு நிலம் இருந்தது. நாங்கள் பொறுப்புக்கு வந்தவுடன், அந்த இடம் ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சியிலே வாங்கிப்போடப்பட்ட இடம் என்றும், அது எதற்கும் பயன்படாத இடம், ஆகவே அதை விற்றுவிடலாம் என்றும் ஒரு முடிவு எடுக்கப்பட்டிருந்தது. நானும் அன்றைய தொழில் அமைச்சர் மாதவனும் இராணிப் பேட்டைக்குச் சென்று அந்த இடத்தைப் பார்த்து, அப்போதுதான் சிப்காட்டை உருவாக்கி ஒரு வளாகத்தை இங்கு அமைத்தால் என்ன என்ற கேள்வி எழுப்பி, இராணிப்பேட்டையிலே அந்த வளாகத்தை அன்றைக்கு அமைத்தோம். இதிலே அந்த வளாகத்திலே 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டன.

அதற்கு அடுத்து 1974ஆம் ஆண்டில் ஓசூரில் 1,236 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டாவது தொழில் வளாகம் கழக அரசால் அமைக்கப்பட்டது. அதில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 186 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. இராணிப்பேட்டை, ஓசூர் ஆகிய இரண்டு தொழில் வளாகங்களிலும் தொடங்கப்பட்டுள்ள 293 தொழில்களில் ஏறத்தாழ 20 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

1989-க்குப் பிறகு, 1989 முதல் 1990 வரையிலே அமைந்த தொழிற்சாலைகளினுடைய விவரங்களைப் பார்த்தால், 1989-90இல் தான் 22 கோடி ரூபாய் முதலீட்டில் "ஏஷியன் பெயிண்ட்ஸ்" என்ற தொழில் நிறுவனம் தொடங்கப்பட்டது.

29 கோடி ரூபாய் முதலீட்டில் "டெலி கம்யூனிகேஷன்ஸ் கன்சல்டண்ட் இந்தியா லிமிடெட்" என்ற நிறுவனம் தொடங்கப் பட்டது.

ஒசூரில் 140 கோடி ரூபாயில் "டைட்டானியம் டை ஆக்ஸைடு" தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

சிப்காட் துணையோடு கடலூரில் 20 கோடி ரூபாய் முதலீட்டில் மரவள்ளிக்கிழங்கிலிருந்து இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் "உஸ்தா-தே-பயோடெக்" தொழிற்சாலை தொடங்கப் பட்டது.

6 கோடி ரூபாய் செலவில் "டான்டெக் ஆக்ரோ" தொழிற்சாலை கடலூரில் தொடங்கப்பட்டது.

40 கோடி ரூபாய் முதலீட்டில் கடலூரில் "டங்ஸ்டன் மெட்டல் பவுடர்" தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

மணலியில் 189 கோடி ரூபாய் முதலீட்டில் "தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ்" தொழிற்சாலை 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களிலே தொடங்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் மணலியில் 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "டி,பி, பெட்ரோ புராடக்ட்ஸ்" தொழிற்சாலை மற்றொன்று தொடங்கப்பட்டது.

மேலூருக்கு அருகில் நரசிங்கம்பட்டியில் ஏறத்தாழ 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிற்சாலை 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்தில் 10.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "தமிழ்நாடு மெக்னீசியம் மற்றும் மெரின் இரசாயனத் தொழிற்சாலை" தொடங்கப்பட்டது.

கடலூரில் 29.50 கோடி ரூபாய் முதலீட்டில் "தமிழ்நாடு புளோரின் மற்றும் சல்பைடு கெமிக்கல் தொழிற்சாலை" 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

ஒசூரில் 184 கோடி ரூபாய் முதலீட்டில் "டைட்டான்" கைக்கடிகார உறுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கப் பட்டது.

அதற்குப் பிறகு 1991-லிருந்து 1996 வரை, 5 ஆண்டுக் காலத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் 21 தொழிற்சாலைகள் தொடங்கப் பட்டன. அதற்கான மொத்த முதலீடு 1.125 கோடி ரூபாய்

அதன் மூலம் நேரடி வேலைவாய்ப்பு 4,230 பேருக்கு. தி.மு.க. ஆட்சியில் இந்த மூன்று ஆண்டு காலத்தில் உற்பத்தியாகியுள்ள தொழிற்சாலைகளுடைய எண்ணிக்கை 28. 5 ஆண்டு காலத்திலே 21, மூன்று ஆண்டு காலத்திலே 28. (மேசையைத் தட்டும் ஒலி). அப்போது 5 ஆண்டு காலத்திலே மொத்த முதலீடு 1,125 கோடி ரூபாய். இப்போது மூன்று ஆண்டு காலத்திலே மொத்த முதலீடு 6,067 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி). அப்போது நேரடி வேலை வாய்ப்பு, அந்த 5 ஆண்டு காலத்திலே, 4,230 பேர். இப்போது மூன்று ஆண்டு காலத்திலே 9,626 பேர். (மேசையைத் தட்டும் ஒலி).

இஃதன்னியில் ஏறத்தாழ உற்பத்திப் பணி தொடங்கக் கூடிய சூழ்நிலையிலே உள்ள தொழிற்சாலைகள் இந்தக் குறிப்பிட்ட 28 அன்னியில் மேலும் 28 தொழிற்சாலைகள் அதற்கு முதலீடு 22,946 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் மூலமாக வேலைவாய்ப்பு பெற இருப்போர் 11 ஆயிரம் பேர். (மேசையைத் தட்டும் ஒலி).

1996 முதல் 1999 வரை தமிழ்நாட்டிலே தொடங்கப்பட்ட புதிய தொழிற்சாலைகள், காஞ்சிபுரம் செல்கின்ற வழியிலே இருங்காட்டுக் கோட்டையில் 1,829 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டிருக்கிறது, தொழில் வளாகத்திற்காக, பல தொழில்களைத் தொடங்க வேண்டும் என்பதற்காக, இந்த மூன்று ஆண்டுக் காலத்தில்.

2,450 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் "ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட்" நிறுவனத்தினுடைய கார் தொழிற்சாலை.

320 கோடி ரூபாய் செலவில் திருவள்ளூரில் "மிட்சுபிஷி லேன்சர்" கார் தொழிற்சாலை.

1,700 கோடி ரூபாய் செலவில் மறைமலை நகரில் அமைக்கப்பட்ட "போர்டு மோட்டார்ஸ்" நிறுவனத்தினுடைய கார் தொழிற்சாலை.

40 கோடி ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் "இல்ஜின் இன்டஸ்டிரியல்" நிறுவனத்தின் ஆட்டோமொபைல் கார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

23 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் "டைனமாடிக் குரூப் கம்பெனிகள்" நிறுவனத்தின் ஆட்டோ மொபைல் கார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

44 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் போஸ் ஹண்டாய் ஸ்டீல் மேனுபாக்சரிங் லிமிடெட் நிறுவனத்தின் காயில் சென்டர் (Coil Centre) தொழிற்சாலை.

27 கோடி ரூபாய் செலவில் மறைமலை நகரில் வாலியோ பிரிக்ஷன் மெட்டீரியல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நான்-ஆஸ்பெஸ்டாஸ் பிரிக்ஷன் மெட்டீரியல்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை; காரின் உதிரிப் பாகங்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலை.

30 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் மேண்டோ பிரேக் சிஸ்டம்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் ஹைட்ராலிக் பிரேக்கிங் சிஸ்டம்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை.

59 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் மிட்சுபிஷிடா ஏர்கண்டிஷனிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஏர்கண்டிஷனர்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அறைகளுக்கு வைக்கக்கூடிய ஏர்கண்டிஷன் இயந்திரங்களைத் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை.

8.6 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் லுமெக்ஸ் சாம்லிப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோ மோடிவ் லைட்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை.

45 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் ஜே.பி.எம். சங்வூ லிமிடெட் நிறுவனத்தின் தகடு உலோகப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

17 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் ஜே.கே.எம். டோரியம் ஆட்டோ மோடிவ் லிமிடெட் நிறுவனத்தின் உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

9 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் பி.எச்.சி. மேனுபேக்சரிங் லிமிடெட் நிறுவனத்தின் கார் கதவுகள் தயாரிக்கும் தொழிற்சாலை.

43 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் டோங்கி விஷன் இண்டஸ்டிரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் உலோகத் தகடு பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

9 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் மோட்டார் இண்டஸ்டிரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் கார் எக்சாஸ்ட் (Car Exhaust) தயாரிக்கும் தொழிற்சாலை.

5 கோடி ரூபாய் செலவில் ஓசூரில் ப்ளூமிங் மெடோஸ் லிமிடெட் நிறுவனத்தின் மலர் வளர்க்கும் தொழிற்சாலை; அதாவது வெளிநாடுகளுக்கு மலரை ஏற்றுமதி செய்வதற்கான தொழிற்சாலை.

41 கோடி ரூபாய் செலவில் ஈரோடு அருகிலே உள்ள சோளங்கபாளையத்தில் S.K.M. Egg Products Limited நிறுவனத்தின் முட்டை பதப்படுத்தும் தொழிற்சாலை; அதைத்தான் மயில்சாமி கவுண்டர் ஆரம்பித்தார்; அந்தத் தொடக்க விழாவில் அவர் தன் சாதிப் பட்டத்தை விட்டார். இனிமேல் நான் மயில்சாமி கவுண்டர் அல்ல; சாமியையும் விட்டு விடுகிறேன்; மயிலானந்தம் என்று தன்னுடைய பெயரை அன்றைக்கு மாற்றிக் கொண்டார். அந்த முட்டை பதனிடும் தொழிற்சாலை 41 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது.

5 கோடி ரூபாய் செலவில் காஞ்சிபுரம் அருகில் உள்ள செட்டிப்பாளையத்தில் பாரத் டெக்ஸ் பேஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை.

300 கோடி ரூபாய் செலவில் கும்மிடிப்பூண்டியில் தாப்பர் டூபாண்ட் லிமிடெட் நிறுவனத்தின் நைலன் இழை தயாரிக்கும் தொழிற்சாலை. இதுகூட கடந்த ஆட்சிக் காலத்திலே தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பல பிரச்சினைகளுக்கு இடையே, பிறகு இந்த ஆட்சிக் காலத்திலேதான் அந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

27 கோடி ரூபாய் செலவில் தாம்பரம் ஏற்றுமதி வளாகத்தில் ஆசியன் லைட்டிங் நிறுவனத்தின் உலோகக் குழல் விளக்கு தயாரிக்கும் தொழிற்சாலை.

4.5 கோடி ரூபாய் செலவில் கரூர் அருகிலே உள்ள அப்பர்பாளையத்தில் கரூர் யார்ன் லிங்க்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நூல்ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை.

10 கோடி ரூபாய் செலவில் ஓசூரில் டாரஸ் நாவல்டீஸ் லிமிடெட் நிறுவனத்தின் டோலமைட், ஸ்டோன்வேர் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

21 கோடி ரூபாய் செலவில் திருப்போரூரில் ஸ்ரீராம் ஆட்டோ காம்போனென்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோ மொபைல் கார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

11 கோடி ரூபாய் செலவில் சென்னைக்கருகில் உள்ள மணலியில் ரமணசேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் உலோகச் சுருள்களைத் தகடாக மாற்றும் தொழிற்சாலை.

12 கோடி ரூபாய் செலவில் கோயம்புத்தூரில் இன்சில் இண்டஸ்ட்ரியல் லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலை.

33 கோடி ரூபாய் செலவில் புழல் கிராமத்தில் செம்பவாங்-ஸ்ரீராம் நிறுவனம், சிங்கப்பூர் நிறுவனம் இது, இதன் பொருள் விநியோகத் தொழிற்சாலை.

500 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் சிஸ்கால் நிறுவனத்தின் எஃகுத் தொழிற்சாலை அண்மையிலே திறந்து வைக்கப்பட்டது. நான்கூட திறப்பு விழாவில் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

756 கோடி ரூபாய் செலவில் சென்னை பேசின் பிரிட்ஜில் ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனத்தின் மின் திட்டம்.

மொத்த முதலீடு ரூபாய் 6,067 கோடி. இதில் நேரடியாக வேலை வாய்ப்பு 9,626 பேருக்கு; மறைமுகமான வேலை வாய்ப்பு 18 ஆயிரம் பேருக்குக் கிடைக்கும் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இஃதன்னியில் இப்போது வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிற தொழில்கள் - அவை எவை என்று பார்த்தால், 450 கோடி ரூபாய் செலவில் திருப்பெரும்புதூரில் செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் மிதவைக் கண்ணாடி தயாரிக்கும்

தொழிற்சாலை அதனுடைய வேலை முக்கால் பகுதி முடிந்துவிட்டது. நேற்றுகூட நான் சமத்துவபுரம் திறப்பு விழாவிற்காக காஞ்சிபுரம் அருகே சென்றபோது அந்தத் தொழிற்சாலை வெகு வேகமாக தன்னுடைய பணிகளை நிறைவேற்றிக் கொண்டு இருப்பதைக் காண நேரிட்டது.

நீங்கள் யாராவது ஒரு முறை பெங்களூர் சாலையிலே காஞ்சிபுரம் வழியாகச் செல்லும்போது பார்த்தால், வழியின் இரண்டு புறமும் தொழிற்சாலை மயமாக இருப்பதைக் காண முடியும். அதுவும் ஹூண்டாய் தொழிற்சாலையைப் பார்த்தால் எவ்வளவு நீளத்திற்கு அது கட்டப்பட்டுள்ளது என்பதையும், அதைத் தொடர்ந்து அடுத்துள்ள இந்தக் கண்ணாடி தொழிற்சாலை எந்த அளவுக்கு, எவ்வளவு ரம்மியமாகக் காட்சியளிக்கிறது என்பதையும் காண முடியும். திரு. சொக்கர் போன்றவர்கள், தொழிலிலே அக்கறை உள்ளவர்கள் போய் இதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சொக்கரை அழைப்பதால் எதிர்க்கட்சித் தலைவரை அழைக்க வில்லை என்று அர்த்தம் அல்ல. எல்லோரும் போய்ப் பார்த்து, நீங்கள் அந்த உண்மையை உணர வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அவ்வளவு அற்புதமாக இருக்கிறது.

50 கோடி ரூபாய் செலவிலே இருங்காட்டுக்கோட்டையில் மார்க்யூப் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பேப்பர் போர்டு மிஷினரி தயாரிக்கும் தொழிற்சாலை.

44 கோடி ரூபாய் செலவிலே இருங்காட்டுக்கோட்டையில் கோவேமா உட்பிளாஸ்ட் லிமிடெட் நிறுவனத்தின் ரிஜிட் பி.வி.சி பலகை தயாரிக்கும் தொழிற்சாலை.

5 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் ஆட்டோலெக் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் நீர் மற்றும் எண்ணெய் பம்ப் தயாரிக்கும் தொழிற்சாலை.

30 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் ரெனால்ட்ஸ் பென் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் பால்பாயின்ட் பேனாக்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

15 கோடி ரூபாய் செலவில் இன்வால் (மெடிக்கல்) இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் குருதிப் பைகள் (Blood bags) தயாரிக்கும் தொழிற்சாலை.

20 கோடி ரூபாய் செலவில் ஓசூரில் டான்ப்ளோரா இன்ப்ரா ஸ்ட்ரக்ச்சர் லிமிடெட் நிறுவனத்தின் தொழில் வளாகம்.

6 கோடி ரூபாய் செலவில் Bio-technology Park for women, சென்னையில் மகளிருக்கான உயிர் தொழில் நுட்பப் பூங்கா.

210 கோடி ரூபாய் செலவிலே செங்கல்பட்டில் மகேந்திரா இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோ உதிரிப் பாகங்களுக்கான தொழில் வளாகம்.

27.7 கோடி ரூபாய் செலவில் சென்னையில் மெடிடெக் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலை.

5.6 கோடி ரூபாய் செலவில் சென்னையில் இண்டியன் அண்டு நேச்சுரல் மெடிக்கல் ப்ராடெக்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

24 கோடி ரூபாய் செலவில் மறைமலை நகரில் ஆப்டிகல் பைபர் கேபிள் ப்ராஜெக்ட் தொழிற்சாலை.

320 கோடி ரூபாய் செலவில் தரமணியில் டைடல் பார்க் லிமிடெட் நிறுவனத்தின் தொழில் வளாகம்.

320 கோடி ரூபாய் செலவில் கடலூரில் பென்னார் ரிபைனரீஸ் நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற் சாலை. இப்போது விரைவிலே அதற்கு அடிக்கல் நாட்டப்பட இருக்கிறது. 2001ஆம் ஆண்ட மார்ச் மாதத்திற்குள்ளாக அது முடிவடையும் என்கின்ற உறுதியோடு அடிக்கல் நாட்டப்பட இருக்கிறது. 3,200 கோடி ரூபாய் மதிப்புள்ள தொழிற்சாலை.

142.65 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் சிஸ்காஸ் நிறுவனத்தின் மெட்டல் கோக் தயாரிக்கும் தொழிற்சாலை.

44.78 கோடி ரூபாய் செலவில் தரமணியில் கலாடா ரிம்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அலுமினியத் தொழிற்சாலை.

200 கோடி ரூபாய் செலவில் தரமணியில் வான் ஒம்மரன் டேங்க் டெர்மினல் நிறுவனத்தின் கெமிக்கல் சேமிப்பு டேங்க் தயாரிக்கும் தொழிற்சாலை.

எண்ணூரில் 2,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் எல்.என்.ஜி. எரிவாயு மின்திட்டம். இப்போது பிரச்சினை எழுப்பப்பட்ட அந்தத் திட்டம்.

ஜெயங்கொண்டத்தில் 4,000 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு 4 மில்லியன் டன் நிலக்கரியை வெட்டி எடுத்து, 500 மெகாவாட் மின்உற்பத்தி செய்யும் அனல் மின் திட்டம். அதற்கான நிலம் கையகப்படுத்துகின்ற பணி வெகுவேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாள்தோறும் 4, 5 கோப்புகளிலாவது, நிலம் கையகப்படுத்துகின்ற கோப்புகளிலே நான் கையெழுத்திட்டுக் கொண்டே வருகிறேன். அந்த அளவுக்கு வெகுவேகமாக நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இது மொத்த முதலீடு, நான் இப்போது படித்தது. மீதமுள்ள 28 இனங்களுக்கான மொத்த முதலீடு 22,946 கோடி ரூபாய். நேரடி வேலைவாய்ப்பு 11,000 பேருக்கு. மறைமுக வேலைவாய்ப்பு 1½ இலட்சம் பேருக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்ற இந்த மிக மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் முதலீட்டில் தமிழகம் முதலிடத்தில் இருப்பதாக நம்முடைய திருமதி பொன்னம்மாள் அவர்களும், திரு. ரங்கநாதன் அவர்களும் பேசும்போது குறிப்பிட்டார்கள். மற்றும் ஆளுங்கட்சி சார்பிலே பேசிய மற்ற உறுப்பினர்களும் பேசும் போது குறிப்பிட்டிருக்கிறார்கள். நானே சொல்லி, கை தட்டல் வாங்க வேண்டுமென்று இருந்தேன். ஆனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மானியக் கோரிக்கைக் குறிப்பிலேயே அதை அவர்கள் வெளியிட்டுவிட்ட காரணத்தால், அதை எல்லோருமே படித்து பேசியிருக்கிறீர்கள். தொழில் வளர்ச்சி குறித்து நான் 23-2-1999 அன்று ஆளுநர் உரைமீது நடைபெற்ற விவாதத்தின் போது பதிலளித்து உரையாற்றியபோது, மே 1996-ல் தொழில் நிறுவனங்களில் செய்யப்பட்டிருந்த முதலீடுகள் அடிப்படையில் தமிழகம் அகில இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் ஐந்தாம் இடத்திலிருந்தது என்றும், 1996-ல் கழக அரசு மீண்டும் அமைந்து தொழில் வளர்ச்சிக்கு அளித்து வரும் ஊக்கம் காரணமாக, 1999 சனவரி நிலையில் முதலீடுகள் அடிப்படையில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் இரண்டாம் இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது

என்று குறிப்பிட்டு, அதற்குரிய புள்ளி விவரங்களையும் இந்த அவையிலே நான் தெரிவித்தேன்.

அண்மையில் 1991 மே மாதத்திலிருந்து 1999 சனவரி மாதம் வரை இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எல்லாம் தொகுத்து, 1999 ஏப்ரல் மாதத்தில் இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் (Centre for Monitoring Indian Economy-C.M.I.E.) அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கை விவரங்களின்படி தமிழ்நாடு தொழில் முதலீடுகளின் அடிப்படையில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது என்பதை மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதனுடைய விவரம் என்ன என்பதைச் சொல்லவேண்டும். திருமதி பொன்னம்மாள் அவர்கள் சொன்னதைப் போல, அகில இந்தியாவில் மொத்த தொழில் முதலீடு ஒதுக்கீடு 1999 சனவரி வரையில் 13,15,017 கோடி 13 இலட்சம் கோடி. அந்த 13 இலட்சம் கோடியில் ஆந்திராவினுடைய பங்கு அவர்கள் அங்கே செய்துள்ள முதலீடு 1,06,364 கோடி, 8.09% கர்நாடகத்தில் 1,07,703 கோடி, 8.19% ஒரிஸ்ஸாவில் 1,14,033 கோடி, 8.67% குஜராத்தில் 1,46,703 கோடி, 11.16% மராட்டியத்தில் 1,51,058 கோடி, 11.49% தமிழ்நாடு 1,51,187 கோடி, 11.50% (மேசையைத் தட்டும் ஒலி). குதிரைப் பந்தயத்தில் மூக்கை நீட்டுகிற மாதிரி நீட்டி, முதலிடத்திற்கு வந்திருக்கிறோம். சென்ற ஆண்டு மராட்டியம் நம்மை விட .02% அதிகமாக இருந்தது. இப்பொழுது நாம் மராட்டியத்தைவிட .01% அதிகமாக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). ஆக, இந்தக் கயிறு இழுக்கும் போட்டி மாதிரி, ஒரு பெரிய சவாலாக மராட்டியமும், தமிழகமும் இன்றைக்கு இருக்கின்றன. முதலிடத்தில் இன்றைக்கு நாம் வந்திருக்கிறோம் என்பதை நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள்.

முதலீட்டில் மாத்திரமல்ல, ஏற்றுமதித் தொழிலிலும்கூட நாம் எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 'Economic Times' என்ற பத்திரிகையை உங்களுக்குத் தெரியும். புகழ்பெற்ற பொருளாதார ஏடு. அது நேற்றையதினம், 28-4-1999-ல் எழுதியிருக்கிறது.

"Tamil Nadu followed closely by Gujarat has taken the lead in terms of the number of 100 per cent export oriented units set up since liberalisation, displacing Maharashtra the traditional leader amongst the industrially developed States."

தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பின், 100 விழுக்காடு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு, தொழில் நிறுவனங்களை நிறுவுவதில் தமிழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). குஜராத் அதற்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ளது. இதன் மூலம் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்த மாநிலங்கள் வரிசையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து முதல் இடத்தில் இருந்த வந்த மராட்டிய மாநிலத்தை தமிழகம் தற்பொழுது முந்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னும் அந்த ஏடு, 'Economic Times' எழுதுகிறது. "The State-wise distribution of 100 per cent export oriented units since liberalisation indicates that Tamil Nadu has taken the lead in terms of the number of units set up."

(தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பின், 100 விழுக்காடு ஏற்றுமதி அடிப்படையில் தொடங்கப்பட்ட தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையை மாநில வாரியாகக் கணக்கிட்டதில் தமிழகம்தான் தலைமை இடத்தைப் பெற்றுள்ளது.) (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும் அந்த ஏடு எழுதுகிறது. "As against 3,503, cent per cent EOUS which have come up country-wide, since liberalisation, one sixth have been in Tamil Nadu, followed by Maharashtra, Gujarat, Andhra Pradesh and Karnataka."

பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட பின் அகில இந்திய அளவில் தொடங்கப்பட்ட 100 விழுக்காடு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட 3,503 தொழில்களில் ஆறில் ஒரு பங்கு தொழில்கள், அதாவது 584 தொழில்கள் தமிழகத்திலே தொடங்கப்பட்டுள்ளன. தமிழகத்தை அடுத்து மராட்டியம், குஜராத், ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்கள் வருகின்றன

என்று 'எக்னாமிக் டைம்ஸ்' குறித்துக் காட்டுகிறது. அதுமாத்திரம் அல்ல, மேலும் இன்னொரு ஆதாரம். அகில இந்திய அளவில் கடன் வைப்புத்தொகை விகிதாச்சாரம் பற்றி Times of India எழுதுகிறது, கடன் வைப்புத் தொகையில் நாம் முதலிடத்தில் இருக்கிறோம் என்றும் Times of India எழுதுகிறது.

"The States of Tamil Nadu, Andhra Pradesh, Maharashtra and Manipur have recorded the highest credit-deposit ratio (CDR) in the country, according to the latest data available."

அண்மையில் கிடைத்த புள்ளிவிவரப்படி தமிழ்நாடு, ஆந்திரா, மகாராஷ்ட்ரா மற்றும் மணிப்பூர் மாநிலங்கள் நாட்டிலேயே கடன்தொகை வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் (Credit-deposit Ratio) உயர் நிலையில் உள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

Against all-India average CDR of 55.5 per cent of all scheduled Commercial Banks (as on the last Friday of December 1997), Tamil Nadu's CDR was an astounding 92.3 per cent.

1997-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், கடைசி வெள்ளிக் கிழமை நிலவரப்படி அனைத்து வர்த்தக வங்கிகளின் ஒட்டுமொத்த அனைத்திந்திய சராசரி கடன் தொகை வைப்புத் தொகை விகிதாச்சாரம் 55.5 சதவிகிதம் என்றால், தமிழகத்திலே அப்போதைய விகிதாச்சாரம் 92.3 சதவிகிதம் என்கின்ற வியப்புக்குரிய செய்தி கிடைக்கிறது என்று அந்த ஏடு எழுதிக் காட்டுகிறது.

Andhra Pradesh recorded the second highest CDR of 74.2 per cent followed by Maharashtra's 68.7 per cent and Manipur's 59 per cent. The National Capital Territory (NCT) of Delhi registered a CDR of 70.9 per cent, close to the Union Territory of Chandigarh's 69.1 per cent.

அதற்கடுத்து, ஆந்திர மாநிலம் 74.2 சதவிகிதம் பெற்று இரண்டாம் நிலையிலும், அதைத் தொடர்ந்து மராட்டிய மாநிலம் 68.7 சதவிகிதம் பெற்றுள்ளது; மணிப்பூர் 59 சதவிகிதம் பெற்றுள்ளது என்று குறிப்பிடுகிறது.

சி.டி.ஆர். என்பது வங்கிகள் கடன் வழங்குவதை அதிகரித்துக் கொள்வது என்பதாகும். அது அதன் திறமையைப் பொறுத்துள்ளது. அதே சமயம் அந்த வங்கிகளின் உள்கட்டமைப்பு, அந்தப் பகுதியில் கடன் வசூல் செய்யும் திறன், முதலீட்டிற்காக உதவும் தன்மை, வங்கிக் கடன் வசூல் செய்ய போதுமான வசதிகள் ஆகிய அனைத்தையும் சார்ந்தும் அது இருக்கும். அதுதான் சி.டி.ஆர். என்பதாகும். அதிலும் நாம் தலைமை இடத்தில் இருக்கிறோம் என்பதை இந்தப் புள்ளிவிவரம் விளக்குகிறது.

18-12-1998 நாளிட்ட 'எகனாமிக் டைம்ஸ்' பத்திரிகையில் இலண்டன் மாநகரத்தைச் சேர்ந்த சர்வதேச ரியல் எஸ்டேட்ஸ் (International Real Estates) என்னும் நிறுவனத்தின் ஆலோசகர் ஜோன்ஸ் லாங்க் ஊட்டன் (Jones Long Wootten) சொல்லி யிருக்கிறார் "Chennai - சென்னை என்றே சொல்லியிருக்கிறார் பாருங்கள். நாம்தான் இன்னும் 'மெட்ராஸ்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம் - "Chennai has distinct strength over other Cities for attracting investments."

அதாவது, முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலே பல நகரங்களைவிட சென்னை சிறப்பான வளங்களைப் பெற்று முன்னணி இடம் பெற்றுள்ளது என்று ஜோன்ஸ் லாங்க் ஊட்டன் பாராட்டிஉள்ளார்.

விகடன் பத்திரிகையில் 13-9-1998 ஒரு தலையங்கம். ''தீர்க்கதரிசனத்துடன், நாளைய சவால்களுக்கு நாட்டைத் தயார்படுத்துவதுதான் ஆளுவோரின் இலட்சியமாகவும் கடமையாகவும் இருக்க வேண்டும். அந்த வகையில் தமிழக முதல்வர் கருணாநிதி நடத்திய தகவல் தொழில்நுட்ப தொழிலதிபர்கள் கூட்டம் மிகவும் முக்கியமானது. விப்ரோ, பெண்டாஃபோர், டாடா கன்சல்டன்சி போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட நிறுவனங்களிலிருந்து முன்னணித் தொழிலதிபர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். தகவல் தொழில்நுட்பம் வளர்ந்தால்தான் மற்ற தொழில்களும் நன்கு வளரமுடியும் என்பதை அரசு உணர்ந்து காரியத்தில் இறங்கியிருப்பது பாராட்டத்தக்கது'' என்று விகடன் பத்திரிகை தலையங்கம் மூலமாகக் குறிப்பிட்டிருக்கிறது.

இந்தத் தகவல் தொழில் நுட்ப மையத்தை இந்த அரசு தமிழகத்தில் விரிவாகச் செய்ய வேண்டும் என்பதற்காக எடுத்துள்ள முயற்சிகளைப் பற்றி எல்லாம் பலமுறை இந்த அவையிலே நான் குறிப்பிட்டிருக்கிறேன். எழுபதுகளிலே வெறும் கருத்துப் படிவமாக மாத்திரமே கருதப்பட்டிருந்த தகவல் தொழில் நுட்பம் இன்றைக்கு எங்கும் நிறைந்த பொருளாக ஆகிவிட்டது என்பதை அவை உறுப்பினர்கள் மிக நன்கு அறிவீர்கள். தொழில் வளர்ச்சியின் ஒவ்வொரு பிரிவும் தகவல் தொழில் நுட்பத்தால் பின்னிப் பிணைக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு வருகின்றது. உலகப் பொருளாதாரத்தோடு இணைந்துவிட்ட ஒன்றாகத் தகவல் தொழில் நுட்பம் உருவாகி வருகிறது. தகவல் தொழில் நுட்பம் இல்லாத எந்தத் தொழிலும் முன்னேற்றம் அடையாத பழைய தொழிலாகவே இப்பொழுது கருதப்படுகிறது.

21ஆம் நூற்றாண்டில் உலகப் பொருளாதாரத்தின் உந்து சக்தியாக தகவல் தொழில் நுட்பம் விளங்கப்போகிறது என்பதை நாம் அறிந்து வைத்துள்ளோம். அதனால்தான், தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்காகவும், அதன் பயன்கள் கிராமப் பகுதிகளிலும் ஊடுருவி, சாமானியர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காகவும், அரசு தொலைநோக்குப் பார்வையோடு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

தமிழ்நாட்டிலே ஆண்டுதோறும் படித்து வெளியே வரும் 23 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகளில், 13 ஆயிரம் பட்டதாரிகளுக்கு மேலாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் அதன் தொடர்பான கல்வியைப் பெற்று இப்பொழுது வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கை யிலான மென்பொருள் பொறியியல் வல்லுநர்கள் வேலை செய்து வருகிறார்கள். இன்றைய அளவில் தமிழகத்தில் 22 ஆயிரம் பேர்களுக்கு மேலாக மென்பொருளை வாழ்க்கைத் தொழிலாக - Software Professionals - கொண்டிருக்கிறார்கள்;

தகவல் தொழில் நுட்பத்திற்கென்றே, சென்னை தலைமைச் செயலகத்தில் தனியாக ஒரு துறை, ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் தலைமையின்கீழ் 5-10-1998 முதல் உருவாக்கப்பட்டு இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சி அடையவும், அதற்கான அணுகுமுறைகளை உருவாக்கிச் செயல்படுத்தவும், முதலமைச்சர் தலைமையிலே I.T. Task Force ஒன்று உருவாக்கப்பட்டதையும் உறுப்பினர்கள் அறிவீர்கள்.

அரசு தகவல் தொழில் நுட்பத்திற்கென்று, தனியே கொள்கை (I.T.Policy) ஒன்றை உருவாக்கி அறிவித்துள்ளது. இக் கொள்கை, தகவல் தொழில் நுட்பத் தொழில் முனைவோர் களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

பழைய மாமல்லபுரம் சாலையில் சிறுசேரி என்ற இடத்தில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய வன்பொருள் (Hardware) மற்றும் மென்பொருள் (Software) வளர்ச்சிக்கு பன்னாட்டுத் தரத்தில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை சிப்காட் நிறுவனம் உருவாக்கிக் கொண்டு வருகிறது. சென்னையில் தரமணியிலிருந்து பழைய மாமல்லபுரச் சாலை வரையிலான பகுதி, தகவல் தொழில் நுட்ப நெடுஞ்சாலையாக (I.T. Super Highway) விரைந்து முன்னேறி வருகின்றது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் சோழிங்கநல்லூரில் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் என்னும் நிறுவனம், ஆசியாவின் மிகப் பெரிய மென்பொருள் மையத்தைத் தொடங்கியுள்ளது. அதைத் தொடர்ந்து மற்ற மிகப் பெரிய நிறுவனங்களான விப்ரோ, இன்போசிஸ் மற்றும் பொலாரிஸ் ஆகியவை தங்களது மையங்களை அந்தப் பகுதியிலே நிறுவி வருகின்றன.

"வோர்ல்ட்டெல்" நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு நாம் ஆற்ற இருக்கின்ற அந்த அரும்பணியின் மூலமாக இலட்சத்து ஐம்பதாயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு தமிழகம் முழுவதும் கிடைக்கும் என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். அது, எந்த நிறுவனத்தின் சார்பாக இருந்தாலும்கூட, அதை விரைவுபடுத்தி, இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறுவதையும், தமிழகம் முழுவதும் இணைய மயமாக ஆகின்ற அந்த விஞ்ஞானப் புதுமையையும் இந்த அரசு உங்கள் ஆதரவோடு செய்து காட்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கணினிப் பயன்பாடுகளில் உலக அளவில் போதுமான தமிழ் குறியீடுகள் இல்லாத குறையைப் போக்குவதற்காகத்தான் "தமிழ்நெட் 1999" என்ற ஒரு மாநாட்டை நாம் நடத்தினோம். அதிலே உலகத்தின் பல பகுதிகளிலேயிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அரிய கருத்துக்களையெல்லாம் வழங்கினார்கள். எல்லோரும் சேர்ந்து ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டு அந்த மாநாட்டிலே தமிழ் வடிவமைப்புகள் எப்படி வெளியிடப்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அவைகளெல்லாம் இன்னும் இரண்டொரு மாதங்களிலே - அந்த வடிவமைப்புகள், அந்த இணையத்திற்கான வடிவமைப்புகள் - வெளியிடப்பட இருக்கின்றன. அதற்கு அமெரிக்காவிலுள்ள யூனிகோட் கன்சோர்டியம் என்னும் மையத்தில் தமிழ்நாடு ஒரு கூட்டு அங்கத்தினராகத் தன்னைப் பதிவு செய்து கொண்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே தமிழ் மாநிலம் மாத்திரம்தான் இப்படி அந்த யூனிகோட் கன்சோர்டியத்தோடு தன்னைப் பதிவு செய்து கொண்டிருக்கிற ஒரேயொரு மாநிலம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஜூலை மாதத்தில் முடிவான தமிழ் வடிவமைப்புகள் வெளியிடப்பட்டவுடன், யூனிகோடிற்கு ஏற்கெனவே இருக்கும் தமிழ் வடிவமைப்புகளை மாற்றி அமைப்பதற்குரிய செயற்குறிப்பு களை அரசு அனுப்பி வைக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறகு Tamil Virtual University ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முயற்சிகள் எல்லாம் செயல்முறைக்கு வரும்போது இணையம் மற்றும் தகவல் தொழில் நுட்பப் பயன்கள் அனைத்தும் தமிழகம் மாத்திரமல்ல உலகம் முழுவதுமுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் சென்றடையும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலம் முழுவதுமுள்ள 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் கணினிப் பயிற்சி பெறவும்,

ஒவ்வொரு வகுப்பிலும், ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 40 மாணவர்கள் வீதம், 1,200 பள்ளிகளில் ஆண்டு முடிவில் சற்றொப்ப 48,000 மாணவர்கள் கணினி பயின்றவர்களாக வெளியேறுவார் கள், வெளியே வருவார்கள் என்பதையும் எடுத்துக்கூறி, அதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதிலே வந்த இடைக்காலத் தடையை இந்த அவை அறியும். ஆனால் அன்றைக்கு இந்த அவையிலே நான் நடந்துகொண்டதன் காரணமாக மாத்திரமல்ல, உண்மையின் காரணமாகவும், நீதியின் காரணமாகவும் அளிக்கப்பட்ட தீர்ப்பில் நீதிபதி சொல்லி யிருக்கிறார், "மனுதாரருடைய நலனுக்காக - (அதாவது எதிர்த்து வழக்குப் போட்டார்களே, அந்த மனுதாரருடைய நலனுக்காக), இந்தத் திட்டத்தைத் தள்ளி வைக்க முடியாது. அரசின் இந்தப் பொன்னான நோக்கத்தால் (மேசையைத் தட்டும் ஒலி). 48,000 மாணவர்கள் பயிற்சி பெறுவார்கள் என்பதை இந்த நீதிமன்றம் பாராட்டுகிறது. தமிழக அரசின்மீது இந்த நீதிமன்றம் நம்பிக்கை வைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இதெல்லாம் பெருந்தன்மைக்குக் கிடைக்கின்ற பரிசுகள். தமிழக அரசின்மீது நீதிமன்றம் நம்பிக்கை வைத்திருக்கின்றது. சமூக நீதிக் காவலனாகப் பாடுபடும் அரசு, கிராமப்புற மற்றும் நடுத்தர மக்களிடையே படித்து வந்தவர்கள் நலனில் கவனம் கொள்ளும் என்று நம்பிக்கை கொள்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் நினைவுபடுத்துகிறேன்.

பல நல்ல விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில் இதையும் சொல்ல வேண்டித்தான் இருக்கிறது. காரணம் திரு. ரங்கநாதன் ஆரம்பித்து வைத்துவிட்டார். அதனால் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. கடந்த காலத்திலே தொழில் துறையிலே ஏற்பட்ட பல பின்னடைவுகள், சில முறைகேடுகள் இவைகளைப் பற்றி ஒருமுறை ஞாபகப்படுத்திக்கொள்ள, பலமுறை சொல்லியிருந்தாலும்கூட, மனிதனுக்கு மறதி அதிகம். மறந்துவிடக்கூடாது என்பதற்காக நீங்களும் ஞாபகப்படுத்திக் கொள்ள, நானும் ஞாபகப்படுத்திக்கொள்ள, (மேசையைத்

தட்டும் ஒலி) எல்லோரும் ஞாபகப்படுத்திக்கொள்ள, பொது மக்களும் ஞாபகப்படுத்திக்கொள்ள இதை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

கிரானைட் குத்தகை விடுவதிலே ஏற்பட்டது சம்பந்தமாக ஒரு வழக்கு. ஏற்கெனவே இந்த அரசு கிரானைட் குத்தகையிலே உள்ள ஊழல்களுக்காக தனி நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருக்கிறது. அந்த வழக்கிற்கான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கிடையிலே, அந்த வழக்கிலே குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் தொழில்துறை அமைச்சர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று அந்த வழக்கையே quash செய்ய வேண்டும் என்று ஒரு மனு கொடுத்தார். அந்த மனுவை விசாரித்த பிறகு, உயர்நீதிமன்ற நீதிபதி என்ன தீர்ப்பு அளித்தார் என்பதை இங்கே சுட்டிக்காட்ட நான் விரும்புகின்றேன். அந்த ஆணை எப்படிப் பிறப்பிக்கப்பட்டது? எந்த ஆணையின் அடிப்படையில் அந்தத் தவறு நடைபெற்றது? 39 என்கிற ஒரு விதி. அரசாணை எண் 97, தொழில் துறை, நாள் 8-3-1993 மூலம் முந்தைய அரசு தமிழ்நாடு சிறு கனிம விதிகளில், விதி 39 என்ற புது விதியை ஏற்படுத்தி, குவாரி குத்தகைகளை விருப்பப்பட்டவர் களுக்கெல்லாம் வழங்கியது. 1989ஆம் ஆண்டில் கழக அரசின் தொழில் துறை பிறப்பித்த ஆணையின் படி அரசுக்கு வருமானம் வர வாய்ப்புகள் இருந்தும், (கவனிக்க வேண்டும்) நாம் போட்ட ஆணையின்படி அரசுக்கு நிறைந்த வருமானம் வர வாய்ப்புகள் இருந்தும், உயர் நீதிமன்றத்திலே உரிமம் வழங்குவது குறித்த பல வழக்குகள் நிலுவையிலே இருந்தும், குத்தகைதாரர்கள் அரசு கோரும் தொகையைச் செலுத்த விருப்பம் தெரிவித்து கடிதங்கள் கொடுத்திருந்தும் - ஏலம் எடுத்த குத்தகைதாரர்கள் எல்லாம் விருப்பம் தெரிவித்து கடிதங்கள் கொடுத்திருந்தும் - வனத் துறை நிலத்தில் உரிமம் வழங்க மத்திய அரசின் முன்அனுமதி பெற வேண்டும் என்று விதிகள் இருந்தும், அந்த விதியையும் மீறி, அப்போதைய அட்வகேட் ஜெனரலும், அரசு தலைமைச் செயலாளரும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தும், வேண்டாமென்று தடுத்துக் கூறியிருந்தும், அரசுக்கு ஒரே ஒரு குத்தகை மூலமாக மட்டும் 12 கோடி ரூபாய் வருமானம் வர வாய்ப்பு உள்ளது எனக்

கோப்பிலே கருத்து, செயலாளர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தும், அவை அனைத்தையும் புறக்கணித்து, தமிழ்நாடு சிறு கனிம விதிகள் 1959-இல், புதுவிதி 39, முந்தைய அ.தி.மு.க. அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேற்கூறிய விதி 39-ன்கீழ், 9 மாவட்டங்களில் 125 கிரானைட் குத்தகைகள் 196.80 ஹெக்டேர் பரப்பில் வழங்கப் பட்டன. விதி 39 என்றால், அரசினுடைய விருப்புரிமையின்படி Nomination முறை, அதுதான் 39; இணைக்கப்பட்ட விதி. பின்னர், அதன் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 95 கோடி ரூபாய். அந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அப்போது தொழில் அமைச்சராக இருந்த திரு. சின்னசாமி, சென்னை உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார். அவரது கோரிக்கையைத் தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம், தன்னுடைய தீர்ப்பில் என்ன குறிப்பிட்டிருக்கிறது தெரியுமா?

"ஏராளமான தொகைகளை வசூல் செய்து கொண்டு குத்தகை உரிமங்கள் வழங்குவதற்காக, சுயலாபம் கருதி தமிழ்நாடு சிறு கனிம விதிகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே, முதல் தகவல் அறிக்கையைத் தள்ளுபடி செய்வதற்கு எந்தவிதமான அடிப்படையுமில்லை." மேலும் சொல்கிறார், நீதிபதி :

"The accused has granted leases to the private individuals without fixing any lease amount for granite quarry in pursuance of the conspiracy hatched between them."

"குத்தகைதாரர்களும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் இடையில் உருவாக்கப்பட்ட சதித் திட்டத்தின் காரணமாக, குத்தகைத் தொகை எதுவும் நிர்ணயம் செய்யாமல் குற்றம் சாட்டப்பட்டவர் தனி நபர்களுக்குக் குத்தகை உரிமையை வழங்கியுள்ளார்." High Court Judge சொல்கிறார். மேலும் சொல்கிறார் :

"The persons to whom the granite leases have been granted, have paid huge amounts as bribe which has been corroborated by

many of the witnesses who have also mentioned the denomination of the currency in separate slips, which also have been recovered from the house of the accused."

கரன்சி நோட்டு யார் யாருக்கு எவ்வளவு கொடுத்தோம் என்ற அந்த நம்பரோடு தனித் தனித் தாள்களில் எழுதி வைத்திருக்கிறார்களாம். இவையெல்லாம் தொழில் அமைச்சராக இருந்தவருடைய வீட்டிலேயிருந்து கிடைத்தது.

"குத்தகை உரிமம் பெற்றவர்கள் பெரும் தொகைகளை லஞ்சமாகக் கொடுத்துள்ளார்கள். குற்றம் சாட்டப்பட்டவர் களுடைய வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட துண்டுச் சீட்டுகளில் எந்தவகையான கரன்சி நோட்டுகள் கொடுக்கப்பட்டன என்று குறித்து வைத்து இருப்பதிலிருந்தும், சாட்சிகளின் வாக்கு மூலங்களிலிருந்தும் இது தெளிவாகின்றது.

அடுத்து, "Mr. Dyaneswaran in his own handwriting has written statement of accounts showing how much amount he has been receiving from the lessees as pecuniary advantage. There is over-whelming evidence against the petitioner and others."

"சுயலாபத்திற்காக எவ்வளவு தொகை குத்தகைதார்களிட மிருந்து பெறப்பட்டன என்ற விவரங்களையெல்லாம் திரு. தியானேஸ்வரன் தன்னுடைய கைப்படவே கணக்கு எழுதி வைத்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டோருக்கு எதிராக ஏராளமான சாட்சியங்கள் உள்ளன."

மேலும், "The records and circumstances indicate that the entire fraud had taken place with his full knowledge and involvement."

அதாவது, "இந்த முழு பித்தலாட்டமும் குற்றம் சாட்டப் பட்டுள்ளவரின் முழு ஈடுபாட்டோடும், அங்கீகாரத்தோடும்தான் நடைபெற்றிருக்கிறது என்று ஆவணங்களும், சூழ்நிலைகளும் சுட்டிக்காட்டுகின்றன" என்றும் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

மேலும், நீதிபதி, தன்னுடைய தீர்ப்பில் தொடர்ந்து சொல்கிறார் :

"…. the money due to the Government has been siphoned off by them and as a result of which they had pecuniary advantage to the extent of several crores."

அப்படிப்பட்ட ஒரு அரசு இருந்த நிலையெல்லாம் மாறி, இந்த அரசு இந்தத் தொழில் துறையில், உங்களுடைய அன்பான ஆதரவோடும், பொதுமக்களுடைய அன்பான ஆதரவோடும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தக் கிரானைட் தொழிலைக்கூட மேலும் ஊக்கப்படுத்த இப்போது நாம் விதிகளையெல்லாம் மாற்றி, 8-இ என்ற திருத்தம் கொண்டு வந்து, ஏலம் விடுகிற முறைகளையெல்லாம் செய்திருக்கிறோம். அதிலேகூட இன்னும் அதிகம் வருவாய் வருவதற்கு இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. நாம் இப்போது நம்முடைய பற்றாக்குறையை எல்லாம் சமாளிக்க பல வழிமுறைகளையெல்லாம் நிதிநிலை அறிக்கையினுடைய விவாதத்தின்போது, என்னுடைய பதிலுரையிலே குறிப்பிட் டிருக்கிறேன்.

கிரானைட் தொழிலை மேலும் ஊக்குவிக்க, இப்போது 'டாமின்', இடம் நிலம் இருக்கிறது அல்லவா? அந்த நிலத்திலே ஒரு பகுதியை, பொது ஏலத்திலே - டாமினே வைத்துக் கொண்டு தூங்காமல், கிடப்பிலே போடாமல், அந்த 'டாமின்' நிலத்தைக்கூட எடுத்து, அதனைப் பொது ஏலத்திலே விட்டு, அதன் மூலமாகவும் அரசு வருவாயைத் தேடலாம் என்று முயற்சித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்து, காலை முதல் இதுவரையில் அரிய கருத்துக்களைச் சொல்லி, என்னை ஊக்கப் படுத்திய எல்லா உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் உப்பளத் தொழில் என்பது ஒரு ஆபத்தான நிலையிலே இருப்பதை இங்கே

குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தில் 5,000-க்கு மேற்பட்ட ஏக்கரில் உப்பளம் நடந்து கொண்டு இருக்கிறது. பழைய அரசாங்கத்தில் 29 ரூபாய் ஒரு ஏக்கருக்கு குத்தகைத் தொகையாக இருந்த பணத்தை 429 ரூபாயாக ஆக்கியதன் மூலம், தனியார் எல்லாம் இன்று கோர்ட்களிலே ஸ்டே வாங்கி விட்டார்கள். அதே நேரத்தில் அரசாங்கம் நடத்துகின்ற அந்த உப்பளத் தொழிலுக்கு ஒன்றரை கோடி ரூபாய், அரசுக்குச் செலுத்த வேண்டிய ஒரு கட்டாயம் இருப்பதால், அந்தத் தொழில் மூடப்படக்கூடிய ஒரு அபாய நிலை இருக்கிறது. நான் ஏற்கனவே, இதைப் பற்றி நிதிநிலை அறிக்கையிலே பேசியிருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி, அந்தப் பழைய 29 ரூபாயாகவே அதை ஆக்க வேண்டும். இந்தியாவில் வேறு எங்குமே இவ்வளவு அதிகப்படியாக இல்லை. 29 ரூபாய் என்று இருந்ததை 429 ரூபாயாக ஒரு ஏக்கருக்கு குத்தகையாக ஆக்கியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பெரிய தொகையை ரத்து செய்து, அந்த உப்பளத் தொழில் நிரந்தரமாக நடைபெறுவதற்கும், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்வதற்கும் உதவுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய நல்ல கருத்தை இந்த அரசு அலட்சியப்படுத்தாது. 400 ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டிருந்தால் அது அதிகம்தான். பழைய அளவிற்கு 29 ரூபாய் என்ற அளவிற்கு குறைக்க முடியா விட்டாலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் ஒத்துக்கொள்கின்ற அளவிற்கு அதைக் குறைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உப்பளத் தொழில் மாத்திரம் அல்ல, தமிழகத்தில் அப்பளத் தொழிலும் கெடாமல் இந்த அரசு பார்த்துக் கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி).



உரை : 9 நாள் : 8.05.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெருந் தொழில்கள்' என்ற மானியத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ச. அழகிரி, திரு. ஆர். சிவராமன், திரு. கே. சுப்பராயன், திரு. தங்கம் தென்னரசு, திரு. பி. ஆர். சுந்தரம், திரு. ஜி. கே. மணி, திரு. அப்துல் லத்தீப், திரு. மோகன் கந்தசாமி ஆகியோர் தங்களுடைய அரிய கருத்துகள் பலவற்றை எடுத்துக்கூறி, 'பெருந் தொழில்கள்' என்ற தலைப்பில் இந்த மானியம் இன்றைக்கு விவாதிக்கப்பட்டாலும் கூட, இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அவரவர் தொகுதி களிலே தொடங்கப்பட வேண்டிய சிறு தொழில்கள் குறித்தும், ஏன் தீயணைப்பு நிலையங்கள் வரையில், இங்கே பேசி முடித்திருக் கிறார்கள். நான் என்னுடைய விளக்கத்தைச் சுருக்கமாக இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன்.

முதலில் நம்முடைய அழகிரி அவர்கள் "14 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; ஓர் ஆண்டுக்கு இந்து பத்திரிகை வாங்கக்கூட இந்தப் பணம் போதாது" என்று குறிப்பிட்டார்கள். உடனடியாக நான் 'இந்து' பத்திரிகை நிருவாகத்தோடு தொடர்பு கொண்டு (சிரிப்பு) "இந்து பத்திரிகையினுடைய ஆண்டுச் சந்தா எவ்வளவு" என்று கேட்டேன். 1015 ரூபாய் என்றார்கள். (பலத்த சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி). அதுதான் அதற்குப் பதில் (சிரிப்பு). இந்த 14 ஆயிரம் ரூபாய் மானியக் கோரிக்கையில்.

திரு. ச. அழகிரி : ஒருவேளை ஆயுள் சந்தா கட்டி இருப்பார்களோ? (சிரிப்பு).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஆயுள் சந்தா என்று அழகிரி சொல்கிறார். அது யாருடைய ஆயுள்? கட்டுகிறவர் களுடைய ஆயுளா, பத்திரிகையினுடைய ஆயுளா, என்பதை ஆராய வேண்டும். இந்த 14 ஆயிரம் ரூபாய் மின்சக்தித்

திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு - எல்லாமே மூலதனச் செலவுதான் - மூலதனச் செலவுக்குத்தான் இந்த 14 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மின்சக்தி திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு - ஆயிரம் ரூபாய்; தொலைத் தொடர்பு, மின்னணுவியல் குறித்த மூலதனச் செலவு ஆயிரம் ரூபாய்; நுகர்பொருள் தொழில் குறித்த மூலதனச் செலவு ஆயிரம் ரூபாய்; சர்க்கரைத் தொழில் குறித்த மூலதனச் செலவு ஆயிரம் ரூபாய்; உப்புத் தொழில் குறித்த மூலதனச் செலவு ஆயிரம் ரூபாய்; ஏனைய தொழில்கள் குறித்த மூலதனச் செலவு 5 ஆயிரம் ரூபாய்; சரிகைத் தொழில் நிறுவனம் நிதியுதவி ஆயிரம் ரூபாய்; தமிழ்நாடு தோல் தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதனம் ஆயிரம் ரூபாய். கூட்டு மின் உற்பத்தித் தளவாடங்களுக்கு ஆயிரம் ரூபாய். தன்னாட்சி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறும் திட்டத்திற்கு ஆயிரம் ரூபாய். எனவே இந்த மூலதனச் செலவுக்கு அடையாள ஒதுக்கீடு மாத்திரம்தான் செய்யப்பட்டுள்ளது. அதுதான் 14 ஆயிரம் ரூபாய் என்று குறைவாகத் தெரிந்து, அழகிரி அவர்கள் எல்லா அமைச்சர் களுக்கும் அதிக மானியம் தரப்படும்போது, அதிகத் தொகை ஒதுக்கப்படும்போது, பாவம் முதலமைச்சருக்கு மாத்திரம் 14 ஆயிரம் ரூபாய்தானா என்று பரிதாபப்பட்டதற்காக நான் நன்றி கூறிக்கொள்கிறேன். என்ன செய்வது, தாய் சிக்கனம் பிடித்துத்தான் பிள்ளைகளையெல்லாம் காப்பாற்ற வேண்டியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

மற்றொன்று, தொழில் முதலீடுகளில் தமிழ்நாடு இன்றைக்கு எந்த இடத்தில் இருக்கிறது என்ற ஒரு சர்ச்சையை நிதிநிலை அறிக்கையினுடைய விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசும் போது நண்பர் அழகிரி அவர்கள் எழுப்பி, "முதலிடத்திற்கு வந்து விட்டதாக முதலமைச்சர் சொன்னார். இப்போது அது மூன்றாவது, நான்காவது இடத்திற்குப் போய்விட்டது" என்று ஒரு புள்ளி விவரத்தைக் குறிப்பிட்டார்கள். ஆனால் அது இரண்டாவது இடம் என்ற நிலையை அடைந்து, மீண்டும் முதலிடத்தை அடையக் கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழில் முதலீடுகளில் தமிழ் நாட்டினுடைய நிலவரத்தைப் படிப்படியாகப் பார்த்தால், 1989-91 கால கட்டத்தில் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு

அப்போதைய கழக அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாக தமிழகம் இந்தியாவிலே மூன்றாவது இடத்தை அடைந்திருந்தது. இது 1989-91-ல். அப்போது தி.மு.க. ஆட்சி. பிறகு, 1991-96 கால கட்டத்தில், அ.தி.மு.க. ஆட்சியின்போது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கி, ஐந்தாவது இடத்திற்கு இறங்கிவிட்டது. 1996-ல் கழக அரசு மீண்டும் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தொழில் வளர்ச்சிக்குத் தொடர்நிலை அளித்துவரும் ஆக்கம், ஊக்கம் ஆகியவற்றின் காரணமாக, தமிழகம் தொழில் வளர்ச்சியிலே மீண்டும் தலை நிமிர்ந்து முன்னணியிலே இருந்து வருகிறது. அண்மையில் 22-4-200 தேதியிட்ட இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் C.M.I.E. - Centre for Monitoring Indian Economy, இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை யெல்லாம் தொகுத்து அறிக்கை ஒன்று வெளியிட்டது, 22-4-2000 அன்று. அதன் விவரங்களை இங்கே தர விரும்புகின்றேன். தமிழ் நாடு 1,14,893 கோடி ரூபாய். இது ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக் கத்தில் உள்ள இந்தியாவின் மொத்த முதலீட்டில் 10.89 சதவீதம் ஆகும். மராட்டியம், 1,55,326 கோடி ரூபாய், குஜராத் 1,41,207 கோடி ரூபாய், ஆந்திரா 1,33,587 கோடி ரூபாய், ஓரிசா 1,14,070 கோடி ரூபாய், கர்நாடகம் 93,754 கோடி ரூபாய். இந்தப் புள்ளிவிவரங்களின்படி மராட்டிய மாநிலம் முதலிடத்திலும், தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும் இருக்கின்றன. அதாவது, வித்தயாசம் 1.04 சதவீதம்தான்.

ஆனால், அதில் குறிப்பிட வேண்டிய அம்சம் என்ன வென்றால், இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் - C.M.I.E.-அதாவது Centre for Monitoring Indian Econmy முதலீடு களைப் பற்றிய புள்ளிவிவரங்களைத் தொகுக்கும்போது, தமிழ் நாட்டில் சேர்த்திருக்க வேண்டிய 15 ஆயிரம் கோடி ரூபாயை- விவரங்களைச் சொல்ல வேண்டுமானால் அந்த 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கு நெய்வேலி மூன்றாவது சுரங்கம் வெட்டுவதற்கான 5,500 கோடி ரூபாய் முதலீடு, நெய்வேலி மூன்றாவது தெர்மல் பவர் ஸ்டேஷனுக்கான 7,500 கோடி ரூபாய் முதலீடு, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டத்தின் வித்தியாச முதலீடான 2 ஆயிரம் கோடி ரூபாய் ஆகியவற்றைச் - சேர்க்காமல் விட்டுவிட்டார்கள். இந்த 15 ஆயிரம் கோடி ரூபாயையும் சேர்த்திருப்பார்களேயானால், இந்த நிலை முதல் நிலையாகவே ஆகியிருக்கும். மராட்டியம் அடுத்த நிலைக்குச் சென்றிருக்கும். இந்த 15 ஆயிரம் கோடி ரூபாயைச் சேர்க்க வேண்டுமென்று நெய்வேலி பழுப்பு நிலக்கரி

நிறுவனமும், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி நிறுவனமும், இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்திற்குக் கடிதம் எழுதி கோரிக்கை விடுத்துள்ளன. நியாயமாக இந்த 15 ஆயிரம் கோடி ரூபாயையும் நமது மாநிலத்திற்கு ஏற்பட்டுள்ள முதலீட்டோடு சேர்க்க வேண்டும். அப்படி 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டையும் சேர்த்துக் கொள்வதாகவும், 15-5-2000 அன்று C.M.I.E. எழுதியுள்ள கடிதத்திலே நமக்கு அறிவித்துள் ளார்கள். அப்படி அறிவிக்கும்போது தமிழ்நாட்டிற்கு வந்துள்ள முதலீட்டின் அளவு 1,41,893 + 15,000 ஆக மொத்தம் 1,56,893 கோடி ரூபாய் என்ற வகையில் வரும். அப்போது மராட்டிய மாநிலத்தை மிஞ்சி தமிழ்நாடு முதல் நிலைக்கு வந்துவிடும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏறத்தாழ, நான்கு ஆண்டுகளில் இந்திய அளவில் முதலீடு களிலே ஏற்பட்ட உயர்வு 2,29,721 கோடி ரூபாய். அதிலே, தமிழ் நாட்டிலே ஏற்பட்டுள்ள உயர்வு மாத்திரம் 51,243 கோடி ரூபாய் என்பது நம்முடைய சிறப்புக்குரிய ஒரு செய்தியாகும். சுமார் நான்கு ஆண்டுகளில் அகில இந்தியாவிலும் தொழில் முதலீடு களில் ஏற்பட்டுள்ள உயர்விலே, தமிழகத்தின் பங்கு 22.31 விழுக்காடு என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏற்றுமதி வளர்ச்சியிலே பார்த்தால், தமிழ்நாட்டிலே இருந்து என்னென்ன பொருட்கள் ஏற்றுமதி ஆகின்றன என்று பார்க்கும் போது handicrafts-கைவினைப்பொருட்கள், coir-கயிறு, Readymade garments-ஆயத்த ஆடைகள், Textiles-ஜவுளி, Computer Software-கணினி மென்பொருட்கள், Chemicals-இரசாயனப் பொருட்கள், Gems and Jewellery-முத்துக்கள் மற்றும் தங்க ஆபரணங்கள், Drugs-மருந்துகள், தோல் மற்றும் தோல் பொருட்கள்-Leather and Leather Products,முந்திரி மற்றும் முந்திரிப்பொருட்கள், வாசனைத் திரவியங்கள், உலோகத் தாதுக்கள், வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், காபி, டீ, புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்கள் இவை எல்லாம் ஏற்றுமதி ஆகின்றன.

ஏதோ இந்த ஆட்சி வந்து, தொழிலில், பொருளாதாரத்தில் எல்லாம் பின்னுக்குப் போய்விட்டது என்று நம்முடைய சுந்தரம் அவர்கள் இங்கே வருத்தப்பட்டோ, அல்லது ஆத்திரப்பட்டோ, அல்லது கேலிபுரியும் எண்ணத்தோடோ குறிப்பிட்டார்கள். ஒரு புள்ளிவிவரத்தை அவருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1992-93 அ.தி.மு.க. ஆட்சியில் 6,808 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் தமிழ்நாட்டிலேயிருந்து ஏற்றுமதி. 1996-97-ல் கழக ஆட்சியில் 17,802 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி. 1997-98-ல் 18,982 கோடி அளவுக்கு அது உயர்ந்துள்ளது. ஆறாயிரம் கோடி என்பது பதினெட்டு ஆயிரம் கோடி என்று உயர்ந்துள்ளது. 7-2-2000 என்று தேதியிட்ட Economic Times என்ற ஆங்கில நாளிதழில் "Exports in Tamil Nadu" என்ற தலைப்பில், "Tamil Nadu is one of the highly industrialised State of our Country and is a major contributor to the Country's exports.

Of late there is a spurt in the growth of industries like software, artificial diamonds and imitation jewellery.

Chennai has now become an important base for global software majors, as the city has the infrastructure with adequate manpower" என்று அந்த ஏடு குறிப்பிடுகிறது - Economic Times.

அதாவது, "இந்தியாவில் பெரிதும் தொழில்மயப்படுத்தப் பட்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. நாட்டின் ஏற்றுமதிக்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு மிகப் பெரியதாகும். அண்மைக்காலத்திலே மென்பொருள், செயற்கை வைரங்கள் மற்றும் imitation நகைகள் போன்ற பலதொழில்களின் வளர்ச்சி மிகக் கணிசமாக அதிகரித்துள்ளது. சென்னை, தேவையான மனித வளத்தோடு, உரிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுத் திகழ்வதால், உலகின் மிகப் பெரிய மென்பொருட்களின் முக்கிய தளமாக விளங்குகிறது" என்று 7-2-2000 அன்று வெளிவந்த Economic Times ஏடு குறிப்பிட்டுக் காட்டுகின்றது. கணினி மென்பொருட்கள் தமிழகத்திலே இருந்து எந்த அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்ற அந்தக் கணக்கைப் பார்த்தால், 1995-96-ல் 37 கோடி ரூபாய் அளவிற்குத்தான் கணினி மென்பொருள் ஏற்றுமதி ஆயிற்று. 1998-99-ல் 1246 கோடியே 16 இலட்சம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி). இந்த 1999-2000-ல்

1890 கோடி ரூபாய். இதிலே கோவையிலேயிருந்து மாத்திரம், கோயம்புத்தூரிலிருந்து மாத்திரம் மென்பொருள் ஏற்றுமதி 1996-97-லே ஒரு கோடியே 51 இலட்சம் ரூபாய். 1999-2000-லே 21 கோடியே 17 இலட்சம் ரூபாய்; கோயம்புத்தூரிலிருந்து மாத்திரம் இந்த மென்பொருள் ஏற்றுமதி;

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி என்று எடுத்துக் கொண்டால், "இண்டஸ்ட்ரியல் ஹெரால்ட்" (ஏப்ரல் 2000) என்ற ஆங்கில நாளிதழ் தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியைப் பற்றி, "Now the third largest, the Tamil Nadu economy is all set to emerge as the seond largest among the States. With a heavy concentration of vehicle and auto component production units, the capital city Chennai is rightly called the Detroit of India" என்று குறிப்பிடுகிறது. "பொருளாதார வளர்ச்சியில் மாநிலங்களுக்கு இடையே தற்போது மூன்றாவது இடத்திலுள்ள தமிழ்நாடு, இரண்டாவது இடத்தை அடையும். வாகன உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஏராளமாக அமைந்துள்ளதால் சென்னை மாநகரம் இந்தியாவின் டெட்ராய்ட் என்று பொருத்தமாக அழைக்கப்படுகிறது" என்று இண்டஸ்ட்ரியல் ஹெரால்ட் மிக அழகாகக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. டெட்ராய்ட் என்பது அமெரிக்காவில் மிக்சிகன் மாகாணத்திலே உள்ள ஒரு நகரம். அங்கேதான் ஹென்றி போர்டு 1908ஆம் ஆண்டு தனது Ford நிறுவனத்தை உருவாக்கினார். உலகத்தின் மிகப் பெரிய ராட்சச கார் நிறுவனங்கள் Auto Giants என்று சொல்லக்கூடிய ஜெனரல் மோட்டார்ஸ், போர்டு மோட்டார்ஸ், கிறிஸ்ட்லர் ஆகிய மூன்றும் டெட்ராய்ட் நகரில்தான் உள்ளன. அந்த நகரத்தோடு ஒப்பிட்டு சென்னை இன்றைக்கு முன்னேறி வருகிறது என்று இந்த ஏடு குறிப்பிட்டு இருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே ஞாபகப் படுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்று உலகத்திலேயே தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சிதான் பிரதானமாக விளங்குகின்றது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், எழுபதுகளில் வெறும் கருத்துப் படிவமாக

மாத்திரமே இருந்த தகவல் தொழில் நுட்பம், இன்று எங்கும் நிறைந்த பொருளாக ஆகிவிட்டு இருக்கின்றது. மானுட சமுதாயத்தின் சகல துறைகளும் தொழில் வளர்ச்சியின் ஒவ்வொரு பிரிவும் தகவல் தொழில்நுட்பத்தால், குறிப்பாக "e" என்ற ஒரெழுத்து மந்திரத்தால்தான் பின்னிப் பிணைக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது. உதாரணமாக,

e-Mail. e-Commerce, e-Medicine, e-Value, e-biz. e-biz என்றால் e-business--, e-Stock, e-Education -என இப்படி"e" என்பது சொல்வதற்கு சாதாரண பொருளாக இருந்தாலும்கூட இந்த "e" தான் இன்றைக்கு உலகத்திலே பிரதானமாக எலக்ட்ரானிக் என்கின்ற அளவிற்கு எல்லா இடத்திலும் எங்கும் நிறைந்த நாதமாகப் பரவிக் கிடக்கின்றது.

செவிக்கும் கண்ணுக்கும் உலகத்தையே காட்டுகின்ற Internet-ல் இப்போது கண்ணால் பார்க்கிறோம்; காதால் கேட்கிறோம்; இது Internet-னுடைய பயனாக இன்றைக்கு இருக்கிறது. இன்னும் எதிர்காலத்தில் மணத்தைக்கூட நுகரக்கூடிய அளவுக்கு internet வளரப் போகிறது என்றெல்லாம் சொல் கின்றார்கள். அந்த அளவுக்கு விஞ்ஞான வளர்ச்சியிலே உலகம் முன்னேறிக்கொண்டு இருக்கிறபொழுது, அதோடு சேர்ந்து போட்டியிடக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும். அதற்கு இந்தியாவிலே இன்றைக்கு தமிழ்நாடுதான் முதலிடத்தைப் பெற்று இருக்கிறது என்று (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் பாராட்டுகிறார்கள்; எல்லா ஏடுகளும் புகழ்ந்து எழுதுகின்றன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான், ஒவ்வோர் ஆண்டும் தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொடர்பான கல்வியைப் பெற்று வெளியே வரும் பொறியியல் பட்டதாரி களினுடைய எண்ணிக்கை மிகவும் அதிகம். தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் படித்து வெளியே வரும் 23 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகளில், 13 ஆயிரம் பட்டதாரிகளுக்கு மேலாக தவகல் தொழில் நுட்பம் மற்றும் தொடர்பான கல்வியைப் பெற்று வெளியே வருகின்றார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கையிலான மென்பொருள் பொறியியல் வல்லுநர்கள்

வேலை செய்து வருகிறாகள். இன்றைய அளவில் தமிழகத்தில் 22 ஆயிரம் பேர்களுக்கு மேலாக மென்பொருள் நிபுணர்கள் Software Professionals பணியாற்றி வருகின்றார்கள். 1998 அக்டோபர் முதல் 1999 செப்டம்பர் வரையில் - இந்த ஒரு புள்ளிவிவரத்தை மாத்திரம் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 1998 அக்டோபர் முதல் 1999 செப்டபம் வரையில் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் 21,371 பேர்களுக்கு விசா வழங்கி உள்ளது; சென்னையில் உள்ள தூதரகம் 21 ஆயிரத்து சொச்சம் பேர்களுக்கு வழங்கி உள்ளது. இதே கால கட்டத்தில் மும்பை தூதரகத்தில் 9734 விசாக்கள்தான் வழங்கப்பட்டு இருக்கின்றன. புதுடில்லி தூதரகத்தில் 5460 பேர்களுக்கும், கல்கத்தா தூதரகத்தில் 1367 பேர்களுக்கும் விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய மென்பொருள் மற்றும் பணி நிறுவனங்கள் சங்கம் - National Association of Software and Services Companies (NASSCOM) தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் எல்லாம் விரும்பித் தேர்ந்தெடுக்கும் முதல் நகரம் சென்னை (மேசையைத் தட்டும் ஒலி) என்று அறிவித்துள்ளது.

தகவல் தொழில் நுட்பத்திற்கென்றே, சென்னை, தலைமைச் செயலகத்தில் தனியே ஒரு துறை, ஐ.ஏ.ஸ். அதிகாரி தலைமையின் கீழ் 5-10-1998-இல் உருவாக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக் கிறது. முதலமைச்சரின் தலைமையில் தகவல் தொழில் நுட்பப் பணி முனைப்புக் குழு - I.T. Task Force - உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதல் முறையாக தகவல் தொழில் நுட்பத்திற்கென்று, தனியே கொள்கை - I.T. Policy - ஒன்றை உருவாக்கி, அறிவித்துள்ள அரசும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி).

27-3-1998 அன்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு தமிழக அரசு நிறுவனங்களான TIDCO, ELCOT-ம் இணைந்து 340 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் டைடல் மென்பொருள் பூங்காவை தரமணியில் உருவாக்கி வருகிறது. TIDEL Park - அதைத்தான் நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். கலைஞருடைய கேமரா வெளிச்சமான இடங்களுக்குத்தான்

போய்க் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்தக் கேமிராவில் இருக்கிற அதிசயம் என்னவென்றால், இதில் ஒரு லைட்டும் இருக்கிறது. இந்தக் கேமிரா கழலும்போது இருட்டான இடங்களையும் வெளிச்சமாக்கும். அப்படிப்பட்ட அதிசயமான கேமரா என்பதை நண்பர் சுப்பராயன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

டிட்கோவும், எல்காட்டும் இணைந்து 340 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 8 ஏக்கர் பரப்பளவு 12 இலட்சத்து 80 ஆயிரம் சதுர அடி கட்டடம் கொண்ட 14 தளங்கள் - அமைக்கப்படுகின்றன. இந்த டைடல் பூங்காவிற்கு 21-8-1998 அன்று நான் அடிக்கல் நாட்டினேன். இந்தப் பூங்காவில் தரை வழியாகவும், செயற்கைக் கோள் வழியாகவும், நுண்ணலைகள் வழியாகவும் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்கு ஏற்ப இக்கட்டடத்தின் மேல் தளத்தில் V.S.N.L., DoT ஆகிய நிறுவனங்கள் பிரத்தியேகமான முறையில் வசதிகளை உருவாக்கி வருகின்றன. இந்தப் பூங்காவிற்கு 6 ஆயிரம் டன் திறன் கொண்ட குளிர்பதன வசதிகள் உருவாக்கப் பட்டு வருகின்றன. இங்கு அமையும் Thermal Energy Storage System உலகிலேயே மூன்றாவது பெரிய சிஸ்டம் ஆகும். ஏற்கெனவே பிரான்ஸ் நாட்டில் ஒன்றும், ஜப்பான் நாட்டில் ஒன்றும் பெரிய அளவில் பயன்பாட்டில் உள்ளன. இவை மட்டுமின்றி உலகத் தரத்திலான நவீனமயமாக்கப்பட்ட ஏராளமான வசதிகள் இந்தப் பூங்காவில் அமைந்துள்ளன. ஹைதராபாத் மற்றும் பொங்களூரில் உள்ள மென்பொருள் பூங்காக்களைவிட - அங்கேயிருப்பவை இரண்டும் பெரிய மென்பொருள் பூங்காக்கள் அவற்றைவிட இது மிகப் பெரியது. இதுவரை பூங்காவின் 60 சதவீத இடம் உலகில் பிரசித்தி பெற்ற மென்பொருள் நிறுவனங் களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. வரும் ஜூலை மாதம் 4-ந் தேதியன்று இந்த மென்பொருள் பூங்காவை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் திறந்து வைக்க இருக்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டிடன் முதலாவது Venture Capital Fund அதாவது தமிழ்நாடு மென்பொருள் நிதி என்ற ஒன்றை டிட்கோ நிறுவனம் தொடங்கி, இதுவரை நான்கு மென்பொருள் தொழில் முனை வோருக்கு எட்டு கோடி ரூபாய் முதலீட்டுதவியை வழங்கியுள்ளது.

பழைய மாமல்லபுரம் சாலையில் சிறுசேரி என்ற இடத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் மிகப் பெரிய வன்பொருள் மற்றும் மென் பொருள் வளர்ச்சிக்குப் பன்னாட்டுத் தரத்தில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை சிப்காட் சிறுவனம் உருவாக்கி வருகின்றது.

சோழிங்கநல்லூரில் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் என்னும் நிறுவனம், ஆசியாவின் மிகப் பெரிய மென்பொருள் மையத்தைத் தொடங்கியுள்ளது. அதைத் தொடர்ந்து மற்ற மிகப் பெரிய நிறுவனங்களான விப்ரோ, இன்போசிஸ் மற்றும் போலாரிஸ் ஆகிய நிறுவனங்களும் தங்களது மையங்களை இந்தப் பகுதிகளில் நிறுவி உள்ளன.

தமிழக அரசு 'தமிழ்நெட் 1999' என்ற உலகத் தமிழ் இணைக் கருத்தரங்க மாநாட்டை சென்னையில் நடத்தியது. அதையொட்டி, தமிழ் விசைப் பலகையும், தமிழ்க் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டன.

அமெரிக்காவிலுள்ள யூனிக்கோட் கன்சோர்டியம் எனும் மையத்தில் தமிழ்நாடு, கூட்டு அங்கத்தினராகப் பதிவு செய்து கொண்டுள்ளது. இதில் அங்கத்தினராகும் முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் Tamil Virtual University - டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் உள்ள 1,200 மேல் நிலைப் பள்ளி களிலும் - கடந்த ஆண்டு 600 பள்ளிகள், இந்த ஆண்டு கல்வித் துறையினுடைய முயற்சியினால் மேலும் 600 பள்ளிகள் - 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் தொடங்கப் பட்டுவிட்டது. இத்திட்டத்தினை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கை 23-4-1999 அன்று தள்ளுபடி செய்தது உயர்நீதிமன்றம். அப்போது உயர்நீதிமன்றம் சொன்னது - தள்ளுபடி செய்துவிட்டு தீர்ப்பிலே உயர்நீதிமன்றம் சொன்னது - 'அரசின் இந்தப் பொன்னான நோக்கத்தால், அடுத்த ஆண்டு 48 ஆயிரம் மாணவர்கள் பயிற்சி பெறுவார்கள் என்பதை இந்த நீதிமன்றம் பாராட்டுகிறது. தமிழக அரசின்மீது இந்த நீதிமன்றம்

நம்பிக்கை வைத்திருக்கிறது. சமூக நீதிக் காவலனாகப் பாடுபடும் இந்த அரசு, கிராமப்புற மற்றும் நடுத்தர மக்களிடையே, படித்து வந்தவர்களின் நலனில் கவனம் கொள்ளும் என்று நம்பிக்கை கொள்கிறது' என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழில் ஆராய்ச்சியை ஊக்குவிக்க தமிழ் இணைய ஆய்வு மையம் ஒன்று டாக்டர் ஆனந்த் கிருஷ்ணன் அவர்களின் தலைமையில் அமைக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 1996 மே மாதத்திற்கு முன்பு வரை 34 மென் பொருள் நிறுவனங்களே இருந்தன. கழக அரசு பொறுப் பேற்றதற்குப் பிறகு இதுவரை 562 மென்பொருள் நிறுவனங்கள் தமிழகத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோவையிலே - சிறப்பாக கோவையைச் சொல்ல வேண்டுமானால் - 1995-96-லே நான்கே நான்கு மென்பொருள் நிறுவனங்கள்தான் இருந்தன. இன்றைக்கு கோவையிலே மாத்திரம் 58 மென்பொருள் நிறுவனங்கள் ஏற்படுத் தப்பட்டுள்ளன. அதுமாத்திரமல்ல, ஹாலிவுட்டில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்குத் தேவையான மென்பொருட்களில் பெரும்பாலானவை, சென்னையிலுள்ள மென்பொருள் நிறுவனங் களில்தான் தயாரித்து அனுப்பப்படுகின்றன என்ற இந்த மகிழ்ச்சியான செய்தியையும் இந்த அவைக்கு நான் கவனமூட்ட விரும்புகிறேன்.

'வேர்ல்ட் டெல்' நிறுவனம் இம்மாநிலம் முழுவதிலும் 13,000 சமுதாய இணைய மையங்களாக அமைப்பதற்கான பணியைத் தொடங்கிவிட்டது. அதன் மூலமாக, சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்குப் பரவலாக வேலைவாய்ப்பும் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது.

பிப்ரவரி 5 ஆம் தேதி, 11 ஆம் தேதி இரண்டு தேதியிட்ட Economic and Political Weekly பத்திரிகையில் வெளிவந்துள்ள Raising Global Competitiveness of Tamil Nadu's IT Industry என்ற கட்டுரையில் நிருபம் பாஜ்பாய், நவி ரட்ஜவ் ஆகியோர் எழுதியுள்ள கட்டுரையில்,

"தமிழ்நாடு பெரிய அளவில் திறன் வாய்ந்த மனித வளத்தைக் கொண்டுள்ளது. அதனால், இந்தியாவில் தமிழ்நாடு

Intellectual Power House" என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இந்த மாதிரியான பலமும், உலகளாவிய கண்ணோட்டமும் முதலீட்டாளர்களுக்கு இசைவான நிர்வாகமும் சேர்ந்து இந்தியாவில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்திடக்கூடிய முன்னணி மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்து வருகிறது. தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பத்தில் வேகமான முன்னேற்றத்தை உருவாக்கி வருகிறது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தகவல் தொழில் நுட்பத்தை அடிப்படை யுத்தியாக தமிழ்நாடு அரசு தேர்ந்தெடுத்துள்ளது. வேகமான தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்குத் தேவையான சூழலை உருவாக்குவதில் தமிழ்நாடு அரசு தன்னுடைய முயற்சிகளைப் பன்மடங்கு பெருக்கியுள்ளது. தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் அண்மைக் காலங்களில் மிகவும் நேர்த்தியாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி அதன் அண்டை மாநிலங்களைவிட வேகமாக முன்னேறி வருகிறது. மல்டிமீடியா மென்பொருள் வளர்ச்சியிலும் மிக முக்கியமான இடமாக சென்னை வளர்ந்து வருகிறது. தமிழ்நாடு வளர்ந்து வருகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறது. இப்படி பத்திரிகைகள் அனைத்தும் பாராட்டக்கூடிய அளவிற்கு, உலகத்திலே உள்ள பல்வேறு நாடுகளுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவிற்கு இந்தியாவிலே, குறிப்பாக தமிழகத்திலே தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம் இன்றைக்கு முகிழ்த்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த உரையின் ஒரு கட்டமாகத் தொடங்கப்பட இருக்கின்ற தொழில் நிறுவனங்கள் பற்றி இந்த அவைக்குச் சில குறிப்புகளைத் தர விரும்புகிறேன்.

சென்னைக்கு அருகே உள்ள நாவலூரில் உருவாக்கப் பட்டுள்ளது போலாரிஸ் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா. இதில் ஆயிரத்திற்கும் மேலான மென்பொருள் வல்லுநர்கள் பணி புரிவார்கள். போலாரிஸ் நிறுவனம் இந்தியாவிலுள்ள 15 முன்னணி மென்பொருள் நிறுவனங்களில் ஒன்று. இந்த மென்பொருள் பூங்காவை 24-5-2000 அன்று நான் திறந்து வைக்க இருக்கிறேன். இங்கே ஆயிரத்திற்கும் மேலானவர்கள் பணிபுரிவார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

போலாரிஸ் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்கு நருமான திரு. அருண் ஜெயின் 2000 ஏப்ரல் 20 ஆம் தேதி எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் : "I spent for 30 years of my life in Delhi and decided to set up Polaris in Chennai with the Management team because I like the environment and ethical values prevailing in the State of Tamil Nadu. With the support of State Government and people of the State, we are able to grow at a pace of more then 100% per year. I admire your leadership, which is giving this conducive environment for companies to flourish in the State of Tamil Nadu.

அதைப்போலவே மறைமலை நகரில் தமிழ்நாடு அரசு நிறுவனமான TIDCO மத்திய அரசு நிறுவனமான TCIL மற்றும் ஜப்பான் நாட்டின் ஃப்யுஜிகூரா நிறுவனம் ஆகியவை இணைந்து மிக நவீனமான Optic Fibre Telecom Cables உற்பத்தி செய்யும் தொழிற்சாலை 28 கோடி ரூபாய் செலவிலே நிறுவப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையை 26-5-2000 அன்று நான் தொடங்கி வைக்கவிரும்புகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து 2,800 ஏக்கர் பரப்பளவில், 110 கோடி ரூபாய் செலவில் சிப்காட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளது பெருந்துறை வளர்ச்சி மையம் - Perundurai Growth Centre - இந்த மையத்தில் ஈரோடு மஞ்சள் வளாகமும் அமைந்துள்ளது. இந்த மையத்தையும், மஞ்சள் வளாகத்தையும் ஜூலை 1 ஆம் தேதி அன்று காலையிலே நான் திறந்து வைக்கிறேன் என்பதைக் குறிப்பாக நம்முடைய பெரியசாமி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு பெரியசாமிக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலில் கூறியபடி சென்னையில் 340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் டைடல் மென்பொருள் பூங்கா ஜூலை 4 அன்று திறந்து வைக்கப்பட இருக்கிறது என்பதை முன்பே குறிப்பிட்டு இருக்கின்றேன். தொடங்கப்படும் அந்த நாள்,

அந்த 4 ஆம் தேதி அன்று உலகப்புகழ் பெற்ற 28 நிறுவனங்கள் அங்கே தங்கள் மென்பொருள் தயாரிப்பைத் தொடங்கிட இருக்கின்றன. அந்தத் திட்டத்தை இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

டிட்கோவும், டாக்டர் ஏ.வி.கே. ரெட்டி என்னும் அமெரிக்க வாழ் இந்தியரும் இணைந்து திருப்பெரும்புதூர் சிப்காட் வளாகத்தில் 27 கோடி ரூபாய் செலவில் Condoms உற்பத்தி செய்யும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட Technical Products தொழிற்சாலை ஜூலைத் திங்களில் தொடங்கப் படவுள்ளது.

கும்மிடிப்பூண்டியில் 19.90 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது, ஏற்றுமதித் தொழில் மேம்பாட்டுப் பூங்கா- Export Promotion Industrial Park - இந்தப் பூங்கா அமைப்பதில் மத்திய அரசின் வர்த்தக அமைச்சகமும் பங்கெடுத்துள்ளது. ஜூலைத் திங்களில் தொடங்கப்படவுள்ள தொழிற்சாலைகளில் இதுவும் ஒன்றாகும்.

திருப்பெரும்புதூரில் 500 ஏக்கர் பரப்பளவில் 202 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள சிப்காட் தொழில் பூங்காவும் ஜூலைத் திங்களில் தொடங்கப்படவுள்ளது.

தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு மைய சக்தியாக விளங்கும் நாங்குநேரி உயர் தொழில் நுட்பப் பூங்கா மொத்தம் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அமைகிறது. டிட்கோவும், இரண்டு அமெரிக்க நிறுவனங்களும் இணைந்து இந்தப் பூங்காவை உருவாக்கி வருகின்றன. இந்த உயர் தொழில் நுட்பப் பூங்கா, மத்திய அரசின் சமீபத்திய ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையின் சிறப்புப் பொருளாதாரப் பகுதியாக - Special Economic Zone - அறிவிக்கப்பட்டுள்ளது. அதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் இங்கே சொன்னார்கள். இப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் ஆரம்பித்து என்ன பயன் என்று சொன்னார்கள். நம்முடைய மோகன் கந்தசாமி அவர்கள் பேசும்போது கூட "பெரிய தொழில்களை ஆரம்பிக்கிறீர்கள். சிறிய தொழில்கள் எல்லாம் என்ன ஆயிற்று" என்று கேட்டார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், இன்று நாம் விவாதித்துக்

கொண்டிருக்கிற மானியமே, பெரும் தொழில்கள் பற்றிய மானியம் தான். இதிலே "சிறு தொழில்கள் என்ன ஆயிற்று" என்று அவர்கள் கேட்டார்கள். சிறுதொழில்களைப் பற்றியும் இந்த அரசு கவலைப் பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. "சில தொழில்கள் செத்து விட்டனவே, மூடப்பட்டுவிட்டனவே" நம்முடைய சுப்பராயன் அவருக்கே உரிய அந்த நவீன பாஷையில் அல்லது கரடு முரடான பாஷையில் "பிறப்பைச் சொல்லுகிறீர்கள், இறப்பைச் சொல்லவில்லையே" என்று சொன்னார்கள். என்ன செய்வது? ஒரு வீடு என்று இருந்தால், அங்கே இறந்தவர்களும் இருப்பார்கள், பிறப்பவர்களும் இருந்துகொண்டுதான் இருப்பார்கள், அது சகஜம், இயற்கை. இரண்டு கிழங்கட்டை இருந்தால் செத்துப் போய்விடும். அதுமாதிரி நலிந்த தொழில்கள் இருந்தால் அவை செத்துப்போய் விடும். புதுத் தொழில்கள் வந்தால் அதைப் பாராட்டி கண்ணே, மணியே என்று கொஞ்ச வேண்டும். அப்படிக் கொஞ்ச வேண்டு மென்றுதான் நான் சுப்பராயனைக் கேட்டுக்கொள்கிறேன். அவர் நாங்குநேரியைப் பற்றிச் சொன்னார். அங்கே சுமார் 9,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 55,000 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கும். வெளிநாட்டு முதலீடு சுமார் 8,000 கோடி நாங்குநேரிக்கு வரும். இங்கே நிறுவப்படும் தொழில் நிறுவனங்கள் மூலம் நம் நாட்டிலே உள்ள மற்ற நிறுவனங்களும் ஒப்பந்த அடிப்படையில் பணி எடுத்துச் செய்யலாம். தொழில் நுட்பம் உயரும். தூத்துக்குடி துறைமுக உபயோகம் அதிகரிப்பதால் அதன் விரிவாக்கம் நடைபெற வழிவகுக்கும். அயல்நாட்டு முதலீடுகளை மிகவும் பெருக்குகின்ற நடைமுறை இடையூறுகள் இந்தத் திட்டத்தில் அறவே களையப்படும். இந்த Special Economic Zone-ல் அந்த நிலைமை எல்லாம் அறவே களையப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஜூலைத் திங்களில் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது இந்த நாங்குநேரி பூங்கா.

மகளிர்கான உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா 6.70 கோடி ரூபாய் முதலீட்டில் கேளம்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 1000 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய பூங்கா வரும் ஆகஸ்ட் மாதத்திலே தொடங்கப்படும்.

Tanflora Infrastructure Park; 24.85 கோடி ரூபாய் முதலீட்டில் மலரைப் பதப்படுத்தும் தொழில் பூங்கா ஒன்று

ஒசூரில் 220 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படுகிறது. இது 2000 ஆண்டு செப்டம்பர் மாதத்தில் செயல்படத் தொடங்கும்.

இஃதன்னியில் சென்னை வர்த்தக மையம்; தமிழ்நாடு அரசு, (TIDCO) ஆகியவை இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தோடு (ITPO) இணைந்து கண்காட்சி மற்றும் மாநாட்டுக் கூடத்துடன் கூடிய வர்த்ததக மையம் ஒன்றினை நந்தம்பாக்கத்தில் அமைக்கின்றன. தமிழ்நாடு அரசும், டிட்கோ நிறுவனமும் இதற்காக அனைத்து வசதிகளுடன் 20 ஏக்கர் நிலத்தினை வழங்கியுள்ளது, இவ்வளாகம் 20.000 சதுர மீட்டடர் பரப்பளவில் அணைத்துக் கட்டமைப்பு வசதிகளுடனும், சாதனங்களுடனும் அமைய இருக்கிறது. முதல் கட்டத்தில் 5000 சதுர மீட்டர் பரப்புடைய கட்டடம் கட்டப்படும். இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் மிகப் பெரிய சர்வதேசக் கண்காட்சியும், ஆண்டுதோறும் நடைபெறும். இந்திய சர்வதேச தோல்பொருள் கண்காட்சியும் இந்த வளாகத்தில் நடத்தப்படும். இவ்வளாகத்திற்கு மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் 30-1-2000 அன்று அடிக்கல் நாட்டியுள்ளார். 2000 நவம்பரில் திறப்பு விழா நடைபெறும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக முக்கியமான இன்னொன்று; இப்போது இந்தத் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானப் புதுமைக்கு இடையே Bio-Technology என்ற அந்தத் தொழில் பற்றியும் - உயிரியல் தொழில் நுட்பத்தைப் பற்றியும் - தமிழக அரசு இன்றைக்குக் கவலை கொண்டிருக்கிறது, உயிரியல் தொழில் நுட்பத் தொழில் மண்டலம் ஒன்றை நிறுவிட TIDCO மூலமாக நாம் திட்டமிட்டிருக்கிறோம். இதற்காக 20 கோடி ரூபாயில் உயிரியல் தொழில் நுட்பவியல் ஊக்க மூலதன நிதி ஒன்றை உருவாக்கவும் உத்தேசித்திருக்கிறோம். உயிரியல் தொழில் நுட்பத் தொழில்களைத் தொடங்க முன்வருவோருக்கு இந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் நிதியுதவியும் வழங்கப்பட விருக்கிறது.

இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்தில் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனம் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்தர மோட்டார் ஸ்பிரிட், அதிவேகப் பயணத்திற்கு

உகந்த டீசல் ஆகியவற்றின் விற்பனை மையத்தினை அமைத்து வருகிறது. இம்மையம் டிசம்பர் மாதம் முதல் செயல்படத் தொடங்கும்.

ப்ராக்சைர் இந்தியா பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலை 50 கோடி ரூபாய் முதலீட்டில் திருப்பெரும்புதூர் தொழில் வளாகத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை, தொழிற்சாலைகளுக்கான வாயுக்களை - industrial gases - தயாரித்து வழங்கும். இத்தொழிற்சாலையும் டிசம்பர் மாதம் முதலே செயல்படத் தொடங்கும்.

செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை; இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்தில் பிரெஞ்சு நாட்டுத் தொழில்நுட்பத்துடன் 480 கோடி ரூபாய் செலவில் முதற்கட்டமாக அமைக்கப்பட்டுள்ள செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை சோதனை உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. ஜூன் மாதத்திற்குள் வர்த்தக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கிவிடும். இதன் மூலம் 450 பேர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். அங்கு இரண்டாம் கட்டமாக, 3 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் டோலமைட் பொருட்கள் உற்பத்திக்கான தொழிற்சாலையும் இந்த ஆண்டிலேயே உற்பத்தியைத் தொடங்கவுள்ளது.

கடலூர் மாவட்டம் திருச்சோபுரம் கிராமத்தில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பென்னார் ரிபைனரீஸ் லிமிடெட் கம்பெனியின் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை 3,200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. 500 ஏக்கர் நிலப் பரப்பில் அமையும் இத்தொழிற்சாலை 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் செயல்படத் தொடங்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தருமபுரி மாவட்டத்தில் 432 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முற்றிலும் நூறு சதவிகிதம் ஏற்றுமதி செய்யக்கூடிய ஒருங்கிணைந்த ஜவுளி ஆலை ஒன்றினை அமைத்திட TIDCO நிறுவனம், திருவாளர்கள் வாசவி தொழில் குழுமத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. மேலும், இத்திட்டத்தினைச் செயல் படுத்தும் பணியில், ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளில் உள்ள

பெரிய நிறுவனங்கள் பங்கேற்கும். வர்த்தக ரீதியான உற்பத்தியினை இந்நிறுவனம் அடுத்த ஆண்டில் தொடங்கும். (மேசையைத் தட்டும் ஒலி).

சேலம் மாவட்டம் கஞ்சமலைப் பகுதியிலும், திருவண்ணா மலை மாவட்டம் வேதியப்பன் மலை - நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் சொல்லுவார்கள் - கவிதி மலைப் பகுதிகளிலும், ஏறத்தாழ 450 மில்லியன் டன் அளவுக்குக் குறைந்த தரமுடைய இரும்புத் தாதுக்கள் கிடைக்கின்றன என்பது ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அனுபவம் வாய்ந்த எம்.எல். தஸ்தூர் அண்டு கம்பெனி மூலமாக TIDCO சாத்தியக்கூறு அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. 500 கோடி ரூபாய் முதலீட்டில், ஆண்டுக்கு 2 மில்லியன் டன் இரும்புத் தாதுக்களை கஞ்சமலைப் பகுதியிலும், ஒரு மில்லியன் டன் இரும்புத் தாதுக்களை திருவண்ணாமலைப் பகுதியிலும் தோண்டி எடுத்தல், இரும்புத் தாதுக்களை 35 விழுக்காட்டிலிருந்து 67 விழுக்காடு அளவிற்கு வீரியமுள்ளதாக ஆக்குதல்; இந்த இரும்புத் தாதுக்களைப் பயன் படுத்தி, சேலத்தில் ஆண்டுக்கு ஒரு மில்லியன் டன் இரும்புத் துண்டங்களை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்தல் ஆகிய திட்டங்களை TIDCO நிறைவேற்றிட உள்ளது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே, 80 கோடி ரூபாய் முதலீட்டில் நர்மதா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஒரு நவீன ஆடை தயாரிப்புப் பிரிவினை அமைத்திட TIDCO திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒரு நாளில் கலை நுணுக்கத்துடன் கூடிய 8,000 கிலோ பின்னலாடைகளையும், நெய்யப்பட்ட 70,000 மீட்டர் ஆடைகளையும் உற்பத்தி செய்வதுடன், 4,500 கிலோ எடையுள்ள நூல்களுக்குச் சாயம் ஏற்றும் நவீன வசதிகளைக் கொண்டதாகவும் இப்பிரிவு அமையும்; இத்துடன் ஆயத்த ஆடை தயாரிக்கும் பிரிவு ஒன்றும் இவ்வளாகத்திலே அமையும். இதற்காக, 40 கோடி ரூபாய் மதிப்புடைய இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படும். முதல் ஐந்தாண்டுகளில் 700 கோடி ரூபாய் மதிப்பிலான ஆடைகளை இந்நிறுவனம் ஏற்றுமதி செய்யும். இத்திட்டத்தின் முழுமையான உற்பத்தி 2001 மார்ச் மாதத்திற்குள் தொடங்கும்.

நாட்டிலேயே உயிரியல் தொழில்நுட்பத் தொழில் மண்டலத் தினை உருவாக்கிச் செயல்படுத்தும் - நான் முதலிலே குறிப்பிட்ட படி - முதல் மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). உலகில் இத்துறையில் முன்னணி வகிக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு நிறுவனம் இம்மண்டலத்தை வழி நடத்தும். உயிரியல் தொழில்நுட்பத்தில் தமிழகத்தை ஒரு முன்னணி மாநிலமாக உருவாக்கும் நோக்கத்தில் அரசு இந்த மண்டலத்தை அமைக்கிறது.

உயிரியல் தொழில்நுட்பத் துறையின் பல்வேறு பலன் களைக் கருத்தில் கொண்டு, ஒரு முன்னோடி உயிரியல் தொழில் நுட்பக் கொள்கை உருவாக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் 24-3-2001 அன்று நான் குறிப்பிட்டிருந்தேன். அதன்படி, அந்தக் கொள்கையை உருவாக்க வேளாண்துறை விஞ்ஞானி டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் தலைமையில், மத்திய அரசு முன்னாள் உயிரியல் தொழில் நுட்பத்துறைச் செயலாளர் டாக்டர் எஸ். இராமச்சந்திரன், மருந்துகள் துறை ஆலோசகர் டாக்டர் எம். டி. நாயர், தனியார் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் டாக்டர் எஸ். சந்திரசேகர், மதுரை காமராசர் பல்கலைக்கழக மரபுத் துறை பொறியமைப்பு உயிரியல் தொழில்நுட்பத் துறைத் தலைவர் டாக்டர் கே. தர்மலிங்கம், அண்ணா பல்கலைக்கழக உயிரியல் தொழில் நுட்பத் துறை மையத்தின் இயக்குநர் டாக்டர் பி. காளிராஜ், ஸ்பிக் நிறுவனத்தின் உயிரியல் தொழில்நுட்பப் பகுதித் துணைத் தலைவர் டாக்டர் ஜோசப் தாமஸ், ஸ்பிக் ஆய்வக உயிரியல் தொழில்நுட்பத் துறைப் போராசிரியர் டாக்டர் குந்தளா ஜெயராமன், அரசு தொழில் துறைச் செயலாளர், டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் ஆகியோரைக் கொண்டு வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மூன்று மாத காலத்தில் அரசுக்கு அறிக்கையை அளிக்கும். அதனடிப்படையில், தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை உருவாக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

இவ்வாறு சென்னையிலும், அதைச் சுற்றியுள்ள பகுதி களிலும் மாத்திரமல்லாமல், திருப்பெரும்புதூரிலும், திருவண்ணா

மலையிலும், சேலத்திலும், தருமபுரியிலும், கோவையிலும், ஈரோட்டிலும், நாங்குநேரியிலும் என்று தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்கி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க நாம் முடிவு செய்துள்ளோம். அந்தப் பணிகளைத் தொடர்ந்து ஆர்வத்தோடு வேகவேகமாக நடத்திக் கொண்டு வருகின்றோம். விரைவிலே இங்கே குறிப்பிட்டவாறு அந்த நாட்களிலே இவையெல்லாம் தொடங்கி, பணிகளை ஆற்றும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள். ராசிபுரம் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்கின்ற வருத்தத்தோடு இருக்கிறார். அந்த வருத்தத்தில், அவருக்கு ஏற்பட்ட கோபத்தில் அரியலூரை ஒரு தாக்குத் தாக்கினார்; என்னை ஒரு தாக்குத் தாக்கினார். "எல்லாமே கொள்ளை போயிற்று" என்று சொன்னார். கொள்ளை போய்க்கொண்டிருந்த காலமெல்லாம் கொள்ளை போயிற்று. (மேசையைத் தட்டும் ஒலி). இப்பொழுது நாம் நல்ல காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்தக் கவலை நண்பர் சுந்தரம் அவர்களுக்கு இருக்கத் தேவையில்லை. சுந்தரமும், அவருடைய கட்சிக்காரர்களும், அடிக்கடி அரியலூரைப்பற்றிப் பேசுவர்கள். தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள்கூட, இன்றைக்குப் பேசவில்லை யானாலும், பல நேரங்களிலே "அரியலூர் சிமெண்ட் ஆலையை விற்றுவிடப் போகிறார்கள்" என்றெல்லாம் பேசிக் கொண்டிருக் கிறார்கள். நான் அவர்களுக்கு இந்த அவையிலே உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அரியலூர் சிமெண்ட் ஆலையை நிச்சயமாக இந்த அரசு விற்காது, விற்காது என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஏனென்றால், அதை அறிவிப்பாகச் சொல்கிறேன். அரியலூர் சிமெண்ட் ஆலையையோ அல்லது தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் எந்தப் பிரிவையுமோ, தனியார்மய மாக்கிட எந்தவிதமான நடவடிக்கையும், எந்தவிதமான முயற்சியும், எந்தவிதமான முடிவும் எந்தக் கட்டத்திலும் இந்த அரசால் எடுக்கப்படவில்லை; எடுக்கப்படமாட்டாது என்பதை மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், தினமும்

அறிக்கை வருகிறது; அம்மையாருடைய அறிக்கை. "அரியலூர் சிமெண்ட் ஆலையை விற்கப்போகிறார்; அவருடைய மருமகனுக்கே கொடுக்கப்போகிறார்; என்று தினமும் அறிக்கை வந்துகொண்டிருக்கிறது. நீங்களெல்லாம் பார்த்துப் படித்திருப் பீர்கள். விற்பதையே ஒரு பெரிய பாவம் என்று இன்றைக்குச் சொல்கிறார்களே, ரைட், பாவம்தான், நான் விற்கப் போவதில்லை. விற்றால், சுப்பராயன் ஏற்றுக்கொள்கிறாரோ, பழனிசாமி ஏற்றுக் கொள்கிறாரோ, அல்லது நம்முடைய டி. மணி ஏற்றுக் கொள்கிறாரோ, ஹேமச்சந்திரன் ஏற்றுக்கொள்கிறாரோ, இல்லையோ, மற்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ, இல்லையோ, நானே ஏற்றுக்கொள்ள மாட்டேன், அதை. ஏனென்றால், நான் ஒரு பொதுவுடைமைவாதி என்பதை நான் சொல்லியிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). தமிழ் நாட்டிலே உள்ள பொதுவுடைமைக்காரர்கள் சில பேருக்கு என்னைப் பிடிக்காததற்குக் காரணமே, இவன் போட்டிக்குப் பொதுவுடைமைவாதியாக இருக்கிறானே என்பதுதான். அதற்காகவே சில பேருக்குப் பிடிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அளவுக்கு நான் பொதுவுடைமைவாதி என்று மனதிலே கை வைத்துப் பார்த்து, எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். எனவே, இருப்பதைத் தனியார்மயமாக ஆக்குவதை, தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலையில், தனியார் மயத்தைத் வரவேற்கிற ஒரே சூழ்நிலையில், இருப்பதை, இருக்கின்ற பொதுத் துறையை, தனியார்மயமாக ஆக்கவேண்டு மென்ற நிர்ப்பந்தம் எப்போது வந்தாலும் அதை எதிர்க்கக் கூடியவன்தான் கருணாநிதி என்பதை இந்த அவையிலே மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இவர்கள் என்ன செய்தார்களாம்? இன்று, தி.மு.க. ஆட்சியிலே, "அரியலூர் சிமெண்ட் ஆலையை விற்கப் போகிறார்கள்" என்று சொல்லி, தினம் தினம் ஆருடம் கணித்துக் கொண்டு, அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்களே, இவர்கள் என்ன செய்தார்களாம்? ஜெயலலிதா அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், அரியலூர் சிமெண்ட் ஆலை மாத்திரமல்லமல், ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, மாயனூர்

சிமெண்ட் குழாய் ஆலை, ஆலங்குளம் கல்நார்த் தகட்டாலை, விருத்தாசலம் கல்நார்க் குழாய் ஆலை; ஆக மொத்தம் 'TANCEM' நிறுவனத்தையே விற்பனை செய்து, தனியார்மயமாக்க, 12-12-1994 அன்று பத்திரிகையிலே விளம்பரம் செய்யப்பட்டது. உண்டா? இல்லையா? 12-12-1994 அன்று . . . . . (குறுக்கீடு).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டது. அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்த கழகத்தின் சார்பிலே அன்றைக்குப் பெருமுயற்சி எடுத்து, அன்று நம்முடைய இன்றைய அமைச்சர், அன்றைய கழகத்தினுடைய பொருளாளர் ஆற்காடு வீராசாமி அவர்களைக் கொண்டுதான் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடரச் சொல்லி இடைக்காலத் தடையாணை வாங்கப்பட்டது அப்போதுதான். அரியலூரை மாத்திரம் அல்ல; இப்போது சொன்ன இவ்வளவு நிறுவனங் களையும் சேர்த்து விற்பதற்கு, தனியார் மயமாக்குவதற்கு எடுத்த முயற்சியை வீராசாமி அவர்களால் வழக்குப் போடப்பட்டு அதை அன்றையதினம் தடுக்க முடிந்தது. அந்த வழக்கில், அ.தி.மு.க. அரசு ஒரு Counter Affidavit போட்டார்கள். அதைப் படித்துக் காட்டுகிறேன். அவர்களோடு சேர்ந்துகொண்டு, எங்களை கிண்டல் பண்ணுகிறார் (சிரிப்பு) எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் - சேர்ந்ததைத் தப்பாகவெல்லாம் சொல்லவில்லை. அதற்காகச் சொல்லவில்லை - எண்ணிப் பாருங்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அந்த Affidavit-லே என்ன இருக்கிறது தெரியுமா? அந்த Counter Affidavit-லே "In the present situation, there is no shortage of cement in the market and the social obligation of the third respondent (TANCEM) to supply an essential commodity does not exist. As already stated the interests of the workers will be adequately protected". அதாவது, "தற்போதைய சூழ்நிலையில், சந்தைகளில் சிமெண்ட் பற்றாக்குறை இல்லை, அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதில் தமக்குள்ள சமுதாயக் கடமையை மூன்றாவது பிரதிவாதியான டான்செம் நிறைவேற்றவில்லை." - அதை மூன்றாவது பிரதிவாதியாகவே ஆக்கிவிட்டார்கள். Government நிறுவனம் அது. அதை மூன்றாவது பிரதிவாதியாக ஆக்கி - அதற்கு அக்கறை இல்லை. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், தொழிலாளர்களின் நலன்கள்

போதுமான அளவில் பாதுகாக்கப்பட்டுள்ளன'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்தது, "The Government of Tamil Nadu are not in a position to provide substantial funding due to the present financial situation and other priorities." அதாவது "தற்போதைய நிதி நிலவரம் மற்றும் பிற முன்னுரிமைகள் காரணமாக, மேலும் நிதி வழங்கும் நிலையிலே தமிழக அரசு இல்லை. அந்த ஆலைக்கு இல்லை." என்று மறுபடியும் கடைசியாச் சொல்கிறார்கள், பாருங்கள், "The Government have taken a decision that wherever possible the investment in the Public Sector Companies may be disinvested." அதாவது "பொதுத்துறை கம்பெனிப் பிரிவுகளில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எங்கெங்கு முடியுமோ, அங்கெல்லாம் திரும்பப்பெற அரசு ஒரு முடிவு செய்துள்ளது" என்று அ.தி.மு.க. அரசு கொடுத்த Affidavit-லே குறிப்பிட்டுவிட்டு, இந்த இலட்சணத்திலே எங்களைப் பார்த்து, "நீங்கள் அரியலூர் சிமெண்ட் ஆலையை விற்கப்போகிறீர்கள்" என்று சொல்வது, (மேசையத் தட்டும் ஒலி) மயிலைப் பார்த்து, ஏதோ பழித்த கதையாகத்தான் இது இருக்கிறது. நாகரிகமாகச் சொல்கிறேன். ஏதோ என்று, அந்த அளவுக்கு வேண்டுமென்றே இந்த அரசு மீது, எந்தத் துறையானாலும், அந்தத் துறையை மையப்படுத்தி, புகார் சொல்ல, புழுதி வாரித் தூற்ற அ.தி.மு.க. வின் நண்பர்கள், அதனுடைய தலைவியார் அறிக்கைகள் மூலமாகச் செய்கின்ற முயற்சிகள் எடுபடாது என்பதையும், தொழில் வளர்ச்சிக்காக இந்த அரசு. . . . . (குறுக்கீடு).

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம். இன்று தனியார் சிமெண்ட் ஆலைகள் எல்லாம் மிக நவீனமான இயந்திரங்களை வைத்து சிறப்பான முறையில், சிமெண்ட் தயார் செய்வதன் மூலமாக அவர்கள் குறைந்த விலையில் தயார் செய்து, நிறைந்த விலையில் விற்கின்ற வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய தமிழக அரசுக்குச் சொந்தமான இந்த சிமெண்ட் ஆலைகளை நவீனப் படுத்துவதற்கு நீங்கள் என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விடையை விளக்கத்தோடு அளிக்கிறேன். இப்போதுகூட "அரியலூர் சிமெண்ட் ஆலை யினுடைய உற்பத்தி குறைந்து போய்விட்டது" என்று அறிக்கையிலே சொல்லிக்கொண்டு வருகிறார்கள்; "உற்பத்தி எல்லாம் குறைந்து போய் விட்டது கருணாநிதி ஆட்சியிலே" என்று சொல்கிறார்கள். ஒன்றும் குறையவில்லை. அ.தி.மு.க. ஆட்சியிலே 1991-92-லே அரியலூர் சிமெண்ட் உற்பத்தி 3,33,000 டன், 1992-93-லே 4,13,000 டன், 1993-94-ல் 4,34,000 டன், 1994-95-ல் 3,77,000 டன், 1995-96-ல் 4,29,000 டன். கழக ஆட்சியிலே 1996-97-ல் 4,63,000 டன், குறையவில்லை. 1997-98-ல் 5,38,000 டன். 1998-99-ல் 4,87,000 டன், 1999-2000-ல் 4,46,000 டன், குறையவேவில்லை. அந்த அளவிற்கும் ஆகியிருக்கிறது; அந்த அளவைவிட அதிகமாகவும் ஆகியிருக்கிறது. அனால், உற்பத்தி ஒன்றும் குறைந்துவிடவில்லை. ஏன் நட்டம் ஏற்படுகிறது என்று கேட்டால், அதற்கு ஒரேயொரு காரணம், தனியார் நடத்துகிற நிறுவனங்களில் தொழிலாளர்களுடைய ஊதியங்கள், பொதுத் துறையிலே கொடுக்கப்படுகிற அளவிற்குக் கொடுக்கப்படுவ தில்லை. இதிலே அதிகச் செலவாகிறது என்பதை ஒத்துக்கொண்டு தான் தீர வேண்டும். நான் தொழிலாளர்களைக் குறை கூறவில்லை. தனியார் பஸ், நம்முடைய போக்குவரத்துக் கழகங்களுடைய பஸ், இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் எப்படியோ, அதுமாதிரிதான், இதிலேயும், தனியார் நடத்தும்போது இலாபம் ஏற்படுகிறது; தனியார் நடத்தும்போது நல்ல உற்பத்தி இருக்கிறது. இப்பவும் உற்பத்தி குறைந்து போய்விடவில்லை. உற்பத்தி அதே அளவிற்கு இருந்தாலும்கூட, இலாபம் இல்லாததற்குக் காரணம், நாம் தொழிலாளர்களுக்குத் தனியாரைப் போலக் குறைந்த சம்பளம் கூடக் கொடுப்பதில்லை, அவர்களுக்கு நியாயமான சம்பளம் என்ற பெயரில் அவர்களுக்குச் சம்பளம் தர வேண்டியிருக்கிறது. அதுவும் ஒரு காரணம்.

நவீனமயமாக்க வேண்டுமென்று கேட்டார்கள். இப்போது 'அரசு சிமெண்ட்' வாங்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. இப்போது அரசு சிமெண்ட் வாங்கப்பட்டது. ஆனால், வெளி மாநிலத்திலிருந்து வருகின்ற சிமெண்ட் - அது இங்கே சொன்ன 'அம்புஜா' மாத்திரம் அல்ல, எல்லா சிமெண்ட்டும் வந்திருக்கிறது. இப்போது மின்சாரத் துறைக்குக்கூட அந்த சிமெண்ட்தான் வாங்கப்பட்டு இருக்கிறது - 85 ரூபாய்க்கு வாங்குகிறார்கள். அதே நேரத்தில் அரசு சிமெண்ட் 145 ரூபாய் விலை ஆகிறது. 145 ரூபாய் சிமெண்ட் அவர்களால் வாங்க முடியவில்லை. வாங்கினால் திட்டச் செலவு அதிகமாக ஆகும். எனவே, வாங்க முடியவில்லை, ஆகவே வாங்குவதில்லை, அதுவும் ஒரு காரணம். இவற்றை யெல்லாம் சரிபார்த்து - இப்பொழுது திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே சொன்னார்களே, 50 சதவிகிதத்திலே போட்டி போட்டுக் கொண்டு, டெண்டரில் போட்டி போட்டுத்தான் சிமெண்ட்டை விற்க வேண்டியிருக்கிறது. மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள் - அதை மாற்ற முடியுமா, அதை மாற்றி ஒரு நிலைக்குக் கொண்டுவர முடியுமா என்று பார்ப்பதற்காக, அதைச் சீரமைத்து நவீனப் படுத்துவதற்கு கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு, நம்முடைய தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் குழு பரிசீலித்து, ஒரு கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்ட பிறகு, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, மேலும் நவீனப்படுத்தி, இந்தச் செலவினங்களைக் குறைக்கவும், சிமெண்ட் உற்பத்தியை அதிகமாக்கவும், அப்படி அதிகமாக்கும் சிமெண்ட்டுக்கு நல்ல கிராக்கி ஏற்படுத்துவதற்கும், அந்தக் குழுவின் மூலம் முயற்சிகள் நடைபெறுகின்றன என்பதையும் தெரிவித்துக் கொண்டு, இந்த அளவில் இன்றைக்கு (குறுக்கீடு) இதை முடித்து விடுகிறேன்.

நிறைய வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. வெட்டுத் தீர்மானங்களுடைய எண்ணிக்கை 111. நம்பர்

நன்றாக இல்லை. (பலத்த சிரிப்பு). இல்லாவிட்டாலும் கூட 111 வெட்டுத்தீர்மானங்களையும் எல்லோரும் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியத்தை ஆதரித்து, கோரிய நிதியை அரசுக்குத் தர வேண்டுமென்று கேட்டு **அமைகிறேன்.** (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஆர். சுந்தரம்.

திரு. பி. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு பேசியபோது, இந்த அழகப்பா சிமென்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான அரசினுடைய நிலத்தை, வேறொரு பினாமி கம்பெனிக்கு 100 ஏக்கர் நிலத்தை விற்று விட்டார்கள் என்று கூறினேன். அதனுடைய மதிப்பு 2,000 கோடி என்று கூறினேன். அதை மாற்றி 2,000 இலட்சம், அதாவது 20 கோடி என்று பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசும்போது, ராசிபுரம். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஒன்றுக்கு மட்டும்தான் என்னிடம் அனுமதி வாங்கினீர்கள். அதோடு உட்காருங்கள். நீங்கள் கேட்ட அனுமதியைக் கொடுத்தேன். அந்த மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். (குறுக்கீடு). நீங்கள் பேச்சிலே ஏதோ தப்பாக 200 கோடி, 20 இலட்சம், 2,000 கோடி என்று சொல்லிவிட்டு, அதை மாற்ற வேண்டுமென்று சொன்னீர்கள். அனுமதி கொடுத்துவிட்டேன், மாற்றிவிட்டீர்கள். இனிமேல் உட்காருங்கள்.



உரை : 10 நாள் : 23.08.2006

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் குறித்தும் தகவல் தொழில்நுட்பத் துறை குறித்தும் காலையிலேயிருந்து இதுவரையிலே இந்த மாமன்றத்திலே பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள், தலைவர்கள், தங்களுடைய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். எனக்கு முன்னால் பேசிய அ.தி.மு.க. உறுப்பினர் கூறியதுபோல, ஏதோ, நானும் தட்டுத் தடுமாறி என்னுடைய பதிலுரையைத் தருவதற்கு முன்வந்திருக்கின்றேன். எல்லோருக்கும் தட்டுத் தடுமாறுகின்ற பருவம் வரும். (மேசையைத் தட்டும் ஒலி). அதை யாரும் தவிர்க்க முடியாது. நான் அவற்றை யெல்லாம் கேலியாகவோ, கிண்டலாகவோ, வசையாகவோ கருதுபவன் அல்ல. இசையாகவே கருதிக்கொண்டு சந்திப்பவன். (மேசையைத் தட்டும் ஒலி).

என்னுடைய உடல்நிலை காரணமாக, நீண்டநேரம் இந்த விவாதத்திலே கலந்துகொள்வதற்கு இயலாது என்பதற்காக, முதலில் பட்டியலிடப்பட்ட மானியக் கோரிக்கைகளை ஒரு சிறிது மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், கொறடா, இவர்களுடைய ஒப்புதலோடு, தேதி மாற்றம் செய்யப்பட்டு, இன்றைக்குக்கூட அதே உடல்நிலையோடு தான் சில கருத்துக்களை எடுத்து வைக்கின்ற வாய்ப்பை இங்கே நான் பெற்றிருக்கின்றேன். இது தற்காலிகமாக எனக்கு ஏற்பட்டிருக்கின்ற ஒரு நலிவு. யாரும் நிரந்தரமாக இருக்கக்கூடிய நலிவு என்று எண்ணி ஆறுதலடைய மாட்டார்கள்; அகமகிழ்ச்சி கொள்ளமாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

இன்று, என்னுடைய விவாதத்தை ஆரம்பித்து வைத்தவர், நம்முடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார்

ஆவார்கள். அவர்கள் பேசும்போது கேட்டார்கள்; Centre for Monitoring Indian Economy (CMIE), பிப்ரவரி 2006ஆம் ஆண்டு தந்துள்ள விவரப்படி, Investment in Manufacturing Sector என்ற விவரப்படி, அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். உற்பத்தித் துறையிலே, அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சிதான் முதலிடத்தில் இருந்ததாகச் சொன்னார்கள். என்னுடைய கையிலே இருப்பவை C.M.I.E. வெளியிட்ட புத்தகங்கள். இரண்டு புத்தகங்கள் வைத்திருக்கின்றேன். அந்தப் புத்தகத்திலே உள்ள ஆதாரங்களை, புள்ளிவிவரங்களை வைத்துத்தான் நான் இந்தக் கருத்தை எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

நான் முதலிலே சொன்னதுமாத்தி Centre for Monitoring Indian Economy (CMIE), பிப்ரவரி 2006-ல் தந்துள்ள விவரப்படி, கடந்த ஆண்டு; ஒரிசாவில் 1,76,770 கோடி ரூபாய் உற்பத்தித் துறையில் முதலீடு, ஜார்கண்ட் 1,70,460 கோடி ரூபாய், குஜராத் 96,162 கோடி ரூபாய், கர்நாடகா 55,485 கோடி ரூபாய், ஆந்திரா 55,359 கோடி ரூபாய், தமிழ்நாடு 54,488 கோடி ரூபாய். வரிசைப்படி ஆறாவது இடத்திலே அம்மையார் அவர்கள் ஆண்ட மாநிலம், தமிழகம் அமைந்திருக்கிறது இந்த விவரப்படி. ஆனால் இங்கே முதலிடம் பெற்றிருந்ததாக நண்பர்கள் வாதிட்டிருக்கின்றார்கள்.

இன்னொரு ஆதாரத்தையும் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே என்ன நிலை என்றால், 2001 என்று எடுத்துக்கொள்ள வேண்டும். 2001ஆம் ஆண்டு முடிவில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அன்றைய நிலையில், தற்காலிகமாக முடிந்த அந்தக் காலகட்டத்தில், ஒரிசாவிலே 23,366 கோடி ரூபாய், ஜார்கண்ட் வெறும் 731 கோடி ரூபாய், குஜராத் 36,058 கோடி ரூபாய், கர்நாடகா 27,345 கோடி ரூபாய், ஆந்திரா 34,928 கோடி ரூபாய், மராட்டியம் 26,218 கோடி ரூபாய், தமிழ்நாடுதான் 36,778 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி). ஆக, அன்றைய நிலையில், இதில், தமிழ்நாடுதான் முதல் இடத்திலே இருந்தது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். நான் இந்தப் 'போட்டாபோட்டி', 'காட்டாங்குஸ்தி'-யில் என்னைச் சிக்க வைத்துக்கொள்ள விரும்பவில்லை. இன்று நாம் எல்லோரும் அமர்ந்து, இந்த மாமன்றத்தில், தமிழ்நாட்டினுடைய மொத்த

தொழில் வளத்தை வளர்ப்பதற்குப் பணியாற்ற வேண்டும்; பாடுபடவேண்டும்; ஆர்வம் கொள்ளவேண்டும்; அக்கறை காட்டவேண்டும் என்ற அளவிலேதான், இன்றைய விவாதம் அமைந்து, உங்களுடைய உரைகளும், என்னுடைய பதிலுரையும் அவ்வாறு விளங்கிட வேண்டுமென்றே நான் கருதுகின்றேன். இதற்கிடையிலே இதற்கெல்லாம் யார் காரணம், நீயா, நானா என்ற அந்த விவாதங்களுக்குள் நான் செல்லவேண்டிய தேவையில்லை; வம்புக்குச் செல்லவேண்டிய அவசியம் இல்லை; வந்த வம்பை விடவும் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், வந்த வம்பை விட்டுவிட்டால், வழங்கவேண்டிய விளக்கத்தை வழங்காமல் போய்விடக்கூடும். அதனால் சொல்லுகிறேன், விளக்கம் தேவைப்படுகிற நேரத்தில் தந்தே தீரவேண்டிய நிலையில் நாம் இருப்பதால், நான் அதற்கு அந்தக் கருத்தைச் சொன்னேனே அல்லாமல் வேறு அல்ல.

திரு. ஜெயக்குமார் அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். தொழில் துறை மானியத்திற்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டைவிடக் குறைந்துவிட்டது என்று குறிப்பிட்டார்கள். பத்திரிகைகளுக்கு பெரிய தலைப்பு அது. அவர் நீண்டகாலமாகச் சட்டமன்ற அனுபவம் உள்ளவர் என்பதும், அதைப்போலவே, பத்திரிகைத் துறையைப் பற்றிய அனுபவம் உள்ளவர் என்பதும், எனக்கு நன்றாகத் தெரியும். அதனால் அவர் ஒரே அடியாக தொழில் துறை மானியம் கடந்த ஆண்டைவிட குறைந்து விட்டதாகக் குற்றஞ்சாட்டினார். 2005-2006-ல் திருத்திய மதிப்பீடு, 227 கோடி ரூபாய் என்றபோதிலும், Final Modified Appropriation. இறுதித் திருத்த ஒதுக்கீடு என்று பார்த்தபோது, 186 கோடி ரூபாய்தான்; திருத்த ஒதுக்கீடு. ஆனால், சொல்லப்பட்டது 227 கோடி ரூபாய்; திருத்த ஒதுக்கீடு என்று குறிப்பிடப்பட்டது 186 கோடி ரூபாய். அதாவது, 40 கோடி ரூபாய், கடந்த ஆட்சியில், செலவழிக்கப்படாமல் surrender செய்யப்பட்டுவிட்டது. இந்த surrender எனக்குப் பிடிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி). அதனால்தான், அந்தக் கணக்கின் அடிப்படையில்தான், தற்போது கடந்த ஆண்டைவிட அதிகமாகவே ஒதுக்கிய நிதியின்படி மொத்தமாக 193 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திரு. ஜெயக்குமார் அவர்களுடைய சந்தேகத்திற்கு, கேள்விக்கு

இதை நான் விளக்கமாகத் தருகிறேன். ஏதோ அவருக்குப் பதிலுக்குப் பதில் சொல்வதாக அவரும் கருதிக்கொள்ளக்கூடாது; விளக்கம்தான்.

தமிழ்நாடு, உற்பத்தித் துறை முதலீட்டில் கடந்த ஆட்சியில், முதல் மாநிலமாகத் திகழ்ந்தது என்ற வாதமும் அடிபட்டுப் போகின்ற புள்ளிவிவரங்களை எடுத்து வைத்திருக்கின்றேன். Annual Survey of Industries, 2003-2004-ன்படி வெளிவந்துள்ள விவரப்படி, மராட்டியத்தில் Fixed Capital 83,472 கோடி ரூபாய், குஜராத்தில் 85,788 கோடி ரூபாய், தமிழ்நாடு 46,430 கோடி ரூபாய், 2004 விவரப்படி, Invested Capital மராட்டியத்தில் 1,24,019 கோடி ரூபாய், குஜராத்தில் 1,15,027 கோடி ரூபாய், தமிழ்நாடு 68,330 கோடி ரூபாய். எனவே, எப்படித் தமிழ்நாடு இவற்றில் எல்லாம் முதல் நிலையிலே இருக்கமுடியும் என்ற கேள்விக்கு நாமே பதிலைத் தேடிக்கொள்ளவேண்டும்.

இன்னொன்றும் கேட்டார்கள்; எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்திற்கு 900 கோடி ரூபாய் என்றும், கிருஷ்ணகிரி மாவட்டச் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்திற்கு 500 கோடி ரூபாய் என்றும், நாங்குநேரி உயர் தொழில் நுட்பப் பூங்கா திட்டத்திற்கு 640 கோடி ரூபாய் என்றும் செலவாகும் எனக் குறிப்பிட்டுவிட்டு, அதற்கான 2040 கோடி ரூபாயை, நிதியை, நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்யவில்லையே, ஏன் என்று கேட்டார்கள். எடுத்த எடுப்பிலே, மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது சரியான கேள்வி என்றுதான் தோன்றும். ஆனால், அது சரியான கேள்வி என்று அதை மறுத்து, நான் பதில் சொல்ல விரும்பவில்லை; விளக்கம் அளிக்க விரும்புகின்றேன்.

இவற்றிற்கெல்லாம் தேவைப்படும் நிதி, பங்கு முதலீடுகள், Share Capital மூலமாகவும், கடனாகப் பெறுவதன் மூலமாகவும் திரட்டப்படும். பங்கு முதலீடுகள் மூலமாக ஏற்படும் ஈவுத் தொகை, Equity, சிறிய பகுதியேயாகும். இதனை, இந்தத் திட்டங்களை நிறைவேற்ற, TIDCO நிறுவனம் ஏற்றுக்கொள்ளும். தேவைப்படும் நிதியின் பெரும் பகுதி, வங்கிகளிடமிருந்தும், நிதி நிறுவனங்களிட மிருந்தும் கடனாகப் பெறப்படும். பொதுவாக, இதுபோன்ற திட்டங்களுக்கெல்லாம், இந்த முறையில்தான் நிதிக்கான

ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை, அமைச்சராகப் பணியாற்றி யிருந்த நம்முடைய திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், நன்றாகவே அறிவார்கள் என்று கருதுகிறேன். இது எல்லா ஆட்சிக் காலங்களிலும் பின்பற்றப்பட்டுவரும் வழிமுறையேயாகும்.

இங்கே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், திரு. டி. சுதர்சனம் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். கடந்த ஆட்சியில், Aswanth Sugars என்ற நிறுவனம் என்பதன் பேரில் (குறுக்கீடு) - Aswanth Sugars- தானே?- பேரில் நடைபெற்ற விதிமீறல்கள், முறைகேடுகள் தொடர்பாக, அந்த நிறுவனத்தின் பின்னணியிலே இருப்பவர்கள் யார், யார்; என்ன நடவடிக்கை என்றெல்லாம் கேட்டார்கள். அதைப்பற்றி யெல்லாம் நான் அவர்களுக்குச் சொல்லுகின்றேன். ஏனென்றால், அவருக்கு ஏதேனும் உறுதியளிக்க வேண்டும்; நேற்றைக்கே கோபம் வந்து விட்டது அல்லவா? (சிரிப்பு). ஆகவே, இதற்கும் உறுதியளிக்க வேண்டும். உரிய முறையில் விசாரணை மேற்கொண்டு, ஒளிந்திருக்கும் உண்மைகளை வெளிச்சத்திற்கு நிச்சயமாகக் கொண்டு வருவோம் என்பதை மாத்திரம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே, தொழில் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை, இந்த இரண்டு தலைப்புகளிலும், மொத்தம் 285 வெட்டுத் தீர்மானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நானும் 1957ஆம் ஆண்டிலேயிருந்து இந்த அவையிலே இருந்திருக்கிறேன். பேரசிரியரும், 1957-லே என்னோடு இருந்தார். பிறகு Parliament-க்குச் சென்றுவிட்டு இங்கே வந்தார். தொடர்ச்சியாக 1957ஆம் ஆண்டிலேயிருந்து, இதுவரையில் இருந்திருக்கிறேன். இவ்வளவு வெட்டுத் தீர்மானங்களை நான் பார்த்ததேயில்லை. அவர்கள்கூட சொன்னார்கள்; ஒவ்வொரு நாளும், இங்கே மானியங்களைத் தொடங்குவதற்கு முன்பு, நம்முடைய சபாநாயகர் அவர்கள், பள்ளிக்கூடத்திலே attendance எடுப்பதுபோல, ஒவ்வொருவருடைய பெயரைக் கூப்பிடுவதும், அவர்களும் 'உள்ளேன் ஐயா' என்று கூறுகின்றவிதத்தைப்போல, (சிரிப்பு) அவர்கள் பெயர் சொல்வதும் - ஆக, 285 வெட்டுத் தீர்மானங்கள்;

இந்த இரண்டு தலைப்புகளிலே மாத்திரம், மானியங்களிலே மாத்திரம் 285 வெட்டுத் தீர்மானங்கள். ஆனால், அந்த 285-ல், அவற்றிலே எல்லாம், அரசுக்கு அல்லது இந்த இலாகாவை ஏற்றுக் கொண்டிருக்கின்ற எனக்கு நினைவூட்டுகின்ற, கவனப்படுத்துகின்ற பல வெட்டுத் தீர்மானங்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சிலவற்றை மாத்திரம், நான் இங்கே நினைவூட்டுவது சிறப்பாக இருக்கும் என்று கருதுகின்றேன். இல்லாவிட்டால், அந்த 'வெட்டுத் தீர்மானங்கள்' எல்லாம் 'வெட்டித் தீர்மானங்கள்'ஆக ஆகிவிடும். (சிரிப்பு). (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, சிலவற்றைமாத்திரம், நினைவூட்ட விரும்புகின்றேன். கட்சிச் சார்பில்லாமல், பொதுவான முறையில், யார் யார் தந்திருக்கிறார்களோ, அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு, அந்தக் கருத்துக்களைச் சொல்லி, அதற்கான விளக்கங்களை, விவரங்களைக் கூற விரும்புகின்றேன்.

செல்வி கே. பாலபாரதி அவர்களின் வெட்டுத் தீர்மானம்; "திண்டுக்கல் தொகுதியில், ஜவுளி ஏற்றுமதி வளாகம், ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" என்று சொல்லியிருக்கிறார்கள். இது பத்திரிகையிலே வரும்; வாக்களித்தவர்கள் அதைப் படித்துப் பார்த்து வாழ்த்துவார்கள். இதைப்பற்றிப் பரிசீலித்து, அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. என். நன்மாறன், 'மதுரை மாவட்டத்தில், புதிய தொழிற்சாலைகள் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" என்ற வெட்டுத் தீர்மானம் தந்திருக்கிறார். மாவட்ட ரீதியான ஆய்வுகள் வரும்போது, இதுவும் ஆய்வு செய்யப்பட்டு கிடைக்கப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

டாக்டர் எம். கே. விஷ்ணுபிரசாத், காங்கிரஸ்; "செய்யாறில் இந்த ஆண்டிலேயே சிப்காட் தொழிற்பேட்டை துவங்கப்பட்டுச் செயல்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க" என்று கேட்டிருக்கிறார். நான் அவருக்குச் சொல்வேன்; சிப்காட், இராணிப்பேட்டையிலே இருக்கிறது. இராணிப்பேட்டைக்கும், செய்யாறுக்கும் அதிக தொலைவு இல்லை. அங்கிருக்கிற

தொழிற்சாலைகள் செய்யாறு வரையிலே வரலாம். செய்யக் கூடியவர்களுக்கு இராணிப்பேட்டை என்ன? எங்கிருந்தாலும் வரும். செய்யாறு என்றால்தான் வராது. எனவே, விஷ்ணுபிரசாத் அவர்களுக்கு நான் உறுதி அளிக்கின்றேன்; இராணிப்பேட்டையிலே தொழில்கள் வைப்பதற்கு, இடமில்லாத அளவுக்கு மிதமிஞ்சிட்டால், செய்யாறுக்கு நிச்சயமாக சிப்காட் தொழிற்பேட்டை வருவதற்கு வழிவகுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. தி. வேல்முருகன்; அவர் பண்ருட்டியிலே பலாப் பழ ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலை கேட்கிறார். அதோடு விடவில்லை; முந்திரிப் பழ ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலையும் வேண்டும் என்று கேட்டிருக்கிறார். முந்திரி ஜூஸ், பலாப்பழ ஜூஸ்; மாம்பழ ஜூஸ் கேட்கவில்லை, கேட்க வேண்டியவர் தேர்தல் சின்னத்தின்படி கேட்கவில்லை. (சிரிப்பு). அந்த இரண்டு ஜூஸும் பிழிவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

"திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய மறைமலை நகர் தொழிற்பேட்டையில், பெரும்பாலான தொழிற்சாலைகளில், வேலை செய்யும் ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க" திரு. டி. மூர்த்தி வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். தொழிலை மாத்திரம் கவனித்தால் போதாது; அந்தத் தொழிலை வாழவைத்துக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களையும் வாழவைக்க வேண்டும் என்ற கவலை உள்ள அரசு, நிச்சயமாக அதையும் கவனிக்கும் என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கம்பம் இராமகிருஷ்ணன்; "கம்பம் தொகுதியில் தென்னை, திராட்சை சார்ந்த தொழிற்பேட்டையை உருவாக்குவதனுடைய அவசியம் குறித்து விவாதிக்க" என்று கேட்டிருக்கிறார். தென்னையானாலும், திராட்சையானாலும், அதற்கான தொழிற்பேட்டை கம்பத்திலே உருவாக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. இளவழகன், பா.ம.க., ஆற்காடு; "தமிழகத்தில் தொழில் வளர்ச்சி சீரமைக்க, முதலீட்டாளர்களுக்குள்ள பல்வேறு கட்டுப்பாடுகளைக் களைந்து, முதலீட்டை ஊக்கப்படுத்த நடவடிக்கையும், தொழில் கட்டுப்பாடுகளை நீக்கியும், மேலும் வட்டி விகிதங்களைக் குறைத்தும், தொழிலாளர் துறை சீர்திருத்தமும், தகுந்த எரிசக்தி விலை நிர்ணயித்தும், தொழில்முறை காலவிரயத்தைக் குறைத்தும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் பொதுத் துறை மற்றம் தனியார் துறை கூட்டாக இணைந்து செயல்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க" என்று திரு. இளவழகன், பா.ம.க., ஆற்காடு தொகுதியைச் சேர்ந்தவர் கேட்டிருக்கிறார், வெட்டுத் தீர்மானத்தில். தொழில் கொள்கை ஒன்று வகுக்கப்பட இருக்கிறது விரைவில். அந்தத் தொழில் கொள்கையிலே சேர்த்துக்கொள்ள வேண்டிய ஷரத்துகளிலே இது ஒன்று என்பதை நான் அவருக்கு உறுதியாக அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முனைவர் டாக்டர் ஜெயக்குமார்; "நாமக்கல், வாகனத் தொழிலுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். எனவே, இத்தொழிலை மேம்படுத்தவும், இப்பகுதியிலே உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், நாமக்கல்லில் வாகனத் தொழிற்பேட்டை ஒன்று ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க'' என்று சொல்லியிருக்கின்றார். நாமக்கல்லில் நடைபெறுகின்ற வாகனத் தொழில், நாட்டிலேயே மிக முக்கியமான தொழில். பெரும் போராட்டங்கள், அறப் போராட்டங்கள், அந்த வாகனங்கள்மூலமாக நடைபெற்று இருப்பதையும், அதைச் சமாளிக்க முடியாமல் சர்க்கார்கள் திணறி இருப்பதையும் நான் அறிந்திருக்கின்றேன். எனவே, வாகனத் தொழிலுக்கு வாகான பல சௌகரியங்களைச் செய்வதற்கு அரசு முனையும். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. விடியல் சேகர் சொல்லியிருக்கிறார், வெட்டுத் தீர்மானத்தில். ''வெளிநாட்டு நிறுவனங்கள், புதிய தொழில் தமிழகத்தில் தொடங்கும்போது, 80 சதவிகிதப் பணியாளர்கள் தமிழகத்திற்குள்ளும், அதிலும் குறிப்பாக, தொழிற்சாலை அமையும் இடத்தில் உள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு, முன்னுரிமை வாய்ப்பு வழங்குவதன் முக்கியத்துவம் குறித்து

விவாதிக்க", என்று கேட்டிருக்கிறார். இது மிக மிக முக்கியமான ஒன்று. ஹூண்டாய் தொழிற்சாலை அமைந்தபோதே, அதை அமைக்கவந்த கொரியா நாட்டைச் சேர்ந்த அந்த அதிபர்களிடத்திலே, நான் முதலில் போட்ட நிபந்தனை, இந்த வட்டாரத்திலுள்ள உள்ளூர்க்காரர்களுக்கு வேலைகொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்துத்தான், அந்தத் தொழிற்சாலைக்கான அனுமதியை அளித்தேன் அப்பொழுது. எனவே, இது ஒரு நல்ல நிபந்தனை. இந்த நிபந்தனை ஏற்கப்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அந்த வகையிலே தான், தொழிற்சாலைகள் அமையும்.

திரு. கோவை தங்கம், சின்கோனா மரத் தொழில், அந்தப் பகுதியிலே விரிவடைய வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். C.P.I.-ஐச் சேர்ந்த திருத்துறைப்பூண்டி திரு. உலகநாதன், "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில், அரிசியைப் பயன்படுத்தி, wine தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து, விவாதிக்க" அவர் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கின்றார். அரிசியிலே wine-ஆம்! அதைத் தயாரிக்க வேண்டுமாம்! (சிரிப்பு). நாம் இப்பொழுதுதான் அரிசியை இரண்டு ரூபாய் விலைக்குக் கொடுப்பதற்குப் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). அதிலே, wine-உம் தயாரித்துவிட்டால் என்ன ஆவது என்பதையெல்லாம் தீர யோசித்து, பரிசீலித்து, அதுபற்றி முடிவெடுக்கப்படும் என்று நான் அவருக்குச் சொல்லிக்கொள்கின்றேன்.

திரு. ஜி.கே. மணி, மேட்டூர்; "தமிழகத்திலே உள்ள அனைத்துச் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு, கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை, உடனே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" - அவர் அதை இப்போது எதிர்பார்க்கிறார். - "உடனடியாகக் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று கேட்டிருக்கிறார். நிச்சயமாக அரசு அதற்கான நடவடிக்கையைக் கடுமையாக எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சி. ஞானசேகரன்; "வேலூர், திருப்பத்தூர், ஆம்பூர், செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் சக்கைகளிலேயிருந்து அதிக மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" - அவர் சக்கையைக் கூட விடமாட்டார்! (சிரிப்பு). அதையும் தினந்தோறும் இந்த அவையிலே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள். அவர் கேட்டு இல்லையென்று சொல்ல முடியுமா? எனவே, அதைப்பற்றி நிச்சயமாகக் கவனம் செலுத்தப்படும்.

திரு. ரவிக்குமார், விடுதலைச் சிறுத்தைகள்; "இந்தியத் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்போடு - C.I.I-இணைந்து, தொழில் திறன் மேம்பாட்டு - Skill development - மையங்களை மாவட்ட அளவில் உருவாக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க," என்று கேட்டிருக்கிறார். நான் மீண்டும் சொல்கின்றேன். தொழிற் கொள்கை விரைவிலே வகுக்கப்பட இருக்கிறது. ஆகவே, இது கவனத்திலே கொள்ளப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. டி. ஜெயக்குமார், ராயபுரம்; "வடசென்னையிலே உள்ள எண்ணூர் பகுதியைப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப் பட்டு, இதுவரை இப்பகுதியில் தொழிற்சாலைகள் அமைக்கப்படவில்லை." - அம்மா காலத்திலேகூடவா? (சிரிப்பு). (குறுக்கீடு). கவலைப்படாதீர்கள், அமைத்துவிடலாம். "வேலை வாய்ப்பைப் பெருக்குகின்ற வகையில், வடசென்னை மக்கள் பெரிதும் பயன்படக்கூடிய வகையில், இப்பகுதியில் Special Economic Zone உடனடியாக அமைக்க வேண்டி அவசியம் குறித்து விவாதிக்க," என்று கேட்டிருக்கிறார். நிச்சயமாக அதுவும் கவனிக்கப்படும், அவர் மகிழத்தக்க அளவில். (மேசையைத் தட்டும் ஒலி).

செங்கல்பட்டு திரு. கி. ஆறுமுகம் அவர்கள்; "திருக்கழுக் குன்றம் வட்டத்தைத் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவித்து, தொழில் தொடங்குவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில் 25% மானியம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க," என்று கேட்டிருக்கின்றார். அதுவும் கருத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. செந்தில் பாலாஜி, அ.தி.மு.க., கரூர்; "கரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தில் - T.N.P.L - பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்கள்மீது, முதல் தகவல் அறிக்கை - F.I.R.- காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டாலே, அவர்களைப் பணிக்கு வரவிடாமல் நிறுவனம் தடை செய்து விடுகின்றது. இந்த முறையை மாற்றி, குற்றச்சாட்டு நிரூபிக்கப் பட்டால் மட்டுமே பணி செய்வதைத் தடை செய்யவேண்டும் என்பது குறித்து விவாதிக்க" என்று கேட்டிருக்கிறார். இந்தக் கொள்கையிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஒருவர்மீது குற்றம் சுமத்திவிட்டதாலேயே, குற்றவாளியாக ஆகிவிடமுடியாது. தொழிலாளர் என்பதற்காக, அவரை ஏறி மிதிப்பதை, நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆகவே, நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே, பணித் தடை வேண்டுமே தவிர, குற்றஞ்சாட்டிவிட்டு, அவர் தகுதி இல்லையென்று விரட்டிவிட, எந்தத் தொழிலாளி யையும், அப்படிப் பழிவாங்க இந்த அரசு இடம் தராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சி. சண்முகவேலு, அடிக்கடி எழுந்து நிற்பவர், அ.தி.மு.க., உடுமலை; "வங்கியில் வட்டி குறைந்துள்ள நிலையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திலும், கடன் கொடுப்பதிலே உள்ள நிபந்தனைகளை எளிமையாக்கி, வட்டியைக் குறைத்துக் கொடுக்கவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க" என்றொரு முக்கியமான விஷயத்தை அவர் வெட்டுத் தீர்மானத்திலே முன்மொழிந்திருக்கிறார். இது பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என்பதை நான் அவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி செல்வி இராமஜெயம், புவனகிரி; "புவனகிரி தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை ஒன்றியப் பகுதிகளில், அதிகம் பயிரிடப்படும் மலர்களைக் கொண்டு, அந்தப் பகுதியிலே வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க'' என்று திருமதி செல்வி இராமஜெயம் கேட்டிருக்கின்றார்கள்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்; "பொள்ளாச்சிப் பகுதியில் வேலைவாய்ப்பை உருவாக்க, ஒரு பெரிய தொழிற்சாலையைப்

பொள்ளாச்சியிலே ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" என்று கேட்டிருக்கிறார். நிச்சயமாக அவருடைய குறை தீர்க்கப்பட, பொள்ளாச்சி, தொழிற்சாலை ஒன்றை விரைவிலே பெறும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மயிலாடுதுறை திரு. எஸ். ராஜகுமார், ராஜபாளையம் திருமதி மு. சந்திரா ஆகியோர் அளித்துள்ள கோரிக்கைகளும் கவனிக்கப்படும் என்பதை நான் தெரிவித்து, 285 வெட்டுத் தீர்மானங்களுக்கும் விளக்கம் அளிக்கவில்லையே என்று யாரும் என்மீது வருத்தப்படாமல், பொறுக்கியெடுத்து, சிலபல வெட்டுத் தீர்மானங்களுக்கு மாத்திரமே விளக்கம் அளித்திருக்கின்ற வகையிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு, பொதுவாக, இந்தத் தொழில் மானியத்தைப் பற்றிப் பேசும்போது, நமது நாட்டினுடைய சமுதாயப் பொருளாதார வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும், வேளாண்மை எந்த அளவுக்கு முக்கியமோ, அந்த அளவுக்கு இணையான முக்கியத்துவம் தொழிலுக்கு உண்டு. வேளாண்மை உற்பத்தியும், தொழில் உற்பத்தியும், கை கோர்த்துச் செல்வதற்கானப் பாதையே, இந்தியத் திருநாடு அகிலத்தின் முன்னிலை வரிசையில் இடம்பெற பண்பட்ட பாதை ஆகும்.

18-வது நூற்றாண்டிலேயிருந்து ஏற்பட்டுவரும் தொழில் புரட்சி, புதிய புதிய தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்துக் கொடுத்தது. ஆனால், பொருட்களை உற்பத்திச் செய்யும் பெரிய பெரிய தொழிற்சாலைகள் தோன்றின. இதன் விளைவாக, உலகம் முழுவதும் சமூகப் பொருளாதார நிலைகளில் அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இத்தகைய ஒரு பொற்கால மாற்றங்களால், ஊரகப் பகுதியிலேயிருந்து வாழ்வாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகளைத் தேடி, நகர்ப் பகுதிகளுக்கு ஏற்பட்ட குடிபெயர்ப்புகள், நகர்ப் பகுதிகளில் மக்கள் தொகை பெருக்கத்திற்குக் காரணமாயின. நிலக்கரி, பெட்ரோல், வாயு போன்ற எரிபொருள்கள், தொழில் வளர்ச்சியிலே உந்துதல் சக்திகளாக விளங்கிவருகின்றன. இந்தியத் திருநாட்டின்

விடுதலைக்குப் பின்னர், 1956-ல், மத்திய அரசு வகுத்தளித்த தொழில் கொள்கை, தொழில் புரட்சியின் நன்மைகளை முழுவதுமாக உள்வாங்கிக் கொண்டிருந்தது. தொடக்க நிலையில், இரும்பு, கனரகத் தொழில்கள், மின் உற்பத்தி ஆகிய துறைகளில் வளர்ச்சியை உருவாக்குவதே குறிக்கோளாக இருந்தது.

அதன் பிறகு தகவல் தொழில்நுட்பம் மிகப் பெரிய வளர்ச்சியை எட்டியது. கணினி இயக்கத்தில், அனைத்து முனைகளிலும் கணினி நுழைந்ததால், தகவல் தொழில்நுட்பப் புரட்சி தொழில் துறையில் முன் எப்போதும் இல்லாத அளவிற்குப் பல்வேறு வகையான மாற்றங்களை உருவாக்கியது. அறிவுசார்ந்த கணினிப் புரட்சி, மனித வரலாற்றில், புதிய, ஆனால் புத்துணர்ச்சி மிகுந்த அத்தியாத்தைத் தொடங்கி வைத்தது. நமது சமுதாய, பொருளாதார நடவடிக்கைகள் அனைத்திலும் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் கணினி ஊடுருவி, யாரும் மறுக்கமுடியாத தாக்கத்தை உண்டாக்கி வருகிறது. இதனால், உலகமே சுருங்கி, உலகம் சிலிர்த்து குவித்துவரும் அறிவை, கடைக்கோடியிலே உள்ள கிராமத்தில இருந்துகொண்டே பெற்று, உயரும் உன்னதமான வாய்ப்பு இன்றைய தலைமுறைக்கு ஏற்பட்டிருப்பது பெருமைப் படத்தக்க முன்னேற்றமாகும்.

தொடர்ந்து நிகழ்ந்துவரும் இந்தப் புரட்சியின் அடுத்த கட்டமாக, உயிரியல் தொழில்நுட்பப் புரட்சி - Bio-Technology Revolution - ஏற்படும் என்று அறிவியல் அறிஞர்கள் கணித்திருக் கிறார்கள். உயிரியல் தொழில்நுட்பப் புரட்சி முழுமையடையும் போது, மானுட வாழ்க்கைமுறைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படும். வாழ்க்கைத் தரத்தில், வாழும் வயது பெருகுவதில், நோய் கட்டுப்பாட்டில், உணவுப் பொருள் உற்பத்தியில், உயிரியல் தொழில்நுட்பப் புரட்சி, பெரும் பங்காற்றும் என்பது, நிபுணர்களின் எதிர்பார்ப்பு.

தொழிற்சாலைகள் உருவாக, தொழில் வளம் பெருக, முதன்மையாகத் தேவைப்படும் நிலமும், அதனையொட்டி அடிப்படை கட்டமைப்பு வசதியும், இதனைக் கருத்திலே கொண்டுதான் தி.மு.க. ஆட்சியில், 1971ஆம் ஆண்டு இந்தியாவிலே

எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழகத்திலேதான் அன்றைக்கு 'சிப்காட்' - State Industries Promotion Corporation of Tamil Nadu என்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கினோம். இன்றைக்குப் பேசப்படுகிற 'சிப்காட்' இருக்கிறதே, தமிழகமெங்கும் இன்றைக்கு வளர்ந்திருக்கின்ற தொழில் வளத்தை உருவாக்கி இருக்கிறதே, அந்த 'சிப்காட்', யார் முதலில் கொண்டு வந்தார்கள், யார் பின்னால் கொண்டு வந்தார்கள் என்று தொழிற்சாலைகளுக் கெல்லாம் இன்றைக்கு நாம் சண்டை போட்டுக் கொள்கிறோமே, நான் அவர்களுக்குச் சொல்லுகின்றேன், அதற்கு முன்பு 'சிப்காட்' போன்ற பெரிய அளவிலே இல்லாத சிறு சிறு அமைப்புகள், park-கள் பூங்காக்கள் இருந்தாலும்கூட, பெரிய அளவில் இராணிப்பேட்டையிலும், ஒசூரிலும், 'சிப்காட்' என்ற இந்த நிறுவனத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அமைத்தது, 1971ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதை நான் மிகுந்த அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்பு கின்றேன்.

'சிப்காட்' நிறுவனம் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும், ஒரேயிடத்தில் வழங்கக்கூடிய தொழில் வளாகங்களை அமைத்தது. அப்படி அமைக்கப்பட்ட இடங்களிலே ஒன்றுதான், இராணிப்பேட்டை என்பதை நீங்கள் அறிவீர்கள். இராணிப்பேட்டைதான் தமிழ்நாட்டில் அமைந்த முதல் தொழில் வளாகம் என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகின்றேன். எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டில் சிறுதொழில் வளர்ச்சிக்கு, காமராஜர் போன்ற பெருந்தலைவர்களுடைய ஆட்சியில், பக்தவச்சலம் போன்றவர்களுடைய ஆட்சியில், சுப்ரமணியம் போன்றவர்கள் நடத்திய ஆட்சியில், கிண்டி தொழிற்பேட்டையும், அம்பத்தூர் தொழிற்பேட்டையும், ஆதாரத் தளங்களாக அமைந்தனவோ, அதைப்போல, பெரிய தொழில் வளர்ச்சிக்குக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட 'சிப்காட்' வளாகங்களே, ஆரம்பத் தளங்களாக அமைந்தன என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். இராணிப்பேட்டையிலும், ஒசூரிலும், 'சிப்காட்' தொழில் வளாகம் நிறுவப்பட்டு, இராணிப்பேட்டையிலே, 729 ஏக்கர் பரப்பளவில், தொழில் வளாகம்

அமைக்கப்பட்டு, அதிலே 168 கோடி ரூபாய் முதலீட்டில், 107 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டன. அதற்கு அடுத்து, ஓசூரில் 1236 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாட்டில் இரண்டாவது தொழில் வளாகம், கழக அரசால் அமைக்கப்பட்டது. அதில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 186 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன.

மூன்றாம் கட்டமாக, 1997-ல் இராணிப்பேட்டை 'சிப்காட்' தொழில் வளாகத்திற்கு 496 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மேலும் பல தொழிற்சாலைகள் அமைவதற்கு அந்த வளாகம் விரிவாக்கம் செய்யப்பட்டது. 1997ஆம் ஆண்டு வந்த கழக ஆட்சியில் ஓசூர் சிப்காட் வளாகத்திற்கு மேலும் 240 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு அதில் 64 புதிய தொழில்கள் தொடங்கப் பட்டன. ஏறத்தாழ 6,000 இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றார்கள். இப்படி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக, இராணிப்பேட்டை, ஓசூர் ஆகிய இடங்களில் மட்டுமல்லாமல், கழக ஆட்சியில், கடலூரில், 1198 ஏக்கர் நிலப்பரப்பில், 1997ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், இருங்காட்டுக்கோட்டையில் 1,830 ஏக்கர் நிலப்பரப்பில், 1996ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், தூத்துக்குடியில் 437 ஏக்கர் நிலப்பரப்பில், 1996ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், ஸ்ரீபெரும்புதூரில் 2,469 ஏக்கர் நிலப்பரப்பில், 1997ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், ஒரகடத்தில் 2,043 ஏக்கர் நிலப்பரப்பில், 1997ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், சிறுசேரியில் 756 ஏக்கர் நிலப்பரப்பில், 1998ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும் எனப் பல்வேறு இடங்களில் 'சிப்காட்' தொழில் வளாகங்கள் அமைக்கப்பட்டன. என்ன தொழில், யாரால் வந்தது என்பதல்ல; அவை எல்லாம் வந்து இறங்குவதற்கு ஏற்ற இடங்கள், யாரால், எப்பொழுது, எந்த ஆட்சியால் அமைக்கப்பட்டன என்பதை மறந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இவ்வாறு கழக ஆட்சிக் காலங்களில், தமிழ்நாட்டில் தொய்வில்லாத தொழில் வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டு, பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலியதோடு, பெரும் அளவான

வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட்டன. உதாரணத்திற்கு ஒன்றிரண்டைக் கூறவேண்டுமேயானால், இருங்காட்டுக் கோட்டையிலே, JBM Sung Woo Ltd. தொழிற்சாலை; JKM Gem தொழிற்சாலை; Orchid Chemicals மற்றும் Pharmaceuticals தொழிற்சாலை; Citizen Watch தொழிற்சாலை, Sam Greaves Limited நிறுவனத்தின் Tractor தொழிற்சாலை; GMR Vasavi-யின் தனியார் மின் உற்பத்தித் திட்டம்; Matsushita Airconditioner தொழிற்சாலை Reynolds Ball Pen தொழிற்சாலை; Sembawang Shriram பொருள் விநியோகத் தொழிற்சாலை; Markcube India காகித அட்டை இயற்திரம் தயாரிக்கும் தொழிற்சாலை; Optic Fibre Telecom Cable தொழிற்சாலை. அக்டோபர் மாதத்தில், 2000ஆம் ஆண்டு 'Centre for Monitoring Indian Economy' -அதாவது, 'இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம்,' அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பற்றி வெளியிட்ட அறிக்கை ஒன்றில், தமிழ்நாடு 145.62 குறியீட்டு எண்களைப் பெற்று முதல் நிலையிலே இருந்தது; கர்நாடகம் 106.12 குறியீட்டு எண்; ஆந்திரம் 104.01 குறியீட்டு எண், அதைப்போல, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் மாநகரங்களுக்கிடையேயான மதிப்பீட்டில், அன்றைக்கு 2000ஆம் வருடத்திலே, சென்னை மாநகரம் 472.48 குறியீட்டு எண்களைப் பெற்று, முதல் நிலையிலே இருந்தது; ஹைதராபாத் 153 குறியீட்டு எண்; பெங்களூர் 100.28 குறியீட்டு எண் பெற்றிருந்தன.

1989-1991 காலக்கட்டத்தில், தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு கழக அரசு அளித்த உறுதியான ஊக்கத்தின் காரணமாக, தமிழ்நாடு, இந்தியாவில் 3-ஆம் இடத்தை அடைந்திருந்தது. 1991-1996 காலக்கட்டத்தில் நடைபெற்ற ஆட்சியின்போது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கி, 5-ம் இடத்திற்கு இறங்கி இருந்தது. இதை நான், யாரையும் தாழ்த்துவதற்காகச் சொல்லவில்லை. தொழில் வளர்ச்சியினுடைய அன்றைய நிலவரத்தை எடுத்துக் கூறுவதற்காகக் குறிப்பிடு கின்றேன். எல்லோரும் சேர்ந்துதான் தொழில் வளத்தைத் தமிழகத்திலே பெருக்க வேண்டும் என்ற அந்த ஊக்கத்தை, உற்சாகத்தை, ஆர்வத்தை, அக்கறையைப் பெறவேண்டு மென்பதற்காகச் சொல்லுகின்றேன்.

1994-1995-இல் 8.7 சதவிகிதம் அளவுக்கு இருந்த தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, கழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, 1999-2000ஆம் ஆண்டில் 15.02 சதவிகிதம் அளவுக்கு உயர்ந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். கழக அரசு, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் காட்டிய அக்கறைக்கும், உயர்ந்த செயல்பாட்டிற்கும் அடையாளமாக ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே திரு. அப்பாவு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நம்முடைய கழகத்தின் சார்பிலே உரையாற்றிய திரு. ரங்கநாதன் குறிப்பிட்டதைப்போல, 1998ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப் பட்ட, ஒரே விண்ணப்பப் படிவத்தை உள்ளடக்கிய, ஒற்றைச் சாளர முறையை - Single Window System - இதை முதன்முதலாக அறிமுகப்படுத்தியதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்கு முன்பெல்லாம், தமிழ்நாட்டிலே ஒரு தொழிலைத் தொடங்கவேண்டுமென்றால், உள்ளாட்சி மன்றத்தினுடைய அனுமதி, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினிடமிருந்து சுற்றுக்சூழலுக்கான அனுமதி, நில ஒதுக்கீடு பெற அனுமதி, நில வகைப்பாட்டை மாற்ற அனுமதி, நகர்ப்புற நில உச்ச வரம்பிலேயிருந்து விலக்குபெற அனுமதி, தேவையான தண்ணீருக்கான அனுமதி, மின்சாரத்திற்கான அனுமதி, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பெற வேண்டிய அனுமதி என்று 8 வெவ்வேறு துறைகளுடைய அனுமதியைப் பெற வேண்டுமென்ற நிலைமை இருந்தது. இந்த எட்டையும் ஒழித்துவிட்டு, ஒரே அனுமதி பெற்றால் போதும், அதிலே எல்லாம் அடங்கும் என்கின்ற அந்த ஒற்றைச் சாளர முறையைக் கொண்டு வந்ததே, தொழில் துறையிலே பெரிய முன்னேற்றத்திற்குக் காரணமான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால், இப்பொழுது அந்த நிலைமைகள் எல்லாம் இல்லை. புதிதாக நாங்கள் இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், அந்த ஒற்றைச் சாளர முறையினுடைய பலன்கள் எதுவும் இல்லாத ஒரு சூழ்சிலை. இது எப்படி இருந்தது என்றால், பரமபத சோபானப் படத்தில், ஏணியிலே ஏறிய காட்சியும், பாம்பின் தலையிலே மாட்டிய காட்சியுமாக, பரமபத சோபானப் படமாகத் தமிழ்நாடு

ஆகிவிட்டது. மறுபடியும் தாயம் போட்டு, ஏணியிலே ஏற வேண்டும், ஏறுவோம் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

இப்போது அறிவிப்புகள். நீண்டநேரம் பேசப் போவதில்லை. இறுதியாக, சில அறிவிப்புகளோடு முடிக்க விரும்புகின்றேன். அறிவிப்புகள்; தொழில் நயமிக்க அணுகுமுறையும், தொழில் முன்னேற்றத்திலே ஈடுபாடும் கொண்டுள்ள தி.மு.க. அரசின்மீது நம்பிக்கை வைத்து, தொழில் முனைவோர் பேரார்வத்தோடு, தமிழகத்திற்குக் கொண்டுவரக் கருதியுள்ள முதலீடுகளை வெளிப்படையான முறையில் வரவேற்று, அவர்களுக்குத் தேவையான உதவிகளையும், சலுகைகளையும் காலதாமதமின்றி உரிய நேரத்தில் வழங்கி, மாநிலத் தொழில் வளர்ச்சிக்கு மீண்டும் வழி அமைத்துக்கொடுக்கும் வகையில், தொழில் துறை, தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியவை தொடர்பான முக்கியமான சில அறிவுப்புகளை இப்பொழுது வெளியிட விரும்புகிறேன்.

'சிப்காட் நிறுவனத்தின் திருப்பெரும்புதூர் மற்றும் ஓரகடம் தொழில் பூங்காக்கள், தொழில் மையங்களாக உருவெடுத்துள்ளன. தினந்தோறும், தமிழகத்தில் தற்போது புதிய தொழில் முதலீட்டுக்கான திட்டங்கள் வந்தவண்ணம் உள்ளன. புதிய முதலீடுகளையேற்று, புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்குத் தேவைப்படும் நிலங்களுக்கான கோரிக்கைகள் அதிகரித்து வருவதால், திருப்பெரும்புதூர் மற்றும் ஓரகடம் தொழில் பூங்காக்களை விரிவாக்கம் செய்ய இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக, மேலும் 2000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஹூண்டாய், ஃபோர்டு, மிட்சுபிஷி, பி.எம்.டபிள்யூ., அசோக் லேலண்ட் போன்ற பெரும் மோட்டார் உற்பத்தி நிறுவனங்கள், தமிழகத்தில் தொழிற்சாலைகள் அமைத்ததன் காரணமாக - இதனை யார் யார் அமைத்தது, எந்த ஆட்சியில் அமைத்தது என்று சொல்லவில்லை; இந்த நிறுவனங்கள் தமிழகத்திலே மோட்டார் உற்பத்தி நிறுவனங்களை ஏராளமாக

அமைத்ததன் காரணமாக - சென்னை, "ஆசியாவின் டெட்ராய்ட்" (Detroit) என்று வர்ணிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்தியாவின் மோட்டார் உதிரி பாகங்கள் உற்பத்தியில், 35 சதவிகிதம், சென்னையில் உற்பத்தியாகின்றன. இந்த உதிரி பாகங்கள் உற்பத்தியாளர்களில் பலரும், பெரும் ஏற்றுமதியாளர் களாகவும் உள்ளனர். இத்துறையில் புதிய முதலீடுகளின்மூலமாக ஏற்படக்கூடிய தேவையை நிறைவுசெய்ய, ஒரகடம் 'சிப்காட்' தொழில் பூங்காவில் மோட்டார் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Automotive Special Economic Zone) ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மிகப் பெரிய சுற்றுலாத் தலமாகவும், கோயில் நகரமாகவும் விளங்குகின்ற மதுரையில், நீண்டகாலமாக பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிரூட்டும் வகையில், மதுரை அருகில் 'சிப்காட்' நிறுவனம் மூலமாக, ஒரு பெரிய தொழில் பூங்கா அமைக்கப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

தோல் பதப்படுத்துதல் மற்றும் தோல் பொருள் உற்பத்தி, தமிழகத்தின் தொழில் துறையில் நீண்டகாலமாக ஒரு முக்கிய பங்கு வகித்து வருகிறது. இத்துறையால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசினைச் சரி செய்யும்வகையில், ரூபாய் 115 கோடி மதிப்பில், 11 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ரிவெர்ஸ் ஆஸ்மாசிஸ் (Reverse Osmosis) சாதனங்களை அமைக்க, நிதியுதவி கோரி மாண்புமிகு பிரதமரிடம் நான் நேரடியாக வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

தோல் பதப்படுத்தும் மற்றும் தோல் பொருள் உற்பத்தி வளாகம் ஒன்று அமைக்க, சென்னை அருகில் 'சிப்காட்' நிறுவனம் மூலமாக 250 ஏக்கர் பரப்பில் ஒரு புதிய தோல் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

கரூர் மாவட்டம், புகளூரில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் தற்போது ஆண்டு ஒன்றுக்கு 2,30,000 மெட்ரிக்

டன் காகிதம் உற்பத்தியாகி வருகிறது. இந்த உற்பத்தியை அதிகரிக்க, தற்போது காகிதம் தயாரிக்கும் இயந்திரத்தை நவீனப்படுத்தி விரிவாக்கம் செய்யும் திட்டத்தை, மொத்தம் 650 கோடி ரூபாயில் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் ஆண்டொன்றிற்கு மேலும் கூடுதலாக, 1,20,000 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு புதிய அதி நவீன தொழில்நுட்பத்துடனான காகித இயந்திரம் அமைக்கப்படவுள்ளது. மேலும், இந்த நிறுவனத்தின் சார்பில் ரூபாய் 30 கோடி முதலீட்டில், ஐந்து புதிய காற்றாலைகளை நிறுவி, 6.25 மெகாவாட் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி (Co-generation) செய்வதன் மூலம் அந்த ஆலைகளின் செயல்திறன் அதிகரிப்பதோடு, கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கும் உதவுகிறது. கள்ளக்குறிச்சி இரண்டாவது கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ. 13.50 கோடி செலவில் 6 மெகாவாட் திறன் கொண்ட ஒரு இணை மின் நிலையம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில், 6 கோடி ரூபாய் செலவில் எத்தனால் எனும் எரிபொருள் உற்பத்தி நிலையம் அமைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

பெரம்பலூர் மாவட்டம், தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டம் என்பதைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் (டிட்கோ) இம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தொழிற் பூங்காவோடு சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றினையும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், இந்தப் பகுதிக்கு படிப்படியாக ரூபாய் 5,000 கோடி அளவிலான முதலீடும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

தமிழகத்திலே உள்ள இயற்கை எரிவாயு, பெரும்பகுதி காவேரிப் படுகை பகுதியிலே காணப்படுகிறது. புதிய ஆய்வு தொழில்நுட்பத்தின்மூலமாக, அந்த இருப்பைப் பயன்பாட்டிற்குக்

கொண்டுவர இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆந்திர மாநிலத்திலே உள்ள கிருஷ்ணா கோதாவரிப் படுகையில் இயற்கை எரிவாயு இருப்பு கண்டறியப்பட்டுள்ளது. தமிழகத்தின் எரிசக்திப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்த இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

இக்குறிக்கோளை அடையும்வகையில், கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான புதிய இணையத் துறை நிறுவனத்தை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைக்கும். இப்புதிய நிறுவனம் தமிழகம் முழுவதும் தேவையான குழாய் கட்டமைப்பை அமைத்து, இயற்கை எரிவாயு விநியோகத் தொகுப்பை (Natural gas distribution network) உருவாக்கும். அரசின் இப்புதிய முயற்சி, இம்மாநிலத்தின் எரிசக்திப் பாதுகாப்பை மேம்படுத்துவதோடு, தமிழகத்தின் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கும், மாநில அரசின் வருவாய்ப் பெருக்கத்திற்கும் வழிவகுக்கும் என்பது திண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி).

தற்போது 10 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு எடுத்துச் செல்லும் லாரி வாடகையைக் கரும்பு விவசாயிகளே செலுத்துகின்றார்கள். பத்து கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக உள்ள பகுதிகளுக்கான லாரி வாடகையை இந்த ஆலைகளே எற்றுக்கொள்கின்றன. தேர்தல் அறிக்கையிலே கொடுக்கப்பட்டுள்ள மற்றொரு வாக்குறுதியை நிறைவேற்றும்வண்ணம், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு பத்து கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளிருந்து கொண்டு வரப்படும் கரும்புக்கான லாரி வாடகையை, வரும் அரைவைப் பருவத்திலிருந்து சர்க்கரை ஆலைகளே ஏற்றுக்கொள்ளும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). இதனால் ஆண்டுக்குக் கூடுதலாக 40 கோடி ரூபாய் செலவாகும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள பலன்களையெல்லாம் ஒன்று திரட்டி, அத்துறை மேலும் வேகமாகப் பயனுள்ளவகையில் வளர்ச்சியடைய, புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்று வகுத்து அறிவிக்கப்படும்.

4-7-2000 அன்று, 'டைடல்' தகவல் தொழில்நுட்பப் பூங்கா தொடங்கி வைக்கப்பட்டபோது அறிவிக்கப்பட்டபடியும், தொடர்ந்து

தேர்தல் அறிக்கையிலும், நிதிநிலை அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளபடியும், இரண்டாவது 'டைடல்' தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று, சென்னை தரமணியில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழக அரசும், மத்திய அரசின் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள் நிறுவனமும், தனியார் துறையும் இணைந்து, கோவையில் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை நிறுவும். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னையில் மட்டும் பெரிதும் மையம் கொண்டுள்ள தகவல் தொழில்நுட்பப் புரட்சி, தமிழ்நாட்டில் உள்ள மற்ற நகரங்களிலும் பரவி, பலனளிக்கும்வகையில் மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மத்திய அரசு அறிவித்துள்ள, உலக தரத்திலான தகவல் தொழில்நுட்பம், வடிவமைப்பு, உற்பத்தி ஆகியவற்றுக்கான இந்தியக் கல்வி நிறுவனம் சென்னைக்கு அருகே நிறுவப்படும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் வெகுவான முதலீடுகளை ஈர்ப்பதற்கான வழிகளை வகுத்துச் செயல்படுத்த, முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டு, இடைக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படாமல் விடப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பணிமுனைப்புக் குழு (I.T. Task Force) ஒன்று மீண்டும் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மின்னணு ஆளுமை (e-governance) நகரங்களில் உள்ள மக்களைப் போலவே கிராமங்களில் உள்ள மக்களுக்கும் பயன்படும் வகையில் வடிவமைக்கப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு, தமிழகம் ஒரு முன்னோடி மின்னணு ஆளுமை மாநிலமாகத் திகழும்வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

தற்பொழுது சென்னையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கென தனியே சொந்தமாகக் கட்டடம் அமைவதற்கேற்ற நிலமும், ஒரு கோடி ரூபாயும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

894.8115
TAM

முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, நான்கு வழித்தடங்கள் கொண்ட சாலையாக அமைக்கப்பட்டு, இடையில் தொய்வு ஏற்பட்ட, தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை (I.T. Expressway) திட்டத்தின் முதற்கட்டமாக, பழைய மாமல்லபுரம் சாலையில் தரமணி முதல் சிறுசேரி வரை உள்ள சாலையை, உலகத் தரம் வாய்ந்த ஆறு வழித்தடங்கள் கொண்ட சாலையாக மேம்படுத்தும் பணிகள் (மேசையைத் தட்டும் ஒலி) 205 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இச்சாலையினை மேம்படுத்தும் வகையில், இரண்டாம் கட்டமாக சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரையுள்ள சுமார் 25 கிலோ மீட்டர் நீள சாலையை, ஆறு வழித்தடங்கள் கொண்ட சாலையாக மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் பகுதிகள் முக்கியமான தொழில் மையமாக உருவாகி வருகிறது. அதனால், தொழிற்சாலைகளின் வசதிக்காக சாலைக் கட்டமைப்பினை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. எனவே, 24 கிலோ மீட்டர் நீள சிங்கப்பெருமாள் கோவில் - திருப்பெரும்புதூர் சாலை மற்றும் 20 கிலோ மீட்டர் நீள வண்டலூர் - வாலாஜாபாத் சாலை ஆகிய சாலைகளின் முக்கிய பகுதிகளை ஆறு வழித்தடச் சாலையாகவும் பிற பகுதிகளை நான்கு வழித்தடச் சாலையாகவும், சுமார் 300 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் திட்டத்தையும் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த இனிய அறிவுப்புக்களோடு, நீங்கள் அளித்த அருமையான கருத்துக்கள், அவை எதிர்க் கருத்துக்களானாலும், ஆதரவுக் கருத்துக்களானாலும், அனைத்தையும் ஒன்றாகக் கருதி, அவற்றின்படி தொழில் துறை மானியத்திலே நாங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்போம் என்று கூறி, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

குறிப்புகள்

குறிப்புகள்

